ஆண்டு 10] ஸ்தாபிதம்: நவம்பர் '47 :: ஜூலை 1957 [இதழ் 7

# மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

# ஊரும் உலகமும்

★

**காய்ச்சலின் லீலைகள்:** இன்ஃப்ளூயென்ஸா காய்ச்சல் வந்தாலும் வந்தது; பல லீலைகளைப் புரிந்து விட்டது. சில உயிர்களைக் கொள்ளை கொண்டது. அதுமட்டும் அல்ல; பள்ளிக்கூடங்கள் திறக்கும் நாளை ஒத்திப் போட்டது. திருவாங்கூர்ச் சட்டசபையைச் சில நாள் ஒய்ந் திருக்கச் செய்தது. பல தொழில் ஸ்தாபனங்களின் வேலை நேரத்தை மாற்றியது. இப்படி எத்தனையோ தொல்லைகள்! ஜப்பானிலிருந்து இந்தியாவரைக்கும் பல ஆசிய நாடுகளைப் பற்றிய இன்ஃப்ளூயென்ஸா, என்னவோ இலங்கையை மாத்திரம் விட்டுவிட்டது.

இன்ஃப்ளூயென்ஸாவை 'ஃப்ளூ' என்று ஆங்கிலத்திலே சுருக்கிச் சொல்லுவார்கள். 'எஃப்' என்ற எழுத்தில்லாத குறையால் இதைத் தமிழிலே 'ப்ளூ' என்று சிலர் குறிக்கிறார்கள். அதற்கு நீலம் என்று வேறு சிலர் பொருள் செய்து கொண்டார்கள். இதிலிருந்து இன்ஃப்ளூயென்ஸாவை 'நீலக் காய்ச்சல்' என்றுகூடக் கூறத் தொடங்கிவிட்டார்கள். ஆமாம்; ஆலகால விஷத்தால் நீலகண்டன் ஆகவில்லையா சிவபெருமான்? 'நீலம்' என்றால், விஷத்துக்குச் சம்பந்தம் உண்டு. ஆனால், நீலத்துக்கும் இன்ஃப்ளூயென்ஸாவுக்கும் அவ்வளவாகச் சம்பந்தம் இருப்பதாய்த் தெரியவில்லை.

நோய்க்கிருமிகளை வடிகட்டும் நுட்பமான 'ஃபில்டர்'களையும் கடந்து செல்லும் கிருமி வகையை 'வைரஸ்' என்பார்கள். அந்தக் கிருமிகளால் உண்டாகும் தொற்று நோய்கள் 'அம்மை', 'காலரா', 'மஞ்சள் ஜுரம்', 'இன்ஃப்ளூயென்ஸா' போன்ற பல. இவை தோன்றினால் பெருவாரியாகப் பரவிவிடும். ஓரிடத்தில் மட்டும் பீடித்தால் 'எபிடெமிக்' என்பார்கள்; நாடெங்கும் பரவினால் 'பாண்டெமிக்' என்பார்கள். இப்போது 'பாண்டெமிக்' நோயாகத்தான் இன்ஃப்ளூயென்ஸா தோன்றியிருக்கிறது.

இந்தப் பெருவாரி நோய்கள் சில காலத்துக்கு ஒரு முறை கணக்காகத் தோன்றிக்கொண்டேயிருக்கின்றன. இவை இன்ன காலத்தில் தோன்றும் என்று முன் கூட்டியே கணக்குப் போட்டுக்கூடச் சொல்லிவிடலாம் என்கிறார்கள். அது எப்படியானாலும் சரி; இன்ஃப்ளூயென்ஸா காய்ச்சல் இதற்கு முன்பே 1729-32, 1780-82, 1830-33, 1836-37, 1847-48, 1889-92, முதல் உலக யுத்தம் முடிந்த அடியிலே 1918-20 இந்த வருஷங்களிலெல்லாம் தோன்றியிருக்கிறது. காற்று வாக்கில் இது பரவி வெகு சுலபத்தில் எல்லாரையும் தொற்றிவிடுகிறதாம்.

சில சமயம் ஜலதோஷம் போலவே, சாதாரணமாகத் தாக்கிவிட்டு இன்ஃப்ளூயென்ஸா போய்விடும். சில சமயம் மிகக் கடுமையாய்த் தாக்கும். இரண்டு அல்லது மூன்று நாளோடு போய்விடலாம்; இரண்டு வாரம் வரையில் ஆளைப் படுக்கையில் கிடத்தினாலும் கிடத்தலாம். உடம்பு நோவு, தலைவலி,

சளி, காய்ச்சல் இப்படிப் பல உபத்திரவங்கள் இதனால் ஏற்படும்.

இன்ஃப்ளூயென்ஸா நுண்கிருமிகள் விதம் விதமா யிருக்கின்றன வாம். எனவே, ஓர் இன்ஃப்ளூயென்ஸாவைத் தடுப்பதற்காகத் தயாரித்த 'வாக்ஸைன்' என்ற பாலைக் குத்தி இன்னோர் இன்ஃப்ளூயென்ஸாவைத் தடுக்கமுடியாதாம். ஆகவேதான் ஒரு முறை இன்ஃப்ளூயென்ஸா தோன்றியதும் புதிய 'வாக்ஸைன்' தயாரிக்க முயலுகிறார்கள். இப்போதுகூடப் புனவில் இந்த இன்ஃப்ளூயென்ஸாவுக்குப் புதிய 'வாக்ஸைன்' சிறிதளவு தயாரித் திருக்கிறார்கள். ஆனால் ராணுவத்தில் வைத்திய அதிகாரிகள், நர்ஸுகள் போன்ற முக்கிய உத்தியோகஸ்தர்களுக்கு மாத்திரமே அதைக் குத்திவிடப்போகிறார்கள். நோய் வராமல் பாதுகாத்துக்கொள்ள மட்டுமே இந்தப் பால் எல்லாம்; வந்த இன்ஃப்ளூயென்ஸாவை குணப்படுத்த இது வரைக்கும் மருந்து எதுவும் கண்டுபிடித்ததாகத் தெரியவில்லை.

சமுத்திரத்துக்கு நடுவில் கோட்டை கட்டி வாழ்ந்த ஜனமே ஜயனையே சர்ப்பம் தீண்டியதாகப் பாரதம் சொல்லுகிறது. அந்த மாதிரி நடுக்கடலில் உள்ள கப்பல் பிரயாணிகளையே போய்த் தாக்கி விடக்கூடியது இன்ஃப்ளூயென்ஸா. எவ்வளவுதான் ஜாக்கிரதையாக இருந்தாலும், இது ஒருவரைப் பற்றிவிடலாம். தோற்காத பாதுகாப்பு முறை, இந்த நோய் சம்பந்தப்பட்ட மட்டும் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆயினும், கபம், பெருஞ் சோர்வு முதலியவற்றுக்கு இடங்கொடாமல் தேகத்தை ஆரோக்கியமாகவும் சுத்தமாகவும் வைத்துக்கொண்டால், ஓரளவு பாதுகாப்பா யிருக்கும்; நோய் வந்தாலும் உக்கிரமாய் முற்றாமல் சிறிது தொல்லையோடு நீங்கும். ஜனங்கள் வீணே பீதி அடைந்து பயன் இல்லை. பீதிதான் பாதி மனிதனைக் கொன்று விடுகிறது.

இன்ப்ளூயென்ஸா நோய் வந்தால், நன்றாகப் படுத்து ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும்; ஆரஞ்சு ஸ்க்வாஷ், லெமன் பார்லி தண்ணீர் போன்ற பானங்களை நிறையப் பருகலாம். (லாகிரி தரும் பானங்களால் ஒரு பயனும் இல்லை.) இவையே நோயைச் சமனம் செய்து தானாக நீங்க வழிவிடும் சிறந்த சிகிச்சை முறைகள் என்று சொல்லுகிறார்கள். அஜாக்கிரதையாலும் வீண் கிலியாலுந்தான் சிக்கல்கள் உண்டாகின்றன. அவற்றுக்கு இடங் கொடுக்காதபட்சத்தில் மலை போலவந்த வினை பனிபோல நீங்கி விடும்.

* * *

அணுக் குண்டுக்கு ஓய்வு: உண்மைக்குத் திரை போட்டு மறைக்க மனிதர்கள் எத்தனையோ முறைகளைக் கையாளுகிறார்கள். அப்படிப் பட்ட ஒரு திரையாக உதவும் அளவுக்கு இந்த அணுக்குண்டு எதிர்ப்புக் கூச்சலை ஊரிலே சிலர் கிளப்பிக்கொண் டிருக்கிறார்கள். ராஜாஜியைச் சர்வதேச அரங்குக்கு அனுப்பினால், இந்த அணுக் குண்டை மந்திரம் செய்து அவர் மலையேற்றி விடுவார் என்ற ஒரு யோசனையுமே புறப்பட்டது. ஆனால் அது புறப்பட்ட இடத்திலேயே ஒடுங்கிவிட்டது.

அணுக்குண்டுப் பரீட்சைகளைத் தாற்காலிகமாக நிறுத்தி வைக்க ருஷியா சிலயோசனைகளை இப்போது கூறியிருக்கிறது. ருஷியா எதைச் சொன்னாலும் சந்தேகக் கண் கொண்டு பார்ப்பது சமீப காலத்தில் அமெரிக்காவின் நிச்சயமான வழக்கம் ஆகிவிட்டது. ஆனால், இந்தத் தடவை ருஷியாவின் யோசனையில் நம்பிக்கை தரும் குறி இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஐஸன்ஹோவர் சொல்லுகிறார். மிக்க ஊக்கமாகவும்அநுதாபத்தோடும் கவனிக்கவேண்டிய யோசனை என்றும் அதைப்பற்றி அவர் குறிப்பிடுகிறார். ஐஸன்ஹோவரின் இந்த மன மாற்றம் நமக்கெல்லாம் சற்று மகிழ்ச்சி தருவதுதான். ஆனால் இதை டல்லஸ் போன்ற அமெரிக்க ராஜதந்திரிகள் கெடுக்காதிருக்க வேண்டும்.

உண்மையான பிரச்னை, அணுக் குண்டைத் தடுப்பதோ, மற்ற ஆயு

தங்களைக் குறைப்பதோ மட்டும் அல்ல; தேசங்கள் ஒன்றோடொன்று நட்பு முறையில் வாழ்வதும் சுதந்ரமாய் வாழவிடுவதுந்தான் அவசியம். ஆயுதக் குறைப்பு முறைகளைப் பற்றிப் பேராசிரியர் பெர்னார்டு ஷா ஒரு கேலி செய்வது வழக்கம்: ''இந்தா தம்பீ, இனிமேல் உன்னை நான் இரண்டு துப்பாக்கியால் சுடவில்லை; ஒரே துப்பாக்கியால் சுடுகிறேன். நீயும் அப்படியே என்னைச் சுடு. சரிதானா?'' என்பதுதான் ஆயுதக்குறைப்பு. 'அணுக் குண்டு விஷயம் அப்படி அல்ல' என்று நண்பர்கள் சொல்லலாம். சமாதான காலத்தில் அதைப் பரீட்சிப்பதாலேயே, 'ரேடியேஷன்' (கதிரியக்கம்) காரணமாக மக்களுக்கெல்லாம் தீங்கு நேர்வதாகப் பல விஞ்ஞானிகள் சொல்லுகிறார்கள்; பிறக்கும் குழந்தைகள் எல்லாம் ஊனமாகும் என்றும் கூறுகிறார்கள். சண்டை இல்லாமல் சமாதான நிலையிலேயே மனிதகுலத்தை அழிக்கும் பெரும் பூதமாய் அணுக்குண்டு முளைத்திருப்பதாக நாம் அஞ்ச வேண்டியிருக்கிறது. ஆனால், இவ்வளவுக்கும் மூலகாரணம் வல்லரசுகளின் விகாரமான போக்குத்தான்-சுருங்கச் சொன்னால், அமெரிக்காவுக்கும் ருஷியாவுக்கும் ஏற்பட்டிருக்கும் பரஸ்பர அவநம்பிக்கையும் சந்தேகமுந்தான். இதனால் உலக நாடுகளின் உறவுகளில் பல சிக்கல்கள் தீராது நீடித்துவருகின்றன.

இந்தச் சந்தர்ப்பத்தில் சமீபத்தில் இலங்கையில் கூடிய 'உலக சமாதானக் கழகம் (வொர்ல்டு கவுன்ஸில் அவ் பீஸ்)' செய்துள்ள தீர்மானங்களில் கண்ட முக்கியமான கோரிக்கைகளைக் குறிப்பிடலாம். ''மனிதனுக்குப் புனிதமாக உள்ள சகல விஷயங்களின் பெயராலும் உலக நாடுகளை யெல்லாம் வேண்டிக்கொள்ளுகிறோம்: அணுக்குண்டுப் பரீட்சைகளை உடனடியாக நிறுத்த உழையுங்கள்'' என்கிறது ஒரு தீர்மானம். அதோடு, உலக சமாதானத்துக்காக நடக்க வேண்டிய வேறு சில காரியங்களையும் அந்தக் கழகம் குறிப்பிட்டிருக்கிறது: (1) ஐக்கிய நாடுகளின் சபையில் கம்யூனிஸ்ட் சீனாவுக்கு இடம் அளிக்கவேண்டும்; (2) ஐரோப்பாவில் அந்நியர் வைத்திருக்கும் படைத்தளங்களை யெல்லாம் அவர்கள் கைவிட்டுச் செல்ல வேண்டும்; கிழக்கு ஜெர்மனி, மேற்கு ஜெர்மனி இரண்டு பாதியும் ஐக்கியமாக, அவற்றை அந்நியர் சுதந்தரமாய் விட்டுவிட வேண்டும்; (3) அல்ஜீரியா யுத்தம் முடிவடைய வேண்டும்; ஸைப்ரஸ் நாட்டில் அடக்குமுறை ஒழிய வேண்டும்; (4) லத்தீன்-அமெரிக்க நாடுகளைக் கண்காணிக்கும் முறைகளைக் கடுமையாக்க ஐக்கிய அமெரிக்கா மேற்கொண்டிருக்கும் முயற்சிகளை விட்டொழிக்க வேண்டும்; (5) கொரியா, வியட் நாம் இரண்டு நாடுகளும் இரண்டிரண்டாகப் பிளந்து கிடப்பதை விட்டு அவை ஒன்றுபடச் செய்யவேண்டும்; (6) தைவான் என்ற சீனப் பிரதேசத்தில் அந்நியர் தலையிடுவதை நிறுத்திவிட வேண்டும்.

இத்தனை காரியங்களும் நடந்தால்தான் உலக சமாதானம் நிலைக்கும்; யுத்த அபாயம் விலகும். ஒளிக்காமல் சொன்னால், ருஷியாவும் அமெரிக்காவும் மனம் வைத்து ஒற்றுமையாய் நடந்துகொண்டால், இந்த உலகச் சிக்கல்கள் அனைத்தும் எளிதிலே தீர்ந்துவிடும். அந்த இரண்டு நாடுகளும் அப்படி நடந்துகொள்ள வற்புறுத்தத் தக்க அளவுக்கு வலிமையுள்ளதாக, அங்கங்கே உள்ள மக்கள் உலக அபிப்பிராயத்தை உருவாக்கப் பாடுபடவேண்டும்.

* * *

பாஷைப் போர்: தாய் மொழிக்காகச் சுதந்தர மக்கள் போராடுவதைச் சிலர் அலட்சியம் செய்கிறார்கள். அதைப் 'பாஷை வெறி' என்றுகூடச் சிலர் ஏளனம் செய்கிறார்கள். இதைப் போல் மூடத்தனம் வேறில்லை. தாய் மொழி 'அரியாசன'த்தில் இராத மக்களின் வாழ்வு சிறக்காது; அவர்களின் சுதந்தரம் வெறும் போலியாகும்.

இலங்கையில் பிரதம மந்திரி பண்டாரநாயகா தமிழருக்கு

நால்வகை அபயம் அளித்திருக்கிறார்: (1) தாய்மொழியில் கல்வி கற்கலாம்; (2) தமிழில் சர்க்காருக்குக் கடிதம் எழுதித் தமிழிலேயே விடை பெறலாம்; (3) பப்ளிக் ஸெர்வீஸ் பரீட்சைகளில் தமிழிலேயே விடை எழுதலாம்; (4) பிரதேச அதிகாரிகள் பிரதேச மொழியிலேயே காரியங்களை நடத்தலாம்: தமிழருக்கு இந்த நான்கு உரிமைகளும் உண்டு என்கிறார். ஆனால், சிங்களம் ஒன்றே ராஜாங்க பாஷையாக இருக்குமாம். சிங்களத்தைப் போலவே சம அந்தஸ்துடன் இன்பத் தமிழும் இருக்கவேண்டும் என்று எண்ணும் தமிழருக்கு இது திருப்தி அளிக்கவில்லை. ஆகஸ்டில் பெரும் போராட்டம் நடத்த ஃபெடரல் கட்சியார் தீர்மானித்திருப்பது இதனால் மாறவில்லை.

இதே சமயம் பஞ்சாபில் பஞ்சாபிக்கும் ஹிந்திக்கும் போராட்டம் தொடங்கியிருக்கிறது பஞ்சாபி பாஷைக்கு ஒரு தாயகமாகவே பஞ்சாப் ராஜ்யம் அமைந்தது. அங்கே (1) ஹிந்திக்காரர் பஞ்சாபியையும், பஞ்சாபிக்காரர் ஹிந்தியையும் இரண்டாவது பாஷையாகக் கற்கவேண்டும்; (2) ஜில்லாத் தலைமைக் காரியாலயம் வரைக்கும் பஞ்சாபி மொழியில் சர்க்கார் காரியாலயங்களில் கணக்கு வைக்க வேண்டும். (3) அதற்குமேலே இரண்டு மொழிகளில் எதையும் அதிகாரிகள் உபயோகிக்கலாம்-இப்படிச் சர்க்கார் சொன்னார்கள். இதை எதிர்த்து ஹிந்திக்காரர் சிலர் போராடுகிறார்கள். பஞ்சாபிக்காரர் ஹிந்தியைக் கற்க வேண்டியதுதானாம்; ஹிந்திக்காரர் பஞ்சாபியைக் கற்கத் தேவையே இல்லையாம்! ஏனென்றால், அதுதானே அகில இந்திய ராஜாங்க பாஷை! ஹிந்திக்காரர் இப்படி அகம்பாவமாய் அழும்பு செய்கிறார்கள்.

சிங்களம் ராஜாங்க பாஷை என்றவுடனே சிங்களருக்குப் பெரிய செருக்கு உண்டாகிறது; ஹிந்தி ராஜாங்க பாஷை என்று ஹிந்திக்காரருக்குச் செருக்கு ஏறுகிறது. அவர்கள் பிற பாஷைகளை யெல்லாம், பிற பாஷைப் பிரதேசங்களில் போய் இருந்துகொண்டே உதாசீனம் செய்கிறார்கள். பிற பாஷைகளை அவர்கள் கற்கவும் மறுக்கிறார்கள். ஆனால், இந்தச் செருக்குக்கு மற்றவர் இடங் கொடுக்க மாட்டார்கள்.

## கார் ஓட்டும் பயிற்சி

ஓர் ஆள் ரஸ்தாவிலே காரைக் குறுக்கும் நெடுக்குமாய் மிக்க அபாயமான முறையில் ஓட்டிக் கொண்டிருந்தான்.

இதைக் கண்ட போலீஸ்காரன், ''என்னப்பா செய்கிறாய்?'' என்று கேட்டான்.

''கார் ஓட்டப் பழகுகிறேன்'' என்றான் ஆள்.

''துணைக்கு டிரைவர் இல்லாமலா?''

''ஆமாம்; இது கரெஸ்பாண்டன்ஸ் கோர்ஸ் (கடிதப் போக்குவரத்து மூலம் பயிற்சி)'' என்று ஆள் பதில் அளித்தான்.

—'ப்ரோக்ரஸ் டிமான்சே', கெய்ரோ.

## ஈட்டி போன்றவர்

மூட வேலையாள், கருமி அரசன், துன்மார்க்கப் பெண், பாசாங்குக்கார நண்பன் - இந்த நாலு பேரும் ஈட்டிபோல் குத்துகிறவர்கள். —துளஸிதாஸ்

வீரனுக்கே மாலையிடும் ராமாயண
ஐதிகத்தை இன்றும் இதிலே காணலாம்.

# நேபாளத்தில் கல்யாணம்

**ஸாமர்த்தி ஸாவித்திரி**

கல்யாண சந்தர்ப்பத்தில் நேபாளத்துத் தனவந்தர்களின் வீட்டுப் பெண்கள் தூக்க முடியாமல் நகையைச் சுமப்பார்கள். பெண், ராஜகுமாரியாய் இருந்துவிட்டாலோ, அலங்காரத்துக்கு எல்லையே இராது. பிறந்த வீட்டு நகைகளோடு புகுந்த வீட்டு நகைகளும் சேரும்.

பாரதத்து ஜனங்களுக்குள், நேபாளத்து மக்கள் மிகுந்த கர்வம் படைத்தவர்கள் என்பது பிரசித்தம். ஆனாலும் நல்ல குலத்தில் பிறந்த பெண் ஏழையாயிருந்தாலும் பணக்காரர்கள் மணந்து கொள்வது உண்டு. இரு தரப்பாருக்கும் இடையே பிரமுகர்கள் சிலர் தலையிட்டுக் கல்யாணத்தை முடித்து வைப்பார்கள். முகூர்த்த தினம், கல்யாணம் நடக்கும் இடம் ஆகியவற்றை நிச்சயித்துக்கொள்வார்கள். பேசிக்கொண்டு குறித்த நாளில் பெண்வீட்டார் பிள்ளை வீட்டாருக்குக் கல்யாணப் பரிசுகளை அனுப்புவார்கள். அது வர தட்சிணைப் பணமாகவும் இருக்கலாம்; பொன், வெள்ளி போன்ற பொருள்களாயும் இருக்கலாம். பிறகு பிள்ளை வீட்டார், நண்பரும் சுற்றமும் புடை சூழக் கல்யாணத்துக்கு வருவார்கள்.

பெண் இருக்கும் ஊருக்கு வந்த மறு நாள் காலையிலேயே மணமகன் ஊர்வலமாக மேள தாளத்துடன் பெண் வீட்டுக்குப் போவான். பெண் வீட்டில் பூமாலை அணிவிப்பார்கள். சாதாரணமாக ராஜபுதனத்தில் மணமகன், தீரனுகவும் பலவானுகவும் போரில் வல்லவனுகவும் இருப்பான். அப்படிப்பட்ட உத்தமனை மணப் பெண் பூமாலை இட்டுக் கணவனுக வரிப்பாள். இந்த வழக்கம் - ராமாயணத்தில் கண்ட முறையில் - ராமன் சிவ தனுசை ஒடித்துச் சீதையை மணந்ததை அநுசரித்தே வந்தது.

மணமகளை நன்ருக அலங்கரித்து உட்கார வைத்து, அவள் எதிரில் பூமாலை இருக்கும் தட்டை வைப்பார்கள். பெண்ணின் தந்தை அவளுடைய கைகளைத் தூக்கிவிட, அவள் புனிதமான குங்குமத்தை மணமகனுடைய நெற்றியில் இட்டுக் கை விரலில் மோதிரம் போடுவாள். அதையே மணமகனும் மணமகளுக்குத் திருப்பிச் செய்வான். அதே சமயத்தில் சிவப்புக் கல் இழைத்த அட்டிகைபோன்ற மாலையைப் பெண்ணின் கழுத்தில் கட்டுவான். அப்பொழுதுதான் முதல் முதலாக மணமக்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ள வேண்டும்.

மணமக்கள் அணியும் மாலைகள் மூவகைப்படும். ஒவ்வொரு வகைப் பூவையும் ஒவ்வொரு குணத்துக்கு அடையாளமாக நேபாளத்தில் கொள்ளுகிருர்கள். ஒரு விதப் புல்லைக்கொண்டு கட்டிய மாலை ஒன்று. இது வாடவே வாடாது. வாழ்க்கை முழுவதும் பசுமையாய் இருக்க வேண்டும் என்பதற்காக இந்த மாலை. இரண்டாவது மல்லிகை மாலை. அது அன்புக்கு அடையாளம். மூன்ருவது சந்தனக் கட்டைகளை வெள்ளிக் கம்பிகளைக் கொண்டு கோத்துக் கட்டிய மாலை. இது ஆரோக்கியமும் தீர்க்காயுளும் விரும்பி அணிவது.

தாலி கட்டியவுடன் தன் விடுதிக்குத் திரும்பிப் போய் மணமகளுக்குத் தான் வெகுமதியாகக் கொடுக்கும் ஆடை யாபரணங்களைப் பெரிய பெரிய தட்டுக்களில் வைத்து அவற்றின்மேல் விலையுயர்ந்த பட்டுத் துணிகளை மூடி மேள தாளத்துடன் கணவன் அனுப்புவான். சீர் வரிசைக்கு முன்பாகச் சிலர் ஒரு

மூலம்: ஆந்திர பத்திரிகா (தெலுங்கு), சென்னை.

வெள்ளை வஸ்திரத்தைப் பிடித்துப் பறக்க விட்டுக்கொண்டே போவார்கள். அதில் மணமகன் தன்னுடைய கையைச் சிவப்பு வண்ணத்தில் தோய்த்து ஒற்றியிருப்பான். அந்த முத்திரையின் மேலேயே மணமகளும் தன் கையை வண்ணத்தில் தோய்த்து ஒத்துவாள். இந்தக் கை முத்திரைகள் அவர்களுடைய அன்புப் பிணைப்பை உறுதிப்படுத்தும்.

மறு நாள் மணமகன் வெள்ளி அம்பாரி இட்ட யானைமேல் ஏறி, பாண்டு மேளங்களுடன் ஊர்வலமாகப் பெண் வீட்டுக்கு வருவான். பெண்ணின் தந்தை எதிர்கொண்டு வந்து வாயிலில், மணமகன் ஏறிய யானையை மூன்று முறை வலம் வருவார். அவரோடு கூடவே சிலர் புனிதமான கங்கை நீரோடு சுற்றி வருவார்கள்.

பிறகு பெண்ணைச் சேர்ந்த ஸ்திரீகள் மங்களம் பாடிக்கொண்டே மணமகனின்மேல் மல்லிகைப் பூவை வாரி இறைப்பார்கள்.

அம்பாரியில் இருக்கும் மணமகனைப் பலவானுன கூர்க்கா ஒருவன் தன் தோளில் தூக்கி வந்து மண மேடைக்கருகே இறக்கிவிடுவான். ஹோமம் நடந்துகொண்டிருக்கும். பழைய சம்பிரதாயம் தவறுமல் சாஸ்திர ரீதியில் மந்திர பூர்வகமாய் விவாகம் நடந்தேறும். தகப்பனுர் பெண்ணைக் கன்னிகா தானம் செய்து கொடுப்பார்.

அப்புறம் மண மக்கள் ஒருவருக்கொருவர் தயிரன்னம் கொடுத்துக் கொள்வார்கள். முதலில் பெண், மணமகனைச் சாப்பிடச் செய்தால், பெண்ணுக்கு மணமகன் வாழ்க்கை முழுவதும் அடங்கி நடப்பானும். மணமகன் பெண்ணைச் சாப்பிடச் செய்துவிட்டால், அவள் அவனுக்கு அடங்கி நடப்பாள் என்பது அவர்களுடைய ஐதிகம். சில சமயம் தவறிப் போய் மணமகள் கணவனை முதலில் சாப்பிடச் செய்துவிட்டால், இல்லாத தகராறுகள் எல்லாம் தோன்றிவிடும்.

இந்த வேடிக்கைகள் முடிந்த பின், மணப் பெண், கணவன் கொண்டுவந்த ஆடையாபரணங்களை அணிந்து, அவனேடு மாமியார் வீட்டுக்குப் போவாள்.

இந்தச் சடங்குகள் மூன்று நாட்கள் வரைக்கும் நீடிக்கும். மூன்று நாட்களிலும் விருந்துகளும் களியாட்டமும் பிரமாதப்படும்.

## மனச் சாட்சி

மனச்சாட்சி என்பது அந்தராத்மாவின் குரல்-அக்கம் பக்கத்தில் உள்ள யாராவது பார்த்துக்கொண்டிருக்கப் போகிறுர்களே என்று உங்களுக்கு எச்சரிக்கை செய்யும் குரல்.

—'தி இங்கிலீஷ் டைஜெஸ்ட்'

## ஐயோ பாவம்!

ஒரு பெண், வெகு பாடுபட்டுத் தன் நிறையில் 56 ராத்தல் குறைத்துக்கொண்டாள். அப்புறந்தான் அவளுக்குத் தெரிந்தது, தன் முகமே யாருக்கும் பிடிக்கவில்லை என்று.

—பென்ரோஸ் கோயெட்,
'டெலிகிராஃப்'.

பூ என்றால் பூ அல்ல; மடலையே பூ என்கிறோம்.
அலாதியான அதன் மணந்தான் எவ்வளவு ரம்மியமானது!

# தாழம் பூ

யு. நரசிங்க ராவ்



தாழம் பூவை இந்தியப் பெண்மணிகள் மிக விரும்பித் தலையில் சூடுவார்கள். இதன் வாசனை அபரிமிதமானது. பயிர் நூலார் இதை, 'பண்டெனஸ் டெக்டோரியஸ்' என்று குறிப்பிடுகிறார்கள்.

'தாழை வகைகளில் அதிக வாசனை உள்ளவை, பாம்புகளைக் கவரும்' என்ற நம்பிக்கை ஜனங்களிடம் பரவியிருக்கிறது. பூவின் உள்ளே இருக்கும் சடையில் சிறிய வடிவில் பூ நாகம் ஒளிந்திருக்குமென்னும் எண்ணமும் பலமாக இருக்கிறது. அதனால் பூ நாகம் என்று ஒன்று இல்லை என்பது நிச்சயப்பட்டாலொழியத் தாழையை மூக்குக்கு அருகே கொண்டு போய் மோந்து பார்க்கக் கூடாதென்று பலர் யோசனை சொல்லுவது உண்டு.

தாழை மடல்கள் மிக அழகானவை. தாழஞ் செடிகளை வீட்டில் தொட்டிகளில்கூட வைத்து வளர்க்கலாம். சமீப காலத்தில் மலேயாவிலிருந்து ஒரு தாழஞ் செடி வகை வந்திருக்கிறது. அதன் பெயர், 'பண்டேனஸ் லாடகோரியஸ்' என்பது. இங்கே அதை 'வத்ஸுகந்தி' என்கிறார்கள். இந்தத் தாழை மடலின் ஒரு துண்டை அரிசியோடு கலந்து சாதம் வடித்தால், சாதம் 'கமகம' என்று மணக்கிறது.

தென் இந்தியா, அந்தமான், பர்மா முதலிய பிரதேசங்களில் ஆற்றங்கரைகளில் தாழஞ் செடிகள் புதராக வளர்ந்திருக்கின்றன. சென்னை ராஜதானியில் ஆற்றங்கரைகளில் மணல் கரைகளை அடித்துக்கொண்டு போகாதிருக்கத் தாழஞ் செடிகளைப் பயிராக்கலாமென்று யோசனை சொல்லியிருக்கிறார்கள். இதில் மற்றொரு லாபமும் உண்டு. மார்க்கெட்டில் தாழம் மடலுக்கு நல்ல கிராக்கி உண்டு.

தாழை எப்போதும் முள் நிறைந்த பசுமையான வெளி மடல்களைக் கொண்டது. இதன் புறத்து இலைகளிலிருந்து உறுதியும் பளபளப்பும் உள்ள நார் கிடைக்கிறது. இதைக் கொண்டு, பாய் முடைகிறார்கள்; கயிறு திரிக்கிறார்கள்; வலை பின்னுகிறார்கள்; காபிக் கொட்டை, சர்க்கரை போன்ற பொருள்களை வைக்கும் பைகளும் நெய்கிறார்கள். ஒரு வருஷம் விட்டு ஒரு வருஷம் இலைகளை வெட்டுவார்கள். ஒரு மரத்திலிருந்து சுமார் இரண்டு பெரிய பைகள் தயாரிக்கும் அளவு நார் கிடைக்குமாம். இலைகளிலிருந்து காகிதம் தயாரிக்கும் பொருளும் கிடைக்குமாம்.

தாழை வேர்களும் நார் நாராகவே இருக்கும். இந்த நார்களால் கூடை முடைவதோடு வர்ணம் பூசும் 'பிரஷ்'களும் தயாரிக்கிறார்கள்.

காப்பிரைட்: கர்மவீர் (கன்னடம்), ஹுப்ளி.

தாழம் பூக்களை ஊறவைத்து வாசனை எண்ணெய் எடுக்கிறார்கள். 'கேயூர தைலம்' என்பது இதன் பெயர். இதற்கு மருந்துக் குணம் உண்டு. தலை நோய், ஜன்னி முதலியவற்றில் இது உதவுகிறது. தாழம் பூவின் குருத்துக்களை வேக வைத்தோ, பச்சையாகவோ உண்ணலாம். பூவைக் காசுக்கட்டி, சில வாசனைப் பொருள்கள் இவற்றோடு சேர்த்து இடித்துப் பாக்குப் பொடியோடு சேர்க்கிறார்கள்.

தாழஞ் செடிகளை வளர்ப்பது மிகச் சுலபம். பெரிய புதர்களின் அடியில் இளைத்த சிறு நாற்றுக்களைக் கொண்டு வந்து நடலாம். அதிக வாசனையுள்ள ஜாதியைக் கொண்டுவந்து சாரம் உள்ள பூமியில் நீர் தேங்காத பிரதேசத்தில் பயிராக்கலாம். ஆனால் வெறும் அழகுக்காக வளரும் ஜாதிகளைச் சாரம் உள்ள பூமியில் வைத்துப் பயிராக்கினால், அவை காடாக மண்டிவிடும்; மடல்களின் நிறங்கூட மங்கிவிடும். எனவே, உரம் குறைந்ததும் தாழை விளையப் போதுமான ஈரம் மட்டுமே உள்ளதுமாகிய நிலத்தில் தாழையைப் பயிரிடுவது நல்லது. நிலத்தில் நட்டாலும் சரி, தொட்டியில் நட்டாலும் சரி, தாழஞ் செடியைச் சுற்றி இருக்கும் மண் கெட்டியாக இருக்க வேண்டும். தண்ணீர் தங்காமல் வடிந்துவிட வேண்டும். நடும் போது அடிப்பாகத்தில் இலைகள் இல்லாமல் எடுத்துவிட்டு வேர்ப் பகுதி நேராக மண்ணில் படும்படி நட வேண்டும். இப்படி நட்டால் மண்ணில் வேர் சீக்கிரம் பற்றிக் கொள்ளும்.

இப்படிப் பலவகையில் உபயோகப்படும் தாழஞ் செடியை நட்டுப் பயிராக்குவதில் நம்மவர் இன்னும் அதிக ஊக்கம் கொள்ள வேண்டும்.

## கனவிலே கண்ட பெண்

பிரபல ஹாலிவுட் நடிகை மாரிலின் மன்ரோ என்பவள், ஒரு வாலிபனின் கனவிலே தோன்றினாள்.

அவனுக்கே ஆச்சரியமாய்ப் போய்விட்டது; ''இது என்ன? நான் கனவா காண்கிறேன்!'' என்று கேட்டான்.

''ஆமாம். இல்லாவிட்டால், நான் இங்கே வந்திருப்பேன் என்று நினைக்கிறாயா?'' என்று அவள் கேட்டாள்.

—'தி இங்கிலீஷ் டைஜெஸ்ட்'

## ஒன்றும் கோடியும்

ஸ்டாலின் அப்போது வெடிமருந்து மந்திரி (கமிஸ்ஸார் அவ் ம்யுனிஷன்ஸ்) பதவி வகித்துக் கொண்டிருந்தார். மந்திரி சபையின் கூட்டம் ஒன்று நடந்தது. உக்ரேன் பிரதேசத்தில் அந்த நாளில் பெரும் பஞ்சம் தாண்டவமாடியது. அதுபற்றி விவாதித்தார்கள்.

''கோடிக் கணக்கான மக்கள் பசியால் செத்துக் கொண்டிருக்கிறார்களே!'' என்றார் ஓர் அதிகாரி. பிறகு சாவு எண்ணிக்கைகளைச் சொல்லத் தொடங்கினார்.

ஸ்டாலின் குறுக்கிட்டார். ''ஒருவன் செத்தால், பசி; சோக நிகழ்ச்சி. கோடிக்கணக்கான மக்கள் செத்தால் அது வெறும் புள்ளி விவரம்'' என்றார்.

—'ஃப்ரீ இண்டியா'

இந்திய ஆதிவாசிகளுக்குள்ளே மிகப் பிரசித்தமான இவர்களின் பழக்க வழக்கங்கள் மிக விநோதம்!

# பில்லர்கள்

பிலோ இருதயநாத்

இன்று இந்தியாவில் சுமார் இரண்டு லட்சம் பிரிவு ஆதிவாசிகள் இருப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். நம் நாட்டு ஆதிவாசிகள் பலரில் பில்லர்களும் ஒரு பிரிவினர்.

விந்திய சாத்பூரா மலைகளின் சாரலில் இவர்கள் கூட்டங் கூட்டமாக வாழ்கிறார்கள். ஒற்றையடிப் பாதையின் மூலமாகப் பாறைகளையும் குன்றுகளையும் கடந்து சென்றால், இவர்களுடைய குடிசைகளைக் காணலாம். தூரத்திலிருந்து குடிசைகளைக் கண்டால், காண்கிறவர்களுக்குப் பெரிய கிண்ணம் கவிழ்த்தாற்போல் அவை தோன்றும்.

குடிசைகளைச் சிறிதும் பெரிதுமாகக் கட்டியிருக்கிறார்கள். குடிசை முழுவதையும் - சுவர், கூரை, பரண் எல்லாவற்றையும்- கொம்புகளைக் கொண்டே கட்டுகிறார்கள். கூரைக் கொம்புகள் மிகவும் நெருக்கமாக இருப்பதால், மாரிக் காலத்தில் மழை உள்ளே புகுவதில்லை.

ஆண்கள் பெரிய தலைப்பாகையைக் கட்டிக்கொண்டு, நீலகிரித் தோதவர்களைப்போல் ஒரு துப்பட்டியைப் போர்வையாகப் போர்த்துக்கொண்டிருக்கிறார்கள். சிறு பையன்களும் தலைப்பாகையுடன்தான் இருக்கிறார்கள். ஆண்கள் காதில் வெள்ளி வளையம் அணிந்துகொண்டிருக்கிறார்கள். ஆண்களில் சிலருக்கு முகத்தில் தாடி உண்டு. சிலர் கோவணத்தோடேயே இருக்கிறார்கள்.

பெண்கள் லம்பாடிகளைப் போல் பெரிய பாவாடை அணிந்து, பாவாடையின் கரைகளில் மணிகளை வைத்துத் தைத்திருக்கிறார்கள். கைகளிலும் கால்களிலும் ஒரு சாண் அளவுக்கு நம் பெண்கள் தட்டைக் காப்பு அணிவதைப் போல் பட்டை பட்டையாக வெள்ளிக் காப்புகளை ஒவ்வொரு கையிலும் சுமார் பதினைந்து அல்லது இருபது வரையில் அணிந்திருப்பதைப் பார்த்தால், நமக்கே 'ஐயோ' என்று இருக்கும். இவை போதாததற்குத் தலையிலும் நெற்றியிலும் கழுத்திலும் பெரிய பெரிய நகைகளை அணிந்திருக்கிறார்கள். ருது ஆகாத சிறுமிகளும் புடைவை கட்டிக்கொண்டு, முக்காடு போட்டுக்கொள்ளுகிறார்கள். நெற்றியில் குங்குமம் இடுகிறார்கள்.

பில்லர்களுக்குள் ரத்தக்கலப்புத் திருமணம் இல்லை. ஆண்களும் பெண்களும் தாயின் வம்சத்திலே மூன்று தலைமுறை வரையில்



காப்பிரைட்: சுதேசமித்திரன் (தமிழ்: 2-3'57), சென்னை-2.

ரத்தக்கலப்பு மணம் செய்வதில்லை. பிள்ளை இல்லாமல் சுவீகாரப் பிள்ளைகளை வளர்ப்பவர்களும், இந்த விதியையே அனுஷ்டிக்கிறார்கள். ஒருவன் ஒருத்தியை மணந்து அவளுடைய சகோதரியையும் மணம் செய்துகொள்ளலாம்.

இரண்டு தாய்மார்கள் விதவைகளாக இருந்து, அவர்களுக்குள் ஒருவருக்கொருவர் பெண்களைக் கொள்வினை கொடுப்பினை செய்து, தாங்களே திருமணம் செய்து வைக்கக் கூடாது.

சிலர் பிரியப்பட்டால் தங்கள் குடும்பத்திலேயே பால்ய விவாகம் செய்து கொள்கிறார்கள். மணமான அன்றே, பெண் மாமனார் இல்லம் செல்லவேண்டும். சாதாரணமாகப் பன்னிரண்டு வயசாக இருக்கையிலேயே பெண்களைத் திருமணம் செய்து கொடுக்கிறார்கள்.

பையனும் பெண்ணும் காதல் புரிந்ததன் பயனாகப் பெண் கர்ப்பவதியானதை அறிந்த பெற்றோர், அந்த இருவருக்கும் யாதொரு சிக்கலும் இல்லாமல் திருமணத்தைச் செய்து முடிக்கிறார்கள். ஆனால் பெற்றோர்கள் சம்மதத்தின்மேல் திருமணம் செய்வதைப் போல் இல்லாமல், இந்தத் திருமணத்தில் சற்றுச் சிக்கனமாக, சடங்குகளில் சிலவற்றைக் குறைத்து விடுகிறார்கள். ஒரே ஆணுக்குப் பல மனைவியர் இருப்பதைக் கண்டேன். ஆனால் முதல் மனைவி மட்டும் கற்புள்ளவளாகவும் சிறிய பெண்ணாகவும் இருக்கவேண்டும். மூன்றாவது, நான்காவது மனைவிகளையெல்லாம் இளம் விதவைகளாகத் தேர்ந்தெடுத்துத் திருமணம் செய்து கொள்கிறார்கள்.

ஆனால் கணவன் இருக்கும்போது, பல கணவரை மணம் செய்து கொள்ளும் பழக்கம் பெண்களிடம் இல்லை.

மாப்பிள்ளையின் நண்பர்களும் உறவினரில் சிலரும் சேர்ந்து பெண்ணின் கிராமத்துக்குச் சென்று, அவளுடைய குணாதிசயங்களைக் கண்டு வருவார்கள். பிறகே பெற்றோர்கள் முடிவு செய்யச் செல்லுவார்கள்.

வரன் நிச்சயமானதும், முதலில் மத்தியஸ்தர்களாக இருந்து திருமணத்துக்கு ஏற்பாடு செய்தவர்களுக்குத் தலைக்கு ஒரு ரூபாய் வீதம் மாப்பிள்ளை வீட்டார் கொடுக்கவேண்டும். இந்தச் சடங்கை அவர்கள் பாஷையில் 'பாஞ்சிகாட்' என்றும் நிச்சயதார்த்தத்தைச் 'சாகை' என்றும் கூறுகிறார்கள். பெண் பார்க்கவும் பெண் வீட்டுக்குச் செல்லவும் ஞாயிற்றுக் கிழமைதான் விசேஷமான நாள்.

திருமண விஷயங்கள் பேசும்போது, இரு சம்பந்திகளும் மதுபானம் மாற்றிக் கொள்ளுகிறார்கள். இரு சம்பந்திகளும் பேசும்போது, 'தார்வி'யை அருகில் வைத்துக்கொண்டே பேசுகிறார்கள். 'தார்வி' என்றால் கிராமத் தலைவன். நிச்சயதார்த்தம் முடிந்ததும், விருந்தாளிகளுக்குப் பெண் வீட்டார் சர்க்கரைப் பொங்கல் கொடுப்பார்கள். இதற்கு அவர்கள் பாஷையில், 'க்கீஸ்' என்று பெயர். பிறகு நாளைக் குறித்து விட்டு வெள்ளித் தாலியோ மூக்குத்தியோ கொடுப்பார்கள். இதற்குப் பின் திருமணம் நடக்கும் நாள் வரைக்கும் பெண் வெளியில் வரக் கூடாது. திருமணத்தன்று வேஷ்டியும் தலைப்பாகையும் அணிந்து கொள்ளுவான் மாப்பிள்ளை. திருமணச் சடங்கு மாப்பிள்ளை வீட்டிலும் பெண் வீட்டிலும் நடைபெறும்.

பணச் செலவுக்குத் தகுந்தாற்போல் பந்தல் போட்டு அதில் பெண்ணை உட்கார வைத்து அந்தப் பெண்ணின் சகோதரி ஒரு தட்டில் ஒரு மோதிரத்தை வைப்பாள். இதற்கு அவர்கள் பாஷையில் 'சதாச் சடங்கு' என்று பெயர். தம்பதிகள் பந்தலில் இருக்கும்போது பெண்ணுக்கும் பையனுக்கும் எட்டணா வெள்ளிக்காசு கொடுப்பார்கள். பிறகு ஊர்வலம் வரும்போது இன்னாரின்னார், இவ்வளவு இவ்வளவு கொடுக்கவேண்டும் என்று ஒரு நிபந்தனை உண்டு.

எல்லா வெகுமதிகளையும் பெற்றதும், பணமும் ஆடுமாடுகளும் கோழியும் சக்திக்குத் தகுந்தாற்



கிடையாதாம். விதவைக்கு மூக்குத்தி கிடையாது. மறு விவாகமானாலும் அவள் விதவை என்று இதன் மூலம் அறியலாம்.

தன் மனைவி வேண்டா மென்று விவாக ரத்துச் செய்யும்போது இரு கிராமத்து மக்களும் ஒன்று சேர்ந்து முடிவு செய்வார்கள். பின்பு கணவன், ''இன்று முதல் என் மனைவி, என் சகோதரி'' என்று சொல்லிவிடுவான். இதைப் பஞ்சாயத்தாரும் ஆமோதிப்பார்கள். விவாக ரத்துச் செய்து கொண்டவள் மறுபடியும் ஒரு பிறைக்குப் பின் மறு விவாகம் செய்து கொள்ளலாம். அப்படிச் செய்யும்போது கணவனுக்குப் பணம் ஒன்றும் கொடுக்க வேண்டியதில்லை.

போல் கொடுத்துக் கிராம எல்லை வரையில் பெண்ணைக் கொண்டு போய் வழிகாட்டி அனுப்பும் போது, எல்லையின்மேல் நின்று, 'எங்கள் கிராமப் பெண் துர் நடத்தை நடந்தால் உடனே எங்களிடம் கூறவேண்டும்; இதை விட்டு நீ அவளைக் கொலை செய்தால் எங்கள் ஊர் மக்கள் உன்மேல் வஞ்சம் தீர்த்துக் கொள்ளுவார்கள்' என்று மாப்பிள்ளையை எச்சரித்து அனுப்புவார்கள்.

விதவைகளுக்குக் கணவனின் ரத்தக் கலப்புள்ள சகோதரரை மறு மணம் செய்து வைக்கக் கூடாது என்ற ஒரு நிபந்தனை உண்டு. விதவா விவாகம் இரவில்தான் நடைபெறும். விதவா விவாகம் செய்துகொள்ளும் பெண், புதிய கணவனின் இல்லத்து வாசற் படியையும் இரவில்தான் மிதிக்க வேண்டும்.

''இந்தச் சடங்குகள் இரவில் நடக்கக் காரணம் என்ன?'' என்று நான் கேட்டதற்கு, ''பகலில் இவை நடைபெற்றால், எங்கள் ஊரில் கொடிய பஞ்சம் உண்டாகும்'' என்று பதில் கூறினார்கள். விதவையின் தகப்பனாருக்கு இந்தத் திருமணத்தில் ஒரு செலவும்

இவர்கள் எந்தக் காரியம் செய்தாலும் சகுனம் பார்த்து ஒரு காரியத்தைத் தொடங்குகிறார்கள். இந்து முறையிலேயே பல திருவிழாக்களைக் கொண்டாடுகிறார்கள். தாம் விஷ்ணுவின் வம்சம் என்று எண்ணுகிறார்கள். ராமசந்திரன், பகீரதன், ஹநுமான், சூரியன் முதலியவர்களை வழிபடுகிறார்கள். சூரியனுக்குத் தேங்காயும் வெண்ணெயும் படைக்கிறார்கள். கிராமதேவதை, காட்டுத் தேவதை முதலிய தெய்வங்களுக்குப் பால், பழம், தேங்காய் இவற்றைப் படைத்து வணங்குகிறார்கள்.

சாதாரணமாய் மாரி மாதா, காலரா தேவதை முதலிய வியாதிகள் இவர்களை அணுகினாலும், உடனே இவற்றையும் இவர்கள் தெய்வங்கள் என்று எண்ணி வழிபடுகிறார்கள். பிறகு சற்றுக் குணமானதும் காட்டு மூலிகைகளைச் சாப்பிட்டுச் சுகப்படுத்திக் கொள்கிறார்கள். தெய்வ வழிபாடுகளுக்கென்று 'தார்வி' என்ற தலைவன் பணிவிடை செய்கிறான்.

பில்லப் பெண் குழந்தை பெற ஆஸ்பத்திரிக்கே செல்வதில்லை. குல மருத்துவச்சியே பார்த்துவிடுகிறாள். குழந்தை பிறந்து எட்டாம்

நாள் சூரியனுக்கும் சந்திரனுக்கும் கோதுமைப் பொங்கலிட்டுக் குழந்தைக்கு நாமகரணம் செய்வித்து மற்றச் சடங்குகளை முடிப்பார்கள்.

நவீனப் போக்குவரத்து வசதி இல்லாத காலத்தில் துப்பாக்கி சுட்டோ மேளம் அடித்தோ தங்கள் கிராமத்தில் நடைபெறும் சுக துக்கச் செய்திகளை, மற்றக் கிராமங்களுக்குப் பில்லர்கள் தெரியப் படுத்தி வந்தார்களாம். மயானச் சடங்கின்போது, ஆணாக இருந்தால், தலை சீவி வெள்ளைத் துணியைப் போர்த்துவார்கள். பெண்ணாக இருந்தால் மாங்கல்யத்துக்கு மஞ்சள் தடவித் தலைவாரி உயிருள்ளவளைப்போல் அலங்கரித்துப் பூ முடித்துப் பெண்கள் கூடிச் சில சடங்குகள் செய்து மயானத்துக்குக் கொண்டு போவார்கள்.

குற்றம் செய்தவர்களைப் பஞ்சாயத்துக்கு அழைத்தாலே அவர்களுக்குப் பெரிய பயம் உண்டாகிறது. பில்லர்கள் சாதாரணமாகப் பயந்த சுபாவமுடையவர்கள். அந்நியரைக் கண்டால் சந்தேகப்படக் கூடியவர்கள். கிராமத்தில் வியாதி கண்டால், அந்தக் கிராமத்தையே காலி செய்துவிடுவார்கள். ஆனால் சத்தியம் தவறாதவர்கள்.

சிலர் கிழங்கு, பழம், சில தானியங்கள் இவற்றையும் சிலர் ஆடு, மாடு, எருமை, மான், மீன் இவற்றையும் உண்பார்கள். இவர்களிடத்தில் மூன்று நாள் தங்கினேன். எனக்கு உதவி செய்த ஒரு பெரியவர் இவர்களுடைய குலக்கதைகள் பலவற்றைக் கூறினர். அவற்றில் இரண்டை இங்கே தருகிறேன்:

பல்லாண்டுகளுக்கு முன், ஒரு சலவைக்காரன் ஆற்றில் துணி துவைத்துக்கொண் டிருந்தானாம். அவன் பகல் வேளையில் அறுசுவை உணவு ஆற்றங்கரையில் சாப்பிடுவது வழக்கமாம். அப்படி அவன் சாப்பிடும்போது, ஒரு பிடி சாதத்தைத் தினந்தோறும் மீன்களுக்கு இட்டுப் பின்பே சாப்பிடுவது வழக்கமாம். இப்படியிருக்க, ஒரு நாள் உருவத்திலே பெரியதொரு மீன் சலவைக்காரனைப் பார்த்து, ''ஜலப்பிரளயம் வரப்போகிறது. எனவே, ஒரு பெரிய பெட்டியைச் செய்து அதில் நீயும் உன் சகோதரியும் ஒரு சேவலும் பேழைக்குள் சென்று மூடிக்கொள்ளுங்கள். அதற்குள் உங்களுக்கும் சேவலுக்கும் வேண்டிய ஆகாரத்தை வைத்துக்கொள். நீ எங்கள் இனத்தை உணவிட்டுக் காப்பாற்றியதால், உன் உயிருக்கு உதவி அளித்து, ஜாக்கிரதை செய்கிறேன்'' என்றது. சலவைக்காரனும் அப்படியே செய்தானும்.

ஜலப் பிரளயத்துக்குப் பின் ராமர் தம் தூதனைக் கூப்பிட்டு, ''பூலோகத்தின் நிலைமை எப்படி இருக்கிறது என்று தெரிந்துவா'' என்று சொல்லி அனுப்பினாராம். பூலோகத்துக்குவந்த தூதன், சேவல் கூவும் ஓசையைக் கேட்டுப் பேழையைத் தூக்கிச் சென்றானும். பேழையில் சலவைக்காரனைக் கண்டு ''நீ யாரப்பா? எப்படித் தப்பினாய்? இப்படிப் பேழை செய்ய வேண்டுமென்று உனக்கு எப்படித் தெரிந்தது?'' என்று ராமர் கேட்டாராம். சலவைக்காரன் தான் பிழைத்த விதத்தை ராமருக்குக் கூறினான். பின்பு ராமர் அவனை வடக்கு, கிழக்கு, மேற்கு மூன்று திசைகளிலும் திரும்பும்படி சொல்லி அவனருகில் இருந்த பெண்ணைக் காட்டி, ''இவள் யார்?'' என்று கேட்டாராம். ''இவள் என் சகோதரி'' என்று அவன் சொன்னானும். பல முறை கேட்டும் அப்படியே கூறினான். பிறகு ராமர் அவனைத் தெற்கே திரும்பும்படி சொல்லி, பிறகு மறுபடியும் அந்தப் பெண்ணைக் காண்பித்து, ''இவள் யார்?'' என்று கேட்டதற்கு, ''இவள் என் மனைவி'' என்று அவன் கூறினானும். பிறகு ராமர், அவன் தப்பிப் பிழைக்க இந்த உபாயத்தைக் கூறிய அந்த மீன் வர்க்கங்களின் நாக்கை வெட்டும்படி உடனே கட்டளை இட்டாராம், தம் தூதனுக்கு. அன்று முதல் இன்று வரையில் அந்த வகை மீனுக்கு நாக்கு வெட்டுண்டேதான் இருப்பதாகக் கூறுகிறார்கள். ராமர் சலவைக்காரனைப் பார்த்து, ''இன விருத்தி உலகில் பெருகுவதற்காக நீ உன் சகோதரியுடன் இன்பமாக

நீண்ட நாள் வரையில் வாழ்வாயாக!'' என்றாராம். இந்தத் தம்பதிகளுக்கு ஏழு பிள்ளையும், ஏழு பெண்களும் பிறந்தார்களாம். ராமர் முதல் பையனுக்கு ஒரு குதிரையைப் பரிசளித்தாராம். ஆனால் அந்த அன்பளிப்பான தெய்வக் குதிரைமீது சவாரி செய்ய அவன் சக்தியற்றவனு யிருந்ததால் அதை வெளியில் சமபூமியில் விட்டு விட்டு, பக்கத்துக் காட்டுக்குள் சென்று மரங்களையும் தேனையும் சேகரித்துக்கொண்டு வசிக்கலானான். ஆகவே, அந்தச் சந்ததிகள் காட்டிலேயே தங்கிக் காட்டுவாசிகள் ஆனார்களாம்.

''அன்று முதல் இன்று வரையில் காட்டிலேயே 'பில்லர்கள்' என்ற ஜாதிகளாக வசிக்கிறோம்'' என்று கூறினார் பெரியவர்.

''மற்ற ஆதிவாசிகளைவிட நீங்கள் மிகவும் ஏழைகளாக இருக்கக் காரணம் என்ன?'' என்று நான் கேட்டதற்கு, மற்றொரு ரசமான கதையும் கூறினார்.

ஐந்து பில்லர்கள் பரமசிவனைக் காணச் சென்றார்களாம். பார்வதி அவர்களைக் கண்டதும் தன் கணவரிடம், ''என்னுடைய ஐந்து சகோதரர்களும், தங்களிடம் என்னுடைய திருமணத்துக்காகச் சீதனம் கேட்க வந்திருக்கிறார்கள்'' என்று கூறினாளாம்.

பரமசிவன் அவர்களை அன்பாக வரவேற்று விருந்தளித்து, ''என்னிடம் என் எருதும், கையில் இருக்கும் கமண்டலமும் தவிர வேறு ஒன்றும் இல்லையே'' என்றாராம். ஆனால் வந்தவர்களை வெறுங்கையுடன் அனுப்ப மனம் இராதவராய், அவர்கள் செல்லும் வழியில் வெள்ளி முக்காலி ஒன்று கண்ணுக்குத் தோன்றும்படி செய்தாராம். ஆனால் அந்த முக்காலி மகத்துவம் மிகுந்ததா யிருந்ததால், அவர்கள் அதைக் காண முடியாமல் போயிற்று. பார்வதி இதைக் கவனித்து, அதைப் பில்லர்களுக்கு விளக்கினாளாம். அவர்களுக்கு வெகுமதியாகக் கொடுத்த முக்காலியை அவர்கள் கொண்டு வந்திருந்தால், அவர்களின் சந்ததியார்களே உயர்ந்தவர்களாக உலகிலே உலாவ நேர்ந்திருக்குமாம். பார்வதி அவர்களை வெறுங்கையுடன் அனுப்பாமல், ''இந்த மாடுகளை ஜாக்கிரதையாகக் காப்பாற்றிப் போஷித்து வந்தால், அதன் முசுப்பின் செல்வத்தைப் பெறலாம்'' என்று சொல்லி ஒரு மாட்டைத் தந்தாளாம். 'முசுப்பின் செல்வம்' என்று கூறியதைத் தப்பிதமாக அவர்கள் அர்த்தம் செய்துகொண்டார்கள். தங்கள் இல்லம் வந்ததும் ஐவரில் ஒருவன், ''மாட்டைக் கொன்று, அதன் முசுப்பிலிருக்கும் செல்வத்தைப் பங்கிட்டுக் கொள்ளலாம்!'' என்று கூறினான். ஆனால், அதற்கு மற்றவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. கடைசியில் அவன் தன் பேச்சுச் சாமர்த்தியத்தால் அதற்கு எல்லாரையும் ஒப்புக்கொள்ளும்படி செய்துவிட்டான்.

பிறகு மாட்டைக் கொலை செய்து பார்த்ததில், அதன் முசுப்பில் ஒரு விதமான செல்வமும் இல்லை என்று கண்டு ஏமாந்து போனார்கள். உடனே பார்வதி அவர்கள் முன் தோன்றி, ''மாட்டை ஏரில் கட்டி நிலத்தை நல்ல முறையில் உழுதால், அதன் மூலம் பூமாதேவி உங்கள் குலத்துக்குச் செல்வத்தைக் கொடுப்பாள் என்னும் கருத்தில் நான் கூறியதைத் தப்பிதமாக அர்த்தம் செய்துகொண்டீர்களே! இவ்வளவு மூடத்தனமாக, நீங்கள் அந்தச் சாதுவான புண்ணியப் பிராணியைக் கொலை செய்ததால், என் முகத்தை இனிக் காணமாட்டீர்கள்'' என்று கூறி, வெறுப்புடன் சென்றாள்.

''இந்த விதமான தெய்விக மாட்டைக் கொன்றதால், எங்கள் குடும்பத்தார்கள் அன்றும் இன்றும் என்றும் இன்பமாக ஜீவிக்கவில்லை. எங்களை மற்ற ஜாதியார்களும் சேர்த்துக்கொள்வதில்லை'' என்று, பில்லப் பெரியவர் தம் குலக் கதைகளைச் சொல்லி முடித்தார்.

இவைபோல் பல கதைகளைப் பௌர்ணமி நிலவில் உட்கார்ந்து கேட்கும் வாய்ப்பு எனக்குப் பெருமகிழ்ச்சி தந்தது.

# சாப்பாடு சரியா?

## டாக்டர் டபிள்யு. ஆர். அய்க்ராய்டு

மக்களின் உணவைச் சீர்திருத்தி ஒழுங்குபடுத்த உலகெங்குமே கணக்கு எடுத்துப் பெரிய பிரசாரமும் செய்யவேண்டியிருக்கிறது. அந்த வேலையில் ஐ. நா. ஸ்தாபனப் பிரிவுகள் ஈடுபட்டிருக்கின்றன. கட்டுரையை எழுதியிருப்பவர் ஐ. நா. உணவு விவசாயச் சபையின் சத்துணவு(நுட்ரீஷன்)டிவிஷன் டைரெக்டர்.

"நாம் ஏன் - எதை - உண்கிறோம்?" - இது சுலபமான கேள்வியாகத் தோன்றுகிறது. சற்று யோசித்துப் பார்த்தால், இதற்குச் சுலபமான பதில் இல்லை என்று தெரியும். மனிதரின் உண்ணும் வழக்கம் பல அம்சங்களைச் சார்ந்திருக்கிறது; சரித்திரம், பூகோளநிலை, பொருளாதாரம், பண்பாடு இப்படிப் பல அம்சங்களைச் சார்ந்திருக்கிறது.

உணவுகளைத் தானிய வகைகள், சர்க்கரைச் சத்துள்ள உருளைக் கிழங்கு போன்ற கிழங்குகள், பட்டாணியும் மொச்சையும் போன்ற பருப்புகள், சர்க்கரை, கொழுப்பு, எண்ணெய், பழம், காய்கறிகள், மாமிசம், முட்டை, மீன், பால் இப்படிப் பல முக்கியப் பிரிவுகளாகப் பிரிக்கலாம். சகல மனிதர்களின் உணவிலும் இவையெல்லாம் மிகவும் வித்தியாசமான வெவ்வேறு அளவுகளில் கலந்திருக்கின்றன.

நாம் வாழும் பூமி என்ற கிரகம் பரிணாமத்தில் ஒரு கட்டத்தை அடைந்திருக்கிறது. அந்தக் கட்டத்தில் ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்தச் சூழ்நிலைக்கு ஏற்றபடிதான் நம்முடைய உணவை அமைத்துக்கொண்டிருக்கிறோம். முதல் முதலாக இந்த உண்மையையே நமது உணவு ஜாபிதா பிரதிபலிக்கிறது. ஆதியில் மனித இனம் அங்கும் இங்குமாகச் சிதறிக் கிடந்தது. அதிலிருந்து 250 கோடியாக ஜனத்தொகை பெருகி இன்று எங்கும் பரவிவிட்டது. பூமியின் சூழ்நிலையையும் மனித இனத்தின் இந்த விரிவையும் பார்க்கும்போது, உணவு வகைகளில் பெருத்த வித்தியாசம் இருப்பது அசாத்தியம் என்று புரியும்.

மனிதன் நெல்லையும் கோதுமையையும் விட்டு வேறு புல்வகைகளைப் பயிரிட்டுத் தானியம் உண்டாக்க முயன்றிருக்கலாம். மாடு



காப்பிரைட்: யுவர் ஹெல்த் (ஆங்கிலம்: மே, '57),
23, ஸமவாய மான்ஷன்ஸ், கல்கத்தா-13.

கோழிபோன்ற பிராணிகளை விட்டு வேறு வகை விலங்குகளையும் பறவைகளையும் அவன் பழக்கி வைத்துக்கொண் டிருக்கலாம். உருளைக் கிழங்கு, முட்டைக்கோஸ், ஆரஞ்சு இவற்றை விட்டு வேறு பல காட்டுக் கிழங்குகள், காய்கறிகள், கனிகள் இவற்றைப் பல நூற்றாண்டுகளாகப் பயிரிட்டுப் பழக்கியிருக்கலாம். ஆனால், இவையெல்லாம் இப்போதே உள்ள உணவுப் பிரிவுகளுக்குள்ளே ஒரு வித்தியாசமாய் இருக்குமே தவிர, முற்றும் புதிய உணவு மூலாதாரங்களாக இருக்க முடியாது.

ஆனால், விஞ்ஞான வளர்ச்சி ஏற்பட்டு, புதிய உணவு மூலாதாரங்களைக் கண்டு பிடித்துப் பயன்பெற முடியலாம். சில வகை ‘ஆல்கே’ என்ற பாசி, புல் இவற்றைத் தக்க முறையில் பக்குவப் படுத்திப் பெருத்த அளவில் உணவு தயாரித்து விடலாம் என்று சிலர் மிக்க உற்சாகமாய்ச் சொல்லுகிறார்கள். ‘ஸிந்தெட்டிக் உணவு’ என்ற ரசாயனச் சேர்க்கை உணவுகளைத் தயாரித்து விடலாம் என்றும் சொல்கிறார்கள். ஆனால், இது இன்று நடக்கக் கூடியதல்ல. என்றோ ஒரு நாள் ஒருவேளை நடக்கலாம். நமக்குப் பாரம்பரியமாய்க் கிடைத்திருக்கும் உணவு வகைகளையும் உணவு மூலங்களையும் கொண்டேதான் இன்று நாம் சரிக்கட்டிக் கொள்ளவேண்டும்.

முதலில் மனிதன் தீயை உபயோகித்துப் புலாலைச் சுடக் கற்றான். அப்புறம் பல முறைகளில் உணவுகளைப் பக்குவப்படுத்த அறிந்து கொண்டான். ரொட்டி சுடுவதை இதற்கு ஒரு முக்கிய உதாரணமாகச் சொல்லலாம். உணவு உற்பத்தி செய்யும் ஒரு தொழிலே இதிலிருந்து உருவாகிவிட்டது. நிலத்திலும் தோட்டத்திலும் விளையும் தானியங்களையும் கறிகாய்களையும் கொண்டு பல உணவுப் பண்டங்களைத் தயாரித்துக் கடைகளில் வைக்கிறார்கள். அவற்றை நாம் வாங்கி உண்கிறோம்.

பெரிய அளவில் உணவுப் பண்டங்களை உற்பத்தி செய்வது ஒன்றும் புதிய தொழில் அல்ல. உதாரணமாக, பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே சர்க்கரை ஆலைகள் நடந்து வருகின்றன. புராதன ரோம் நாட்டிலேயே ரொட்டி சுடுவதற்குப் பெரிய தொழிற்சாலைகள் இருந்திருக்கின்றன. ஆயினும், சென்ற நூற்றாண்டில்தான் உணவு உற்பத்தித் தொழில் பிரமாதமாக வளர்ந்திருக்கிறது. பொதுவாக அதனால் மனிதனின் உணவு முறைக்கு நன்மை விளைந்திருக்கிறது என்றே சொல்ல வேண்டும். நவீன விஞ்ஞான ரீதியில் உணவு ஆராய்ச்சி நடக்காவிட்டால், இது சாத்தியப் பட்டிராது.

எண்ணெய் வித்துக்களைக் கொண்டு வாய்க்கு ருசியான மலிவான மார்கரின் என்ற போலி வெண்ணெய் தயாரித்துவிடுகிறோம். இதை எல்லாரும் வாங்கி உண்கிறார்கள். விஞ்ஞான ரீதியான உணவு ஆராய்ச்சியின் ஆச்சரியமான சாதனையே இது. இந்த மார்கரின் வெண்ணெயில், கொழுப்பைக் கரைக்கும் வைட்டமின் இல்லை. இதுதான் இதன் குறை. ஆனால், இந்த வைட்டமின் குறையை ஈடுகட்ட மற்றோர் ஆராய்ச்சி நடந்திருக்கிறது. அதனால் நிஜ வெண்ணெயோடு இந்த



வெண்ணெய் மிகவும் வெற்றிகரமாக இப்போது போட்டிபோட முடிகிறது: விலையில் மட்டும் அல்ல; உணவுச் சத்து அம்சத்திலுமே இப்படிப் போட்டி போட முடிகிறது.

பூகோள நிலைக்கு அல்லது பிரதேச நிலைக்கு ஏற்றபடி உணவு வகைகள் அமைகின்றன. தென் கிழக்கு ஆசியாவில் கோதுமை செழித்து விளைவதில்லை; நெல்லே அப்படி விளைகிறது. இதனால் அங்கெல்லாம் பெரும்பாலோர் கோதுமை உண்ணுமல் அரிசியே பொதுவாக உண்கிருர்கள். ஆனுல், சமீப வருஷங்களில் பிரதேச நிலையின் செல்வாக்கு இந்த விஷயத்தில் வரவரக் குறைந்துகொண்டே வருகிறது.

முதலாவதாக, ஒரு பிரதேசத்துப் பயிர்களும் விலங்குகளும் உலகெங்கும் பரவி வருகின்றன. 'மெய்ஸ்' என்ற மக்காச்சோளம் இன்று எகிப்தின் சிறப்புப் பயிராக இருக்கிறது. ஆனுல், அந்த நாட்டின் புராதனக் கல்லறைகளில் மக்காச் சோளத் தட்டைகளைப் பற்றிய வர்ணனையே இல்லை. இது ஆச்சரியமாயிருக்கிறது. 'டர்க்கி' என்ற வான் கோழி அமெரிக்கப் பறவை. விசித்திர சரித்திர காரணங்களால் அது இப்போது இங்கிலாந்து கிறிஸ்மஸ் பண்டிகையில் முக்கிய அம்சமாக விளங்குகிறது;

இரண்டாவதாக, போக்குவரத்துச் சாதனங்களும் விஞ்ஞான ஆராய்ச்சிகளும் இன்று வளர்ச்சியுற்றிருக்கின்றன. பிரதேச உணவையே மக்கள் நம்பியிருக்கவேண்டிய அவசியம் இதனுல் குறைந்துவிட்டது. க்யூபா, இஸ்ரேல், வெனிஸூலா, எல்லாவற்றையும்விட மேலாக இங்கிலாந்து - இந்த நாடுகளின் மக்களெல்லாம் அந்நிய நாடுகளிலிருந்து வந்து இறக்குமதியாகும் உணவுகளையே சார்ந்து வாழ்கிருர்கள். ரிஃப்ரிஜெரெட்டர் என்ற ஐஸ் பெட்டியில் வைத்துப் பாதுகாப்பது போன்ற முறைகளின் மூலம் உலகத்திலே எந்த இடத்துப் பணக்காரர்களும் எண்ணற்ற உணவுகளில் எதை வேண்டுமானுலும் தேர்ந்து உண்ணலாம். ஆனுல், இதே சமயம் வளர்ச்சி இல்லாத சில நாடுகளும் இருக்கின்றன. அவற்றின் பெரும்பாலான மக்கள் தாங்கள் விளைவிக்கும் உணவுகளையே இன்னமும் நம்பி வாழ வேண்டியிருக்கிறது. அவர்களுடைய உணவு வகைகள், நவீன நகரத்து மக்களின் உணவு வகைகளைப்போல் சுலபத்தில் மாறுவதில்லை; ஒரே சுவட்டிலேயே போய்க்கொண்டிருக்கின்றன.

முதலில் நான் தந்த உணவுப் பிரிவு ஜாபிதாவுக்குள்ளேயே மனிதரின் உணவு வகைகள் அடங்கியிருக்கின்றன என்ருலும், விஞ்ஞான ரீதியாகப் பார்க்கும்போது வேறு உணவு மூலங்களும் சாத்தியந்தான். காலரி, ப்ரொட்டீன், வைட்டமின், தாதுப்பொருள் (மினரல்ஸ்) இவையெல்லாம் போதிய அளவு எதில் கிடைத்தாலும் அது திருப்திகரமான உணவுதான். ஆனுல், பொதுவாக ஜனங்கள் இப்படி நினைப்பதில்லை.

அநேக ஜனங்களின் உணவுகளில் சில 'எக்ஸ்ட்ராஸ்' (உபரிகள்) இருக்கின்றன; டீ, காபி, மது வகைகள், மணமூட்டும் மசாலைகள் இவையெல்லாம் இருக்கின்றன. உடம்புக்கு வேண்டிய உணவுச் சத்து இவற்றில் இல்லை. என்ருலும், மிக்க அவசியமான உணவு போல இவை பழக்கத்துக்கு வந்து விட்டன. இவற்றைப் பயிர் செய்வதால், பயிர்த் தொழிலின் பொருளாதாரமே மாறிவிட்டது. ஒவ்வொரு குடும்பத்தின் பட்ஜெட்டிலும் இந்த இனங்கள் இடம் பெற்றுவிட்டன. உணவுச் சத்துள்ள வேறு பண்டங்களைக் குறைத்துக் கொண்டாவது, இந்த 'எக்ஸ்ட்ரா'க்களுக்கு ஜனங்கள் செலவழிக்கிருர்கள்.

ஜனங்களின் பழக்க வழக்கங்களை ஒட்டி உணவு வகைகள் பெரிதும் அமைந்திருப்பதுபற்றிப் புஸ்தகம் புஸ்தகமாக எழுதலாம். ஒவ்வொரு விதமான பண்பாடு உள்ள மக்களும் உணவு, சமையல், சாப்பாட்டு நேரம், ஆகார அளவு, வேளை, உணவுகளின் வரிசைக்கிரமம் இவற்றிலெல்லாம் வெவ்வேறு

வகையைப் பலமாக விரும்புகிறார்கள். அந்த அந்த இடத்துச் சடங்குகளோடு சாப்பிடுகிறார்கள்.

ஒவ்வொருவருடைய உடல் இயல்பை ஒட்டி ருசியும் மணமும் அமைகின்றன. இவைபற்றி ஒன்றுமே விளங்கவில்லை. இதுதான் மிகவும் ஆச்சரியம். ஒன்று வேண்டுமானால் உத்தேசித்துக் கொள்ளலாம்: எல்லாருக்கும் நாக்கு ருசி ஒரே விதந்தான் என்று வைத்துக் கொள்ளலாம். சாதாரணமாக எல்லாருக்குமே இனிப்பு இனிப்பாகவும் புளிப்புப் புளிப்பாகவுமே இருக்கும். ஆனால், ருசியைப் பயிற்சி செய்து மாற்றிக் கொள்ளலாம். அதனாலேயே ஒருவனுக்கு அமிர்தமா யிருப்பது மற்றொருவனுக்கு விஷமாய்ப் போய்விடுகிறது.

அடிப்படையான ருசி ஒரு புறம் இருக்க, ஐதிகம், கிடைக்கும் உணவு, பொருள் வசதி, சமூகச் சூழ்நிலை இவையெல்லாம் சேர்ந்து கொள்வதால் ஒவ்வொரு கோஷ்டி மக்களுக்கும் சில உணவுகள் பிடித்து விடுகின்றன. ஒவ்வொரு கோஷ்டியாரும் தங்கள் உணவு வகைகளே இயல்பானவை - சரியானவை - என்று எண்ணுகிறார்கள். உண்மையில் இதற்குத் தேசீய அல்லது பிராந்தியப் பண்பாடே ஆழ்ந்த காரணம்.

உணவுகளிலே மக்களுக்குப் பல மூடநம்பிக்கைகள் உண்டு; விதிவிலக்குகள் உண்டு. அவை பற்றியும் புஸ்தகம் புஸ்தகமாக எழுத முடியும். அதற்கு மனிதவர்க்கத்திலே நாகரிகம் அடைந்த பிரிவுகள், பூர்விகக் குடிப் பிரிவுகள் இவர்களிடமிருந்தெல்லாம் ஏராளமான உதாரணங்கள் கொடுக்க வேண்டி யிருக்கும்.

'க்வாஷியோர்க்கர்' என்ற ஒரு வியாதியின் பெயரை வைத்திய சாஸ்திரத்திலே ஏற்றியவர் டாக்டர் ஸிஸிலி வில்லியம்ஸ் என்பவர். ப்ரொட்டீன் சத்துப் போதாக் குறையே இந்த வியாதிக்குக் காரணம். அந்த டாக்டர் எழுதுகிறார்: ''கிழக்காப்பிரிக்காவில் மிக அபாயமான அளவு, க்வாஷியோர்க்கர் என்ற வியாதி பரவியிருக்கிறது. புலாலும் பாலும் அகப்படக்கூடிய இடங்கள் இங்கே இருக்கின்றன. என்றாலும், பெண்களும் குழந்தைகளும் அவற்றை உண்பதில்லை. பெண்கள் முட்டை தின்றால் மலடாவார்களாம்; கோழி தின்றால் கோழிபோல் கூவுவார்களாம்; ஆடு தின்றால் அவர்களுக்குத் தாடி முளைத்துவிடுமாம்! இப்படியெல்லாம் அவர்களிடம் சொல்லிவைத்திருக்கிறார்கள்.''

இவையெல்லாம் மிதமிஞ்சிய மூடநம்பிக்கைகளாகத் தோன்றலாம். இவற்றைப்போல் தீவிரமில்லாத மூடநம்பிக்கைகள் பல நம்மிடத்திலும் உண்டு.

பொருளாதாரம் காரணமாகவும் உணவு வகைகள் அமைகின்றன. குறிப்பிட்ட சில அளவு பணத்துக்கு, குறிப்பிட்ட உணவு வகையை வாங்கினால், அதே பணத்துக்குக் கிடைக்கும் வேறு வகை உணவுகளைவிட அதிகக் 'காலரி' (உஷ்ண சக்தி) பெறுவோம். இப்படி அதிகக் 'காலரி' தருபவை தானியங்கள், மாவுக் கிழங்குகள், சர்க்கரை இவையெல்லாம்; 'காலரி' குறைந்தவை பால் பண்டங்கள், புலால், முட்டை இவையெல்லாம். பிராணிப் பண்ணை மூலம் ஓரளவு 'காலரி' பெற எவ்வளவு நிலம் வேண்டுமோ அதைவிடக் குறைவான நிலம், பயிர்த் தானியங்களின் மூலம் அதே அளவு 'காலரி' பெறப் போதும். அதைவிட இதில் பாடும் குறைவு. ஆயினும், பிராணிகளின் மூலம் கிடைக்கும் உணவுகளில் அடிப்படையான சில போஷணைச் சத்துக்கள் அதிகமாயிருக்கின்றன.

மனிதனுக்குப் போதிய அளவு ஆகாரம் வேண்டும். இது முக்கியம். போதிய அளவு 'காலரி' கிடைக்க மலிவான உணவுகளையே ஏழைமக்கள் சார்ந்திருக்கவேண்டியிருக்கிறது. பல நாடுகளிலும் ஆராய்ந்து பார்த்திருக்கிறார்கள். அதில் இந்த விஷயம் புலனாகியிருக்கிறது: வருமானம் அதிகரித்த குடும்பங்களில் அதற்கேற்றபடி உணவு வகைகளும் மாறுபடுகின்றன. குடும்பங்களைப் போலவே தேசங்களுக்கும் இந்த விதி பொருந்துகிறது.

ஜனத்தொகை மிகுந்த ஏழை விவசாய நாடுகளில், மொத்தம் 'காலரி'யில் நூற்றுக்கு 65 விகிதம் விவசாயத்தின் மூலமே மக்களுக்குக் கிடைக்கிறது. இந்த நிகழ்ச்சிகளாலும் ஒரு சிக்கல் ஏற்படுகிறது: வருமானம் ஏற ஏற, அவசியமான சில உணவுகள் அதிகரிக்கின்றன. அவசியமான வேறு சில உணவுகள் குறைந்து விடுகின்றன. சில ஏழை விவசாய நாடுகள், வேறு சில விவசாய நாடுகளை விட மேலான் உணவை, அதே அளவு நிலத்திலிருந்தே உற்பத்தி செய்து விடுகின்றன.

ஜனங்கள் என்ன சாப்பிடுகிறார்கள், அது அளவிலும் குணத்திலும் சரியான உணவா என்று பல ஆராய்ச்சி நடத்தி யிருக்கிறார்கள். தேசம் முழுவதையுமே எடுத்துக்கொண்டு, பல நாடுகளுக்கு 'உணவு ஐந்தொகை' (பாலன்ஸ் ஷீட்) தயாரித் திருக்கிறார்கள். தேசத்து மக்கள் உண்ணும் உணவின் சராசரிக் கணக்கையும் வகைகளின் அளவையும் அது காட்டுகிறது. ஆனால் ஒரு நாட்டுக்குள்ளேயே இடம், பொருள், ஏவல்களால் உணவு வகைகள் மாறுவதை அவை காட்டவில்லை. உணவு, ஜனத்தொகை இவை பற்றிய புள்ளி விவரங்களைக் கொண்டே 'உணவு ஐந்தொகை'யைத் தயாரித்திருக்கிறார்கள். அந்தப் புள்ளி விவரங்களே பல சமயம் தவறு யிருக்கின்றன. அவற்றை ஆதாரமாகக் கொண்ட கணக்கும் தவறுகிறது.

குடும்பங்களை நேரே ஆராய்ந்து பார்த்து இன்னொரு கணக்கு எடுக்க வேண்டும். அதையும் தேசத்துக் கணக்கையும் சேர்த்துப் பார்த்தால், உணவு வழக்கங்களைப் பற்றிய சரியான சித்திரத்தை நாம் காணலாம். நகரங்களிலும் கிராமங்களிலும் குடும்ப உணவுக் கணக்கு எடுக்கச் சில முறைகளையும் வகுத்திருக்கிறார்கள். ஆனால் இந்த ஆராய்ச்சிக்குப் பெரும் பணம் செலவழிகிறது; நீண்ட காலம் பிடிக்கிறது. ஆகவே, சில நாடுகளில் மட்டுமே இப்படிக் குடும்ப உணவுக் கணக்கு எடுத்திருக்கிறார்கள்.

இப்படி உணவுக் கணக்கு எடுப்பதற்கு ஒரு முக்கிய நோக்கம் உண்டு. மக்கள் உண்ணும் உணவு, உடம்பின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறதா என்று கண்டுபிடிக்க வேண்டும். தேசம் முழுவதும் மக்களின் உணவு நிலை உயர்வடைய இந்தக் கணக்கைக் கொண்டு வழி தேடவேண்டும். சத்துள்ள உணவு பெறச் சரியான முறைகள் எவை என்பதை மக்களுக்குப் போதிக்க வேண்டும். இதற்கு, அவர்கள் என்ன உண்ணுகிறார்கள் என்று கண்டுபிடித்தால் மட்டும் போதாது; அவர்கள் ஏன் அதை உண்ணுகிறார்கள் என்பதையும் கண்டு பிடிப்பது அவசியம்.

ஒரே வகையாக அமைந்த ஜனங்களின் கோஷ்டிக்குள்ளே ஒரே வகையான உணவுகளே பழக்கத்தில் இருக்கின்றன. ஆனால், உலகம் முழுவதையுமே எடுத்துக்கொண்டு பார்த்தால், உணவு வகைகளில் காணும் ஒற்றுமையை விட வேற்றுமைகளே அதிகமாய்க் காண்கின்றன. இந்தச் சிக்கலை ஏற்படுத்திய அம்சங்கள் எவை என்பது இப்போது உங்களுக்குத் தெளிவாக விளங்கி யிருக்கும்.

## அற்புதம்

''அற்புதங்களை நீங்கள் நம்புகிறீர்களா?'' என்று பிக்காஸோ என்ற கம்யூனிஸ்ட் ஓவியரை யாரோ கேட்டார்கள்.

''சந்தேகமில்லாமல் நம்புகிறேன். ரூபென்ஸ் என்ற ஓவியர் விஷயம் ஓர் அற்புதம். அவர் 2,000 படங்களைத் தீட்டினார். அவற்றில் 4,000 படங்கள் இன்றும் இருந்துவருகின்றனவே; இது அற்புதம் இல்லையா?'' என்று அவர் பதில் அளித்தார். —ஆக்கி

இங்கே பாடாதாம் இந்தக் குருவி, எங்கோ போய்ப் பாடுகிறதாம்! என்ன விந்தை!

# ஆயிரம் மைல் திரியும் குருவி

## இந்து சூடன்

நம் நாட்டில் ஆறு அல்லது ஏழு மாதம் இரை தேடி மற்றக் காலமெல்லாம் வடதேசம் சென்று கூடுகட்டிக் குஞ்சு பொறிக்கும் சில குருவிகளைப் பொடிக் குருவிகள் என்று குறிக்கிறார்கள். இவை மற்றப் பறவைகளைவிட உருவத்தில் சிறியவையாக இருப்பதே இந்தப் பெயருக்குக் காரணமாயிருக்கலாம். ஆனால் எண்ணிக்கையில் இவை மற்றப் பறவைகளைவிட எவ்வளவோ அதிகம் என்றுதான் கூற வேண்டும். செப்டம்பர் முதல் மார்ச்சு அல்லது ஏப்ரல் வரையில் காடுகள், நாட்டுப்புறம், மரங்கள் அடர்ந்த பட்டணப் பகுதிகள் இவற்றில் எல்லாம் இந்தப் பறவைகளைக் காணலாம். ஆனால் பறவைகள் மீது கவனம் செலுத்துபவருக்கே இத்தகைய பறவை ஜாதியைப் பற்றிய ரகசியம் தெரியும்.

தையல்காரப் பறவை அல்லது பாணக்குருவி இவற்றின் அளவுதான் பொடிக் குருவியும் இருக்கும். ஆனால் வால் மிகவும் சிறியது. ஆண் பெண் உருவ மாறுபாடு எதுவும் இவற்றில் இல்லை. இந்தப் பறவைகளை முக்கியமாக இரண்டு வகையாகப் பிரிக்கிறார்கள். ஆங்கிலத்தில் ஒரு வகையைக் 'க்ரீன் வில்லோ வார்ப்ளர்' என்றும் மற்றொரு வகையை 'க்ரீனிஷ் வில்லோ வார்ப்ளர்' என்றும் கூறுவதுண்டு. இரு வகைக்கும் உள்ள மாறுபாட்டை, தேர்ந்த பறவை சாஸ்திரிகள் கூடக் கண்டறிவது சிறிது கஷ்டந்தான்.

பொடிக் குருவிகள் வாலிலிருந்து தலை வரையில் ஐந்து அங்குல நீளந்தான் இருக்கும். உடல் மிகவும் சிறியதுதான். தலை, பின் கழுத்து, இறக்கைகள், முதுகு இவையெல்லாம் பொதுவாக மஞ்சள் கலந்த இளம் பச்சையாகும். அடிப்பக்கமெல்லாம் இளம் மஞ்சள் அல்லது மங்கிய வெள்ளையாக இருக்கும். கண்ணுக்கு மேல் அலகிலிருந்து ஆரம்பமாகும் புருவம், சுமார் பின் கழுத்து வரையில் நீண்டிருக்கும். இதன் நிறம் தெளிந்த இளம் மஞ்சள். புருவத்துக்கு அடுத்துக் கீழே கறுப்பாக இரண்டு பட்டைகள் இருப்பது புருவத்தின் அழகை எடுத்துக் காட்டுகிறது. மூடிய இறக்கைகளின் மீது இளம் மஞ்சள் அல்லது மங்கிய வெள்ளையான இரண்டு பட்டைகளைக் காணலாம். ஆனால் இவை அனைத்தும் சட்டென்று தெரியக் கூடியவை அல்ல.

எப்போதும் இந்தப் பறவைகள் மரத்தில் இலைகளுக்கிடையே மறைந்தும் தாவியும் காலத்தைக் கழிக்கும். நன்றாகப் பார்ப்பதற்குக்கூடப் பொறுமையும் முயற்சியும் வேண்டும். இலைகள் அடர்ந்த மாமரம், வேப்ப மரம் முதலியவற்றில் இவை வாழ்வதாலும் ஒரு கணமும் ஓரிடத்தில் நிலைத்திருக்காததாலும், தூரதரிசினிக் கண்ணாடியைக் கொண்டுகூட இவற்றைப் பார்ப்பது கஷ்டந்தான்.

செப்டம்பர் முதல் டிசம்பர் வரையில் இந்தப் பறவை



காப்பிரைட்: மாத்ருபூமி (மலையாளம்: 7-10-'56), கோழிக்கோடு.

பகல் முழுவதும் அடிக்கடி 'சிருவி' அல்லது 'சிருவிற்று' என்று வேகமாகச் சப்தம் செய்துகொண்டு போகும். முதலில் இந்தச் சப்தத்தைக்கொண்டு, மற்றப் பறவைகளிலிருந்து இதை வேறுபடுத்தித் தெரிந்துகொள்ள வேண்டும். பிறகு இதன் போக்கு வரத்துகளையும் சுபாவங்களையும் கவனிப்பதில் சிரமம் இருக்காது. பாலக்காடு தாலுகாவில் செப்டம்பர் முதல் டிசம்பர் வரையில் ஒவ்வொரு மரத்திலும் ஒவ்வொரு பொடிக் குருவியைப் பார்க்கலாம் என்பது என் நம்பிக்கை. அதிகாலை முதல் மாலை வரையில் எங்கே சென்றாலும் இந்தப் பறவையின் 'சிருவிற்று' என்ற சப்தம் கேட்காமல் இராது.

இந்த ஆண்டில் இந்தச் சப்தத்தை உங்கள் தோட்டத்தில் கேட்க நேர்ந்தால், இந்தப் பறவையைக் காணச் சிறிது நேரம் செலவழியுங்கள். மா மரமோ பலா மரமோ இருந்தால், அவற்றில் கவனித்தால் போதும். மொத்தத்தில் இளம்பச்சையாகத் தோன்றுவதும், சிறிது நீண்டு பருமன் இராததும் இங்குமங்கும் தாவுவதுமான பறவையைப் பார்த்தால், அதுதான் பொடிக் குருவி என்று தீர்மானித்துக்கொள்ளுங்கள். இது அநேகமாக இலைகளின் அடியில் சென்று சிறு பிராணிகளைக் கொத்தித் தின்னும். பறந்து செல்லும் பாச்சைகளை அபூர்வமாகத்தான் தொடர்ந்து பிடிக்கும். உங்கள் வீட்டின் அருகில் முருங்கை மரம் இருந்தால், அதன் அடியில் சிறிது பொறுமையுடன் காத்திருங்கள். இலைகள் பெரிதாக இல்லாததால், அங்கே பொடிக் குருவியைக் காண்பது எளிது.

இரை தேடி அலையும் பொடிக் குருவி, அடிக்கடி இறக்கைகளை உயரத் தூக்கி இறக்குவதைக் காணலாம். 'சிருவிற்று' என்று சப்தம் செய்வதும் இறக்கைகளைத் தூக்குவதும் ஒரே சமயமாக இருக்கும். ஒளிந்திருக்கும் பாச்சைகளை வெளிக்கிளப்புவதற்காக உள்ள தந்திரமாக இருக்கலாம், இப்படி இறக்கைகளை உயர்த்துவது.

கூட்டமாகச் செல்லும் பொழுதோ இணை சேரும் பொழுதோதான் பறவைகள் சப்தம் செய்யும் என்று சிலர் கூறுவதுண்டு. 'மிளிவெற்றி', 'வேலித்தத்தா' (வேலிக் கிளி), 'சுட்டியாற்ற' போன்ற குருவிகள் கூட்டமாகப் போகும்பொழுது சப்தம் செய்யும். மரங்கொத்தி போன்ற பறவைகள் இணைசேர்ந்து நடக்கும் பொழுது சப்தம் செய்யும். தனியாக இருந்து சில பறவைகள் பாடுவது, கூடு கட்டுவதற்காக என்று கூறுவதும் உண்டு. ஆனால் பொடிக் குருவி நம் நாட்டில் கூடு கட்டுவதுமில்லை; கூட்டம் சேர்ந்து அல்லது இணை சேர்ந்து நடப்பதுமில்லை. நம் ஊரில் வாழும் வரையில் இந்தப் பறவை தனியாகத்தான் நடப்பது வழக்கம். ஆனால் ஏன் சப்தம் செய்கிறது? சில பறவைகள் பாடுவதுபோலத்தான் இதுவும் காரணம் இல்லாமல் சப்தம் செய்கிறது என்று பதில் கூறிவிடலாம். ஆனால் எனக்குத் தோன்றும் பதில் இது: ஒரு மரத்தில் பல பொடிக் குருவிகள் ஒன்று சேர்ந்து பாச்சை வேட்டையாடினால், உணவு உடனே தீர்ந்துவிடும்; பற்றாமலும் போய்விடும். அதனால் ஒவ்வொரு பறவையும் தனித்தனியே ஒவ்வொரு மரத்தில் இருக்க விரும்புகிறது. ஒரு மரத்தில் ஒரு பறவையின் சப்தம் கேட்டால் மற்றொன்று அணுகாது. இந்தக் கருத்துச் சரிதான் என்று விளக்கப் போதுமான காரணங்கள் உண்டு.

எங்கள் வீட்டுத் தோட்டத்தில் நாலைந்து ஒட்டு மாமரங்கள் இருக்கின்றன. இங்கே ஒவ்வொரு வருஷமும் செப்டம்பர் மாதத்தில் மூன்று அல்லது நான்கு பொடிக் குருவிகள் வந்து பகல் முழுவதும் சப்தம் செய்துகொண்டு இரை தேடும். அடிக்கடி ஒன்றன்பின் ஒன்றாகத் தோட்ட மரங்களில் தாவிச் செல்லும். ஆனால் இது வெறும் விளையாட்டல்ல. ஒவ்வொன்றும் தனக்கு உரிய இடங்களைப்பற்றிச் சண்டை போடுவதற்கு அறிகுறியே இது. அக்டோபர் மாதம் வருவதற்குள் ஒரு மரத்தில் ஒரு பொடிக் குருவி

மட்டும் மற்றக் குருவிகளை ஓட்டி விட்டுத் தனியாக வாழத் தொடங்கும். அப்பொழுது அங்கு ஏதாவது வேறு பொடிக் குருவி தலை காட்டினால், அங்கிருக்கும் பறவை காட்டும் வீரம் சாமானியமாக இராது.

ஐந்தே அங்குல நீளம் உள்ள இந்தச் சிறு பறவைகள் கூடு கட்டுவதற்காக இமாலயத்துக்கு அப்பாலுள்ள பிரதேசங்களுக்குப் போகின்றன என்பதைக் கேட்டால், நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். இவற்றில் சில காச்மீரத்திலும், சில ஈரான், வட ஐரோப்பா, மேற்கு ஸைபீரியா, வட மேற்கு மஞ்சூரியா இந்த இடங்களுக்குச் சென்றும் கூடு கட்டுகின்றன.

மார்ச் மாதத்தில் நம் நாட்டை விட்டுச் செல்லும் இந்தப் பறவைகள் மே மாதத்தில் வட திசை நாடுகளில் சென்று கூடு கட்டி விடும். இவை ஆயிரம் முதல் மூவாயிரம் மைல் தூரம் வரைக்கும் செல்லுகின்றன. போகும் வழியில் உயர்ந்து பனி மூடிய மலைத் திரை குறுக்கே கிடக்கிறது. ஆயினும் ஒவ்வோர் ஆண்டிலும் இவை காலந் தவருமல் வட திசை யாத்திரையும் தென்திசை யாத்திரையும் செய்கின்றன. இந்தப் பறவைகள் ஏன் இப்படிக் கஷ்டப்படுகின்றன? யாத்திரையின் காலத்தை இவை எவ்விதம் அறிகின்றன? போகும் வழி எது? இத்தகைய கேள்விகளுக்குப் பதில் இன்னும் கிடைக்கவில்லை.

ஆங்கிலத்தில் பொடிக்குருவிக்கு 'வார்ப்ளர்' (பாட்டுக்காரன்) என்று பெயர் இருப்பதற்கேற்ற படி, அங்கே சந்தன மரம் வாசனை கமழும் காலத்தில் இது இனிமையாகப் பாடுமாம். நம் நாட்டில் வாழும் காலத்தில் இவை 'சிருவிற்று' என்ற சப்தத்தைத் தான் செய்கிறது. 'ஆறு அல்லது ஏழு மாதம் இது நம் நாட்டில் வாழ்ந்துவிட்டுப் போகும்பொழுதாவது ஒரு பாட்டுப் பாடிவிட்டுப் போகக்கூடாதா?' என்று நான் பல முறை எண்ணியதுண்டு.

## சிக்கல் தீர்த்த சிறுவன்

பாரிஸ் நகரில் பிரிட்டிஷ் பிரதம மந்திரி லாயிட் ஜார்ஜ் ஒரு சமயம் கிரில்லான் ஹோட்டலில் தங்கியிருந்தபோது நான் பார்த்தேன். அங்கே ஒரு வாலிபன், எகிப்துப் போர் முனையிலிருந்து ரஜா வாங்கிக்கொண்டு வந்திருந்தான். அவனை லாயிட் ஜார்ஜ், ''பாலைவனத்தில் பீரங்கிகளை எப்படி இழுத்துக்கொண்டு போவது?'' என்று விசாரித்தார்.

''அது வெகு சுலபமாச்சே. பீரங்கிச் சக்கரங்களில் வைக்கோல் புரிக் கயிறுகளைச் சுற்றினுல் போகிறது'' என்றுன் வாலிபன்.

உடனே, பிரிட்டிஷ் ராணுவத் தலைவர் ஸர் வில்லியம் ராபர்ட்ஸன் என்பவரை லாயிட் ஜார்ஜ் கூப்பிட்டனுப்பினர். ''பெரிய நிபுணர்கள் இருக்கிறீர்களே; உங்களால் தீர்க்க முடியாத சிக்கலை ஒரு வாலிபன் - சின்னஞ் சிறு பையன் - தீர்த்துவிட்டான், பார்த்தீர்களா?'' என்று கோபத்தோடு சொன்னர்.

—ஸர் எட்வர்டு ஸ்பீயர்ஸ், 'தி டெய்லி'

## உற்சாக உழைப்பு

எந்தக் காரியத்தையும் உற்சாகத்தோடு செய்கிறவன், தன் நோக்கத்தை அடையத் தவறுவது அபூர்வம்.

—வால்மீகி

விஞ்ஞான ரீதியாக நடத்திய முயற்சியின் ஒரு நவீன சிருஷ்டி!

# அர்த்தநாரி அவரை

ஆர். வீராசுவாமி

பழம் பெரும் நாடு பாரத நாடு. பல கலைகளிலும் புகழ் பெற்ற நாடு. ஒப்பற்ற பல கலைச்செல்வங்கள் விலை மதிப்பற்ற நம் பொக்கிஷங்களாக விளங்குகின்றன. கலை வளர்த்த நம் முன்னோர்கள், பல விந்தைகள் செய்தார்கள். உயர்ந்த தத்துவங்கள் பொதிந்து கலைமணம் கமழும் தெய்விகச் சிற்பங்களை நம் திருக்கோயில்களில் இன்றும் காணலாம். 'இப்படியன், இந்நிறத்தன், இவ்வண்ணத்தன்' என்று வர்ணிக்க முடியாத அந்த இறைவனையும், கல்லிலும் செம்பிலும் இனம் காட்டினார்கள், மேதைகளாகிய நம் முன்னோர்கள்.

அர்த்தநாரி மூர்த்தியின் சிலை நாம் பார்த்ததுதானே? கோவிலுக்குப் போகாதவர், படத்திலாவது பார்த்திருப்பார்கள்; அல்லது பிறர் சொல்லக் கேட்டிருப்பார்கள். அர்த்தநாரி என்றால் பாதி பெண்ணுருவம்; பாதி ஆண் உருவம். அது ஆணையும் பெண்ணையும் ஒரே உருவில் அமைத்துக் காட்டுகிற இறைவனுடைய ஒரு தத்துவத் திருக்கோலம். அதில் ஆண்டவன், அம்மையும் அப்பனுமாகக் காட்சி தருகிறான். இந்தத் திருக்கோலத்துக்குப் பல விதமாகப் பொருள் கொள்ளலாம்.

உலக உயிர்கள் அனைத்திலும், ஆண், பெண் என்ற வேறுபாடுகள் தென்படுகின்றன. இரண்டும் தனித்தனியே பிரிந்திருக்கும் போது வம்சவிருத்திக்கு வழியில்லை. இரண்டும் ஒன்று சேர்ந்த மோன நிலையில் படைப்புத் தொழில் ஏற்பட்டுச் சந்ததிகள் உண்டாகின்றன. இது ஒரு தத்துவப் பொருள்.

முன் நாளில் பெண்ணுரிமைக்காகப் பாடுபட்டவர்கள், இந்த அர்த்தநாரி உருவத்தை அமைத்து வைத்ததன் மூலம், பெண்களும் ஆண்களுக்குச் சரி நிகர் சமானம் என்னும் மாபெரும் உண்மையைப் பறை சாற்றுவதாகச் சொல்லலாம். இந்தக் காலத்துக்கு இந்த விளக்கம் அவ்வளவாகப் பொருந்தாது. காலம் மாறிப் போய், ஆண்கள் ஆணுரிமையைப்பற்றிக் கவலைப்பட வேண்டி வந்துள்ள நாளல்லவா இது!



நவீன அவரைத் தோட்டம்

இன்னொரு விளக்கம் பொருள் பொதிந்த சிறப்பு விளக்கம். மனிதப் பிறப்பில், ஆண், பெண் என்ற இரண்டு வகையினருக்கும் தனித்தனியே உரிய சில சிறப்புக் குணங்கள் உண்டு; சில குறைகளும் உண்டு. வீரம், அஞ்சாமை, ஆற்றல் இவை ஆணின் சிறப்பியல்புகள். கற்பு, கருணை, அடக்கம் இவை பெண்ணின் பெருமைகள். மனிதப் பிறவியில் தென்படும் குறைபாடுகளை முற்றும் அகற்றி, ஆணின் சிறப்

மூலம்: மேழிச் செல்வம் (தமிழ்: மார்ச் '57), மவுண்ட் ரோடு, சென்னை.

பியல்புகளையும் பெண்ணின் சீலங்களையும் ஒருங்கே அமைத்துக் காட்டுகிற ஒப்பற்ற 'அதி மனித தத்துவம்' (எதிக்ஸ் அவ் ஸூப்பர் மான்ஹூட்) அர்த்தநாரி ரூபத்தில் அடங்கி நிற்கிறது. இயற்கையில், எல்லா உயிர் வகைகளிலும், நன்மையும் தீமையும், குணமும் குற்றமும் கலந்தே அமைகின்றன. தீய குணங்களை நீக்கிச் சிறப்பியல்புகளை ஒன்று சேர்த்துப் பிரகாசிக்கச் செய்வதற்கு, மனிதன் பெரு முயற்சி செய்ய வேண்டும். முயன்றால் வெற்றி கிட்டும். இதுதான் உட்பொருள்.



டி. எல். 1428 அவரைக்காய்

தத்துவ விசாரணையிலிருந்து இப்போது விவசாய ஆராய்ச்சிக்கு வருவோம். பயிர்க்கலை ஆராய்ச்சியாளன் வெறும் விஞ்ஞானி மாத்திரம் அல்ல. அவன் கலையுள்ளம் படைத்த கலைஞன். பல இனவகைகளில் தென்படும் குறைபாடுகளை முற்றும் நீக்கி, நல்ல அம்சங்களை மாத்திரம் ஒருமிக்கத் திரட்டிச் சேர்த்து, தாவர உலகில் புதுப் புது 'அர்த்த நாரி'களைச் சிருஷ்டிக்க முயல்கிறான் ஆராய்ச்சியாளன். சலியாத உழைப்பின் காரணமாக, அவன் கண்ட கனவுகள் எத்தனையோ பலித்தன. 'மலடி வயிற்று மகன் போலே, ஒரு புதையல் எடுத்த தனம் போலே' எத்தனையோ வித்தைகள் நிகழ்ந்தன. மூங்கில் கரும்பாக மாறிற்று; நுண்ணிய இறுங்குச் சோளம் பருத்த மஞ்சள் சோளமாக உருவெடுத்தது; சோளப்பயிர் இருபது அடி உயரம் வளர்ந்தது; சோளத்தட்டை கரும்புபோல் இனித்தது; கேழ்வரகு வெண்ணிறம் பெற்றது; நெல்பயிரில் 'கட்டுக் கலங்கண்டது; கதிர் உழக்கு நெல் கண்டது'; கம்பங்கதிர் இரண்டடி நீண்டது! இன்னும் எத்தனையோ சாதனைகள்.

இந்த ஆராய்ச்சி முயற்சிகளில், கரு இணைப்புச் சேர்க்கைமுறையைக் கையாளுகிறார்கள். இரண்டு வெவ்வேறு ராசிகளில் தென்படும் சிறந்த குணங்களை ஒருமிக்க இணைத்து, புதிய உயர் ரகம் ஒன்றைச் சிருஷ்டி செய்வது, மிகவும் கடினமான சாதனை. ஒரு தட்டில் உள்ள தயிரையும், மற்றொரு தட்டில் உள்ள வடையையும் ஒன்றாகக் கலந்து தயிர் வடை செய்கிற காரியம் அல்ல இது.

நாம் எதிர்பார்ப்பதற்கு நேர் மாறாக, நல்ல அம்சங்களுக்குப் பதில் இரண்டு ராசிகளின் தீய குணங்களும் ஒருமிக்கத் திரண்டு வந்து, அபத்தக் களஞ்சியமான ஒரு ராசி சில சமயம் உற்பத்தியாகிவிடும். பிள்ளையார் பிடிக்கப் போய்க் குரங்காக முடிந்த கதைதான்! இது போன்ற பல இடையூறுகளையும் தகர்த்தெறிந்து, தன் விஞ்ஞான அறிவாலும் ஊக்கத்தாலும் உழைப்பாலும் இறுதியில் வெற்றி மாலை சூடுகிறான் ஆராய்ச்சியாளன்.

கோயம்புத்தூர்ச் சிறு தானிய ஆராய்ச்சிப் பண்ணையில் சிறு தானியங்களில் மாத்திரமல்லாமல், அவரை, துவரை, மொச்சை, கொள்ளு, உளுந்து முதலிய பயறு

வகைகளிலும் ஆராய்ச்சிகளை நடத்தி, புதுப் புது உயர் ரகப் பொறுக்கு விதைகளை உற்பத்தி செய்து வருகிறார்கள்.

அவரைக் காயைத் தெரியாதவர்கள் இருக்க முடியாது. இந்தக் காய்கள் சுவைமிக்க கறி வகைகள் சமைப்பதற்குப் பயன்படுகின்றன. காய்களை அப்படியே சமைக்கலாம். ஆடி - ஆவணி மாதங்களில் இறைவையில் சாகுபடி செய்வார்கள். செடிகள் கொடியாக வளர்ந்து, பந்தலில் படர்ந்து காய்ப்புக்கு வரும். ஆகவே, இதற்குப் பந்தல் அவரை என்று பெயர். அவரைக் கொடிகள் மென்மையானவை; ஆகவே, அவற்றைப் பூச்சிகளும் நோய்களும் வெகுவாகப் பாதித்து நாசம் செய்துவிடுகின்றன.

மொச்சை, அவரையைப்போல் கொடியாகப் படராது; குத்துச் செடியாகவே வளரும். ஆகவே, அதற்குப் பந்தல் போட வேண்டிய அவசியமில்லை. அவரைக் காய்களைப் போல், மொச்சைக் காய்களை அப்படியே சமைக்க முடியாது. காய்களின் மேல்தோலை அகற்றி உள்ளே இருக்கும் பருப்புகளைத் தான் சமைத்து உண்ண முடியும். மொச்சைக்குத் தண்ணீர் பாய்ச்ச வேண்டிய அவசியமில்லை. அது மானாவாரிப் பயிராகவே வளர்ந்து, நன்றாகக் காய்க்கும். பூச்சிகளும் நோய்களும் மொச்சையை அவ்வளவாகப் பாதிப்பதில்லை.

மொச்சையில் தென்படாத சில சிறப்புக் குணங்கள் அவரைச் செடியில் இருக்கின்றன. அது போலவே மொச்சையிலும் சில நல்ல அம்சங்கள் இருக்கின்றன. இவை இரண்டிலும் தென்படும் சிறப்பியல்புகளை ஒருமிக்கச் சேர்த்து, புது ராசி ஒன்றை உருவாக்கும் நோக்கத்துடன், கோயம்புத்தூர்ச் சிறு தானிய ஆராய்ச்சிப் பண்ணையில் அவரையையும் மொச்சையையும் கரு இணைப்புச் செய்து, அதிலிருந்து உண்டான பல சந்ததிகளைக் கடின பரிசோதனைகளுக்கு உட்படுத்தி இறுதியில் வெற்றி கண்டிருக்கிறார்கள். இந்த வெற்றியின் வடிவமாகத் தோன்றிய புது ராசி 'டி. எல். 1428.'

டி. எல். 1428 என்ற இந்தப் புது ராசி, மொச்சையைப்போல் புதராக வளரும். இதற்குப் பந்தல் அவசியமில்லை. இது மானாவாரியில் பயிராகும்; வறட்சி தாங்கும்; செழித்துக் காய்க்கும்; பூச்சிகளால் அவ்வளவாகச் சேதம் அடையாது. அவரைக் காய்களைப்போல் இதன் காய்களை அப்படியே கறியாகச் சமைக்கலாம். காய்கள் தோற்றத்திலும் சுவையிலும் அவரைக் காய்களை ஒத்திருக்கும்.

ஆராய்ச்சியினால், அவரையையும் மொச்சையையும் இணைத்து உருவாக்கிய டி. எல். 1428 என்னும் இந்தப் புது ரகத்தை 'அர்த்தநாரி அவரை' என்று அழைப்பது பொருத்தந்தானே!

## விளம்பர மோகம்

அமெரிக்க ஜனாதிபதி தியொடோர் ரூஸ்வெல்ட் என்பவருக்கு 'ஆர்ச்சி' என்று ஒரு மகன் இருந்தார். அவரை யாரோ ''உங்கள் அப்பா எப்படிப்பட்டவர்?'' என்று கேட்டார்கள்.

''எங்கள் அப்பாவா? அவர் ஒரு தினுசான ஆசாமி. ஒரு கலியாணத்துக்குப் போனால் தாமே மணமகனா யிருக்கவேண்டும் என்று ஆசைப்படுவார்; ஒரு துக்கத்துக்குப் போனால், தாமே பிணமாயிருக்க வேண்டும் என்று ஆசைப்படுவார்'' என்றார் ஜனாதிபதியின் திருக் குமாரர்.

—'ஸ்வதந்த்ரா'

# விநோபா பேட்டி

★

செஸ்டர் பௌல்ஸ் என்பவர் முன் நாளில் இந்தியாவில் அமெரிக்கச் சர்க்காரின் தூதராகப் பதவி வகித்தவர். அவரும் அவருடைய மனைவியும் எழுதியுள்ள ஒரு புஸ்தகத்தில் விநோபா பாவேயின் பூதானத்தைப் புகழ்ந்திருக்கிறார்கள். பௌல்ஸின் மனைவி சமீபத்தில் விநோபாஜியைப் பார்த்துப் பேசிய இந்த விவரம் முதலில் ஆங்கில 'சர்வோதயம்' பத்திரிகையில் வெளிவந்தது. அதை நெரூர் சிவசுப்பிரமணியம் தமிழில் மொழிபெயர்த் திருக்கிறார்.

ஸ்ரீமதி பௌல்ஸ், இந்தியாவின் நலத்தை நாடுபவள்; இந்தியாவில் கிணறுகள் வெட்ட இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் நிதி திரட்டுவதில் அக்கறை கொள்கிறவள். இவள் கொரடாச்சேரியில் அடிகளைச் சந்தித்தாள்.

முன்பே தான் வருவதாக அடிகளுக்கு எழுதியிருந்தாள். உத்கலில் முன்பு அடிகளைப் பார்த்தபோது, அடிகளுக்குத் தொண்டையில் தொந்தரவு இருந்தது. வந்தவுடனே, ''தொண்டை சரியாக இருக்கிறதா?'' என்று கேட்டாள்.

தம் ஆரோக்கியத்தில் அக்கறை கொண்டதற்கு அவளை அடிகள் பாராட்டி, தமக்கு வலது பக்கத்தில் உட்காரச் சொன்னார். பிறகு, ''இடது காது சரியாகக் கேட்பதில்லை'' என்று சொன்னார்.

''எனக்கும் அப்படித்தான். அது போக, உங்களுக்கு இப்போது சரியாகக் கேட்கிறதா?'' என்று கேட்டுக்கொண்டே பௌல்ஸ் உட்கார்ந்தாள். பேச்சு ஆரம்பமாயிற்று. தன் கணவர் வந்து அடிகளைப் பார்க்க முடியாததற்கு அவள் மன்னிப்புக் கேட்டுக்கொண்டாள். ''தங்கள் இயக்கமும் கிராமதானமும் பெருகுவதைக் கண்டு அவர் மகிழ்ச்சியடைகிறார்'' என்று சொன்னாள்.

பின்பு, சென்ற தடவை தான் பார்த்த 'கம்யூனிட்டி பிராஜெக்ட்' கிராமங்களைக் குறிப்பிட்டு, ''அவை முன்னேற்றம் அடைகின்றனவா?'' என்று அடிகளைக் கேட்டாள்.

''அவை தங்கள் வழியில் முன்னேறுகின்றன. ஆயினும் வறுமையை ஒழித்தாலல்லாது உண்மை முன்னேற்றம் கைகூடாது. பிராஜெக்ட் மந்திரி ஸ்ரீ தே அவர்களே வறுமையால் பலர் அதன் நன்மைகளைப் பெற முடியவில்லையென்றும், சிறிது வசதியுள்ளவர்களே அவற்றைப் பெறுகிறார்களென்றும் சொல்லுகிறார். ஸ்ரீ தே எதையும் ஒளித்துப் பேசவில்லை. மிக எளியவர்களுக்குத் தாங்கள் ஒன்றும் செய்யவில்லை என்று ஒப்புக்கொள்கிறார். அதுதான் கஷ்டம். திட்டங்கள் மேலேயிருந்து வருபவை'' என்றார் அடிகள்.

''இதை ஸ்ரீ தே அவர்களிடம் சொன்னீர்களா?''

''சொன்னேன்; அவரும் அதை ஒப்புக்கொண்டார்.''

''இதற்குத் தங்கள் பரிகாரம் என்ன?''

மூலம்: சர்வோதயம் (தமிழ்: ஏப்ரல் '57), சீனிவாசபுரம், தஞ்சாவூர்.

''கிராம தானந்தான் பரிகாரம் என்பது என் முடிவு.''

''ஆமாம். அப்போதுதான் முன்னேற்றத் திட்டம் சரியாக அமையும்.''

''ஆமாம். இதனுல்தான் மதுரை ஜில்லாவில் முன்னேற்றத் திட்ட அதிகாரிகள் கிராம தானத்தில் அக்கறை கொண்டிருக்கிறுர்கள்'' என்ருர் அடிகள்.

ஸ்ரீமதி பௌல்ஸின் காரிய தரிசியாக வந்திருக்கும் ஸ்ரீ ஹாரிஸ், ''பூதானக் கருத்தைக் கொண்டு பிற நாடுகளிலும் செல்வர் - ஏழை என்ற பிளவை அகற்ற முடியுமா?'' என்று அடிகளைக் கேட்டார்.

அடிகள், ''தான இயக்கம் இந்தியாவுக்கு மட்டும் உரியதல்ல என்பதை நான் பல தடவை சொல்லியிருக்கிறேன். உலகப் பிரச்னைகளைத் தீர்க்க இதுவே சாதனம். இடம் பொருள் ஏவலுக்குப் பொருந்த இதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ஆஸ்திரேலியாவில் குடியேற ஜப்பானியர்களை அழைக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லையா? பூமி ஆண்டவன் படைத்தது; தனி நபருக்கோ, தனி இனத்தாருக்கோ அது சொந்தமானதல்ல. இது என் திட நம்பிக்கை. பூமி மனித சமுதாயத்தின் சொத்து'' என்று பதில் சொன்னுர்.

''சமபத்தி தானம் முக்கியமா?''

''அது அவ்வளவு முக்கியம் அல்ல. உண்மையில் பணத்துக்கு மதிப்பு ஏது? நாம் அதற்கு மதிப்பை ஏற்றியிருக்கிறேம். உன்னிடம் எவ்வளவு பணம் இருந்தாலும், உனக்கு வேண்டிய பண்டங்களை அது பெற்றுத் தராவிட்டால் அதனுல் பயன் என்ன? நான் விற்க ஒரு பண்டத்தை வைத்திருப்பதாலேயே, உன் பணத்துக்கு மதிப்பு. நிலம் அப்படியல்ல. அதுவே உற்பத்தியின் மூல சாதனம். அதற்குத் தான் சுயமதிப்பு உண்டு'' என்று அடிகள் விளக்கினுர்.

''சில நாடுகளில் இயற்கை வளங்களும் வசதிகளும் இருக்கின்றன; சிலவற்றில் இல்லை. வசதிகள் உள்ளவை அவற்றை மற்ற நாடுகளுக்கு இலவசமாக வழங்க வேண்டுமா?'' என்று ஸ்ரீமதி பௌல்ஸ் கேட்டாள்.

அடிகள், ''ஆமாம், அப்படித் தான் செய்ய வேண்டும். ஆனுல் மூல வசதிகளை எல்லைகளிலேயே தயாரித்துக்கொள்ள வேண்டும்; பிற வசதிகளைத்தான் பரிமாறிக் கொள்ளலாம்'' என்ருர்.

ஸ்ரீ ஹாரிஸ், ''இஸ்ரேல், சீனு முதலிய நாடுகளில் கூட்டுறவு இயக்கம் வளர்கிறதே, அவற்றிடம் இந்தியா சில பாடங்களைக் கற்கலாகாதா?'' என்று கேட்டார்.

''கூட்டுறவு முயற்சிகளை நான் பாராட்டுகிறேன். அவற்றை இந்தியா ஏற்கவேண்டும். ஜப்பானிய நடவு முறையை ஆதரிக்கிறேன். ஆனுலும் ஒவ்வொரு நாட்டுக்கும் நடைமுறைகள் வேறு. அவற்றை அப்படியே பிற நாடுகள் ஏற்பது சரி அல்ல'' என்ருர் விநோபா.

''இந்திய அரசாங்கம் லட்சம் உற்பத்தியாளர் சங்கங்களை ஏற்படுத்தத் திட்டமிட்டிருக்கிறது. நீங்கள் அதை ஒப்புக்கொள்ளுகிறீர்களா?''

''கிராமதானம் இல்லாமல் அது சாத்தியம் இல்லை. கிராம தானத்தின் அடிப்படையிலேயே அது சாத்தியமாகும்.''

''கிராமதானக் கிராமங்களில், ஆட்சிமுறை மாறுதல் ஏதாவது ஏற்பட்டிருக்கிறதா?'' என்று ஸ்ரீமதி பௌல்ஸ் கேட்டாள்.

''கிராமதானம், மக்களின் மன மாற்றத்தாலேயே ஏற்படுகிறது. அப்போது புதுச் சூழ்நிலைக்கு ஏற்றபடி மக்கள் வாழ்க்கையில் மாறுதல்களைச் செய்துகொள்வார்கள். இன்று ஒருவர் கல்யாணத்துக்காகப் பிறரிடமிருந்து கடன் பெறுகிறுர். கிராம தான சமுதாயத்தில், யாரும் கல்யாணத்துக்காகக் கடன் வாங்கவேண்டியதில்லை. இது சமுதாயத்தின் பொறுப்பு. இதை அது செய்து முடிக்கும். தனியொருவர் கடன் வாங்கும் வழக்கமே போய் விடும்.''

சேவா கிராமத்திலிருந்து அப்போதுதான் திரும்பிய ஸ்ரீ அரியநாயகம் அவர்கள், ''கோலாப்பூர் ஜில்லாவில் ஆஸ்ராமஹல்

என்ற 52 கிராமங்கள் கொண்ட பிர்க்கா தானமாகக் கிடைத்திருக்கிறது'' என்று சொன்னார். அந்தப் பிர்க்கா தானம் கிடைத்த ஒரு வாரத்துக்குப் பிறகே பம்பாயில் மராட்டி தினசரி யொன்றில் அந்தச் செய்தி வெளியாயிற்று. அதையும் அடிகளுக்குப் படித்துக் காட்டினார்.

''அமெரிக்காவில் பத்துக் கிராமங்களில் தனியுடைமையைக் கைவிட்டாலே ஏதோ பெரிய தெய்விக நிகழ்ச்சி நிகழ்ந்ததுபோல் அது பத்திரிகையின் முதல் பக்கத்தில் பெரிய பத்திகளில் விளம்பரமாகி விடும்'' என்று அந்த இரண்டு அமெரிக்கர்களும் சொன்னார்கள்.

அடிகளோ அதே மராட்டிப் பத்திரிகையில் இரண்டு பத்திகளில் பெரிய எழுத்தில் கொலைவழக்கில் சம்பந்தப்பட்ட ஒருவனைக் கைது செய்த சமாசாரம் வெளி வந்திருப்பதைச் சுட்டிக் காட்டி, ''இந்தப் பிர்க்கா தானத்தையும் பலாத்காரத்தால் சாதித்திருந்தால், அதைப் பெரும் புரட்சியாகக் கருதிக் கொட்டை எழுத்துக்களில் ஒரு பக்கத்தில் பிரசுரித்திருப்பார்கள்'' என்று சொன்னார்.

அந்த அமெரிக்கர்கள், 'இந்தப் புரட்சிகரமான செய்தியை இந்தியப் பத்திரிகைகள் சரியாக மதிக்கவில்லையே!' என்று ஆச்சரியப்பட்டார்கள். அடிகளோ, இன்றைய விளம்பர முறைகளை வேண்டி நிற்பதில்லை. அவர், 'புரட்சிகள் அமைதியாக நடைபெறுபவை; அவை முடிந்தேறிய பின்பே உலகம் அவற்றை அறியும்' என்று கருதுபவர்.

பிறகு ஸ்ரீமதி பௌல்ஸ், ''நீக்ரோக்கள் அமெரிக்கருடன் (வெள்ளையருடன்) பஸ்களில் சமமாகப் பிரயாணம் செய்வதற்காகப் போராடிய ஸ்ரீ கிர்க் இந்தியாவுக்கு வந்து, உங்களுடன் சில நாள் யாத்திரை செய்யப் போகிறார்'' என்று தெரிவித்தாள்.

''இது நல்ல சமாசாரம்'' என்றார் அடிகள்.

''அமெரிக்காவில் அதுவே பெரிய விஷயம். இன்று சமமாக நீக்ரோக்கள் வெள்ளையருடன் பஸ்களில் பிரயாணம் செய்கிறார்கள். உலகெங்கும் தோன்றும் இந்தச் சமத்துவ ஆர்வத்தை ஒன்றாகத் திரட்ட முடியாதா?'' என்று பௌல்ஸ் கேட்டாள்.

அடிகள், ''இறைவன் உன்னைப் போன்றவர்களைக் கொண்டு இதையும் செய்வார். நீ இத்தகைய நல்ல செய்திகளை இங்கிருந்து அங்கும் அங்கிருந்து இங்கும் கொண்டு செல்'' என்று பதில் அளித்தார்.

நீக்ரோ சத்தியாக்கிரகத்தைப் பற்றிக் குறிப்பிட்டு, ''இதற்கு ஜனநாயக இந்தியாவில் இடம் உண்டா?'' என்று ஸ்ரீமதி பௌல்ஸ் கேட்டாள்.

அடிகள், ''அந்தப் பழைய முறைச் சத்தியாக்கிரகம் எதிர்மறையானது. ஆங்கிலேயரை இந்தியாவை விட்டு வெளியேறச் சொன்னார் காந்தி. அந்த நிலைக்கு அது பொருத்தமானது. மக்களாட்சி அமலிலுள்ள இன்று சத்தியாக்கிரகம் ஆக்க முறையில் அமைய வேண்டும். கிராமதானம் அத்தகைய சத்தியாக்கிரகத்துக்கு வழிவிடும் என்று நம்புகிறேன். மக்கள், 'கட்டுப்பாடு வேண்டியதில்லை; மனமாற்றமே போதும்' என்பதைப் படிப்படியாக உணர்வார்கள். மக்களாட்சியில் சத்தியாக்கிரகம் உயர்ந்த படியில் அமர வேண்டும். 'இதைத் திருத்து; அதை அழி' என்றெல்லாம் சொல்லத் தேவையில்லை. நாம் திருந்தினால் போதும்; எதையும் அழிக்க வேண்டிய அவசியமில்லை. என் பழைய அநுபவத்திலிருந்து இந்த ஆக்கமுறைச் சத்தியாக்கிரகம் உருவாகும். எங்கள் எதிர்மறைச் சத்தியாக்கிரகம், எங்களுக்குச் சுதந்தரத்தைப் பெற்றுக் கொடுத்தது. ஆனால் அதிலிருந்து அஹிம்ஸா சக்தி பிறக்கவில்லை. அன்பின் ஆக்க வலிவுக்கு முன்னால் தீமை வலிவற்றுப் போகும் என்பதை மக்கள் அறியவில்லை. அவர்களுக்குத் துணிவும் பிறக்கவில்லை. அன்பின் வலிவில் மக்களுக்கு நம்பிக்கையை உண்டாக்க வேண்டும்'' என்று அடிகள் அருளினார்.

இன்னும் சற்று விளக்கமாகச் சொல்லும்படி வேண்டினுள் பௌலஸ். அடிகள், ''ஓர் அநீதியான கட்டத்தை எதிர்க்க, நாம் எதிர்மறை முறைகளை விட்டு அன்பையே சாதனமாகக் கொள்ள வேண்டும். உன்னை நான் பகைப்பதில்லை என்பது போதாது; உன் குற்றங் குறைகளை அறிந்துகொண்டே நான் உன்னிடம் அன்பு காட்ட வேண்டும். என்னிடத்தில் மட்டும் குற்றங் குறைகள் இல்லையா? எப்போதும் உன்னிடம் அன்பு செலுத்தத் தயாராக இருக்க வேண்டும். அதுவே ஆக்க வலிவு. அது ஒவ்வொருவர் இதயத்திலும் இருக்கிறது; ஆனுல் வெளியே தெரிவதில்லை. நாம் முன்நாளிலிருந்தே நம் வலிவையெல்லாம் பலாத்காரத்தை வளர்ப்பதிலேயே செலவழித்து வந்திருக்கிறேம். அன்பின் சக்தியை வளர்க்க நீண்ட காலம் வேண்டியதில்லை. இது நிச்சயம்'' என்ருர்.

''விஞ்ஞானிகள் புதிய சாதனங்களைக் கண்டுபிடிக்கிருர்கள். ஆனுல் அந்தச் சாதனங்களைப் பிறர் தீய வழிகளில் உபயோகிக்காமல் இருக்கச் செய்வது எப்படி?''

''ஏன், அவர்களும் தங்கள் சாதனங்கள் தீய வழிகளில் புகாமலிருக்க, அஹிம்சா முறையில் திடமாக எதிர்க்கலாம்.''

''பூதான இயக்கத்தில் நில மற்றவர்கள் செய்ய வேண்டியது என்ன?''

''அவர்களுடைய உழைப்புத் திறன் உலகிலேயே வலிவுள்ளது என்பதை அறிய வேண்டும். அவர்கள் உழைப்பைத் தானமாகக் கொடுக்க முன் வரவேண்டும். அப்போது ஒரு ஜீவ வலிவு பிறக்கும். பெற்றுக்கொள்ளவே தாங்கள் இருப்பதாக அவர்கள் எண்ண வேண்டியதில்லை. அவர்களும் கொடுக்கக் கூடியவர்கள்; அன்புடன் தங்கள் உழைப்பைத் தானமாகக் கொடுக்கலாம்.''

''ஐக்கிய நாடுகள் சங்கத்தின் வழியாகப் பூதானக் கருத்தை உலக நாடுகளில் பரப்பலாகாதா?'' என்று பௌலஸ் இறுதியாகக் கேட்டாள்.

''அந்தச் சங்கம் அப்படிச் செய்யவேண்டும் என்றே நானும் விரும்புகிறேன். ஆயினும் இந்த ஐ. நா. சங்கத்தின்மீது எனக்குப் பெரிய நம்பிக்கையில்லை. இந்தச் சங்கத்திலே பல நாட்டுப் பிரதிநிதிகளும் சமமாக உட்கார்ந்துதான் பேசுகிருர்கள். என்ருலும் ஒருவரையொருவர் நம்புவதில்லை.''

சம்பாஷணை முடிந்தது. அவள் வந்ததற்கு அடிகள் உபசாரம் சொன்னுர்.

அடிகள் ஆங்கிலம் பேசுவதே ஓர் அழகாயிருப்பதாக ஸ்ரீமதி பௌலஸ் பாராட்டினுள்.

## கவலைக்குச் சம்பளம்

ஒரு வியாபாரி தம் நண்பரிடம் சொன்னுர்: ''வாழ்க்கை என்பது ஒரே கவலை மயமாயிருக்கிறது. ஒரு கவலை போனுல், மற்றென்று வந்துவிடுகிறது. இதற்காக ஒரு புதிய திட்டத்தை நான் கைக்கொண்டு பார்க்கப் போகிறேன். ஒரு வாலிபனை அமர்த்திக் கொண்டு, என் கவலைகளை யெல்லாம் அவனிடம் ஒப்படைத்துவிடப் போகிறேன. அத்தனைக்கும் கவலைப்படவேண்டியது அவன் பொறுப்பு. வருஷம் 5000 பவுன் அவனுக்குச் சம்பளம் கொடுக்கப் போகிறேன்.''

நண்பர்: 5000 பவுனு! வியாபாரத்தில் ஒரே நஷ்டம் என்கிருய்; அவனுக்குச் சம்பளம் கொடுக்க எங்கே பணம் சம்பாதிப்பாய்?

வியாபாரி: அதைப்பற்றி எனக்கென்ன? அது தான் அவன் படவேண்டிய முதல் கவலை.

—'வெரைட்டி', கராச்சி.

# அடிகள் நடந்த வழி




## தமிழ் நாட்டில்

| | | |
|---|---|---|
| நடந்த மைல் | .. | 2,686 |
| தங்கிய முகாம் | .. | 409 |
| கிடைத்த நிலம் ஏக்கரா | .. | 1,20,215 |
| நிலம் கொடுத்த நபர் | .. | 29,230 |
| கிடைத்த சம்பத்தி தானம் ரூபாய் | | 4,33,078 |
| பிரசுர விற்பனை ரூபாய் | .. | 54,639 |

—'சர்வோதயம்' (தமிழ்), தஞ்சாவூர்.

வேட்டைக்காரர்களிலேயே பலர் தவருக மயங்கி யிருக்கும் ஒரு ரகசியம் வெளியாகியிருக்கிறது!

# கலைமானின் வயசு

ஹ்யூ எம். ஹாலிடே

பழைய ஷிகாரிகளிடம், அவர்கள் வாழ்நாள் முழுவதும் அநுபவத்தில் அறிந்துகொண்டதாக எண்ணும் சில விஷயங்கள் பொதுவாக வழங்கும் வதந்திதான் என்ருல், அவர்கள் அதை ஏற்றுக் கொள்வது சிரமமாகத்தான் இருக்கும். இப்போது வேட்டை சம்பந்தமாகத் தெரிந்திருக்கும் பல புதிய விஷயங்களில் ஒன்று, மான்களைப்பற்றியது. ஒரு வருஷ மான் குட்டிகள் என்று பலர் எண்ணிக் கொண்டிருந்தவை உண்மையில் வயசு முதிர்ந்த மான்களே; அதே மாதிரி வயசு முதிர்ந்த மான்கள் என்று எண்ணிக்கொண் டிருந்தவை பெரும்பாலும் ஒரு வயசுக் குட்பட்ட மான்குட்டிகளே!

ஒரே வருஷம் ஆன மான்குட்டிகளுக்குக்கூட 8, 10 - ஏன், சில சமயம் 11 - கணுக்கள் கொம்பு தோன்றும்போது இருக்கும். இந்தக் கணுக்களிலிருந்து இயல்பாக நீளக் கிளைபோல் வளராமல் கூர்மையான முள் குத்திட்டதுபோல் சில மான்களுக்கு வளர்ந்திருக்கும். இப்படி முள்போல் கணுவில் வளர்ந்த மான்கள் ஒரு வயசே ஆன குட்டிகள் என்றும், ஒவ்வொரு வருஷமும் ஒவ்வொரு கணு வீதம் ஏறிக் கொண்டே போகும் என்றும் பொதுவாக ஒரு கருத்து இருந்து வந்தது. இன்னும் இந்தக் கருத்து நீடித்து வருகிறது. ஆனுல் உண்மையில் பார்க்கப் போனுல், ஆண் குட்டிகளுக்குக் கொம்பில் மொண்டு உண்டாவது இயல்பே என்ருலும், முள்போல் குத்திட்டு முளைப்பது சத்துள்ள உணவு கிடைக்காததால்தான்.

அமெரிக்காவில் பென்ஸில்வேனியா ராஜ்ய வேட்டைக் கமிஷன் அறிக்கை இது: 'மான்கள் நன்ருக மேய்ந்து வளப்பமாக இருந்தால், வேட்டையின்போது சிக்கும் மான்களில் ஒரு வயசே ஆகிக் கொம்புகள் ஒழுங்காக வளர்ந்த மான்குட்டிகளின் தொகைதான் மிகுதியாக இருக்கும்; அதாவது, நூற்றுக்குச் சுமார் அறுபதாவது குட்டிகளாக இருக்கும். கொம்புகளின் வளர்ச்சியை முக்கியமாகக் கருதாமல் மான்களின் வயசை நிர்ணயிக்கும் முறை தெரிந்ததும் நாலு ஐந்து வயசு ஆன சில மான்களுக்குக்கூட இன்னும் கணுக்களிலிருந்து கிளைக்கொம்புகள் வளராமல் அந்த இடம் வளர்ச்சி குன்றி முள்போல் குத்திட்டு நிற்பதுண்டு என்று கண்டுபிடித்தார்கள். இந்த மாதிரி வயசு முதிர்ந்த மான்களைக் குட்டிகளென்று கருதியே அவைகளை வேட்டையாடக் கூடாது என்று காட்டிலாகாவினர் தடை விதித்திருந்தார்கள். பார்க்கப் போனுல் அவை போஷாக்குக் குன்றிய நோஞ்சல்கள்; அவைகளை ஒழித்தே கட்டியிருக்கலாம்.

இந்தமாதிரி முள் குத்திட்டது போன்ற கொம்புள்ள மானைத் தப்பித் தவறிக் கொன்றுவிட்டாலும் ஷிகாரி எவனும் அதை அப்படியே விட்டுவிட்டுத்தான் போய்விடுவது வழக்கம்; அது அப்படியே அழுகிப் போகவேண்டியதுதான். ஏனென்ருல், குட்டியைக் கொன்று அதை எடுத்துப் போவது சட்ட விரோதம்! ஆகவே, முழுவதும் கொம்பு வளர்ச்சி பெற்ற மானைத் தேடிப் பார்த்து வேட்டையாடிக் கொன்று திரும்புவான் ஷிகாரி. உண்மை விவரம் தெரியாததால், ஒரு வயசே ஆன போதிலும் சற்று வாட்டசாட்டமாக இருந்த மான்குட்டிகளை ஷிகாரிகள் வேட்டை ஆடுவதைக் காட்

காப்பிரைட்: அமிர்தபஜார் பத்திரிகை (ஆங்கிலம்: 18-4-'57), கல்கத்தா.



டிலாகாக்காரர்கள் அநுமதித்து வந்தார்கள். இதனால் போஷாக்குக் குன்றிய நோஞ்சல்கள் தப்பிப் பிழைக்க வழி ஏற்பட்டது.

தற்கால ஆராய்ச்சியின் பயனாகச் சத்துள்ள உணவும் நல்ல வளர்ப்பும் காரணமாகவே மான்களின் கொம்புகள் நன்றாக வளர்கின்றன என்று தெரிகிறது. இப்படிக் கொம்பு நன்றாக வளர்ந்த கலைமான்களின் அழகிய தலையை ஷிகாரிகள் அரும்பொருளாக எடுத்துச் செல்ல, நோஞ்சல்கள் காட்டில் தங்கிச் சந்ததியை விருத்தி செய்துவிடுகின்றன. முடிவில் இந்த நோஞ்சல் வகைக் கலைமான்களே அசல் கலைமான்கள் என்றாகிவிடும்.

இப்போது அப்படித்தான் நேர்ந்துகொண்டிருக்கிறது. இயல்பான சூழ்நிலையில் நன்றாக வளர்ந்த கொம்புள்ள கலைமான் சத்துள்ள தீனி உண்டு வளம் பெற்றிருப்பதோடு போட்டியாக வரும் மட்ட ரக மான்களை விரட்டியடிக்க அந்தக் கொம்புகளையே பயன்படுத்துகிறது. இப்போது காட்டிலாகா நிர்வாகிகள் நோஞ்சல் மான்களை விலக்குவதில் கவனம் செலுத்தி வருகிறார்கள்; தீனிக்கே திண்டாட்டமாக இருக்கும் இந்த நாளில் நோஞ்சல்களைப் போஷிப்பதென்றால் வீண் செலவுதானே?

ஐக்கிய அமெரிக்காவின் வட பகுதியில் கலைமான்கள் அதிகம் உண்டு. இவைகளில், விளை நிலங்களிலே மேய வந்து கொலையாகும் மான்களைவிடத் தீனி கிடைக்காமல் திண்டாடி மடிபவைதான் ஏராளம். மான்கள் ஆரோக்கியமாகவும் வலிமையோடும் இருப்பதற்குத் தீனிதான் முக்கியமான காரணம். ஒரு பிரதேசத்தில் மான்களின் தொகை அளவுக்கு மீறிப் பெருகிவிட்டால் வரவர அவை தீனி போதாமல் நோஞ்சலாகிவிடும். ஆகவே, எப்போதாவதுதான் குட்டி போடும். அவைகளைப் பார்த்தாலே மேய்ச்சல் போதாமல் திண்டாடுவது தெரியும். மழைக் காலம் முடிவதற்குள் மந்தை மந்தையாக மான்கள் மடியவேண்டியதுதான். ஒரே அலங்கோலமாக அவற்றின் உடல்கள் எங்கும் சிதறிக் கிடக்கும். சில பேர், ஓநாய்கள் இப்படி நாலா சீலையாக்கி இவைகளைக் கொன்று தீர்த்துவிட்டன என்பார்கள். ஆனால் உண்மை அது இல்லை. தீனி போதாமல்தான் இப்படி இயல்பாகவே அவை மடிந்து போகின்றன.

நல்ல மேய்ச்சல் இருக்கும் இடங்களில் ஒரு வயசு ஆனாலே போதும்; பெண் மான் தாயாகிவிடும். மறு ஆண்டு இரட்டைக்குட்டியும், அதற்கடுத்த ஆண்டு மூன்று குட்டியும் போடும். கானடாவில் உள்ள பல பிரதேசங்களைப் போன்ற சூழ்நிலை பென்ஸில்வேனியாவிலும் இருக்கிறது. பென்ஸில்வேனியாவைப் பொறுத்தவரையிலாவது இந்த மாதிரிதான் கலைமான்கள் அபிவிருத்தியாகி வருகின்றன. தீனி போதாவிட்டால் குட்டிகள் பிறப்பதும் அரிதாகிவிடும். மான் மந்தைகளும் நோஞ்சல் ஆகிவிடும்.

தேவதாருவைத் தவிர எப்போதும் பசுமையாக விளங்கும் தாவரங்களின் கிளைகளையும் சுள்ளிகளையும் சாகும் வரை தின்று சமாளிக்கப் பார்க்கும் மான். வேனிலிலும் இலையுதிர் காலத்திலும் அவை புல் பூண்டுகளை மேயும். ஆனால் பொதுவாக அவை மரஞ் செடி கொடிகளைத்தான் விரும்பும். இளஞ் சுள்ளிகளையும் தளிர் இலைகளையும் உண்டு வாழும். மழைக்காலத்தில் மாப்பிள்ஸ், வெள்ளைப் பர்ச் இவற்றின் மொட்டுக்களையும், அவ்வப்போது இலையுதிர்ந்து தளிர்க்கும் மரங்களின் இலைகளையும் மேயும். மழைக்காலத்தில் தகுந்த அளவு தீனி கிடைக்காவிட்டால் இந்த மான்களின் எடை குறைந்து ஆரோக்கியமும் குன்றிவிடும். மழைக்காலத்தில் ஒரு மான் சமாளிக்கவேண்டுமென்றால், 50 ராத்தல் எடையுள்ள மானுக்கு ஒரு ராத்தல் தீனி விகிதமாவது போட்டாக வேண்டும். பெரிய மானின் எடை 200 ராத்தலுக்கு இருக்கும் என்றால் அதற்கேற்ற தீனிதானே போட்டாக வேண்டும்?

கொம்பின் வளர்ச்சி மானுக்குக் கிடைக்கும் தீனியின் தன்மையையும் அளவையும் பொறுத்தது; வயசுக்கும் அதற்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. ஏறக்குறையப் பட்டினி நிலையிலும் சரி, தகுதியில்லாத தீனி போதுமான அளவு உண்டாலும் சரி, ஆண் மான்குட்டிக்குக் கொம்பில் கணுக்கள் தோன்றுவதோடு வளர்ச்சி நின்றுவிடும். அப்பால் அதன் வாழ்நாள் முழுவதும் கணுவில் கூர்மையான முள் போலவோ குறுகலாய்ப் படர்ந்து நின்று விட்டமாதிரியோதான் கொம்புகள் காட்சியளிக்கும். ஆனால் நல்ல தீனி கண்டு வளர்ந்த குட்டிகளுக்கு 18 மாசத்துக்கெல்லாம் கணுவிலிருந்து முள் போலப் புறப்படாமல் வயசு வந்த காளை மான்களைப்போல் அழகாகப் படர்ந்து கிளைமாதிரி அலங்காரமாகக் கொம்புகள் வளர்ந்திருக்கும்.

மானின் வயசைப் பல்லைப் பார்த்துத்தான் நிர்ணயிக்க வேண்டும். இது விசேஷ அனுபவத்தால் தெரிந்துகொள்ள வேண்டிய முறை. ஆகவே, சாதாரண ஷிகாரி ஒருவன் ஒரு மானைக் கொல்லும்போது, அது கொம்பு நன்றாக வளர்ந்து முதிர்ந்த மானாக இருந்தாலும் சரி, கொம்பின் கணுக்களில் முள் போல் முளைத்த மானாக இருந்தாலும் சரி, அதன் வயசைத் தீர்மானித்து அறிய முடியாது. ஆனால் அது தீனி போதாமல் நோஞ்சலாகக் கிடக்கிறதா இல்லையா என்பதை அறிந்துகொள்ள முடியும். ஒத்தபடி சத்து அமைந்த தீனி ஓரளவுக்குக் கிட்டாமல் போய்விட்டால் மானின் உடம்பிலுள்ள கொழுப்புக் குறைகிறது. மொத்தத்தில் மானின் உடம்பில் உறைபனிப் பிரதேசத்தில் குளிர் காலத்தில் முடங்கிக் கிடக்கும் பிற பிராணிகளுக்கு இருப்பதுபோல் அதிகக் கொழுப்பு இராது. அதற்கு எப்போதும் போஷாக்குக் குறையாமல் இருந்தாக வேண்டும். அப்படிக் குறைந்ததோ மானின் உடம்புத் தோலில் இருக்கும் கொஞ்ச நஞ்சம் கொழுப்பும் கரைந்துவிடுகிறது. பிறகு அதன் உடலின் உள் பகுதியைச் சுற்றி இருக்கும் கொழுப்புக் கரையத் தொடங்கும். அதற்குப்பின் எலும்பிலுள்ள மஜ்ஜையும் கரைந்து மான் நோஞ்சல் ஆகிவிடும்.

நல்ல போஷாக்குள்ள மானின் எலும்பிலுள்ள மஜ்ஜை சற்றே வெளுப்பாகப் பால் ஏடு போல் இருக்கும். கொழுப்பு அதில் அடங்கியிருப்பதுதான் இதற்குக் காரணம். போஷாக்குக் குறையும்போது கொழுப்புக் கரைவதால் அதன் நிறம் வெள்ளையிலிருந்து மஞ்சள் ஆகிப் பின் சற்றே சிவப்பாகிக் கடைசியில் பளிச்சென்று விளங்கும் செந்நிறமாகி விடுகிறது. மான் எங்காவது செத்துக் கிடந்தால், அதன் காலின் மேல்பாகத்தை முறித்து, எலும்புக்குள் இருக்கும் மஜ்ஜையைச் சோதித்துப் பார்க்கலாம். இதிலிருந்து அந்த மான் எந்த அளவுக்குப் போஷாக்குக் குறைந்து இருந்தது என்று தெரிந்துகொள்ளலாம். மிகவும் பலவீனமான நிலையில் மானுக்கு மார்ச்

சளியோடு கடுமையான ஜுரம் கண்டுவிடுகிறது; சுவாச சம்பந்தமான கோளாறு ஏற்பட்டு அது இறந்துவிடுகிறது.

பென்ஸில்வேனியாவில் இன்று இருக்கும் சங்கடமான நிலைமை இதுதான்: ஷிகாரிகள் வேட்டையாடுவதற்கு ஏற்றபடி அவ்வளவு மான் கூட்டம் இல்லையோ என்று எண்ணிவிடாதீர்கள்: அளவுக்கு மிஞ்சியேதான் இருக்கின்றன. இருந்தாலும் மொத்தம் எத்தனை உண்டு என்று யாருக்கும் தெரியாது. வேட்டையாடும் பருவம் வருவதற்குமுன் சுமாராக 7 லட்சம் இருக்கலாம் என்று சொல்லலாம். மொத்தம் இத்தனைதான் என்று நிர்ணயமாகத் தெரிந்தாலும் அதனால் அந்தத் தொகை அதிகம் என்றோ, குறைவு என்றோ சொல்வதற்கில்லை. ''எந்த இடத்திலும் அளவுக்கு மிஞ்சி மான் கூட்டம் இருந்தால், 'தீனி பற்றவில்லை. கீழே இருக்கும் மேய்ச்சல் போதாமல் காட்டில் எட்டுகிற மட்டில் எல்லா இலை தழைகளையும் மேயத் தொடங்கிக் காடே அழிந்துவிடும்' என்றுதான் அர்த்தம்'' என்று வேட்டைக் கமிஷன் அறிக்கையில் கண்டிருக்கிறது. வரவரத் தீனி பற்றாமல் போஷாக்குக் குன்றி, மான் கூட்டம் நோஞ்சலாகி ஆயிரக்கணக்கில் மடியும். வடக்கே உறைந்து கிடக்கும் ஏரிகளில், இப்படித்தான் மான்கள் தீனி கிடைக்காமல் அங்கங்கே மடிந்து கிடக்கின்றன.

வேட்டை சம்பந்தமான அலுவல்களைக் கவனிப்போர், மான்கள் மிதமிஞ்சிப் பெருகாதிருக்க அவற்றில் மூன்றில் ஒரு பகுதியையாவது தீர்த்து விடவேண்டும் என்கிறார்கள். ஒரு தரம் மான் கூட்டம் அதிகரிக்கும்படி விட்டுவிட்டால், மரஞ் செடி கொடிகளில் இலைகளையும் இளஞ் சுள்ளிகளையும் மான்கள் மேய்வதால் காடுகள் சீரழிந்து விடும்; மறுபடியும் தாவரங்களை வைத்துக் காடு செழிப்பதென்றால் எத்தனையோ ஆண்டுகளாகும். இதனால் சாமான் செய்வதற்கும் கட்டிடத்துக்கும் வேண்டிய மரங்களுக்குப் பஞ்சம் வேறு ஏற்பட்டுவிடும்.

சாதாரணமாக இயற்கையே எல்லா விஷயங்களையும் ஒழுங்காகக் கவனித்துக்கொள்கிறது. மான் கூட்டம் பெருகிவிட்டால் இயற்கைக்கு வெறி மூண்டு மானே அரிதாகி விடும் நிலை ஏற்பட்டுவிடுகிறது. அப்போது மீண்டும் பூமியில் தாவரங்கள் முளைத்துச் செழிக்கின்றன. மான்கள் மடிய மடிய வடக்கிலிருந்து கொடிய விலங்குகள் வேறு புகுந்து விரைவில் அவைகளைத் தீர்த்துவிடும். வடக்கே நெடுந்தூரத்தில் மான் மாமிசத்தைத் தேடி ஓநாய்கள் அலைவது வழக்கம்.

அமெரிக்காக் கண்டம் முழுவதும் சுற்றிக் கவனித்தால் தீனி ஏராளமாகக் கிடைக்கும் இடத்தில்தான் மான்களும் மிகுதியாக இருக்கும். மான்களின் அளவும் வலிமையுங்கூட அதைப் பொறுத்துத்தான் இருக்கிறது. குளிர்காலத்தில் பனி மிகுதியாகப் பெய்யும்போது தேவதாருக் காட்டில் மான்கள் தங்கினால் தேவதாருக் கிளைகளை மேய்ந்து சமாளிக்கலாம். ஆனால் கடுமையான வாடையாக இருந்துவிட்டால், மான்கள் பள்ளத்தாக்குகளை நாடிச் சென்றுவிடும். ஹெம்லாக் என்ற விஷச் செடியும், பால்ஸம் செடியுந்தான் அங்கே ஏராளம். ஆகவே, மான்கள் பட்டினி கிடந்து மடிய வேண்டியதுதான். வெள்ளைத் தேவதாருவைத் தவிர வேறு தாவரங்களில் மானுக்குத் தேவையான போஷாக்குச் சத்துக் குறைவென்று தெரிகிறது.

கடுமையான வாடை நீடித்தால், மேய்வதற்கு ஏற்றபடி கிளைகள் எட்டாமல், மான்கள் விரைவில் மடிந்துவிடும்; மற்றவையும் பின்னால் போஷாக்குக் குறைவால் நசித்துவிடும். முன்னெல்லாம் இந்த மாதிரி நிலையில் காட்டில் ஓநாய்களும் புகுந்துவிட்டால் போதும்; அவைதான் மான்களைக் கொன்று அலங்கோலமாக விட்டுவிட்டுப் போனதாகச் சொல்வார்கள். ஒரு நிதானம் அறிந்து மான்களை வேட்டையாட ஆட மற்ற மான்களுக்குத் தீனி அதிகமாகக் கிடைக்க வழி ஏற்படுகிறது. ஓரளவு

அவை வளங் குன்றுமல் நீடித்திருக்க வேண்டி அவைகளின் தொகையைக் குறைக்க வழி செய்யாவிட்டால் இயற்கையே அப்படிச் செய்துவிடும்.

மான்கள் அளவுக்கு மிஞ்சிப் பெருகிவிட்டால் அவை தங்களுக்குள்ளே சண்டையிட்டு மடிவதோடு தம்மைப் போல் உண்டு, ஒதுங்கி வாழும் பிற வகைப் பிராணிகள் நசித்துப் போவதற்கும் காரணமாகிவிடும். இப்படிப் போஷாக்கான தீனி இராததால் முயல்கள்தான் (மான் வேட்டையில் ஈடுபடுவோர் இவைகளையும் கொல்வது வழக்கம்) முதல்முதல் நசித்துவிடும். பட்டினி கிடந்து வாழும் இந்த முயல்கள் தங்கி ஒளிய இடம் இராமல் போவதால் கொடிய விலங்குகளுக்கு இவை இரை ஆகிவிடுகின்றன. இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் பசி தாங்காமல் முயல்கள் மரப் பட்டையைக் கடித்துக் கிழித்து உண்ணும். அப்போது தமக்குப் பாதுகாப்பாக இருக்கும் புதர்களையும் உண்ணுவதால், விரைவில் இருந்த இடம் தெரியாமல் இவை மடிந்து போகின்றன. கொட்டைகள் விசேஷமாகக் காய்க்கும் மரங்கள் இருந்தால் தான் அணில்கள் வாழும். மான்கள் செடி கொடி மரங்களை மொட்டை மொட்டையாக்கிவிட்டால், அணில்களும் பட்டினி கிடந்து மடிய வேண்டியதுதான்.

இப்படிச் சூழ்நிலை மாறிவிடுவதால் புறு, கோழி போன்று கழுத்தில் சிறகு செறிந்த பறவைகளும் காட்டில் வாழும் பிற பிராணிகளும் நசித்துப் போகின்றன.

## சாக்கலேட் தின்னும் போட்டி!

பிரிட்டனில் சாக்கலேட் செய்யும் கம்பெனியார் ஒரு போட்டி நடத்துகிறார்கள். அதில் கலந்துகொள்ளப் பள்ளிக்கூடக் குழந்தைகள் பன்னீராயிரம் பேரை அழைத்திருக்கிறார்கள். போட்டியில் சாக்கலேட் தின்று, அதன் ருசியைப்பற்றி அபிப்பிராயம் சொல்ல வேண்டும். அந்தப் போட்டியில் வெல்லும் அதிருஷ்டசாலிக் குழந்தைகளுக்கு ஆறு மாதகாலம் மாதத்துக்கு ஒரு டப்பா சாக்கலேட்டுகள் இனமாக அளிப்பார்கள். இதில் ஒரே ஒரு தொல்லை இருக்கிறது. ஒவ்வொரு மாதமும் பல கேள்விகள் அடங்கிய ஒரு தாளைக் கம்பெனியார் அனுப்புவார்களாம். அதைப் பூர்த்தி செய்தால்தான் அடுத்த மாதச் சாக்கலேட் டப்பா கிடைக்கும். குழந்தைகளுக்குப் பிடிக்கிற சாக்கலேட்டுகள் எந்த மாதிரி உருவம், அளவு, மணம், சுவை இவற்றோடு இருக்கவேண்டும் என்பதையும், டப்பாவிலிருந்து எந்தச் சாக்கலேட்டுகளை அவை முன்னால் எடுத்துத் தின்கின்றன என்றும் இந்தப் போட்டியின் மூலம் அந்தக் கம்பெனியார் அறிந்துகொள்ளலாம் என்று நம்புகிறார்கள்.

—'தி வொர்ல்ட் டைஜெஸ்ட்'

## தேசபக்தி

தன் நாட்டில் அன்பு கொண்டவன் மனித குலத்தை வெறுக்க முடியாது.

—சார்லஸ் சர்ச்சில்

# அரசியலும் மனிதனும்

அசல்: **மாக்கியவெல்லி**

தமிழ்: **கொடுமுடி ராஜகோபாலன்**

நம் நாட்டில் ஆட்சிக்கலையின் பிதா சாணக்கியன் என்ருல், மேல் நாட்டில் அப்படிப்பட்டவர் மாக்கியவெல்லி (1469 - 1527) என்று சொல்லலாம். நிக்கோலோ டி பெனர்டோ என்பது அவருடைய உண்மைப் பெயர். இத்தாலியில் ஃப்ளாரன்ஸ் நகரத்தைச் சேர்ந்தவர். சீர்குலைந்த அரசியலை உருப்படுத்த முயன்ற ராஜதந்திரி. ஆட்சிக்கலை பற்றி அரிய நூல்கள் எழுதிய அறிஞர். அவருடைய கருத்துக்களைத் தமிழில் 'மாக்கியவெல்லியின் ஆட்சிக் கலை' என்ற நூலில் விறுவிறுப்பாக நண்பர் கொடுமுடி விளக்கியிருக்கிருர். அதன் இடையிடையே அவர் மொழிபெயர்த்து மேற்கோள் தந்திருக்கும் மாக்கியவெல்லியின் வாக்குகள் சிலவற்றை இங்கே திரட்டித் தந்திருக்கிருேம். இத்தகைய அறிவு நூல்களை யாவரும் படிக்கவேண்டியது அவசியம்.

பொதுவாகவே மனிதர்கள் நன்றி கெட்டவர்கள். சஞ்சல புத்தியுள்ளவர்கள். காட்டிக் கொடுப்பவர்கள். அபாயத்தைக் கண்டு அஞ்சியோடும் கோழைகள். பேராசை பிடித்தவர்கள். பிறரிடம் நன்மைகளை எதிர்பார்த்து அவை கிடைக்கும் வரைக்கும் விசுவாசமாக இருப்பதுபோல நடிப்பவர்கள். அபாயம் தொலை தூரத்தில் இருக்கும்போது, எவ்வித நிலைமைகளையும் சமாளிக்கத் தியாகம் செய்யத் தயாராயிருப்பதாக நடிப்பவர்கள்; ஆனல், அது நெருங்கியதும், எவருக்கும் துரோகம் செய்யப் பின்வாங்காதவர்கள். இவ்வளவுதான் மனித சுபாவம்.

கட்டாயப்படுத்தப்பட்டாலன்றி மனிதர்கள் ஒரு பொழுதும் சரியான முறையில் நடந்துகொள்வதில்லை. அவர்களைச் சுயேச்சையாக நடக்கும்படி விட்டால், எல்லாம் குழப்பத்தில்தான் முடியும்; எங்கும் ஒழுங்கீனங்களே மலிந்துவிடும். மனிதனுடைய இயற்கைச் சுபாவத்தை அதன் சுயேச்சைப் போக்கிலேயே விட்டுவிடக் கூடாது. அவசியம் ஏற்படும்போது அதைப் பலாத்காரத்தால் அடக்கியே தீர வேண்டும்.

பொதுப் பொறுப்புகள் ஏற்படும்போது, மனிதன் காலந்தோறும் சுயநலவாதியாகவும், குறுகிய நோக்கமுள்ளவனுகவுமே நடந்து கொள்ளுகிருன். இப்படிப்பட்டவனை எவ்வாறு உயர்வானவன் என்று கருத முடியும்? இப்படிப்பட்ட மனித சமுதாய உணர்ச்சியை நம்பி எப்படி நல்ல திட்டங்களை வகுக்க முடியும்? மனிதனை நம்பிப்

மூலம்: மாக்கியவெல்லியின் ஆட்சிக் கலை (தமிழ் நூல்). வெளியிட்டோர்: ஸ்டார் பிரசுரம், திருவல்லிக்கேணி, சென்னை-5. விலை ரூ. 2/00.

போடும் திட்டங்கள் அபாயத்தி லும் குழப்பத்திலுந்தானே முடி யும்! சங்கிலியின் பலத்தை அதன் மிகவும் பலவீனமான கரணையைக் கொண்டுதான் நிர்ணயிக்க வேண் டும்!

* * *

ஒரு வியாபாரி தன் கடையை வழக்கமான இடத்திலிருந்து திடீ ரென்று வேறு இடத்துக்கு மாற்றி ஞல், அவனுடைய வியாபாரத் துக்கே நஷ்டம் ஏற்படும். கீழ்த் தளத்திலிருந்து மேல் மாடிக்கு அவன் தன் கடையை மாற்றிவிட் டால், அவனுடைய வாடிக்கைக் காரர்கள் சோம்பி மேல்மாடிக்குப் போக நினைக்கமாட்டார்கள்! அரசி யலிலும் அப்படித்தான்! மனிதனின் 'அசுர' குணங்களுக்கு எதிராக வல்லமையுள்ள அதிகார சக்தியை முடுக்கிவிட்ட பிறகே, அவ னுடைய நற்குணங்களின் பலனை எதிர்பார்க்க வேண்டும். இதுவே உயர்வான விதி.

குடிகளின் நன்மையை ராஜாங் கம் மதித்து அதைக் காப்பதோடு சுயநலவாதி, போக்கிரி, சந்தர்ப்ப வாதி இவர்களின் கொட்டத்தை ஒடுக்குவதிலும் முன் எச்சரிக்கை யுடன் இருக்கவேண்டும். இதில் தயை தாட்சிண்ணியத்துக்கேஇடம் இல்லை. நியாயம், சத்தியம் எளிமை, சீலம் என்றெல்லாம் சதா சர்வ காலமும் அர்த்தம் இல்லாமல் பேசிக்கொண்டே கவனக்குறை வாக நடந்துகொள்ளும் சமுதாயந் தான், போக்கிரிகளும், சதிகாரர் களும், கீழ்த்தரமானவர்களும் தோன்றுவதற்கேற்ற விளைநிலமாகி விடுகிறது. எனவே, மனிதனின் தீய குணங்களை ஒடுக்குவதில் ராஜாங்கம் மிக உறுதியாக இருக்க வேண்டும். அவனுடைய ஒழுங் கீனம், கர்வம், சுயநலம், சூழ்ச்சி, தற்பெருமை, சிறந்த பொருள்களை யெல்லாம் அழித்துவிடத் துடிக்கும் அவனுடைய 'அசுர'ப் போக்கு இவை எப்படியெல்லாம் விகார வெறியுடன் பேயாட்டம் ஆட வல் லவை என்பதை முன் கூட்டியே அறிந்துகொண்டு, இவற்றை ஈவிரக்கமின்றி ஒடுக்க முற்படுவதே அரசியலின் மகோன்னத நெறி.

மனிதர்கள் பெரும்பாலும் பழைய வழியிலேயே நடந்து கொள்ள முயலுகிறுர்கள். பிற ரைப் பார்த்து அப்படியே தாமும் நடந்துகொள்ள ஆசைப்படுகிறுர் கள். எவர் வாழ்ந்த கீர்த்தி வழி யில் தாங்களும் வாழ வேண்டு மென்று நினைக்கிறுர்களோ, அந்த வழியின் மாண்பை உணர்ந்து அதன்படி நடக்கத் தவறிவிடுகிறுர் கள். அறிவாளியான மனிதனே தன் முன்னேராயிருந்து புகழ் பெற்ற செல்வர்களின் வழியிலேயே வழு வாமல் நடக்கிறுன். அவர்கள் பெற்ற புகழைப் போலவே தானும் பெறவேண்டுமென்று துடிக்கிறுன். மிகச் சிறந்த முன்னேர்களின் உதா ரண வாழ்வு வழியைப் பின்பற்று வதுதான் ஞானமென்று அவன் நம்புகிறுன். அந்தப் புகழ்ச் செல் வர்களின் ஞானத்தை, தான் பூர்ண மாக அடைய முடியாது போனு லும், அந்தப் பெரியோரின் குல வழியில் பிறந்தவன்-வாழ முயன்ற வன் - என்ற சின்னத்தையும் பெரு மையையுமாவது பெறலாம் என்று அவன் நினைக்கிறுன்.

எவனொருவன் நிகழ்காலத்தை அறிந்துகொண்டு வருங்காலத் தைத் தீர்மானிக்க விரும்புகிறுனே, அவன் உதாரணத்துக்காகவும் வழி அறிவதற்காகவும் பழங்காலத்தைப் பின்னேக்கிப் பார்க்க வேண்டியது அவசியமாகிறது. ஏனென்றுல், பழங்காலத் தொடர்பின்றிப் புதுக் காலம் என்பது மலர்வதில்லை. பழமைக்கும் புதுமைக்கும் தொடர்பு இருப்பது மறுக்க முடி யாத இயற்கை நியதியை ஒட்டி யதே. ஒரே மாதிரியான விருப்பு வெறுப்புடைய மனிதனின் செய்கை ஒரே மாதிரியான பல னையே தரும். எல்லாச் சமூகங் களிலும் எல்லா மனிதர்களிடமும், அபிலாஷைகளும் மனமும் ஒரே மாதிரியாகவே இருக்கின்றன.

* * *

ராஜாங்கம் என்பது மக்க ளுடைய புத்திபூர்வமான சம்மதத் தால் ஏற்பட்டதல்ல; நாட்டு மக்க ளுடைய பரஸ்பர ஒப்பந்தத்தின் விளைவாக எழுந்ததுமல்ல;

புறம்பே உள்ளவர்கள் உந்திய தால் ராஜீய ஞானமே இராதவர்களால் ஏற்பட்டதுமல்ல. சமுதாயம் தோன்றும்போதே ராஜாங்கமும் கூடத் தோன்றிவிடுகிறது. பாசம், ஒற்றுமை, பலம், வேற்றுமை விளைவிக்கும் சக்திகளை ஒடுக்கும் அதிகாரம், ஆற்றல் இவையெல்லாம் சமுதாயம் தோன்றியது முதலே இருந்து வருகின்றன. கட்டுக்கோப்பான ஒரு சமுதாயத்தில் ஒரு ராஜாங்கத்துக்குரிய சின்னங்கள் யாவும் இருக்கின்றன. ஒரு சமுதாயம், தன் வாழ்வின் அடிப்படைத் தத்துவங்களையும் வளர்ச்சி வீழ்ச்சிகளையும் சரித்திர வாயிலாகத்தான் தெரிந்துகொள்கிறது. ஆயினும் அந்தத் தத்துவங்களும் ஏற்றமும் தாழ்வும் எப்போதும் இருந்தே வருகின்றன.

திட்டங்களின் மூலம் மாறுதலை ஏற்படுத்துவதற்கு முன்பு, அரசியல் உரிமைகளையும் கடமைகளையும் பற்றிய அறிவையும் உணர்ச்சியையும் மக்களிடையே பரப்புவதுதான் முக்கியம்; இதுவே முதல் கட்டம். அப்போதுதான் அந்த மக்களைக் கட்டுப்பாடான ஒரு ராஜாங்க அதிகாரத்தின் கீழே கொண்டுவர முடியும். சமுதாயத்தின் முக்கியமான அம்சங்கள் எவை? ராஜ்யாதிகாரத்துக்குக் கட்டுப்பட்டு நடக்கும் மனப்பான்மையும், மீறினுல் கிடைக்கக் கூடிய கொடிய பலாத்கார தண்டனைகளைப்பற்றிய பயமுமே.

ஒரு தனி நபர் மூலமோ வழி வழியாகப் பல நபர்கள் மூலமோ ஏற்படுகிற ராஜ்யாதிகாரத்தின் முக்கிய குணங்களைக் கவனிப்போம். தலைமை தாங்கி நடத்தும் எழில் வீரம், ஒற்றுமையை நிலை நாட்ட வல்ல மன உறுதி, நினைத்ததைச் செய்யும் துணிச்சல், தம் சக்தியில் அளவற்ற நம்பிக்கை, ஈவிரக்கமற்ற கண்டிப்பு இவைதான் ராஜ்யாதிகாரத்தை மேற்கொள்ளுகிறவருக்கு வேண்டிய குணச் சிறப்புகள்.

சோர்வையே அறியாத மன வலிமை, தெளிந்த அறிவு, பின்னடையாத முயற்சி, தயை தாட்சிண்ணியமற்ற கடுமை, திட்டமிடுவதற்கான மூளை, அடிப்பதற்கான கை இந்தக் குணங்கள் தலைவருக்கு இல்லாவிட்டால், ராஜாங்கத்துக்கு அழிவுதான் ஏற்படும். இத்தகைய அழிவால், சமுதாய முழுவதற்குமே பொதுவான சகல நலன்களும் மறையும்.

அரசன் வேறே; சாதாரண மனிதன் வேறே. சாதாரண மனிதன் தான் கொடுத்த வாக்குப்படி நடக்கவேண்டியிருக்கிறது; அன்புடன் பழக வேண்டியிருக்கிறது; ஆதரவு காட்ட வேண்டியிருக்கிறது; நண்பனிடம் உண்மையுடன் இருக்கவேண்டியிருக்கிறது. இந்தக் கடமைகளும் சுதந்தரமும் அரசனுக்கு இல்லை. அரசன், ராஜாங்க நோக்குடன், ராஜாங்கம் சொல்கிறபடி, ராஜாங்க அவசியத்தையொட்டியே நடக்க வேண்டியவன். அவனுக்குத் 'தன்னுடையது' என்ற எதுவும் இருக்க முடியாது; இருக்கவும் கூடாது.

அரசன் என்பவன் 'தான்' என்ற சாதாரண மனித உணர்ச்சிக்கு மேம்பட்டவன்; ஒழுங்குபடுத்துவது ஒன்றுதான் அவனுடைய ராஜாங்கக் கடமை. ராஜ்யத்தின் வாழ்வும் தாழ்வுமே அவனுடைய வாழ்வும் தாழ்வும். அவன் எவ்விதச் சுயநலத்தையும் அறியான்; மக்களின் வெறுப்பையும் பொருட்படுத்த மாட்டான்; பொது நன்மைக்காக, அவசியம் நேரிடும் பொழுது பலப் பிரயோகம் செய்ய அவன் தயங்கான். அவனுடைய கடுமையான பலப்பிரயோகம் சிலரைத்தான் துன்புறுத்தும்; பலப் பிரயோகம் செய்யாவிட்டாலோ, ராஜ்யம் முழுவதற்குமே அபாயம் நேரிட்டுவிடும்.

ராஜாங்கம் சமுதாயத்துக்கும் முந்தியது. பரஸ்பர மனித பந்தங்களால் பிணைந்ததே சமுதாயம். அரசு ஏற்பட்ட பிறகே இந்தப் பிணைப்பட்ட சமுதாயமும் தோன்றியிருக்கவேண்டும். அரசின் மூலமே அமைதியும் ஒழுங்கும் ஏற்படுகின்றன. சமுதாயத்தில் மனிதர்களுக்காக நிர்ணயித்த அந்த விதிகளுக்கும் மேம்பட்டவையே அரசும் அரச பதவியும்.

மதத்தின் நிலை என்ன? ஒழுக்க விதிகளைப் போன்றே, மதமும் அரசுக்கு மேம்பட்டதல்ல. அரசுக்குப் பணிந்து நடக்கும்படி மக்களுக்குப் போதிப்பதே மதத்தின் வேலை. மதம் அரசுக்கு உட்பட்டு அதற்கு உதவியாக இருக்க வேண்டுமே யொழிய, அரசின்மீது ஆதிக்கம் செலுத்தக்கூடாது. நாட்டின் பாதுகாப்பு அல்லது நன்மை என்ற பிரச்னை எழும் போது, நியாயம், அநியாயம், கருணை, கொடுமை, புகழ், மாசு என்றெல்லாம் ஆராய்ச்சி செய்து கொண்டு இருக்கமுடியாது. எதையெல்லாம் செய்ய வேண்டுமோ, அதையெல்லாம் தீரமாகச் செய்து, நாட்டின் சுதந்தரத்தையும் அமைதியையும் அரசு காப்பாற்றியாக வேண்டும்.

நல்ல பயிற்சி பெற்ற படைகளாலும், சிறந்த சட்டங்களாலுமே ராஜ்யங்கள் நிலைக்கின்றன. படைப் பலம் இல்லாவிட்டால், நல்ல சட்டங்களும் பயனற்றுப் போய்விடும். படைப் பலத்துடன் வருங் காலத்தை அறிகிறவர்களே வெற்றி அடைகிருர்கள். படைப் பலம் இராதவர்கள் அழிகிருர்கள். லஞ்சம் நிறைந்து சீர்குலைந்து விட்ட ஒரு ராஜ்யத்தின் அரசன் அதன் அரசியல் அமைப்பை மாற்ற வேண்டுமானுல், பலாத்கார முறைகளையே அவன் கைக் கொள்ள வேண்டும்.

கொடுங்கோன்மையான அடிமை நிலையில் வாழ்ந்து பழகியவர்களைச் சுயேச்சையான வாழ்க்கைக்குப் பழக்குவது என்பது அவ்வளவு சுலபமல்ல. கூண்டுக்குள் அடைபட்டுக் கிடந்து, பின்பு வெளிவந்த அவர்கள் மிருகங்களைப்போல வெறி பிடித்து வாழ நினைப்பது கண் கூடு. அது மட்டுமா? சுயேச்சையான வாழ்க்கைக்கு மக்களைப் பழக்க முற்படும்போது, முன்னைக் கொடுங்கோலாட்சியை ஆதரித்தவர்களின் எதிர்ப்புக்கும் புதிய அரசு ஆளாக நேரிடும். அப்படிப் பட்டவர்களை ஒடுக்கவும், சுயேச்சையான வாழ்க்கைக்கு மக்களைச் செவ்வனே பழக்கவும் அரசுக்குப் படைவலிமை இன்றியமையாத அரசியல் தேவை என்பதை மறந்துவிடக் கூடாது.

* * *

முதலில் முடியரசு ஏற்படுகிறது. அரசன் மிதமிஞ்சிய அதிகாரப் போதையில் வெறியாட்டம் ஆடும் போது, கொடுங்கோலாட்சி ஏற்படுகிறது. அந்தச் சமயம், பிரபுக்கள், தங்களுடைய சுய நலத்துக்காகவோ மக்களின் உரிமைகளைக் காக்கவோ அரசனுக்கு எதிராகச் சதி செய்து, புரட்சி செய்து, முடியரசைக் கவிழ்த்துவிடுகிருர்கள்.

அப்பொழுதுதான் பிரபுத்துவ ஆட்சி ஏற்படுகிறது. அந்த ஆட்சியும், பிரபுக்களின் தீச் செயல்களின் விளைவாக நாளடைவில் பயங்கரமான ஆட்சியாக மாறி விடுகிறது. அந்தச் சமயம், மக்களின் குடிமையுணர்ச்சி வீறிட்டெழுகிறது. அதன் பயனுய் மக்களின் புரட்சி 'ஆ' என்று கிளம்புகிறது; மக்களின் ஆவேச எதிர்ப்புக்குமுன் நிற்க முடியாத காரணத்தால் பிரபுத்துவ ஆட்சி சரிந்து விழுகிறது.

அந்த நிலையில்தான் குடி மக்கள் சொன்னபடி குடியாட்சி உதயமாகிறது. அந்தக் குடியரசுங்கூட, பேச்சு வன்மையால் மக்களை மயக்கும் கலகக்காரர்களின் - வேஷம் போடும் பாசாங்குக்காரர்களின் - ஆட்சியாக மாறி, அதிகார துஷ்பிரயோகத்தில் இறங்கி, முடிவில் வீழ்ந்துவிடுகிறது. அந்த நிலைமையே, மீண்டும் மன்னராட்சிக்கு வழி கோலுகிறது. சுழலும் சக்கரம் போல, இந்த மூன்று ஆட்சி முறைகளும் சுற்றிச் சுற்றி - மாறி மாறி - வருகின்றன.

நல்லதற்கும் கெட்டதற்கும் உள்ள வேற்றுமை மிகவும் நுட்பமானது. இந்த உண்மையைச் சாதாரண மனிதர்கள் அறிந்து கொள்ள முடியாது. எனவே, ஒரு விதமான ஆட்சி முறை வேறு விதமாக மாருமல் இருப்பதற்கு மனிதர்கள் செய்யும் முயற்சிகள் பலன் அளிப்பதில்லை. இந்தச் சுழலில் மாறி மாறி வரும் எந்த முறை ஆட்சியாலும் எந்த ஆக்கிரமிப்பையும் எதிர்த்து நிற்க முடியாது. பல

வீனத்தால் நிகழும் மாறுதல்கள் ராஜ்யத்தின் பலத்தையே கொஞ்சங் கொஞ்சமாக உறிஞ்சிவிடுகின்றன. அதிருஷ்டவசத்தால் அந்நிய ஆக்கிரமிப்புக்கு ஆளாகாமல்-பிறர் குறுக்கீடில்லாமல்-இருக்கும் நாடும் உண்டு. ஆயினும், அந்த நாட்டிலுங்கூட ஆட்சி முறை மாறுதல் அடிக்கடி நிகழ்ந்துகொண்டுதான் இருக்கும்; அதில் உள்நாட்டு அமைதி இராது.

* * *

பிரபுக்கள் பேராசையுள்ளவர்கள்; தம்முடைய சொந்த நலத்துக்காகத் தம் ராஜ்யத்தையுங்கூட இழக்கச் சித்தமா யிருப்பவர்கள். மக்களோ எளிதில் ஏமாறுகிறவர்கள்; சோம்பேறிகள்; குறுகிய நோக்கமுள்ளவர்கள்; அடங்காப் பிடாரிகள்; கலகக்காரர்கள்; ஆளும் பொறுப்பை ஏற்கச் சக்தியற்றவர்; பதவி வெறி பிடித்த சந்தர்ப்பவாதிகளின் 'வாய் வீச்சு'க்களில் மயங்கி இரையாகிறவர். புத்திசாலியான அரசியல்வாதி அவர்கள் அனைவரையும் ஆட்டி வைப்பான். இவ்வளவு மாறுபட்ட பிரிவு, ராஜ்யத்தை அழித்துவிடக் கூடாதல்லவா? அதற்காக இவர்கள் எல்லாரையும் ஒரு கலப்பட ஆட்சி முறையின்கீழ் அணைத்துக்கொண்டு செல்வதே சிறந்த ராஜாங்க - ராஜதந்திர - வழியாகும்.

மக்களுக்கு நிஜமான சுதந்தரம் - நியாயமான சுதந்தரம் எல்லாம் - குடியரசில்தான் இருக்கும். பிரபுக்களும் சிற்றரசர்களும் மக்களின் சுதந்தரத்துக்கும் சமத்துவத்துக்கும் இடையூறாக நிற்பவர்களே. பிரபுக்களின் கையில் ராஜ்யாதிகாரம் சிக்கிவிட்டால், அவ்வளவுதான்! ராஜ்யத்தில் சமத்துவ வாழ்வுக்கே இடம் இல்லாது போய் விடும்.

தங்களுடைய உயர்குலப் பிறப்பைப்பற்றிப் பெருமை அடித்துக்கொண்டு, ஆணவ போதையுடன் அடக்குவாரற்றுத் திரியும் இந்தப் பிரபுக்களால் நாம் தாழ்ந்துவிடவே கூடாது. எல்லாரும் ஓர் குலமே; எல்லோரும் ஒரே மண்ணில்தான் பிறக்கிறோம்; எல்லாருக்கும் புராதன குலச் சிறப்பு உண்டு. மனிதர்கள் அனைவரும் இயற்கையில் ஒரே மாதிரியாகத்தான் சிருஷ்டியானவர்கள். நம்முடைய ஆடைகளில் பிரபுக்களையும், அவர்களுடைய ஆடைகளில் நம்மையும் கண்டால், நாம் பிரபுக்களாகவும் அவர்கள் எளியவர்களாகவும் காட்சியளிப்பது நிச்சயம். பணமும் ஏழைமையுமே சமுதாய ஏற்றத் தாழ்வுகளுக்குக் காரணங்கள் ஆகிவிட்டன.

* * *

உண்மையான ஒற்றுமை ஏற்பட வேண்டுமானால், மக்கள் நிரந்தரமான சுகத்தை அநுபவிக்க வேண்டுமானால், ராஜ்யாதிகாரம் முற்றும் ஒருவனிடமே குவிந்திருக்கவேண்டும்; அவன் கைப்பாடாகவே எல்லாத் திட்டங்களும் அமலாக வேண்டும்.

ராஜ்யாதிகாரம் பலம் பொருந்தியதாகச் செயல்பட வேண்டுமானால், நல்லோரின் ஆசி அதற்கு இருக்கவேண்டும். குடி மக்களின் சம்மதத்தையும் ஆதரவையும் பெறுவதே ராஜாங்கத்தின் முக்கியக் கடமையாக இருக்கவேண்டும். அத்தகைய ஆதரவே ராஜாங்கத்தின் உண்மையான பலமாகும். அப்போதுதான் அரசு நீடித்து நிலையாக நிற்க முடியும். ராஜாங்கத்தின் பலம் கோட்டை கொத்தளங்களில் இல்லை; மக்களின் இஷ்டபூர்வமான ஆதரவில்தான் இருக்கிறது. அரசன் அல்லது தலைவன் இதை உணர்ந்து நடக்கவேண்டும்.

குடிகளின் அன்பையும் ஆதரவையும் பெறுவதோடு மட்டும் அரசன் அல்லது தலைவன் நின்றுவிட முடியாது; அதுவே முடிவானதுமல்ல; அதில் சிறிதேனும் ராஜதந்திரச் சாதுரியம் கிடையாது. எப்போதும் படை வலிமையைத்தான் அவன் அதிகமாக நம்பவேண்டும்; மக்களின் அன்பை அல்ல.

* * *

மக்கள் அரசனைவிட அதிக நம்பிக்கையும் நன்றியும் நாணயமும் உள்ளவர்களாக இருக்கிறார்கள் என்

றும், சமயத்துக்கேற்றபடி நடந்து கொள்ளும்சாமர்த்தியம் உள்ளவர்கள் என்றும் நான் திடமாகக் கூறுவேன். நியாயத்தின் பக்கம் சேரும்படி அவர்களை எப்பொழுதெல்லாம் அழைக்கிறேமோ அப்பொழுதெல்லாம் முழு மனத்துடனும் களிமுகத்துடனும் அழைப்பை ஏற்றுக்கொண்டு உயிர்த் தியாகம் செய்ய அவர்கள் முன் வருவார்கள்.

குடிகள் ஓர் அயோக்கியனை மேலான பதவிக்கு மனமறிந்து தேர்ந்தெடுக்க மாட்டார்கள். ஆனல் அரசன் அப்படி அல்ல. சமயத்துக்கு ஏற்றபடி தங்களுடைய மனப் போக்கையும் நடைமுறையையும் குடிகள் மாற்றிக் கொண்டுவிடத் தயங்கமாட்டார்கள். ஒரே வித வாழ்க்கையில் லயித்துப்போன அரசனே, புதிய சந்தர்ப்பத்துக்கு ஏற்றபடி நடந்து கொள்ளத் தவறுவான். மக்களின் மனத்தை அன்பினல் கவரவும் முடியும்; மாற்றவும் முடியும். ஆனல், அரசனின் மனத்தையும் போக்கையும் வாள் வலியால்தான் மாற்ற முடியும். எந்த நகரங்களில் குடிமக்களின் செல்வாக்கு அதிகம் இருக்கிறதோ அங்கெல்லாம் குறைந்த காலத்துக்குள்ளேயே முன்னேற்றம் ஏற்படுகிறது. அந்த முன்னேற்றம் அரசன் சிருஷ்டிக்கும் முன்னேற்றத்தைவிடத் துரிதமாகவும் சிறப்பாகவும் இருக்கிறது.

குடிமக்களின் மனப்பூர்வமான ஒத்துழைப்புடன் செயல்படும் குடியரசில்தான் சமுதாயம் க்ஷேம நலனைப் பெறமுடியும். ஏனென்றல், மக்களுக்கு நன்மையாக இருப்பது ஆள்வோருக்குத் தீமையாக இருக்கிறது.

* * *

எங்கெல்லாம் மிதமிஞ்சிய எதேச்சாதிகாரம் ஏற்படுகிறதோ, எங்கெல்லாம் மக்களிடையே பலவீனங்கள் மண்டிக் கிடக்கின்றனவோ, அங்கெல்லாம் முன்னேற்றம் ஏற்படுவதில்லை.

அபகீர்த்தி வந்துவிடுமோ என்று அரசன் அல்லது தலைவன் பயப்பட வேண்டியதில்லை. ராஜ்ய நலனைக் காக்கப் பதவி வகிக்கும் அவனுக்கு அந்த உணர்ச்சி முக்கியமானதல்ல. ஒழுக்கத்தின் தராதரத்தை, அதாவது, 'எது நல்லது? எது கெட்டது?' என்பதைச் சீர்தூக்கிப் பார்க்கும்போது, நல்லொழுக்கம் அவனுக்கு நாசத்தையும் தீயொழுக்கம் அவனுக்கு நன்மையையும் தருவதையே அவன் காண்பான். எனவே, ஒழுக்கத்தின் நல்ல அல்லது கெட்ட அம்சங்களைப்பற்றி அவன் ஆராய்ச்சி செய்துகொண் டிருக்க வேண்டாம். அவசியம் ஏற்படும்போது, அவன் எந்தக் காரியத்தையும் எவ்வித முறையிலும், ராஜாங்கத்தின் நலனுக்காக, ஈவிரக்கமின்றிச் செய்யலாம்.

போலிகளையும் பித்தலாட்டக்காரர்களையும் கண்டுபிடிக்கும் போது நரியைப் போலவும், பின்பு அவர்களைத் தண்டிக்கும்போது சிம்மத்தைப் போலவும் அவன் நடந்துகொள்ள வேண்டும்; முன்னல் தந்திரசாலியாகவும் பின்னல் ஈவிரக்கமற்ற கொலைகாரனுகவும் அவன் நடந்துகொள்ளவேண்டும். தான் சொன்ன சொற்படி நடந்து கொள்ளத் துணிவதால் ராஜாங்கத்தின் பத்திரத்துக்கும் மதிப்புக்கும் கேடு வரும் என்றல், அவன் அப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதில்லை. 'தந்திரமா? அல்லது பலமா?' என்ற கேள்வி எழும்போது, முதலில் தந்திர உபாயத்தையே அரசியல் ரீதியில் கையாள வேண்டும். ஏனென்றல், வெற்றி என்பது எப்பொழுதும் பலத்தில் மட்டுமே இருக்கிறது என்று நினைப்பதற்கில்லை.

ஏமாற்ற நினைப்பவர்களுக்கு முன்னல், ஆள்பவன் நற்குணவானுக நடிக்க வேண்டும். முடியுமானல் அவன் நல்ல வழியை விட்டு விலகாமல் இருக்கட்டும்; ஆயினும், அவசியம் ஏற்படும்பொழுது தீய வழியில் செல்லவும் அவன் தயங்காமல் இருக்கட்டும்.

தன் அதிகாரத்தை நிலை நாட்டுவதில் ஆள்பவன் வெற்றி பெற்றுவிட்டால், தான் அதற்காகக் கையாண்ட அத்தனை முறைகளும் சரியானவைதான் என்று அவன் கருத வேண்டும்; மற்றவரும் அவனை ஆதரிப்பார்கள்.

ஈரானின் தத்துவதரிசி, கணித நிபுணர், பெருங் கவிஞர் - இவருடைய படம் வரப்போகிறதாம்.

# ஓமர் கய்யாம்

★

கி. பி. 1066-இல் வெற்றி வீரன் (முதல்) வில்லியம் இங்கிலாந்தின்மேல் படையெடுத்தான். அப்போது (பாரசீக நாட்டில் வாழ்ந்து வந்த) ஓமர் கய்யாமுக்கு வயசு 18 இருக்கும். அவர் அல்ஜீப்ரா என்ற பீஜ கணிதத்தைப்பற்றிய விளக்கம் ஒன்றை எழுதிக்கொண்டிருந்தார். இதற்கு 800 ஆண்டுகளுக்குப் பின் பிரெஞ்சுக்காரர்கள் அந்த நூலைப் பாரிஸில் வெளியிட்டபோதும் அது மிகவும் பயன்பட்டது. 'லா அல்ஜீப்ரே டி ஓமர் அல்-கய்யாமி (ஓமர் கய்யாமின் பீஜ கணிதம்)' என்ற இந்த நூல் அவருடைய 'ருபாயியாத்' என்ற பாடல் தொகுதி அச்சாவதற்கு முன்பே வெளிவந்துவிட்டது.



ஓமர் கய்யாமாக நடிக்கும் கர்னல் வொயில்டு. படம் வரும்போது, ஸிக்னட் நாவலும் வெளி வரப்போகிறது.

முப்பதாம் வயதில் (கி. பி. 1079) ஐரோப்பாவில் சிற்றரசர்கள் பழம்பசலி முறையில் ஆண்ட காலத்தில் - அறிவு ஒளி பரவாத நிலையில் - ஓமர் கய்யாம் சரிவர ஆண்டுகளைக் கணக்கிட்டுச் சீர் திருத்திய பஞ்சாங்கம் ஒன்றை அமைத்தார். இப்போது மேல்நாட்டு நாகரிகத்தை அநுசரிப்பவர் பயன்படுத்திவரும் கிரிகோரியன் காலண்டருக்கும் இதற்கும் 6½ விநாடிதான் வித்தியாசம்; அதுவும், டெலஸ்கோப் என்ற தூரதரிசினிக் கருவியைக் கண்டு பிடிப்பதற்கு 500 ஆண்டுகளுக்கு முன்பே இப்படிக் கணித்தார் என்றால் பாருங்கள்!

பீஜகணித சம்பந்தமாக அவர் இப்படி ஒரு நூல் எழுதியதற்குக் காரணம், யாராவது தம்மை ஆதரித்து, தாம் மேலும் படித்தறிய வாய்ப்பு அளிக்கவேண்டும் என்பதுதான். அவருடைய தந்தை அப்போதுதான் காலமானார். பாரசீகத்திலுள்ள நிஷாபுரில் கூடாரம் அமைக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்தார் அவருடைய தந்தை. 'கய்யாம்' என்றால் கூடாரம் அமைப்பவன் என்று அர்த்தம். இப்படித் தம் தந்தையின் தொழிலை அடிப்படையாகக் கொண்டே கவிநயம் தோன்றக் 'கய்யாம்' என்று பெயர் வைத்துக்கொண்டார்.

அவருடைய முழுப் பெயர்: 'கியாஸ் உல்-தீன் அபுல் ஃபத் ஓமர் இப்ன் இப்ராஹீம் அல்-கய்யாமி.'

பீஜகணிதத்தைத் தவிர யூக்ளிட்டின் தியரம் என்ற தேற்றங்களை ஒட்டிப் பல புதிய நிருபணங்கள் (கராலரீஸ்) வகுத்து அவைபற்றியும், உலகில் பல பிரதேசத்துச் சீதோஷ்ண மாறுதல்கள் பற்றி

மூலம்: புக் லவர் (ஆங்கிலம்: மே '57), 44, கவஸ்ஜீ படேல் தெரு, பம்பாய்-1.

யும், நகைகளில் பதித்திருக்கும் ரத்தினங்களைத் தனியாகப் பிரித்தெடுக்காமலே அவைகளை மதிப்பிடும் முறைபற்றியும் நூல்கள் எழுதியிருக்கிறார். 'ருபாயியாத்' என்ற பாடல்களினால் அவர் மிகவும் பிரசித்தி பெற்றார். இப்படிப் பாடல் தொகுதிகளைத் தவிர வேறு மூன்று நூல்கள் எழுதியிருக்கிறார் ஓமர். கிரேக்க மொழியையும், கீழ்நாட்டுத் தத்துவங்களையும் ஓமர் கற்றறிந்தார். அவர் அறத்தில் பற்றுள்ளவர்தான்; என்றாலும், உலகியலை அறிந்து ஒழுகுபவர்; துறவியாக வாழவில்லை. மெக்கா யாத்திரை சென்று திரும்பிவந்தார். 'ஆண்டவன்', 'வாழ்வு' என்னும் காணரிய இரு பெரும் ரகசியங்களைப்பற்றி அவர் கொண்ட கருத்தை இந்தத் தோத்திரப் பாடலில் காணலாம்:

"ஆண்டவனே, உனைஅறிய
முயன்றேன், நீ
அளித்த சில ஆற்றல்
கொண்டிங்கே.
வேண்டுவனே உனதருளை;
குறைபொறுப்பாய்; இம்
மெய்யறிவே உனை அடைய
வழிகாட்டிடும்."

எங்கும் பரந்து விளங்கும் பேராற்றல் கொண்ட மேதை ஓமர். அவர் கணித நிபுணர்; வானசாஸ்திரம் பயின்றவர்; யுக்தியில் வல்லவர். ஆனாலும் அவருடைய கவிதையினால்தான் அவர் மிகவும் பிரசித்தி அடைந்தார். அவருக்குப் பின் 400 ஆண்டுகள் கழித்து லியானார்டோ ட விஞ்சி தோன்றினார். ட விஞ்சி கணித நிபுணர்; எஞ்சினீயர்; யுக்தியில் வல்லவர். ஆனாலும் அவருடைய ஓவியங்களைப்பற்றித்தான் எல்லாருக்கும் பொதுவாக நினைவு வரும். இந்தமாதிரி மகாமேதைகள் கி. மு. 383-இல் தோன்றிய அரிஸ்டாட்டிலுக்கு முன்னால்கூட இருந்திருக்கிறார்கள். அரிஸ்டாட்டிலும் கணித நிபுணர்; வைத்தியர்; சரித்திர ஆசிரியர்; சாக்ரடீஸின் நண்பர்; பூமியின் பரிமாணத்தை நிர்ணயித்தவர்.

ஓமரை அறிந்தவர்கள் ஞானிகளில் தலைசிறந்தவர் என்று அவரைப் பாராட்டி வந்தார்கள். சென்ற நூறு ஆண்டுகளாக ஐரோப்பாவில் 'ருபாயியாத்' நன்றாக விலை போயிருப்பதற்குக் காரணம் அதிலுள்ள அறிவுரைகள்தான். சமீபத்தில்கூட அவருடைய சொந்த நாட்டில் அவரைப்பற்றி அதிகமாகத் தெரியாது; ஏதோ சில்லறைக் கவிஞராகத்தான் அவரை மதித்துவந்தார்கள். அவருடைய மற்றொரு நூலை (பீஜ கணிதம் பற்றியது) அடியோடு மறந்தும் விட்டார்கள்.

நாலு அடி கொண்ட செய்யுட்களைப் பாரசீகத்தில் 'ருபாயி' என்பார்கள். 'ருபாயியாத்' என்றால் அந்தமாதிரி செய்யுட்களின் தொகுதி என்று பொருள். ஓமர் கய்யாம் இப்படிச் சுருக்கமாக எழுதிய செய்யுள் ஒவ்வொன்றுமே முழுக் கவிதை என்று சொல்லலாம்.

இதுவரை இந்த மகா மேதையின் - உலகில் உள்ளதை உள்ளவாறே கண்டு அநுபவித்த ரசிகரின் - வாழ்வைத் திரைப்படமாக யாரும் கொண்டு வந்ததில்லை. இதற்குக் காரணம், இவருடைய வாழ்வு பற்றிய நாடக அம்சங்களை யாருமே தொகுக்காதிருந்தது தான். ஓமர் கய்யாம் நிறைவாழ்வு வாழ்ந்து பேரறிவு பெற்றவர் என்ற உண்மையை எவரும் சரிவர உணரவில்லை. பாரமௌண்ட் சினிமாக் கம்பெனியார் இவருடைய வாழ்க்கையைத் திரைப்படமாக எடுப்பதென்று தீர்மானித்தார்கள்; அதற்கு முன்பே பதினெட்டுக் கம்பெனிகள் அதை எடுப்பதாகத் திட்டம் இட்டுப் பதிவும் செய்திருந்தன!

எட்வர்டு ஃபிட்ஜெரால்டு 'ருபாயியாத்'தை இங்கிலீஷில் மொழிபெயர்த்து ஓமரை அமர கவி ஆக்கியது போலவே பாரமௌண்ட் கம்பெனியாரும் பொது மக்களுக்குக் களிப்பூட்டும் விதத்தில் ஓமர் கய்யாமின் அற்புத வாழ்வைப் படம் எடுத்திருக்கிறார்கள். அந்தப் படத்தைப் பார்க்கும்போதே ஆழ்ந்த அறிவு படைத்த ஓமரின் அழகும் ஆற்றலும் மட்டுமன்றி அவர் வாழ்ந்த

அந்த நாளின் அழகும் ஆற்றலுங் கூட நம்மைப் பரவசப்படுத்தும்.

இந்தப் பாரமௌண்ட் படம் வெளிவரும் அதே சமயம் 'ஓமர் கய்யாத்தின் காதல்' என்ற நூலை 'சிக்னட்' பதிப்பாளர் மான்யுவல் காம்ராஃப் வெளியிடப் போகிறார். பழம் பாரசீகத்தில் புதுமை மிளிர, ஓமர் வாழ்ந்த விதத்தை அப்படியே இந்த நூலிலிருந்து உணரலாம். இந்தச் சிக்னட் பதிப்பு, ஓமரின் காவியமான 'ருபாயியாத்' போலவே காதலும் காமமும், வன்மையும் மென்மையும், நன்மையும் தீமையும் ஒன்றோடொன்று அற்புதமாக இணைந்து விளங்கும் நூல். பாரசீகத்து மன்னனுடைய ஆடம்பரமான கொலுவில் ஓமர் ஆட்டபாட்டம் நிறைந்து வாழ்ந்ததைக் கவனித்தால் அவருடைய பெருங் காவியத்தின் பொருளை நன்கு உணரலாம். பழைய பாரசீகம், ஓமரின் தன்மை, அவர் காதலித்த அழகிகள் இப்படிப் பல விஷயங்களை அற்புதமான அந்தத் திரைப் படத்தில் காணலாம். இது போலவே சிக்னட் பதிப்பாளர் வெளியிட்டிருக்கும் நாவலிலும், பண்டைப் பாரசீகத்தில் புதுமை தோன்ற, விசித்திர வண்ணம் பொலிந்த அவருடைய வாழ்வு, மது, மாதர், இசை இப்படிப் பல அம்சங்களுடன் இணைந்து கிடப்பதைப் படித்து ரசிக்கலாம். இந்த நாவலில் ஓமர் கய்யாத்தின் 'ருபாயியாத்' பாடல்கள் எல்லாவற்றையும் காணலாம்.

## சட்டசபையில் பதில்

அரசாங்கக் காரியதரிசி ஒருவர் இருந்தார். சட்ட சபைக் கேள்விகளுக்கெல்லாம் அப்பழுக்கில்லாமல் பதில் எழுதித் தம் இலாகா மந்திரிகளுக்கு அவர் கொடுப்பார். இதனால் அவருக்கு நல்ல புகழ் ஏற்பட்டது. மற்ற இலாகா காரியதரிசிகளுக்கெல்லாம் அந்தக் காரியதரிசிமீது பொறாமை உண்டாயிற்று.

ஒரு நாள் அவரும் ஒரு நண்பரும் காரில் போய்க் கொண்டிருந்தார்கள். நாட்டுப்புறச் சாலையில் சென்றது கார். அங்கே கிராமத்தான் ஒருவன் சைக்கிளில் எதிரே வந்துகொண் டிருந்தான்.

காரியதரிசி காரை நிறுத்தித் தலையை வெளியே நீட்டினார். ''இப்போது நாங்கள் எங்கே இருக்கிறோம்?'' என்று சைக்கிள்காரனைக் கேட்டார்.

சைக்கிள்காரன் வேகமாய்ச் சென்று தூரத்தில் மறைந்தான். தூரத்திலே யிருந்து அவன் பதில் மட்டும் கணீரென்று வந்தது: ''காரில்.''

காரியதரிசி சற்று மௌனமானார். பிறகு, தம் நண்பரை நோக்கித் திரும்பி, ''சட்டசபையில் சொல்ல வேண்டிய பதில்களுக்கு இதுதான் அருமையான உதாரணம். அவற்றுக்கு இருக்கவேண்டிய மூன்று முக்கியமான லட்சணங்களை இதில் காணலாம். ஒன்று, இது மிகவும் சுருக்கமானது: இரண்டு, இது முற்றும் உண்மை; மூன்று, கேள்வி கேட்டவருக்கு முன்னே எவ்வளவு தகவல் தெரியுமோ அதைவிட இம்மியும் புதிய தகவல் இப்போது கிடைத்து விடவில்லை.''

—'ஆன்வர்ட்'

சிறுவர், பெரியவர், பெண்கள் எல்லோரையும் திரள் திரளாய் இழுக்கும் விளையாட்டுத் தோன்றி வளர்ந்த கதை.

# இந்தியாவில் கிரிக்கெட்

★

இந்தியாவில் முதல் முதலாக எப்போது, எங்கே கிரிக்கெட் மாட்ச் விளையாடினார்கள்? அப்போது இந்த விளையாட்டு நாட்டுக்குப் புதியதா அல்லது பழையதா? இந்தக் கேள்விகளுக்குத் தீர்மானமாக விடை காண்பது கடினம். பல நூற்றாண்டுகளுக்கு முன்னே, இந்தியாவில் ஏதோ ஒருவிதமான - மோட்டாவான - உள்நாட்டுக் கிரிக்கெட் இருந்ததாகச் சிறந்த வரலாற்று ஆசிரியர்களே சொல்லுகிறார்கள். அது எப்படி நடைபெற்றிருக்கும் என்பதைப்பற்றி அவர்கள் ஊகம் செய்ய இடம் இருக்கிறது. ஹன்ஸா பிரதேசத்திலே பழங்காலத்துப் போலோ விளையாட்டு ஒன்று இருப்பதையும் இங்கே அவர்கள் சுட்டிக் காட்டலாம். அது ஈரான் நாட்டிலிருந்து வந்தது. ஹாக்கி, கிரிக்கெட் இரண்டும் கலந்த ஒரு வகைக்கதம்ப விளையாட்டு, கிரீஸ் நாட்டில் பழங்காலத்தில் இருந்திருக்கிறது. புதைபொருள் ஆராய்ச்சியிலிருந்து இது தெரிகிறது. ஆகவே, கிட்டிப் பந்து விளையாட்டு ஒன்றை மகா அலெக்ஜாந்தர் மன்னன் இந்தியாவுக்குக் கொண்டு வந்தும் இருக்கலாம். மிஸ்டர் ஸி.இ. நியூஹாம் என்ற நிபுணரை நமக்கு ஆதாரமாகக் கொள்கிறோம். அவர் இந்த அபிப்பிராயத்தைப்பற்றி இப்படிச் சொல்லுகிறார்: ''இது பெரிதும் ஹேஷ்யமே ஆகும். இன்று நாம் கிரிக்கெட் என்று கொள்கிறோமே, இந்த நவீன விளையாட்டின் ஆரம்ப வரலாறுபற்றி நமக்குத் தெரிந்த நம்பகமான ஆதாரமுள்ள விஷயம் மிகவும் சொற்பமே.'' இதன்படி பார்த்தால், இந்தியாவுக்குக் கிரிக்கெட் வந்தது பிரிட்டிஷ்காரருடனேயே.



கல்கத்தா மைதானத்தில் 1792-முதல் 1871 வரையில் கிரிக்கெட் ஆடுவோரின் பாவிலியனாக உதவிய ஆலமரத்தின் கீழே கூடிய சில கிரிக்கெட் பக்தர்கள். படம் உதவியவர்: கல்கத்தா கிரிக்கெட் கிளப்.

1751-ஆம் ஆண்டிலேயே முதல் முதலாக இந்தியாவில் கிரிக்கெட் ஆடியிருக்கிறார்கள். 'விஸ்டன்' கிரிக்கெட் பிரசுரத்தில் 'கிரிக்கெட் தேதிகள்' என்ற பகுதி ஒன்று இருக்கிறது. அதைத் தொகுத்தவர் எச். எஸ். ஆல்தாம். 1792-இல் கல்கத்தா கிரிக்கெட் கிளப் அமைந்ததாக அதிலிருந்து தெரிகிறது. கிரேட் பிரிட்டனை விட்டால், உலகத்திலேயே மிகப் பழமையான வேறு ஒரு கிரிக்கெட் கிளப் இது தான். 'மெட்ராஸ் கூரியர்'

காப்பிரைட்: பர்மாஷெல் ந்யூஸ் (ஆங்கிலம்: மார்ச் '57), பல்லார்டு எஸ்டேட், பம்பாய்.

என்ற பத்திரிகையின் 23-2-1792 இதழில் இதற்கு ஓர் அத்தாட்சியைக் காணலாம். அந்த நாளில் நடந்த இரண்டு கிரிக்கெட் ஆட்டங்களைப் பற்றிய செய்தி அதில் வெளியாகியிருக்கிறது. ஒன்று, கல்கத்தா கிரிக்கெட் கிளப், பாரக்பூர் கோஷ்டி இரண்டும் ஆடியது; இரண்டு, கல்கத்தா கிரிக்கெட் கிளப், டம்டம் கோஷ்டி இரண்டும் ஆடியது. மாட்ச் நடக்கும் நாட்களில் ஆலமரம் ஒன்றின் கீழ்க் கல்கத்தா கிரிக்கெட் கிளப்காரர் ஒரு கூடாரம் அடித்திருப்பார்களாம். அந்த ஆல மரம் இன்றுங் கூடக் கிங்ஸ்வே - ப்ளாஸி கேட் ரோடு மூலையில் நிற்கிறது. இன்றுள்ள பாவிலியன் கூடத்தை 1871-இல் ஏடென்ஸ் தோட்டத்தில் கட்டினார்கள். ஆனால் ஆதி நாளிலிருந்து இன்று வரைக்கும் கிரிக்கெட் வேடிக்கை பார்க்கிறவர்களுக்குப் பழைய ஆல மரமே நிழல் கொடுத்து வருகிறது. ஏடென்ஸ் தோட்ட நிலத்தை நேஷனல் கிரிக்கெட் கிளப்புக்கு 1950-ஆகஸ்டில் கல்கத்தா கிரிக்கெட் கிளப் அளித்தது.



1848-இல் சென்னையில் ஸ்தாபிதமான செப்பாக் கிரிக்கெட் கிளப் அமைத்த பாவிலியன் சித்திரம்.

கல்கத்தா கிரிக்கெட் கிளப்பின் சரித்திரத்தை, டி. ஸி. லாங்ஃபீல்டு என்ற நிபுணர் எழுதியிருக்கிறார். அவரே மிக நேர்த்தியாய்க் கிரிக்கெட் ஆடுவார். கல்கத்தா கிரிக்கெட் கிளப்பின் வளர்ச்சியில் அவருக்கும் பெரும் பங்கு உண்டு. அவர் எழுதுகிறார்: ''1804-இல் நடந்த பெரிய கிரிக்கெட் மாட்ச் ஒன்றின் ஸ்கோர் விவரம் நமக்குக் கிடைத்திருக்கிறது. ஓல்டு ஈட்டோனியன் கோஷ்டி ஒன்றுக்கும் கல்கத்தா கோஷ்டி ஒன்றுக்கும் அந்தப் போட்டி நடந்தது. அவர்கள் எல்லாருமே கிழக்கிந்தியக் கம்பெனியின் ஊழியர்கள். இரண்டு இன்னிங்ஸ் கொண்ட மாட்ச் அது. ஓர் இன்னிங்ஸும் 154-ரன்களும் வித்தியாசத்தில் ஓல்டு ஈட்டோனியன்கள் ஜயித்துவிட்டார்கள். அதுவும் எப்படித் தெரியுமோ? ஆட்ட ஆரம்பத்தில் ஒரு பந்தயம் போட்டார்களாம். கல்கத்தா கோஷ்டியே ஜயிக்கும் என்று ஒன்றுக்கு இரண்டு பணம் கொடுப்பதாகச் சவால் விட்டார்களாம். இந்தத் தகவலையும் ஸ்கோர் தாளிலேயே குறித்திருக்கிறார்கள்! கல்கத்தா கோஷ்டியின் தோல்விக்கு ராபர்ட் வான்ஸிட்டார்ட் என்பவரே முக்கியமான காரணம். ஈட்டோனியன்கள் எடுத்த மொத்த ரன்கள் 232; அதில் 102 ரன்கள் வான்ஸிட்டார்ட்டே எடுத்தவை. மேலும், அவர் எட்டு விக்கட்டுகளை வீழ்த்திவிட்டார். அதில் ஏழு முதல் இன்னிங்ஸில் வீழ்த்தியவை. அத்தனை பாட்ஸ்மனும் சுத்தமாய்ப் 'போல்' ஆகிவிட்டார்கள். அந்தக் காலத்தில் சுத்தமாய்ப் 'போல்' ஆகி விழும் விக்கட்டுகள் மட்டுமே போலர் கணக்கில் சேரும். காட்ச் ஆகி விழுந்த விக்கட் எல்லாம் காட்ச் பிடித்தவரின் கணக்கிலேயே சேரும். எனவே, இன்றைய விதிப்படி எட்டு விக்கட்டுகளுக்கு மேலேயே வான்ஸிட்டார்ட் வீழ்த்தியிருப்பார் என்றுகூடத் தோன்றுகிறது.'' மேலும், 1884-45-இல் நடந்த சில விளையாட்டுக்களைப்பற்றியும் லாங்ஃபீல்டு குறிப்பிடுகிறார். இவை பற்றிய பத்திரிகைக் கத்தரிப்புச் செய்திகளிலிருந்து, லக்னௌ, டாக்கா இரண்டு நகரங்களிலும் அந்த நாளில் ஆட்டம் நடந்திருப்ப



வலது பக்கம்: காலஞ்சென்ற பட்டாடி நவாப். இடது பக்கம்: ஏ. ஏ. ஜஸ்தன்வாலா.

தாகத் தெரிகிறது. கையைச் சுழற்றி வீசும் போலர்கள் பல 'வொய்டு பால்'கள் போட்டதாகப் புலப்படுகிறது. இதனுல் 'வொய்டு பால் என்ருல் எது?' என்று பெரிய ஆர்குமெண்டெல்லாம் நடந்திருக்கிறது.

என்ருலும், இந்தியாவிலேயே கிரிக்கெட்டின் தாயகம் என்று சொல்லிக் கொள்ளக்கூடிய விசேஷ உரிமை பம்பாய் நகருக்குத்தான் உண்டு. அங்கே கிரிக்கெட் மிகவும் செல்வாக்குப் பெற்றிருக்கிறது. மற்ற நகரங்களைவிட அதிகமாய்ப் பல கிரிக்கெட் நிபுணர்களைத் தோற்றியிருப்பதும் பம்பாய்தான். இந்தியாவின் பல வகுப்பார்களுக்குள்ளேயும் முதல் முதலாகக் கிரிக்கெட் விளையாடி மற்றவருக்கெல்லாம் வழி காட்டிய தனிப் பெருமையும் கௌரவமும் பார்ஸி சமூகத்தையே சாரும். 1848-இல் ஓரியண்டல் கிரிக்கெட் கிளப் என்ற தங்கள் முதல் சங்கத்தைப் பார்ஸிகள் தொடங்கினுர்கள். அப்போது அதைப் 'பாட் பால்' (மட்டைப் பந்து) என்று குறிப்பிட்டார்கள். பிறகு 1850-இல் ஜொராஷ்ட்ரியன்ஸ் கிரிக்கெட் கிளப் என்ற பார்ஸிச் சங்கம் அமைந்தது. கையைக் கீழே கொண்டு சென்று 'போல்' செய்வது, பாட்டைக் குறுக்கு வாட்டாகப் பிடித்து அடிப்பது இரண்டும் பார்ஸிகளிடம் அந்த நாளில் சகஜமாயிருந்தன. 'போல்' செய்வதில் கையைத் தூக்கிச் சுழற்றுகிற முறை 1867-வாக்கில் பழக்கத்துக்கு வந்தது. ஸர்ரீ பிரதேசத்தைச் சேர்ந்த ராபர்ட் ஹெண்டர்ஸன் இந்தியாவுக்கு வந்தார். இன்னமும் அவர் பெயரை மக்கள் ஞாபகத்தில் வைத்துப் போற்றுகிருர்கள். ஆரம்ப காலத்துப் பார்ஸி ஆட்டக்காரர்களுக்கு அவர்தான் கிரிக்கெட் பயிற்சி அளித்தார். இதனுல்தான் ஒரு பார்ஸி டீம் முதல் முதலாக 1886-இல் இங்கிலாந்துக்குப் போய்வர முடிந்திருக்கிறது. காட்ஸ்ஃபீல்டு என்ற இடத்தில் இந்த டீம் நார்மன்ஹர்ஸ்ட் டீமைத் தோற்கடித்தது. 19 மாட்சுகளில் பார்ஸி டீம் தோல்வியுற்றது.8 மாட்சுகள் ட்ரா ஆயின. கம்பர்லாண்ட் லாட்ஜ் என்ற இடத்தில் ப்ரின்ஸ் கிறிஸ்டியன் விக்டர் 11 என்ற டீமுடன் ஆடும்படி இந்த டீமை விக்டோரியா ராணியே அழைத்துக் கௌரவப்படுத்தினுள். அதற்கு இரண்டு வருஷங்களுக்குப் பிறகு, இரண்டாவது முறை பார்ஸிகள் இங்கிலாந்துக்குச் சென்ருர்கள். அப்போது முன்னைவிட அதிக வெற்றி பெற்ருர்கள். இந்தப் பிரயாணங்களுக்கு முக்கியமாக முன்னின்று ஏற்பாடு செய்தவர்கள் ஏ. பி. படேல், பாரியா, ஃப்ராம்ஜி படேல் இந்த மூன்று பேருந்தான்.

முஸ்லிம்கள் 1883-இல் தங்கள் கிரிக்கெட் கிளப்பை ஸ்தாபித்தார்கள். ஹிந்துக்களின் கிரிக்கெட் கிளப் 1894-இல் தொடங்கியது. அடுத்த சில வருஷங்களில் பற்பல ஜிம்கானுக்கள் தோன்றின. இந்த நூற்ருண்டின் தொடக்கத்தில் சென்னை ராஜதானியில் கிரிக்கெட் மிகவும் செல்வாக்குப் பெற்றது. பிறகு, ஐரோப்பியர், பார்ஸிகள், ஹிந்துக்கள் இந்த மூன்று கோஷ்டிகளுக்கும் இடையே நடந்த முக்கோண (ட்ரையாங்குலர்) டூர்ணமெண்டுகள், பின்னுல் முஸ்லிம்களும் சேர்ந்துகொண்டு நடத்திய நாற்கோண (க்வாட்ராங்குலர்) டூர்ணமெண்டுகள் இவற்ருல் கிரிக்கெட்டின் செல்வாக்கு மேலும்

வலுப் பெற்றது. அப்புறம் 'தி ரெஸ்ட்' (மீதியுள்ளோர்) கோஷ்டி என்ற ஐந்தாவது கோஷ்டி ஒன்றையும் 1938-இல் சேர்த்துக்கொண்டு ஐங்கோண (பென்டாங்குலர்) டூர்ணமெண்டுகள் நடத்தினர்கள். என்ருலும் அதை 1944-இல் கைவிட்டு விட்டார்கள்.

தெற்கே வாழ்ந்த ஓர் ஆங்கிலேயர் 1848 - இல் சென்னைக் கிரிக்கெட் கிளப்பை அமைத்தார். செண்ட் ஜார்ஜ் கோட்டைக்குப் பக்கத்தில் உள்ள ஐலண்ட் மைதானத்தில் 'மட்டை'ப் பந்தின் முதல் ஆட்டம் நடைபெற்றது. முக்கியமானது என்று சொல்லக்கூடிய முதல் மாட்சை, 1864-இல் கல்கத்தா டீமுடன் சென்னைச் சங்கம் ஆடியது என்று தெரிகிறது. அப்புறம் 1865-இல் செப்பாக் என்ற இடத்துக்குச் சென்னைக் கிரிக்கெட் கிளப் போயிற்று. சென்னையில் உள்ள இந்தியருக்கு இந்த விளையாட்டில் சீக்கிரமே கவர்ச்சி உண்டாயிற்று. அதிலிருந்து மிக்க விரைவாக விளையாட்டு வளர்ந்தது. இந்தியருக்கும் ஐரோப்பியருக்கும் வருஷந்தோறும் போட்டி நடத்தும் வழக்கத்தை 1908-இல் தொடங்கினர்கள்.



பாட்டியாலா மகாராஜாதிராஜ பூபேந்திர ஸிங்ஜி. படம் உதவியவர்: பெப்ஸு தகவல் இலாகா டைரெக்டர்.

கல்கத்தா, பம்பாய், சென்னை இந்த மூன்று நகரங்களோடு இந்தியக் கிரிக்கெட்டின் வளர்ச்சி அமைந்து விடவில்லை. சுதேச ராஜ்யங்களிலும் அது புகுந்தது. அங்கெல்லாம் மகாராஜாக்களும் நவாபுகளும் அதற்குப் போஷணை அளித்து ஆதரித்தார்கள். அவர்களுக்குள்ளே மிகவும் முக்கியமானவர் பாட்டியாலா மகாராஜாதிராஜா. இந்தியக் கிரிக்கெட் ஆட்டக்காரர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக ஜே. டி. ஹெர்ன், டபிள்யு. பிளாக்வெல் போன்ற பிரபல ஆங்கில விளையாட்டுக்காரரை இந்த நாட்டுக்குத் தருவித்த முதல் இந்திய மன்னர் அவர்தான்.

பின்னுல், அவருடைய மகன் மகாராஜா சர் பூபேந்திர ஸிங் தம் தந்தையைப் போலவே இந்த விளையாட்டில் பேரார்வம் காட்டினர். 1908-இல் ஃப்ராங்க் டார்ரண்ட் என்பவரின் சேவையைப் பெற்றுர். கிரிக்கெட்டையே



பாட்டியாலாவில் உள்ள யாதவேந்திரா ஸ்டேடியம். சித்திரம் உதவியவர்: பெப்ஸு தகவல் இலாகா டைரெக்டர்.



ரஞ்ஜி - ஒரு சிறு ராஜ்யத்தின் ராஜ குமாரர்; ஆனல் மகத்தான விளையாட்டு ஒன்றின் மன்னர். படம் உதவியவர்: ஸ்போர்ட் அண்ட் பாஸ்டைம்.

தொழிலாகக்கொண்ட எச். ஆர். மர்ரல் என்ற இன்னோர் ஆட்ட நிபுணர் 1911-இல் இந்தியாவுக்கு வந்தார். அவருக்குப் பின்னல் போலிங் நிபுணரான இ. மிக்னன் என்ற ஆங்கிலேயர் வந்தார். 1912, 1913 இரண்டிலும் ஜி. ஹிர்ஸ்ட், டபிள்யு. ரோட்ஸ், கில்னர், லேலாண்டு போன்ற பலர் வந்தார்கள். ஸர் பூபேந்திர ஸிங் 1911-இல் முதல் முறையாக இங்கிலாந்துக்கு இந்திய டீமின் காப்டனுகச் சென்ருர். பாட்டியாலா மன்னர்கள் விளையாட்டிலே ஆர்வம் கொண்டு தாராளமாகப் பணம் உதவி யிராவிட்டால், பம்பாய் ப்ராபோர்ன் ஸ்டேடியம், அமிருதசரஸில் உள்ள பஞ்சாப் பாவிலியன் இரண்டும் தோன்றி யிருக்கவே முடியாது. இப்போதைய மகாராஜாதிராஜா யாதவேந்திர ஸிங் மகேந்திர பகதூருக்குப் பயிற்சி அளித்தவர்கள் கர்னல் கே. எம். மிஸ்ட்ரி, டபிள்யு. ரோட்ஸ் இவர்களும் இவர்களைப் போன்ற வேறு பல நிபுணர்களுந்தான். அரித்தோடிய கட்டாந்தரையில் அருமையாக அவர் ஃபீல்டு செய்வார். சேல் என்னும் இடத்தில் நடந்த ஒரு மாட்சில் மகாராஜா 236 ரன் எடுத்தார். உலகத்திலே மிகவும் உயரமான கிரிக்கெட் மைதானம் அதுதான். 36 நூற்றுண்டுகளாக இருந்து வரும் பழமையான குன்று அது.

இதெல்லாம் போகட்டும். பின்னல் நவநகர் ஜாம்சாகேபாகப் பட்டத்துக்கு வந்த ரஞ்ஜி என்ற அற்புதமான ஆட்டக்காரருடைய மேதையும் ஊக்கமும் கிடைத்திராவிட்டால், இந்த நாட்டிலே கிரிக்கெட் வேரூன்றியிராது. அவர் இங்கிலாந்தின் கிரிக்கெட் மைதானங்களில் அருமையாய் ஆடினர். அவர் முகம் வெண்கல வர்ணமாயிருக்கும். கரிநீல ஸஸ்ஸெக்ஸ் குல்லாய் அணிந்திருப்பார். ''பட்டுச் சட்டை பளபளக்க அதன் கை மணிக்கட்டிலே பொத்தான்கள் தைத்திருக்கும். சட்டைக் கை முற்றும் நீளமா யிருக்கும். கப்பலின் பாய்மரச் சீலை காற்றிலே அசைந்து சுருண்டு நித்திய யாத்திரை புரிவதுபோல, அசைந்தாடிய படி பந்தைக் குறி பார்த்து அடிப்பார்'' - இப்படிப்பட்டவர் ரஞ்ஜி. யாரோ சொன்னதுமாதிரி, அவர் ''ஒரு சிறு ராஜ்யத்தின் ராஜ குமாரர்: ஆனல், மகத்தான விளையாட்டு ஒன்றின் மன்னர்.'' 1911-ஆம் ஆண்டிலேயே அகில இந்தியப் பிரதிநிதித்துவம் வாய்ந்த டீம் ஒன்று இங்கிலாந்தெங்கும் சுற்றுப் பிரயாணம் செய்தது. அதற்குக் காப்டனுக இருந்து நடத்தியவர் பாட்டியாலா மகாராஜாதிராஜா. அந்த டீமில் பார்ஸிகள், ஹிந்துக்கள், சீக்கியர்கள், முஸ்லிம்கள் இந்த எல்லாரும் இருந்தார்கள். பிரயாணம் அவ்வளவு வெற்றிகரமாக இல்லை. என்ருலும், பல்லோ.

மிஸ்ட்ரி, கங்கா, மேஹரோம்ஜி இவர்களைப் போன்றோரின் தனிப்பட்ட விளையாட்டைக் கண்டு பிரிட்டிஷ் ஜனக்கூட்டம் ஆரவாரம் செய்து மகிழ்ந்தது. மிகச் சிறந்த பாணியில் இவர்கள் ஆடியதாக எல்லாரும் பாராட்டினார்கள். 1889-இல் ஜி. எஃப். வெர்னன் டீமும், 1893-இல் லார்டு ஹாக் என்பவரின் டீமும், 1902-இல் ஆக்ஸ்ஃபோர்டு ஆதென்டிக்ஸ் என்ற டீமும் இந்தியாவுக்கு வந்தன. இவையெல்லாம் இந்த நாட்டிலே கிரிக்கெட் உறுதியாய் நிலைப்பட உதவின. ஸஸ்ஸெக்ஸ்-இங்கிலாந்து காப்டனை ஏ. இ. ஆர். கில்லிகான் தலைமையில் எம். ஸி. ஸி. டீம் ஒன்று முதல் முதலாக இந்தியாவுக்கு 1926-இல் வந்தது. சிறந்த முறையில் அவர் தலைமை வகித்து நடத்தியதிலிருந்துதான், இந்தியாவில் கட்டுப்பாடான முறையில் கிரிக்கெட் உருவாயிற்று. அவருடைய யோசனையின் பேரில்தான் இந்தியாவில் 1927-இல் கிரிக்கெட்டுக்கு ஒரு போர்டு அவ் கண்ட்ரோல் அமைத்தார்கள்.

இந்திய கிரிக்கெட்டின் சரித்திரத்திலேயே 1932 ஜூன் 2-ஆம் தேதி ஒரு சுபதினமாகும். சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அன்றுதான் முதல் தடவையாக இங்கிலாந்து டீமுடன் ஒரு டெஸ்ட் மாட்ச் நடைபெற்றது. இந்திய டீமுக்குக் காப்டன் ஸி.கே. நாயுடு. இங்கிலாந்து டீமுக்குக் காப்டன் டி. ஆர். ஜார்டைன். ஓர் இன்னிங்ஸ் வித்தியாசத்தில் நாம் தோல்வியுற்றது என்னவோ உண்மை. என்றாலும், நாம் நன்றாகவே போராடினோம். ''இந்தியர்களுடன் டெஸ்ட் மாட்சு ஆடியது போதாது; இன்னும் சில டெஸ்ட் மாட்சு ஆடித்தான் பார்க்க வேண்டும்'' என்று சிறந்த ஆங்கிலேயர்களே கூறினார்கள். நிஸ்ஸார், அமார் ஸிங் இரண்டு பேரும் விறுவிறுப்போடு 'போல்' செய்தார்கள்; நாயுடு மிகவும் ஸ்டைலாகப் பந்தடித்தார். வந்திருந்த அநுபவம் மிக்க ஆங்கிலக் கிரிக்கெட் நிபுணர்களே



பம்பாயில் சுதந்தர விழா நாளில் ராஜாபாய் மணிக் கூண்டு தீபாலங்காரத்தோடு ஜொலித்த காட்சி.

இவற்றைப் பார்த்துப் புகழ்ந்தார்கள். அதற்குப் பின்பு எத்தனையோ ஆட்டங்கள் நடந்துவிட்டன. சர்வதேசக் கிரிக்கெட் அரங்கிலே நாம் கீர்த்தி பெற்றுவிட்டோம். 1950-52-இல் இங்கிலாந்துடன் ஐந்து டெஸ்ட் மாட்சுகள் நடத்தினோம். அதில் கடைசியாகச் சென்னையில் நடந்த ஐந்தாவது மாட்சில் முதல் முதலாக இங்கிலாந்தைத் தோற்கடித்தோம். அது நமக்கு மிகவும் முக்கியமான வெற்றி. 1952-இல் பாகிஸ்தானுடன் ஆடிய டெஸ்ட் மாட்சுகளில் முதல் முதலாக இந்தியா ரப்பரை வென்றது. சில வருஷங்களுக்கு முன் நியூஜீலந்துடன் ஆடிய டெஸ்டுகளிலும் இந்தியாவுக்கு ரப்பர் கிடைத்தது. வெஸ்ட் இண்டீஸுடன் நம் தாயகத்திலும் அவர்களுடைய அழகான கரிபியன் தீவுகளிலும் இந்தியா ஆடியது. 1947-இல் ஆஸ்திரேலியாவுக்கு இந்திய டீம் ஒன்று சென்றது. ஆஸ்திரேலியாக்காரர்களும் சென்ற ஆண்டு இந்தியாவுக்கு வந்தார்கள்.

இந்தியாவின் பல புதல்வர்கள் அற்புதமாய் ஆடியதைக் குறிப்

பிடாவிட்டால், இந்தியக் கிரிக்கெட் வரலாறு எதுவும் பூர்த்தியாகாது. பழைய தலைமுறையைச் சேர்ந்த மிஸ்ட்ரி முதல் இன்றைய தலைமுறையைச் சேர்ந்த மன்காட் வரையில் பலர் அபூர்வமாய் ஆடியிருக்கிறார்கள். மிஸ்ட்ரி இடது கையால் மிக்க அழகாய்ப் பந்தடிப்பார். 1910 முதல் 1925-வரையில் இந்தியக் கிரிக்கெட் அவர் ராஜ்யமாயிருந்தது. மிஸ்ட்ரியின் காலத்தையே சேர்ந்தவர் பாலு. மக்கள் கூட்டத்தையும் சகாக்களையும் தமது இடது கைப் 'போலிங்' மூலம் அவர் வசீகரம் செய்துவிட்டார். இந்த நாட்களில் டாக்டர் கங்கா, பி. ஜயராம், மேஹரோம்ஜி இவர்கள் ஆடிய ஆட்டமும் மிக்க உயர் தரமானதுதான்.

அடுத்த தலைமுறையைச் சேர்ந்தவர்களில் மிக்க அற்புதமாய் ஓங்கிப் பந்தடிக்கும் ஸி. கே. நாயுடு முதன்மையானவர். தேவதர் மிகவும் லாகவமாய்ப் பக்கவாட்டில் பந்தை அடிப்பார்.

ஜய் என்பவர் ஸ்டைலான ஆட்டக்காரர். ராம்ஜி நேர்த்தியாகவும் வேகமாகவும் போல் செய்வார். வாஸிர் ஆலி, நாஸிர் ஆலி இரண்டு பேரும் ஆட்டத்தின் எல்லா அம்சங்களிலும் வல்லவர்கள். நவ்லே என்பவர் பாதரசம் போல் குடு குடு என்று ஓடி விக்கட் கீப்பிங் செய்வதைப் பார்த்தவரெல்லாம் பரவசம் அடைவார்கள். விஜய் மெர்ச்சண்ட் 1930 முதல் 1946 - வரைக்கும் இணையற்ற பாட்ஸ்மனாக விளங்கினார். அவர் அற்புதமாய் ஆடிய ஆட்டங்களின் விவரங்களையெல்லாம் குறிப்பதென்றால், அதற்கே ஒரு தனிப் புஸ்தகம் வேண்டும். அவருக்கு அடுத்தபடியாகச் சொல்லக்கூடியவர் ஹஸாரே. இவர் எந்த ஆட்டத்திலும் சோடை போகாமல் நிறைய ரன் எடுக்கக் கூடியவர். அமார்நாத் ஒரு கலைஞர். முஷ்டாக் அலி அருமையான தரத்தைச் சேர்ந்தவர். 'போலிங்' செய்வதில் நிஸ்ஸாரும், அமார் ஸிங்கும் சிறந்தவர்கள்; உலகத்தில் உள்ள வேறு எந்தப் போலருக்கும் சமமானவர்கள். தனித் தனியேயும் சரி, கூட்டுச் சேரும்போதும் சரி, இவர்கள் நேர்த்தியாய்ப் 'போல்' செய்வார்கள். இதே சமயத்தில் ராஜகுமாரர் துலீப் சிங்ஜியும், பட்டாடி நவாபும் இங்கிலாந்தின் கிரிக்கெட் வரலாற்றில் தங்கள் பெயர்களைப் பொன் எழுத்தில் பொறித்துவிட்டார்கள்.

யுத்தத்துக்குப் பிறகு, மன்காடு தான் வேறு எவரையும் விட அதிகமாய் இந்தியாவுக்குப் புகழ் தேடித் தந்திருப்பவர். இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, வெஸ்ட் இண்டீஸ், பாகிஸ்தான் இவற்றின் டீம்களை எதிர்த்து ஆடிய ஆட்டங்களில் ஆட்டத்தின் எல்லா அம்சங்களிலும் மன்காட் சிறந்த சாதனைகள் புரிந்தார். சமீபத்தில் நியூஜீலந்து டீமை எதிர்த்து ஆடியபோது டபிள் செஞ்சுரி எடுத்துப் புகழ் பெற்றார். ரோட்ஸ் என்பவரை விட்டால், மன்காட் ஒருவர்தான் டெஸ்ட் மாட்சுகளில் மொத்தம் 2,000 ரன்கள் எடுத்ததோடு, 100 விக்கட்டுகளுக்கு மேல் வீழ்த்தியவர்.

1934 - இல் ரஞ்ஜி ட்ரோஃபி சாம்பியன்ஷிப் ஆரம்பித்தது. இந்தியாவில் கிரிக்கெட் வளர உதவிய மிக முக்கியமான அம்சங்களில் இதுவும் ஒன்று. மறைந்து கிடக்கும் கிரிக்கெட் திறமைசாலிகளை ரஞ்ஜி டூர்ணமெண்டுதான் வெளிக் கொண்டு வருகிறது. இதன் மூலம் புதிய புதிய திறமைசாலிகளைக் கிரிக்கெட் போர்டார் கண்டுபிடித்து டீம்களில் சேர்த்துக்கொள்கிறார்கள்.

கடைசியாக ஒரு விஷயம்: லார்டு ஹாரிஸ் தொடங்கிச் சாதாரண ஆட்டக்காரர் வரைக்கும் எத்தனையோ ஆங்கிலேயர்கள் இந்தியாவுக்கு வந்து, இங்கே கிரிக்கெட்டை வளர்க்கப் பெரிதும் உதவி புரிந்திருக்கிறார்கள்; அந்த ஆங்கிலேயர்களுக்கெல்லாம் இந்தியா தன் வணக்கத்தைச் செலுத்திக்கொள்கிறது.

அநுபவம் மிகுந்த ஒரு பத்திரிகைக்காரர், பெருந் தலைவர் ஒருவர்பற்றி ஒரு ரசமான நிகழ்ச்சியைச் சொல்லுகிறார்.

# பிரகாசத்தின் அருங்குணம்

**'ஸாக்கா'**

1920-1930-வாக்கில் ஒத்துழையாமைக் காலத்தில் 'ஸ்வராஜ்யா' என்ற காங்கிரஸ் தினசரியில் நான் வேலை செய்துகொண்டிருந்தேன். (என் பத்திரிகையின் பெயர் அதைப் பார்த்து வைத்ததுதான்) அப்போது அதன் ஆசிரியராக இருந்த டி. பிரகாசத்துக்கும் எனக்கும் பல சமயம் சச்சரவு ஏற்பட்டிருக்கிறது. அவைகளில் மிகவும் கடுமையானது பரிபூர்ண சுதந்தரமா, டொமினியன் அந்தஸ்தா என்பதைப்பற்றிய விவாதத்தால் மூண்ட சச்சரவுதான்.

ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாஸ ஐயங்காரும் ஸ்ரீ டி. பிரகாசமும் ஒருவருக்கொருவர் சளைக்காமல் பரிபூர்ண சுதந்தரம், டொமினியன் அந்தஸ்து இவற்றால் என்ன என்ன நன்மை உண்டு என்பதுபற்றிப் போட்டி போட்டுக்கொண்டு பிரமாதமாகப் பிரசாரம் செய்துகொண்டிருந்தார்கள். ஸ்ரீநிவாஸ ஐயங்கார் பரிபூர்ண சுதந்தரக் கொள்கையை விடாப்பிடியாகக் கடைப்பிடித்துப் பிரசாரம் செய்தார். அவர் துவக்கி வைத்த பரிபூர்ண சுதந்தர லீக் என்ற ஸ்தாபனத்தின் காரியதரிசி தென்னேடி விசுவநாதம். பிரகாசமோ டொமினியன் அந்தஸ்தை உறுதியாக ஆதரித்து வந்தார். எப்போதுமே முதலில் அவர் சற்று நிதானமான போக்கில்தான் செல்வார். 'ஸெல்ஃப்-ஸ்டார்ட்டர்' இராத எஞ்சினைப் போன்றவர் அவர். யாராவது அவரை முடுக்கி விட்டால்தான் விறுவிறுப்பும் வேகமும் மூளும் அவருக்கு. எந்த முயற்சியிலும் ஆரம்பத்தில் மிகவும் மெதுவாகத்தான் ஈடுபட்டிருப்பார். பேச்சிலும் அதே மாதிரி நிதானம் தொனிக்கும். சட்டென்று ஒரு தூண்டுதல் காரணமாகவோ சூழ்நிலையில் மாறுதலினாலோ தீப்பற்றியதுபோல் அவருக்கு உணர்வு மூண்டுவிடும்; இத்தனை நாள் தாமதத்துக்கு ஈடுகட்டுவதுபோல் செயலில் பேரார்வத்துடன் ஈடுபட்டு ஒரே தாவில் மிகவும் அபாயமான இடத்தை நாடிச் செல்வார். இந்த மாதிரி தீரச் செயல்கள் புரிந்து 'ஆந்திர கேசரி' என்று பெயர் பெற்றார்.

ஆனால் நான் குறிப்பிடும் சந்தர்ப்பத்தில் அவர் முழுக்க முழுக்க நிதானப் போக்கையும் சமரசத்தையுமே கடைப்பிடித்து டொமினியன் அந்தஸ்தை ஆதரித்து வந்தார். அவருடைய தினசரியில் தலையங்கம் எழுதி வந்தேன். டொமினியன் அந்தஸ்தைப்போல் சுவையற்ற, கேட்டுக் கேட்டுப் புளித்துப்போன கொள்கையை ஆதரிக்க எனக்கு என்னவோ மனசு ஒப்பவில்லை. நான் ஸ்ரீநிவாஸ ஐயங்காரின் பிரசாரத்தைப் பாராட்டி எழுதலானேன். பிரகாசம் அப்போது அங்கங்கே சுற்றுப் பிரயாணம் செய்து வந்தார். என் கட்டுரைகளைப் படித்ததும் உடனே சென்னைக்குப் புறப்பட்டு வந்து சேர்ந்தார். என்னை வரவழைத்தார். அவருடைய கீழ் உதடு காற்றில் இலை துடிப்பதுபோல் துடித்தது. 'ஐயாவுக்குக் கோபம் எல்லை மீறிவிட்டது. அதற்கு அடையாளந்தான் இது' என்று எங்களுக்கெல்லாம் தெரியும். அவரை வந்து பார்த்தபோது இந்த நிலையில்தான் இருந்தார்.

என்மேல் துளியும் ஈவிரக்கமின்றிப் பாய்ந்தார். ''என் பின்னா

மூலம்: ஸ்வராஜ்யா (ஆங்கிலம்: 8-6-'57), சென்னை.

லிருந்து என்னை ஒரேயடியாக வெட்டிப் புதைத்துவிட்டாயே! இந்தப் பத்திரிகைக்கு ஆசிரியன் நான். அப்படித்தான் பத்திரிகையிலும் போட்டிருக்கிறது. உன்னை நம்பி இந்தப் பொறுப்பை உன்னிடம் கொடுத்துவிட்டுப் போனேன். அப்படியிருந்தும் - தினந்தோறும் 'இம்பிரிண்டி'ல் நான்தான் பத்திரிகையின் ஆசிரியன் என்று அச்சிட்டிருந்தும்-நான் டொமினியன் அந்தஸ்தை ஆதரித்துப் பேசுவதையெல்லாம் வெளியிடும் இதே பத்திரிகையில், அவைகளுக்கு எதிராகத் தலையங்கம் எழுதியிருக்கிறாயே! உனக்கு என்ன தலைக் கிறுக்கு இருக்க வேண்டும்? உன்னை நம்பியதற்கு இப்படித் துரோகம் செய்யலாமா? உன்னால் என் மானமே போயிற்றே! இனி நான் தலை நிமிரவே முடியாது'' என்று கத்தினார்.

நான் வெளியே போய் 'ஸ்வராஜ்யா' தொடங்கின அன்று வெளியான பிரதியை எடுத்துக் கொண்டு திரும்பி வந்தேன். அதில் தலையங்கம் வெளியாகும் பத்தியில் 'பிரகாசம் – ஆசிரியர்' என்று அவரே கையெழுத்திட்டு எழுதியிருந்த தலையங்கத்தைக் காட்டினேன். அதில், ''காங்கிரஸ் கொள்கையையே எப்போதும் இந்தப் பத்திரிகை கடைப்பிடித்து வரும்'' என்று ஆணை இட்டிருப்பதைப் படித்துக் காட்டினேன்: ''காங்கிரஸின் கொள்கை இப்போது பரிபூர்ண சுதந்தரமே யொழிய டொமினியன் அந்தஸ்தில்லை. நீங்கள் உங்கள் ஆணையை மீறிவிடுகிறீர்களே, நாமாவது கவனித்துச் சரியான வழியில் பத்திரிகையை நடத்தலாம் என்று பார்த்தேன். நீங்கள் ஆணையை மீறி அவமானப் படப் போகிறீர்களே, அந்த மாதிரி நேராதபடி நாமாவது பார்த்துக் கொள்ளலாம் என்றுதான் இப்படியெல்லாம் தலையங்கம் எழுதினேன், அதோடு நீங்கள் பத்திரிகையின் கொள்கை மாறிவிட்டதாகவும் எங்களுக்குத் தெரிவிக்கவில்லையே! அப்படிச் சொல்லியிருந்தாலாவது இந்த மாறுதலை ஏற்கலாம் அல்லது ஏற்கக்கூடாது என்று இரண்டில் ஒன்றைத் தீர்மானிக்க முடிந்திருக்கும். உடனே டொமினியன் அந்தஸ்து எனக்குப் பிடிக்கவில்லை என்று நேரில் உங்களிடமே சொல்லிவிட்டு வேலையை விட்டுப் போயிருப்பேன். நீங்கள் பல சந்தர்ப்பங்களில், 'உள்ளூற நமக்கு உடன்பாடில்லாத கருத்து எதையும் ஆதரித்துப் பேசக்கூடாது' என்று சொல்லியிருக்கிறீர்களே'' என்றேன்.

இதற்குப் பின் இனி எனக்குச் சீட்டுக் கொடுத்துவிடுவார் என்று எண்ணிக்கொண்டு மீதியிருந்த அலுவல்களைக் கவனித்துவிட்டு மாலை ஆபீஸை விட்டு மூட்டை கட்டத் தயாரானேன். மாலை 4 மணி இருக்கும். ஆசிரியர் பிரகாசம் என்னை உள்ளே வரச் சொல்லி ஆள் அனுப்பினார். நான் போனதும் என் கையைப் பிடித்துக் குலுக்கி, சற்றுக் கரகரப்பும் அன்பும் குரலில் தோன்ற, (இந்த மாதிரி சுபாவந்தான் அவரிடம் வேலை பார்ப்பவர்களுக்குப் பெரிய நிதி கிடைத்தமாதிரி அவ்வளவு உற்சாகம் தந்தது) ''சரி, அப்பா, உன் இஷ்டப்படியே எழுது. நான் டொமினியன் அந்தஸ்துக்கு இதோ கை கழுவிவிட்டேன்'' என்றார். அப்புறம் அவர் டொமினியன் அந்தஸ்தை ஆதரிக்கவேயில்லை. அதோடு இந்தச் சர்ச்சை திடீரென்று ஒரு முடிவுக்கு வந்தது. எப்போதும் ஆரம்பத்தில் ஸ்ரீ பிரகாசம் தம் கொள்கையை எதிர்த்து யாராவது பேசினால் பொறுக்க மாட்டார்; அதை ஏற்கவும் மாட்டார். அப்போது மிகவும் பிடிவாதமாக இருப்பதுபோலத் தான் தோன்றும், அவரைப் பார்த்தால். நினைத்த மாத்திரத்தில் அதிகார தோரணையில் சில விஷயங்களை உடனே தீர்மானித்துவிடுவார். இருந்தாலும் அதுதான் இறுதியானது என்று சொல்வதற்கில்லை. தமக்கு எதிராக யாராவது வாதித்தால் அதை ஏற்காவிட்டாலும் திரும்பத் திரும்ப அதைப்பற்றியே அலசி ஆராய்ந்துகொண்டிருப்பார். அது சரி என்று பட்டதோ, உடனே சற்றும் தயங்காமல் பழைய பிடிவாதத்தை விட்டுவிடுவார்; தம்

கருத்தை மாற்றிக்கொண்டு விடுவார். தாம் முதலில் செய்தது தவறு என்று உள்ளூற வருந்துவார்.

தாம் முதலாளி என்று பெருமை பாராட்டிக்கொள்ளும் சுபாவமே அவரிடம் இல்லை. நேர்மையாகவும் தகுதியோடும் யாரேனும் ஒரு காரியம் செய்திருக்கிறார் என்று அவருக்குப் பட்டுவிட்டால் என்றும் மறக்க முடியாதபடி அவ்வளவு அருமையான முறையில் அந்த மனுஷரைப் பாராட்டுவார். ஒரு சமயம் சென்னையிலே காஸ்மாபாலிட்டன் கிளப்பில் 'ஸ்வராஜ்யா' சார்பில் ஒரு விருந்து வைத்தார். நம் நாட்டின் மாபெருந் தலைவர்களெல்லாம் அதில் கலந்துகொண்டார்கள். அந்தப் பெரியவர்கள் எதிரே நான் எம்மாத்திரம்! துடை நடுங்கிச் சோனிப் பயல் என்றுதான் என்னைச் சொல்லிக்கொள்ள வேண்டும். அப்போது தொலைவில் ஒரு மூலையில் நான் நின்றுகொண்டிருந்தேன். ஸ்ரீ பிரகாசம் கை ஜாடை செய்து அழைத்தார். தம் அருகில் அமர்ந்திருந்த விட்டல்பாயி படேலைப் பார்த்து (என்னைச் சுட்டிக்காட்டி), ''அந்தப் பயல்தான் முக்கால்வாசிக் காரியத்தையும் கவனித்துக்கொள்கிறான். ஒப்புக்கு என் பெயரைப் பேப்பரில் போட்டிருக்கிறது; அவ்வளவுதான்'' என்றார். பெரிய படேல் (வல்லபபாயி படேலின் தமையனார் விட்டல்பாயி) அப்போது மத்திய சட்ட சபையின் தலைவர். அந்தச் சமயம் அவர் புகழ் உச்சத்தில் இருந்தது. என்னைப் பார்த்து அவர், ''என்ன தம்பி, உன் விஷயத்தில் பிரகாசம் அதிகமாகத் தலையிடுவதில்லையே? சர்வ சுதந்தரமாக நடந்துகொள்ளும்படிதானே விட்டிருக்கிறார்?'' என்று விசாரித்தார். உடனே பிரகாசம், ''என்ன விட்டல்பாயி! என்ன இப்படிப் பேசுகிறீர்கள், விஷயம் புரியாமல்! இவன் எனக்குச் சற்றே சுதந்தரம் கொடுத்தால் போதாதா; அப்படி இருக்கிறது நிலைமை!'' என்றார். எல்லாரும் கொல்லென்று சிரித்தார்கள்.

சமீபத்தில் ஆந்திரகேசரியின் மறைவைக் குறித்து நடந்த ஓர் அநுதாபக் கூட்டத்தில் நான் பேசினதன் சுருக்கம் இது: அங்கே வந்திருந்த சில நண்பர்களும் வராத சிலரும் கேட்டுக்கொண்டதால் இங்கே குறிப்பிடுகிறேன். பத்திரிகையில் என் பெயர் வர வேண்டும் என்ற ஆசையோ பெருமையோ இனி எனக்குத் தேவையில்லை. ஆகவே, தினசரி நிருபர்களுக்கும் அவர்கள் தரும் செய்திகளைக் கண்காணிக்கும் உதவி ஆசிரியர்களுக்கும் ஒரு சிறு யுக்தி சொல்லி வைக்கிறேன். ''சும்மா ஆடம்பரப் பேர் வழிகளையும் அர்த்தமற்ற பேச்சுக்களையும் பிரமாதமாக எண்ணிக்கொண்டு, ரசமான நல்ல விஷயத்தை மறந்துவிடாதீர்கள். அதுவும், பொது மக்களுக்குப் பிரியமான பெரியவர்கள் யாராவது இறந்து அவர்களைப் பற்றிய வாழ்க்கை வரலாற்றுத் துணுக்குகள் கிடைத்தால், அவற்றை நழுவ விடாதீர்கள்.''

## தோல்விக்கு வழி

நான் உங்கள் வெற்றிக்கு வழி சொல்லித் தர முடியாது; ஆனல் தோல்விக்கு வழி சொல்லித் தர முடியும்; எல்லாரையும் திருப்தி செய்ய முயலுங்கள்.

—ஹெர்பர்ட் பி. ஸ்லோப்

## எல்லாம் பெறலாம்

ஆரோக்கியம் உள்ளவனுக்கு நம்பிக்கை உண்டு; நம்பிக்கை உள்ளவனுக்கு எல்லாம் உண்டு.

—அராபியப் பழமொழி

தென்னிந்தியாவிலேயே கோடை வாசத்துக்கு மிகச் சிறந்த ஊர் -

# கோடைக்கானல்

## என். ராமகிருஷ்ணு

தெற்கே கோடைக்காலத்துக்கு ஏற்ற சுகவாசஸ்தலம் உதகமண்டலம் என்று எல்லாருக்கும் தெரியும். இதைத் தவிர இன்னும் ஒரு சுகவாசஸ்தலமும் தெற்கே உண்டு; உதகமண்டலத்துக்கு இது எந்த விதத்திலும் தாழ்ந்ததில்லை. மதுரை ஜில்லாவில் உள்ள கோடைக்கானல் மலைதான் இந்தமாதிரி அருமையான சீதோஷ்ண நிலை கொண்ட இடம். மலையில் ரெயில்பாதை ஏதும் இரா விட்டாலும் காரிலும் பஸ்ஸிலும் சுலபமாக மலை உச்சிக்குச் சென்று வர அழகான பாட்டை ஒன்று இருக்கிறது. ரெயில் வண்டி கோடைக்கானல் ரெயில்வே ஸ்டேஷனில் நிற்கிறது. அங்கிருந்து மலை ஏறச் சத்தத்துக்குப் பல வண்டிகள் கிடைக்கும். அங்கிருந்து 50 மைல் செல்ல வேண்டும். இதில் மலை ரஸ்தாவே 30 மைல் நீளத்துக்கு இருக்கும். இப்படி மலையில் 7,000 அடி உயரத்துக்குப் போய்ச் சேருவோம்.



இயற்கைக் காட்சி



பாதை

பழனி மலைத்தொடரில் முக்கியமான ஊர் கோடைக்கானல். மதுரை ஜில்லாவிலும் இந்த மலைத் தொடர் 50 மைலுக்குப் பரவியிருக்கிறது. இந்தத் தொடரில் உள்ள சில மலைகளின் உச்சி கடல் மட்டத்தைவிட 8,000 அடி உயரம் இருக்கும். சுமார் 100 சதுர மைல் பரப்புள்ள பீடபூமியைச் சுற்றி வளைத்திருப்பது போல் இந்தத் தொடர் அமைந்திருக்கிறது. இந்தப் பீடபூமியில்தான் ஆரோக்கிய ஸ்தலமாக விளங்குகிறது கோடைக்கானல். இதன் சீதோஷ்ண நிலை ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் வெகு ரம்மியமாக இருக்கிறது. இருந்தாலும் ஜூன் மாதம் பாதிக்குமேல் மழை பெய்யத் தொடங்கும்போது இங்கிருந்து மக்கள் திரும்பி வந்துவிடுவார்கள். செப்டம்பர் மாதம் பருவநிலை மீண்டும் ரம்மியமாக இருக்கும்.

இங்கே வருவோரின் கண்ணையும் கருத்தையும் மிகுதியாகக் கவருவது கோடைக்கானல் ஏரியின் அழகிய காட்சிதான். மூன்று மைலுக்கு

காப்பிரைட்: ஸௌத்ரெயில் ந்யூஸ் (ஆங்கிலம்: மே '57), சென்னை-2.

இரு புறமும் மரங்கள் அருகருகே நட்டு அழகாக விளங்கும் பாட்டை. படகில் செல்லுவதுதான் இங்கே முக்கியமான பொழுது போக்கு. நூற்றுக்கணக்கில் படகுகளைப் பகல் நேரத்தில் இதில் ஓட்டிச் செல்வதைப் பார்க்கலாம். இந்த ஏரியைச் சுற்றி மலைச்சரிவில் சின்னஞ்சிறு கட்டிடங்கள் கண்ணைக் கவரும்படி அமைந்திருப்பதையும் காணலாம். கோடைக்காலத்தில் வெயில் பளிச்சென்று காய்ந்தாலும் குளுகுளு என்று இருக்கும்.

எத்தனையோ அருவிகளும் இங்கே உண்டு. இவைகளில் முக்கியமானவை 'பேர் ஷோலா ஃபால்ஸ்' என்ற அருவி, 'ஃபெய்ரி ஃபால்ஸ்' என்ற தேவதை அருவி, 'ஸில்வர் காஸ்கேட்' என்னும் வெள்ளியருவி. வெள்ளியருவிதான் இவைகளில் மிகவும் அழகானது; ஊரிலிருந்து 5 மைல் தூரத்தில் இருக்கிறது இது. 'பேர் ஷோலா ஃபால்ஸ்' இவைகளில் நடுவே - ஊரின் மத்தியில் - இருப்பது; மேலே 50 அடியிலிருந்துதான் விழுகிறது என்றாலும் ரம்மியமான காட்சி.

'கோக்கர்ஸ் வாக்' என்ற நடைப்பாதையிலிருந்து சுற்றிலுமுள்ள நிலப் பரப்பைக் காணலாம்; பல நிறப் பாறைகளும் வானத்தில் மிதக்கும் மேகங்களும் சேர்ந்து பின்னும் அழகூட்டுகின்றன. சற்றுக் கூர்ந்து கவனித்தால் மதுரை நகரத்தின் வழியாகப் பாயும் வைகை ஆறும், மதுரைக் கோயில் கோபுரங்களும் ஒருவாறு தெரியும்; பைனுகுலர் மூலம் பார்த்தால் தெளிவாகத் தெரியும். 'கோக்கர்ஸ் வாக்' என்ற நடைப்பாதையிலிருந்து கீழே கவனித்தால் ஆயிரம் அடி ஆழத்தில் இருக்கிறது தரை. உடனே அப்படியே மூச்சு நின்றுவிடுவது போல் அயர்ந்துவிடுவோம்.

செங்குத்தான ஒரு பாட்டை வழியாக ஸோலார் ஃபிஸிக்ஸ் ஆப்ஸர்வேட்டரி என்ற வான ஆராய்ச்சிச் சாலைக்குப் போய்ச் சேரலாம். 8,000 அடி உயரத்தில் இருப்பதால் வானத்தில் எல்லாம் தெளிவாகத் தெரியும்



ஏரிகரை



குன்றுகள்



அருவி

படி அமைந்திருக்கிறது இந்த இடம். இங்கே நடக்கும் ஆராய்ச்சிகள் மிகவும் முக்கியமானவை. வெள்ளிக்கிழமைகளில் இங்கே உள்ள ஆராய்ச்சிக் கருவிகளை யெல்லாம் பார்க்க அநுமதிக்கிறார்கள். இங்கிருந்து சற்று அருகிலேயே ஒரு குளம் இருக்கிறது. அதன் நீர் பளிங்குபோல் தெளிவாக இருக்கிறது. விலங்குகள் எதுவும் நீரை அண்டாதபடி சுற்றிலும் வேலி போட்டிருக்கிறார்கள். இந்த நீரைத்தான் குழாய்கள் மூலம் கோடைக்கானலுக்குக் கொண்டு வருகிறார்கள். 'ஃபெய்ரி ஃபால்ஸ்' (தேவதை அருவி) அருகில் இருக்கிறது இந்தக் குளம். கோல்ஃப் மைதானம், தூண் மலை, பெருமாள் மலை இவைகளும் பார்க்க வேண்டிய இடங்களே.

செழுமைக்குப் பெயர் போனது கோடைக்கானல். இங்கே இங்கிலீஷ் காய்கறிகள் ஏராளமாய்ப் பயிராகின்றன. தாவரங்களில் பல தினுசுகள் இங்கே கிடைக்கின்றன. அவைகளை நாடித் தாவரநூல் அறிஞர்கள் பலர் இங்கே வருவது வழக்கம். இங்கே உள்ள பெரிஜாம் ஏரி வனபோஜனத்துக்கு ஏற்றது. கோடைக்கானலிலிருந்து அடர்ந்த காடுகளின் வழியே இங்கே சென்று வர ஒரு பாட்டை இருக்கிறது.

மலர்களுக்கும் ஒட்டுப் பூஞ்செடிகளுக்கும் பெயர்போனது கோடைக்கானல். பலவகை நிறங்களில் ரோஜாக்களைப் பயிரிடுவது இங்குள்ள விசேஷமாகும். பிரயண்ட் பார்க் என்ற பூங்காவில் இன்பமாகப் பொழுதுபோக்கலாம்.

காலையில் சிற்றுண்டி ஆனதும் இந்த இடங்களைப் போய்ப் பார்த்து விட்டு, பகல் உணவுக்கு எல்லாரும் திரும்பி வருவார்கள். பிறகு மறுபடியும் புறப்பட்டு அங்கங்கே சுற்றிப் பார்த்துவிட்டு 5 மணிக்கெல்லாம் திரும்புவார்கள். அப்புறம் பனி பெய்வதால் குளிர் நடுக்கும். பனி என்றால் மூடுபனியே தவிர 'ஸ்நோ' என்ற மொத்தைப் பனியையோ, நீரோடைகள் உறைந்துபோவதையோ இங்கே காண முடியாது; ஆனால் காலையில் பனி மூடிக் குளிர் கடுமையாக இருக்கும். இங்கே வருவோருக்கு வசதியாகப் பல ஹோட்டல்கள் உண்டு. ஆயினும், இவை சாதாரண நடுத்தர வகுப்பினர் இருந்து சமாளிக்கும் அளவுக்கு எளிமையாக அமையவில்லை. இங்கே தங்குவதென்றால் ஏராளமாகச் செலவாகும். 'ஹாலிடே ஹோம்' (விடுமுறை இல்லம்) என்ற சாப்பாட்டு விடுதி மொத்தத்தில் பலருக்கும் வசதியாக அமைந்த இடம்.

## சுதந்தர வோட்டுரிமை

தென் அமெரிக்காவில் ஒரு தேர்தல் நடந்தது. போலீஸ் தலைமை அதிகாரியின் முன்னிலையில் வோட்டை எண்ணினார்கள்.

விழுந்த வோட்டெல்லாம் சர்க்கார் கட்சிக்கே சாதகமாய் இருந்தன. வெகுநேரம் கழித்து ஒரு வோட் எதிர்க்கட்சிக்கு விழுந்திருந்தது.

''பார்த்தீர்களா எதிர்க்கட்சியினர் சுதந்தரமாய் வோட்டுப் போடலாம் என்பதற்கு இதுவே அத்தாட்சி'' என்றார் போலீஸ் தலைமை அதிகாரி.

அப்புறம் வெகுநேரம் கழித்து இன்னொரு வோட் எதிர்க்கட்சிக்குச் சாதகமாக இருந்தது.

போலீஸ் அதிகாரி எரிச்சலுடன், ''திருட்டுப் பயல், ஒரே ஆள் இரண்டு தடவை வோட் செய்திருக்கிறான். இது செல்லாது; இதை ரத்து செய்து விடுகிறேன்'' என்றார்.

—'பொஹீமியா', ஹவானா.

# என்னைக் கேளுங்கள்

கார்ப்டன் என். சேஷாத்திரிநாதன்

**வைத்தியம், சுகாதாரம், ஆரோக்கியம் இவைபற்றி 'மஞ்சரி' வாசகர்கள் கேட்கும் கேள்விகளுக்கு இயன்றமட்டும் பதிலளிக்க இந்த டாக்டர் இசைந்திருக்கிறார். இவர் வைத்தியத் துறையில் கல்வியும் அநுபவமும் நிறைந்தவர்; ரத்த பரிசோதனை நிபுணர்; கிண்டி இன்ஸ்டிட்யூட் அதிகாரியாக இருந்தவர். நோயுள்ளவரின் தனித்தனி நிலையை நேரில் கவனித்தே டாக்டர் வைத்தியம் செய்ய வேண்டும். ஆகவே, இதில் வரும் பதில்களைப் பொதுவாகக் கொள்ளலாமே தவிர, வைத்தியமே இவற்றைக் கொண்டு செய்துகொள்ளலாம் என்று நண்பர்கள் நினைக்கக் கூடாது.**

அ. திருவேங்கடம்,
விருத்தாசலம்.

கேள்வி-1: என் நண்பர் தூங்கும் போது கால்களை ஆட்டிக் கொண்டே இருக்கிறார். என்ன காரணம்? என்ன பரிகாரம்?

விடை: இவர் பகலில் சும்மா உட்கார்ந்திருக்கும்போது காலை ஆட்டிக்கொண்டிருக்கும் பழக்கத்துக்கு வசமாகியிருக்கவேண்டும். இந்தப் பழக்கம் கனவிலும் ஏற்பட்டிருக்கலாம்.

கே-2: நான் நினைக்காத சில காட்சிகள் கனவில் தோன்றக் காரணம் என்ன?

வி: இந்தக் காட்சிகள் நினைக்காதவையாயிருந்தாலும், பார்த்திராத காட்சியாக இருக்கமாட்டா. விழித்திருக்கும் காலத்தில் செய்யத்தகாத காரியங்களைக் கனவில் செய்து திருப்தி அடைவது இயல்பு. நண்பர் விஷயத்தில் காரணம் அறிய உள வைத்திய நிபுணர்களுடைய உதவியை நாடவேண்டும்.

மு. சாமிக்கண்ணு,
பெரியபாளையம்.

கே: என் இரண்டு கண்களிலும் பீளை பொங்கிவருகிறது. மீண்டும் மீண்டும் கண்ணில் கிறுக்கட்டி வருகிறது. இரவில் வெளிச்சத்தைப் பார்த்தால் கண்ணீர் வடிகிறது. உடம்பு தேறவில்லை.

வி: கண் இமை விளும்பில் சீழ்க்கட்டி ஒரு தடவை ஆரம்பித்தால், பிறகு தொடர்ந்து மேலும் மேலும் வந்துகொண்டே இருக்கும். கைகொண்டும் துணிகொண்டும் கண்ணைத் துடைக்கும்போது, சீழ்க் கிருமிகளை இமை விளும்பில் பரப்பிக்கொண்டுதான் இருப்போம். அதனால் கட்டிகள் புதிதாய்த் தோன்றிக்கொண்டே இருக்கும். கண் இமை விளிம்பில் கட்டி தோன்றுவது கண் பார்வைக்குத் தடையாகும். அதனாலேயே கண்ணீர் வழியலாம்.

நாராயணன், மதுரை.

கே: வைட்டமின் சத்துக்களுக்கும் கருத் தரிப்பதற்கும் ஏதாவது தொடர்பு உண்டா?

வி: வைட்டமின் இ-என்று ஒரு வகை இருக்கிறது. இது முக்கிய



மாய்க் கோதுமை முளையில் இருக்கும் ஒரு வகைத் தைலம். எலிகளின் கருவளர்ச்சிக்கும் கருத் தரிப்புக்குமே இது அவசியம். ஆனால் இதுவரைக்கும் மனித வர்க்கத்துக்கு இது பயன்பட்டதாகத் தோன்றவில்லை. என்றாலும், மனிதர்களுக்கும் மலடு நீங்கவும் கருகலைவதைத் தடுக்கவும் இந்த வைட்டமினை வைத்தியர்கள் மருந்தாகக் கொடுத்துப் பார்க்கிறார்கள். வளரும் கருவுக்கு வைட்டமின் ஏ. பி. டி. மூன்றும் மிக முக்கியம்.

**காந்திமதியம்மை,**
**திருநெல்வேலி.**

கே–1: முகத்தில் உள்ள வைசூரி வடுக்களை நீக்க உபாயம் உண்டா?

வி: வைசூரி வடுக்களை நீக்க நுட்பமான ஆப்பரேஷன்களை அமெரிக்காவில் செய்கிறார்களாம். ஆனால் அவை வெற்றி தருவதாய்த் தெரியவில்லை.

கே–2: இருபது வயசுப் பெண்ணின் உயரமும் எடையும் எவ்வளவு இருக்கவேண்டும்?

வி: இருபது வயசுப் பெண் நம் நாட்டில் சுமார் நூறு பவுண்டு முதல் நூற்றிருபது பவுண்டு நிறை இருக்கலாம். உயரம் எவ்வளவு இருக்கவேண்டும் என்று குறிப்பாய்ச் சொல்ல இயலாது. சாதாரணமாக ஐந்து அடி உயரம் இருக்கலாம்.

கே-3: எடையைக் குறைக்க இஞ்செக்ஷன் செய்துகொள்ளலாமா?

வி: எடை குறைப்பதற்கு இஞ்செக்ஷன் வைத்தியம் ஒன்றுமில்லை என்று நினைக்கிறேன். உடம்பைச் சோற்றுப் பையாக்காமல் உழைப்புக்கு ஏற்றபடி ஆகாரம் குறைத்துச் சாப்பிட்டால் எடை குறையலாம்.

**எம். எஸ். சீனிவாசன், சென்னை.**

கே: நம் நாட்டில் புரொட்டீன் குறையால் குழந்தைகள் நோய்க்கு வசமாகின்றன என்கிறார்களே; எந்த வகைப் புரொட்டீன் குழந்தைகளுக்கு உகந்தது?

வி: கைக்குழந்தைகளுக்குத் தாய்ப்பால் மூலமாய்த்தான் புரொட்டீன் கிடைக்கவேண்டும். ஆகவே, தாய்க்குப் புரொட்டீன் அதிகம் கிடைக்கத் தக்க உணவான பாலையும் பால் வகையையும் அதிகம் கொடுக்கவேண்டும். தாய்ப்பால் மறக்கும் காலத்தில் ஏழைக் குழந்தைகளுக்குப் பால் கிடைப்பதில்லை. இதனாலே புரொட்டீன் குறை ஏற்படுகிறது.

**ரங்கசாமி, டெல்லி.**

கே: மஞ்சள் காமாலை எப்படிப் பரவுகிறது? அது வராமல் தடுக்க என்ன செய்யலாம்?

வி: வைரஸ் என்னும் ஒரு வகை அணுக் கிருமியால் மஞ்சள் காமாலை உண்டாகிறது. எச்சில், சிறுநீர், மலம் முதலிய கழிவுப்பொருள் வழியாகப் பரவுகிறது. நோயாளியின் உமிழ்நீர்த் துளிகள் நம் தொண்டையில் வந்து சேராமல் தடுத்துக்கொள்ள வேண்டும். சிறுநீர், மலம் போன்றவற்றிலிருந்து கிருமிகளை ஈக்கள் ஏற்று நம் உணவில் கொண்டுவந்து சேர்க்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இந்தமாதிரி தடுப்பு முறைகள்தான் பாதுகாப்பாகும்.

**ஆர். லோகநாதன், திருச்சி.**

கே-1: பரீட்சையில் விடைகளை முழுவதும் எழுத முடியாமல் போகிறது. காரணம், என் கையெழுத்து வேகமாய் இராததே. எழுத்து ஆரம்பப்பள்ளிப் பிள்ளை



யின் எழுத்துப்போல் இருக்கிறது. வேகமாய் எழுதப் பழக்கிக் கொள்ளப் பார்த்தேன். அதில் வெற்றி இல்லை. வைத்திய ரீதியில் ஏதாவது உபாயம் கூற முடியுமா?

வி: ஓய்வு கிடைத்த வேளையெல்லாம் எழுதிப் பழகுவதே இதற்குப் பரிகாரம்.

கே-2: நான் கண்ணுக்குக் கண்ணாடி போட்டுச் சுமார் ஓர் ஆண்டு ஆகிறது. வலது கண்ணில் மைனஸ் 1; இடது கண்ணில் மைனஸ் ·75. ஒரு மணி நேரத்துக்குமேல் சேர்ந்தாற்போல் எழுதினால், பின்பு இரண்டு அல்லது மூன்று மணி நேரம் ஓர் அடிக்கு அப்பால் உள்ள பொருள்கள் தெளிவாகத் தெரியவில்லை.

வி: கண்ணுக்கு ஏற்பட்டிருக்கும் பார்வைக்குறை அதிகமில்லை. ஒரு மணி நேரம் படித்த பிறகு கிட்டப் பார்வை (ஷார்ட் ஸைட்) அதிகமாகக் காரணமில்லை. உடம்பில் வலிமை குறைவதால் இப்படி ஏற்படக்கூடும். தேகப்பயிற்சியும் அதிகமான அளவு வைட்டமின் ஏ-யும் சாப்பிட்டால் குணம் அடையலாம்.

**த. ஆறுமுகம், சென்னை.**

கே: வயசு 20. மார்பு வீங்கி ஆறு ஆண்டுகள் ஆகின்றன. என்ன காரணம்? இது ஒரு வியாதியா? இதற்குப் பரிகாரம் கிடைக்கவில்லையானால், உயிருக்கு அபாயம் உண்டா?

வி: தாம் 'மஞ்சரி'யின் சந்தாதார் இல்லை என்று கடிதத்தில் இவர் எழுதியிருக்கிறார். சந்தாதாராயிருந்திருந்தால் இதற்கு முன் இந்தக் கேள்விக்கு விடை தெரிந்துகொண்டிருப்பார். இந்த வயசில் இந்த மாதிரி தோற்றம் ஏற்படுவது இயல்பே. இன்னும் இரண்டோர் ஆண்டுகளில் மறைந்து போகும். இதற்குக் காரணம் வாலிபப் பருவம் ஆரம்பிக்கும்போது, உடம்பில் பலவகை அகச் சுரப்பிகள் (கிளாண்ட்ஸ்) அதிகமாய்ச் சுரக்கும். இந்த வகைச் சுரப்புக்களில் ஒன்று மார்பைச் சற்றுப் பருக்கச் செய்யும்.

**சந்திரன், இலங்கை.**

கே-1: நாம் நெட்டி முரிக்கும்போது சப்தம் உண்டாவதேன்? அதனால் தீமையுண்டா?



வி: நெட்டி முரிக்கும்போது கீல்களில் எலும்புகள் சற்று நழுவி விட்டுச் சரியாகிவிடும். இதனால் தீமையொன்றும் இல்லை.

கே-2: வயசு இருபது; எடை 85 பவுண்டு. உயரம் 5 அடி. வயசுக்கேற்ற எடை பெற என்ன செய்யவேண்டும்? தேகத்தில் அலுப்பு. இதற்கு என்ன செய்ய வேண்டும்?

வி: இருபது வயசுக்கு 85 பவுண்டு எடை மிகவும் குறைவுதான். அதிகம் ஆக்கிக்கொள்ளப் பசியை அதிகம் எழுப்பிக்கொள்ள வேண்டும். பசியை எழுப்பிக்கொள்ளத் தேக உழைப்பு வேண்டும். பால் வகை அதிகம் சாப்பிட்டால் அலுப்புத் தீரும்.

**துரைசாமி, புதுப்பாளையம்.**

கே-1: காபி, டீ இந்த இரண்டிலும் எதில் விஷச்சத்து அதிகம்?

வி: டீயில்தான் விஷச்சத்து அதிகம். ஆனால் டீயைத் தயார் செய்யும்போது ஜாக்கிரதையாயிருந்தால் விஷச்சத்து டீ பானத்தில் இறங்காது.

கே-2: காபி அருந்துவது நல்லதா? டீ அருந்துவது நல்லதா?

வி: விஷச்சத்து உள்ள பொருள் எதுவானால் என்ன? அதை அருந்துவது நல்லது என்று எப்படிச் சொல்வது? ஆனாலும், பொதுவாக ஒன்று சொல்லலாம்: காபியையும் டீயையும் பக்குவமான முறையிலே தயார் செய்து மிதமான அளவிலே அருந்துவதால் அதிகக் கேடு விளையாது.

**நா. பாலாஜி, திருப்பத்தூர்.**

கே: பாலைப்பற்றிய கேள்விக்கு விடை அளிக்கையில், நம் நாட்டில் மாடுகள் க்ஷயரோகத்துக்கு வசமாவது மிகக் குறைவு என்கிறீர்கள். ஆயிரத்துக்கு ஒன்று விகிதம் மாடுகளை க்ஷயரோகம் பீடிப்பதாக வைத்துக்கொள்வோம். அப்படிப்பட்ட ஒரு நோஞ்சல் மாட்டுப் பாலை எத்தனை பேர் சாப்பிடுவார்கள்? அவர்களுக்கு உண்டாகிற அந்த நோய் அவர்கள் மூலம் இன்னும் எத்தனை பேருக்குப் பரவும்? இதை அறிந்துதான் உலக முழுவதும் 'பாஸ்சுரைசேஷன்' முறையில் பாலைச் சுத்தம் செய்து விடுகிறார்கள். இல்லையா?

வி: நண்பர் சொல்லுவது உண்மை. ஆனால் நம் நாட்டில் பாலைக் காய்ச்சாமல் குடிக்கும் பழக்கம் இல்லை என்றே சொல்லலாம். கறந்த பாலை அப்படியே குடிப்பவர்கள் மிகவும் குறைவு. இதுவரைக்கும் நம் நாட்டில் க்ஷயரோக நோயாளியிடமிருந்து மாட்டுக்குத் தாவிய க்ஷயரோகக் கிருமியை யாரும் தேடி எடுத்ததாகத் தெரியவில்லை.

**கோதண்டராமன், சென்னை.**

கே: இன்ஃப்ளுயென்சா ஜுரம் வராமல் தடுக்க வழி உண்டா?

வி: இன்ஃப்ளுயென்சா ஜுரத்தைத் தடுக்க நூறு டாக்டர்கள் கூட்டமாய் 'ரஜுலா' கப்பலுக்குள் சென்றார்கள். திரும்பி வரும்போது இவர்களே ஜுரத்தை வாங்கிக்கொண்டு வந்தார்கள். உலக சுகாதார ஸ்தாபனம், 'இன்ஃப்ளுயென்சாவைத் தடுக்க உபாயம் எதையும் இதுவரைக்கும் யாரும் கண்டு பிடிக்கவில்லை' என்று கூறுகிறது இதற்கு உதவக் கூடிய ஒரு வாக்ஸின் தயாரிக்கும் முறை இன்னும் ஆராய்ச்சி நிலையிலேயே நிற்கிறது. கூட்டங்கள் சேரும் இடங்களுக்குச் செல்லாமலிருப்பது இன்ஃப்ளுயென்சா வராது தற்காத்துக்கொள்ள நல்ல வழியாகும்.

**கோவிந்தராஜன், பொன்மலை.**

கே: ஓவல்டின், நெஸ்ட்ரோமால்ட், ஹார்லிக்ஸ் இவையெல்லாம் மலச்சிக்கலை உண்டாக்குமா? அதிகரிக்குமா? நான் எழுதும்போது கை நடுங்குகிறது. மலச்சிக்கலால் பசி எடுப்பதில்லை. வைத்திய பரிசோதனை செய்து கொண்டதில் 'ஆர்கானிக் கோளாறு ஒன்றுமில்லை; ந்யுரோஸிஸ்தான்' என்கிறார்கள். வயசு 30. தேன் அருந்துவது மலச்சிக்கலை நீக்குமா?

வி: மலச்சிக்கலுக்கு விசேஷ ஆகாரத்தின் மூலம் பரிகாரம் தேடுவது சரி அல்ல. தேகப் பயிற்சி முக்கியம். ஆகாரத்தில் காய்கறி, கீரை, கனிகள் இவற்றை நிறையச் சேர்த்துக்கொள்ள வேண்டும். ஹார்லிக்ஸ், ஓவல்டின், நெஸ்ட்ரொமால்ட் போன்ற விசேஷ ஆகாரங்களை நம்புவது வீண். தேனும் ஓரளவு சிக்கலை நீக்கலாம்.

**சுந்தரம், கல்கத்தா.**

கே: வயசு 23. சோர்வு, நீடித்த மலச்சிக்கல் இவற்றால் வருந்துகிறேன். மாவு உளுத்தால் தென்படும் புழுக்களைப் போன்ற உடல் அமைப்பும், முழு வளர்ச்சி அடைந்த சிற்றெறும்பின் அளவும் கொண்ட ஒரு விதப் புழுக்கள் மலத்திலிருந்து சில சமயம் நிறைந்த எண்ணிக்கையில் வெளிப்படுகின்றன. வயிற்றில் இருக்கும் இந்தப் புழுக்களைக் கொல்லவும் உடம்பைத் தேற்றவும் என்ன செய்யலாம்?

வி: இந்தப் புழுக்களே சோர்வுக்குக் காரணமாயிருக்கலாம். ஆனால் இவை புழுக்கள்தானா? அல்லது இறுகிய சளி குடல் ஜவ்விலிருந்து வெளியாகிறதா? இந்த விஷயத்தை அறிய வைத்திய நிபுணர் நேரடியாகப் பரிசீலனை செய்யவேண்டும். நண்பரின் உடம்பையும் வைத்தியரிடம் நேரடியாகக் காட்டுவது அவசியம்.

# புரட்சிக் கவிஞன்

## பெங் சூயே பெங்



ஒரு நாள் பிற்பகல் வெப்பமும் புழுக்கமும் மிகுந்திருந்தன. வெகு தொலைவில் கேட்ட இடி முழக்கமும் கொஞ்சங் கொஞ்சமாக நெருங்கி நெருங்கி வந்தது. கன்னங்கரிய மேகங்கள் அடிவானத்திலிருந்து எழுந்து பரவி அடுக்கடுக்காகக் குவிந்தன. புயல் வரப் போகிறது என்பதற்கான அறிகுறிகள் எல்லாம் தோன்றின.

ஒரு மரத்திலிருந்த சிலந்திப் பூச்சி, தன் கூட்டின்மீது நின்றுகொண்டு, புயலை விரும்பி அழைக்கிற கவிஞன் போலவோ புயலின் தீர்க்கதரிசி போலவோ நடிக்க ஆசைப்பட்டது. உடனே, “நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் புயலின் காலம் வந்துவிட்டது! மின்னுகின்ற பாம்புபோன்ற மின்னலே, பளிச்சிடு! பயங்கரமான இடியே, முழங்கு! காற்றே, மழையே, விரைவில் வாருங்கள்! பெரும் புயல் அடித்தால் பெரிதும் நல்லது’’ என்று சொல்லிற்று.

புயல் வந்தது. அப்போது பார்க்க வேண்டுமே சிலந்திப் பூச்சியை. பயத்தினால் அது நடுநடுங்கி விட்டது. பெருங் காற்றினால் தாறுமாறாக அலைபட்டு மூர்ச்சை அடைந்துவிட்டது.

இவ்வளவுக்கும் பிறகுதான் சிலந்திப் பூச்சி தன் கண்ணைத் திறந்து மரத்தைப் பார்த்தது. ‘‘இப்போது மணி என்ன?’’ என்று கேட்டது.

உடனே மரம் அதைப் பார்த்து, ‘‘என் அருமை நண்பனே, நீ மாத்திரம் இந்தப் புயலில் இன்னும் கொஞ்சம் துணிவாக இருந்திருந்தால், தீர்க்க தரிசனம் உள்ள பெருங் கவிஞனென்று பெயர் பெற்றிருப்பாயே. பாவம்! அதில்தான் தவறிவிட்டாய்’’ என்றது.

---

மூலம்: சீனத்து நீதிக் கதைகள் (தமிழ்ப் புத்தகம்), மொழிபெயர்த்தவர்: ரா. நடராஜன். வெளியிட்டோர்: புதுமைப் பதிப்பகம், காரைக்குடி. விலை: ரூ. 1-0-0.

# கடோத்கசன் பிறப்பு

★



துரியோதனனின் சூழ்ச்சிக்கு இணங்க அரக்கையும் எரியக்கூடிய பொருள்களையும் சேர்த்து அவன் மந்திரி புரோசனன் ஓர் அரண்மனையைக் கட்டிப் பாண்டவரை அதில் இருக்கச் செய்தான். இதை விதுரர் மூலம் பாண்டவர்கள் அறிந்தார்கள். ஒரு நாள் இரவு புரோசனனும் அவன் வேவுகாரியாகிய வேட மாதும் அவளுடைய ஐந்து மக்களும் உறங்கும் பொழுது அதில் நெருப்பு வைத்துப் பீமன் தன் தாயுடனும் சகோதரர்களுடனும் முன்னமே ஏற்பாடு செய்திருந்தபடி சுரங்கத்தின் வழியாக வெளிச் செல்லப் புறப்பட்டான். முதலில் வீட்டுக்குள்ளே இருக்கும் சுரங்க வாயிலைப் பிறர் அறியாவண்ணம் மண் முதலியவற்றால் சுரங்கம் தோண்டிய விதுரரின் ஆள் மூடிவிட்டான். தாயையும் சகோதரர்களையும் தானே தூக்கிக்கொண்டு காற்று வேகத்துடன் பீமன் நடந்தான்.

பொழுது புலர்ந்தவுடன் வாரணாவதத்தில் இருக்கும் மக்கள் அரண்மனை எரிவதைக் கண்டார்கள். பாண்டவர் அதில் தாயுடன் இறந்துவிட்டதாகக் கருதினார்கள். திருதராஷ்டிரனுடைய சூழ்ச்சியால் பாண்டவரைக் கொன்றதாகவே எண்ணினார்கள்; பீஷ்மர், துரோணர், கிருபர் முதலியோரும் தர்மம் அற்றவர்கள் என்று மக்கள் இகழ்ந்தார்கள். "'உங்கள் விருப்பம் நிறைவேறிவிட்டது. பாண்டவர் எரிந்து சாம்பலாகிவிட்டார்கள்' என்று, கெட்ட மனம் படைத்த திருதராஷ்டிரனுக்குச் சொல்லி அனுப்புவோம்" என்றும் பேசிக்கொண்டார்கள். திருதராஷ்டிரன் பாண்டவரும் புரோசனனும் நெருப்பில் இறந்ததாகக் கேட்டுப் பலவாறு புலம்பினான். "இறந்த பிறகு என்ன செய்யலாம்? ஏராளமாகப் பொருள் செலவழித்து அவர்களுக்கு ஈமச் சடங்கைச் செய்வது

ராமாயணத்தைப்போல் பிரசித்தமானது பாரதம். பாண்டவர், கௌரவர் வரலாற்றை மட்டும் அல்ல; கீதை மொழிந்த கண்ணனின் கருணைச் செயல்களையும் இதில் காணலாம்.

தான் நம்மால் ஆனது'' என்று கூறிக்கொண்டான். பிறகு அனைவரும் கங்கைக் கரைக்குச் சென்று பாண்டவருக்கும் குந்திக்கும் தர்ப்பணம் முதலியவற்றைச் செய்தார்கள். குரு வம்சத்தினர் அனைவரும் வாய்விட்டுக் கதறி அழுதார்கள். விதுரர் உண்மையை அறிந்திருந்ததால் அதிகமாக வருந்தவில்லை. பீஷ்மரோ வருத்தம் தாளாமல் அழுதார். குந்தியின் குணங்களை நினைத்து மனமுருகினார். தர்மனுடைய நேர்மையையும் நெறி தவறாமல் அவன் அரசு செலுத்தியதையும் எண்ணி எண்ணிச் சோர்வுற்றார். விதுரர் சமயம் பார்த்துத் தனிமையில் பாண்டவரின் உண்மை நிலையைப் பீஷ்மரிடம் கூறி அவருக்கு ஆறுதல் அளித்தார்.



பிறகு விதுரர் பாண்டவர் வரும் வழியில் கங்கைக் கரையில் தம் ஒற்றனை அனுப்பினார். அவன் பாண்டவரை நம்பிக்கையான ஓடத்தில் ஏற்றி அக்கரை கொண்டு சேர்த்தான். துரியோதனனின் ஆட்கள் இனிமேல் தம்மைத் தொடர முடியாது என்று பாண்டவர் நம்பிக்கையுடன் காட்டினுள் நட்சத்திரங்களின் உதவியால் தென்திசையை நோக்கிச் சென்றார்கள். சகோதரரும் தாயும் நடக்க முடியாமல் களைப்புறவே பீமன் அவர்களைத் தூக்கிக்கொண்டு காட்டினிடையே வேகமாகச் சென்றான். அந்த வேகத்தால் அனைவரும் நினைவிழந்தனர். இவ்வாறு பீமன் மறுநாள் இரவு வரும் வரையில் இருபத்து நான்கு யோஜனைகள் கடந்து சென்றான். பொழுது சாய்ந்து விட்டது.

குந்திக்குத் தாகம் தாங்கவில்லை. ''ஐந்து பாண்டவருக்குத் தாயாக இருந்தும் நடுக் காட்டில் திக்கற்றவளைப்போல் தாகமுற்று வாடுகிறேனே!'' என்றாள். பீமன் இதைக் கேட்டு நடுங்கினான்; அவன் மனம் இரக்கமுற்று உருகி

யது. பிறகு ஓர் ஆலமரத்தின் அடியில் அவர்களைப் பீமன் இறக்கினான். அவர்களிடம் விடை பெற்று நீர் இருக்கும் இடத்தைத் தேடிச் சென்றான். நான்கு மைல் தூரம் சென்ற பிறகு பீமன் ஒரு தாமரை ஓடையைக் கண்டான். அதில் குனிந்து பீமன் தாகம் தீர்த்துக் கொண்டான். தாமரை இலைகளால் பாத்திரம் செய்து அவற்றிலும் மேல் வஸ்திரத்திலும் தண்ணீர் எடுத்துவந்தான். அங்கே தாயும் உடன்பிறந்தாரும் களைப்புற்று மயங்கி உறங்கிக் கிடப்பதைப் பார்த்தான். அவன் மனம் தாங்கவில்லை. அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் நிலையை நினைத்து வாயை விட்டுக் கதறிப் புலம்பினான். அவர்கள் விழித்துக்கொள்ளும் சமயத்தை எதிர்பார்த்துக் கொண் டிருந்தான்.

அந்த ஆலமரத்துக்குச் சிறிது தூரத்தில் ஒரு தேக்க மரம் இருந்தது. அதில் இடிம்பன் என்ற அரக்கன் ஒருவன் இருந்தான். அவன் தன் சகோதரி இடிம்பியைப் பார்த்துக் கூறுவான்: ''ஏதோ மனிதரின் வாசனை போல் இருக்கிறது. எனக்கு வெகு நாட்களுக்குப் பிறகு தகுந்த ருசியான உணவு கிடைத்திருக்கிறது. மனிதரின் கழுத்தை முறித்து நுரையுடன் கொப்புளித்து வரும் சூடான ரத்தத்தைக் குடிப்பேன். போ, யார் வந்திருக்கிறார்கள் பார்; அவர்களைக் கொன்று எடுத்துவா'' என்று உத்தரவிட்டான்.

இதைக் கேட்டு இடிம்பி மகிழ்ச்சியுடன் மரங்களில் தாவித் தாவிக் கடந்துகொண்டு பாண்டவர் இருக்கும் இடம் வந்தாள். அழகும் யௌவனமும் சேர்ந்து உருவெடுத்துத் திகழும் பீமனையும் உறங்கும் மற்றவரையும் பார்த்தாள். தேக்கமரம் போல் எடுப்பான தோளை உடைய பீமனைக் கண்டு காமவசப்பட்டாள். தனக்குள், 'நிறைந்த இளமை, நீண்ட கைகள், சிங்கம் போன்ற தோள், சங்கு போன்ற கழுத்து, தாமரை இதழ் போன்ற கண்கள், கண்ணைப் பறிக்கும் உடல் ஒளி – இவற்றுடன் கூடிய இவரைத் தவிர மற்றவர் எவருமே எனக்குக் கணவராகத் தகுதியற்றவர். என் தமையனுக்காக இவரை நான் தொந்தரவு செய்வானேன்?' என்று எண்ணிக் கொண்டு அழகிய மானிடப் பெண்ணின் உருவத்தை எடுத்துக் கொண்டாள். எல்லா அணிகளும் அணிந்த அவள் பூத்துப் பொலிவுற்ற கொடி போல் சாய்ந்து அசைந்து பீமனை அணுகினாள். மெல்லிய உடலும், மதிவதனமும், கருமையாகச் சுருண்ட கூந்தலும், கோவை இதழும் படைத்துப் பால் போன்ற ஆடை அணிந்து தன் அருகில் இருக்கும் அவளைக் கண்டு பீமன் வியப்புற்றான். நாணத்தால் குனிந்த அவள் புன்னகையுடன் பீமனிடம் கூறுவாள்:

''ஆண்களில் சிறந்தவரே, தாங்கள் யார்? தேவர்களைப் போல் படுத்திருக்கும் இவர்கள் யார்? வயது முதிர்ந்து எழில் குன்றாத மாது ஒருத்தி கவலையின்றி அரண்மனையில் இருப்பது போல் தூங்குகிறாளே; இவள் யார்? இந்தக் காட்டில் அரக்கர் வாழுவது உங்களுக்குத் தெரியாதோ? இங்கே இடிம்பன் என்ற ஒரு ராட்சசன் இருக்கிறான். அவன் என் சகோதரன். அவன் உங்கள் மாமிசத்தைத் தின்ன வேண்டி என்னை அனுப்பினான். தேவனைப் போன்ற தங்களைத் தவிர நான் மற்றவரை மணாளனாக ஏற்கமாட்டேன். உண்மையாகச் சொல்லுகிறேன்: காமவசப்பட்ட என்னைத் தர்மம் உணர்ந்த நீங்கள் ஏற்கவேண்டும். நான் உங்களை அரக்கனிடமிருந்து மீட்கிறேன். நீங்கள் என்னைக் கைவிட்டால் என் உயிர் போய்விடும். நான் எனக்கு விருப்பமான உருவம் எடுத்துக் கொள்வேன்; ஆகாயத்தில் செல்வேன். என்னை மணந்துகொண்டால் இன்புற்று வாழலாம்'' என்று சொல்லி முடித்தாள்.

அதற்குப் பீமன், ''என் மூத்த சகோதரருக்கு மணமாக வில்லை. அவர் இருக்கும்பொழுது நான் உன்னை மணப்பது தர்ம மல்ல. காம வசப்பட்ட உன்னைப் போல் நானும் உடன் பிறந்தோர்களையும் தாயையும் விட்டுச் செல்லுவது முறையா?'' என்று கேட்டான்.

அதற்கு இடிம்பி, ''முதலில் உங்களையும் தாயையும் மீட்டு விடுகிறேன்'' என்று கூறினாள். அதற்கும் பீமன் இசையாததால், ''அனைவரையும் எழுப்புங்கள். காப்பாற்றுகிறேன்'' என்று வாக்களித்தாள். ''இன்புற்றுத் தூங்குபவர்களைப் பயம் காட்டி நான் எழுப்ப மாட்டேன். அரக்கரோ, தேவரோ, யட்சரோ, கந்தர்வரோ ஒருவரும் எனக்கு நிகரல்ல. நீ போனாலும், இருந்தாலும், உன் தமையனையே அனுப்பினாலும் எனக்குப் பயமில்லை'' என்றான் பீமன்.

''இடிம்பி சென்று வெகுநேரம் ஆகிவிட்டதே! ஏன் இன்னும் வரவில்லை? யாராவது என் உணவுக்கு இடையூறு செய்கிறார்களா?'' என்றெல்லாம் தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டு இடிம்பன் அதே சமயம் பற்களைக் கட கட வென்று கடித்து அதிகக் கோபத்துடன் அங்கு வந்தான். அவன் வருவதைக் கண்டு பயந்து இடிம்பி பீமனிடம், ''இதோ, அந்தக் கொடியவன் வருகிறான். உங்கள் சகோதரர்களையும் தாயையும் எழுப்புங்கள். எல்லோரையும் ஆகாய வழியாக எடுத்துச் செல்லுகிறேன்'' என்றாள்.

அதற்குப் பீமன், ''அழகிய இடையுடைய பெண்ணே, நீ பயப்பட வேண்டாம். உன் எதிரிலேயே உன் தமையனைக் கொன்றுவிடுகிறேன். அவன் எனக்கு நிகரல்ல. என் பலத்தை அறிந்துகொள்ளாமல் என்னைக் குறைவாக எண்ணாதே! தேவேந்திரனுக்கு நிகரான என் வீரத்தை நீ பார்'' என்று சொல்லிக்கொண்டிருந்தான். அரக்கன் இதைக் கேட்டுக் கொண்டே கோபத்தோடு அங்கே வந்தான். இடிம்பியின் காதலை அவன் அறிந்துகொண்டான். அவளைப் பலவாறு இகழ்ந்து பேசினான். குலத்தின் கௌரவத்துக்கே அவள் இழுக்குத் தேடியதாகக் கடிந்து கொண்டான். இடிம்பியையும் பாண்டவரையும் கொல்வதற்காகப் பாய்ந்து வந்தான். பீமன், தன் சகோதரர்கள், தாய் இவர்களின் தூக்கம் கெடாமல் காத்துக் கொண்டு, ''புத்தி கெட்ட அரக்கனே! தூங்குகிறவர்களிடம் உன் வீரத்தைக் காட்டுவது சரியல்ல. உனக்கு எதிரியாக இதோ நான் இருக்கிறேன். உன் தங்கையிடம் நீ கோபமுற்றுப் பயனில்லை. அவள் உள்ளத்தில் இருக்கும் மன்மதன் அவளைத் தூண்டுகிறான். அவள் பேரில் தவறில்லை. இதோ உன்னை நான் கொன்று தரையில் இழுப்பதை உன் சகோதரி பார்க்கப் போகிறாள். அதோடு நான் உன்னைக் கொன்ற பிறகு இந்தக் காட்டில் பயமில்லாமல் அனைவரும் நடமாடப் போகிறார்கள்'' என்றான். கோபமிகுதியால் இடிம்பன், ''உன்னோடு பேசிப் பயனில்லை. இதோ உன்னை யமனிடம் அனுப்புகிறேன்'' என்று கூறிப் பீமன் மேல் பாய்ந்தான். பீமனோ அவனைத் தடுத்துக் கட்டிக் கீழே தள்ளினான். அரக்கன் கர்ஜித்துக் கொண்டு பீமனிடம் மிகத் திறமையுடன் மல் செய்தான். பீமனும் சாமர்த்தியமாக அவனைக் கீழே தள்ளி இழுத்துப் பலவாறு துன்புறுத்தினான்.

இதற்குள் குந்தி விழித்துக் கொண்டாள். எதிரில் அழகே உருவாய்ச் சமைந்திருக்கும் இடிம்பியைப் பார்த்து ஆச்சரியமுற்றவளாக, ''பெண்ணே, தேவதை போன்ற நீ யார்? நீ எதற்காக இங்கு வந்தாய்? எங்கிருந்து வந்தாய்? நீ இந்த வனத்தின் தேவதையா? அப்ஸரஸா? எதற்காக இங்கு நிற்கிறாய்? எனக்கு விவரமாகச் சொல்'' என்றாள். அவளை இடிம்பி வணங்கி, நடந்ததை ஒளிக்காமல் கூறித் தான் பீமனைக் காதலிப்பதாகவும் தெரிவித்தாள்.

இடிம்பி கூறுவதைக் கேட்ட தர்மன், அர்ஜுனன், நகுலன், சகதேவன் இந்த நான்கு பேரும் குதித்து எழுந்தார்கள். இரண்டு சிங்கங்கள் போல் போரிடும் பீமனையும் அரக்கனையும் பார்த்தார்கள். புழுதி புரண்ட உடலுடன் கூடிய அவர்கள் இருவரும் பனி மூடிய மலைபோல் தோன்றினார்கள். அர்ஜுனன் சிரித்துக்கொண்டு, ''பீமா, நாங்கள் களைப்புற்றுத் தூங்கிவிட்டோம். போர் நடப்பது

தெரியவில்லை. நான் உனக்கு உதவி செய்கிறேன். நகுலனும் சகதேவனும் அம்மாவைப் பார்த்துக் கொள்வார்கள்'' என்று சொன்னான். அதற்குப் பீமன், ''அர்ஜுனா, நீ பேசாமல் பார்த்துக்கொண்டிரு. நான் இவனைக் கொல்லாமல் விடுவேனா? அவசரம் எதற்கு என்றுதான் மெதுவாகப் போரிடுகிறேன்'' என்றான்.

''பீமா, பொழுது புலரப் போகிறது. சந்தி வேளையில் அரக்கருக்குப் பலம் அதிகமாகும். மாயையால் பலவாறு நம்மை ஏமாற்றத் துணிவார்கள். அதனால் தாமதியாமல் இப்பொழுதே இவனைக் கொல்வது நலம்'' என்றான் அர்ஜுனன்.

இதைக் கேட்டவுடன் பீமன் அரக்கனை உயரத் தூக்கிச் சுழற்றித் தரையில் எறிந்து, ஆடு மாடுகளைக் கொல்வது போல் கொன்றான். அடித்த வேகத்தில் அரக்கனின் தலை, கழுத்து எல்லாம் அவன் வயிற்றுக்குள்ளே போய்விட்டன. பிற பாண்டவ சகோதரரும் இடிம்பியும் ஆகாயத்தில் செல்லும் சித்தர் முதலியோரும் பீமனைக் கொண்டாடிப் புகழ்ந்தார்கள்.

பிறகு அர்ஜுனன், ''சமீபத்தில் ஏதோ ஒரு பட்டணம் இருப்பதாகத் தெரிகிறது. அங்கே போய் விடுவோம். இங்கே தனியாக இருந்தால் துரியோதனன் நம்மைக் கண்டுபிடித்துவிடுவான்'' என்றான். இதைக் கேட்டு அனைவரும் புறப்பட்டார்கள். இடிம்பியும் அவர்களைத் தொடர்ந்து சென்றாள். அவளுடைய தமையனைக் கொன்றதால் தந்திரமாக வஞ்சம் தீர்த்துக் கொள்ள வருவதாக எண்ணினான் பீமன். கடுங்கோபம் கொண்டு, ''உன் தமையன் போன வழியே உன்னையும் அனுப்புகிறேன்' என்று கூறி அவளைக் கொல்லப் போனான். அவனைத் தடுத்துத் தர்மன், பெண்களைக் கொல்லுவது சரியல்ல. இவள் நம்மை என்ன செய்ய முடியும்?'' என்றான்.

இடும்பி குந்தியையும் தர்மபுத்திரனையும் வணங்கிக் கைகூப்பிக் கொண்டு குந்தியிடம், ''தாயே, பெண்களின் உள்ளம் தங்களுக்குத் தெரியாதா? நான் நண்பரையும் உறவினர்களையும் சுயதர்மத்தையும் விட்டுத் தங்கள் மகனைக் கணவராக வரித்தேன். அவர் என்னை மறுத்தால் நான் உயிர் வாழமாட்டேன். என்னிடம் கருணை காட்டுங்கள். நான் ஒன்றும் அறியாத மூடம் என்றோ, பக்தை என்றோ, தொடர்ந்து பின்பற்றி வருபவள் என்றோ எண்ணி என்னைத் தங்கள் பிள்ளையோடு சேர்த்து வையுங்கள். நான் அரக்கர் வம்சத்தில் பிறந்தாலும் கன்னிகை. பதிவிரதா தர்மத்தைக் கடைப்பிடிப்பவள். நான் தங்கள் பிள்ளையை மணந்து கொண்டு தங்களுக்குப் பணியாற்றுவேன். முதுகில் தூக்கிக்கொண்டு தங்களை எங்கே வேண்டுமானாலும் ஒரே நிமிஷத்தில் எடுத்துச் செல்வேன். கடந்ததும் வரப்போவதுமான விஷயங்களை மனத்தால் எண்ணி அறியும் திறமை எனக்கு உண்டு. நான் தங்களுக்கு நன்மையைச் சொல்லுகிறேன், கேளுங்கள்'' என்றாள்.

''இங்கு அருகில் ஒரு தாமரை ஓடை இருக்கிறது. அங்கே சென்று அதில் குளியுங்கள். அதன் கரையில் ஒரு மரம் இருக்கிறது. அதன் அடியில் தங்கி இளைப்பாறுங்கள். சாலிஹோத்திர முனிவர் தம் தவத்தின் மகிமையினால் இந்தக் குளத்தையும் மரத்தையும் படைத்திருக்கிறார். இந்த மரத்தடியில் மழை, வெயில் இரண்டாலுமே தொந்தரவு ஏற்படாது. குளத்து நீரைக் குடித்தால் பசியும் தாகமும் நீங்கிவிடும். நாளைக் காலையில் அங்கு வியாச பகவான் வருவார். அவரைப் பார்ப்பதால் உங்கள் வருத்தம் நீங்கும்'' என்று இடிம்பி கூறியதைக் கேட்ட குந்தி தர்மனிடம், ''தர்மா, இவள் அரக்கர் வம்சத்தில் பிறந்தாலும் நியாயமாகப் பேசுகிறாள். நீ விரும்புவாயாகில் இவளைப் பீமனுக்கு மணம் செய்துவைக்கலாம் என்று நினைக்கிறேன்'' என்றாள். தர்மனும், ''அப்படியே ஆகட்டும். அதில் தவறில்லை'' என்று கூறி அவளைப் பீமனுக்கு மணம் செய்து வைக்கச் சம்மதித்தான்; பீமனுடன் அவள் வாழ்வதற்குப் பல

நிபந்தனைகளையும் விதித்தான். பிறகு அனைவரும் சாலிஹோத்திர முனிவரின் ஆசிரமத்தில் இருக்கும் குளத்தை அடைந்தார்கள். அங்கே குளித்து நீர் அருந்திக் களை தீர்ந்து இருந்தார்கள். இடிம்பி மரத்தடியைச் சுத்தம் செய்து ஒரு பர்ண சாலையைக் கட்டினுள். தனக்கும் குந்திக்கும் இருப்பதற்குத் தனிமையாக ஒரு புறத்தையும் ஏற்பாடு செய்துகொண்டாள். அனைவரும் அங்கு இன்புற்று அரக்கு மாளிகையிலும் மற்ற இடங்களிலும் நடந்த சமாசாரத்தைப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

அந்தப் பேச்சு முடிந்ததும் குந்தி பீமனைப் பார்த்து, ''உன் தமையன் தந்தைக்கு நிகரானவன்; நான் உனக்குத் தாய். நாங்கள் கூறுவதை நீ மறுக்கக் கூடாது. உன்னைப் பார்த்த மாத்திரத்திலேயே இவள் காதல் கொண்டுவிட்டாள். நீ இவளை மணந்துகொள். நமக்கு நன்மை செய்யக்கூடிய புதல்வனை இவள் ஈன்று தருவாள்'' என்றுள்.

பீமன், ''தாயே, வேத வாக்கியத்தைப்போல் உன் வார்த்தையை நான் ஏற்கிறேன்'' என்றுன். இடிம்பியை மணந்துகொண்டான். இடிம்பி அவர்களுக்கு அரசருக்கேற்ற போஜனம் தயார் செய்து கொடுப்பாள். பீமனை அழைத்துக் கொண்டு இனிய காடு, மலை, ஓடைகள், பட்டணங்கள் எல்லா இடத்திலும் பல அழகிய உருவங்களை எடுத்துக்கொண்டு சுற்றி வந்தாள். பாண்டவருக்கும் குந்திக்கும் மனம் மகிழும் முறையில் பணிவிடையும் செய்து வந்தாள்.

இதற்கிடையில் இடிம்பி கூறிய படி வியாச பகவான் அங்கு வந்தார். குந்தியையும் பாண்டவரையும் சமாதானம் செய்து சில நாட்கள் சாலிஹோத்திரரின் ஆசிரமத்திலேயே இருக்கும்படி கூறினுர். அதிகத் தாமதம் இல்லாமல் நல்ல நிலை ஏற்படும் என்றும், தாம் சீக்கிரம் திரும்பி வருவதாயும் கூறிச் சென்றுர். இடிம்பி பல மாதங்கள் பீமனுடன் இன்புற்று வாழ்ந்தாள். அவளுக்குக் கடோத்கசன் என்ற ஒரு மகன் பிறந்தான். அவன் ராவணன், இந்திரஜித்து இவர்களுக்கு நிகரான பலம் உடையவனுக இருந்தான். பாண்டவர்களுக்கு எப்பொழுது வேண்டுமானுலும் உதவி செய்வதாக வாக்களித்து, வட திசையை நோக்கிச் சென்றுன். இடிம்பியும் பீமனிடமும் மற்றவரிடமும் விடை பெற்று, நினைக்கும் பொழுது வருவதாகப் பீமனுக்கு உறுதி கூறிச் சென்றுள்.

பாண்டவர் அந்த ஆசிரமத்தில் ஜடை முதலியவை தரித்துத் தவம் செய்துகொண்டிருந்தார்கள்.

## சாவின் காரணம்

மரண விசாரணை அதிகாரியிடம் ஒரு வாலிப டாக்டர் ஓடி வந்தார். ''நான் கொடுத்த மரண ஸர்ட்டிஃபிகேட்டில் ஒரு மாறுதல் செய்யவேண்டும்; அதைக் கொஞ்சம் தாருங்கள்'' என்றுர்.

அதிகாரி வியப்புற்றுர். ''ஒரு முறை கொடுத்த ஸர்ட்டிஃபிகேட்டை மாற்ற முடியாதே; அது சட்ட விரோதமாயிற்றே'' என்றுர்.

''அதெல்லாம் சரிதான். ஆனுல் இது மிக முக்கியமான திருத்தம். மரணத்தின் காரணம் என்ற கேள்விக்கு எதிரே, எங்கேயோ ஞாபகமாக என் கையெழுத்தைப் போட்டுவிட்டேன்'' என்றுர் டாக்டர்.

—'தி இங்கிலீஷ் டைஜெஸ்ட்'

ருஷியக் கதை:

# மூன்று துறவிகள்

## லியோ டால்ஸ்டாய்

முன்னும் பின்னும் - உலகெங்குமே தான் - ஈடு இணை யற்ற நாவலாசிரியர், சிறுகதை ஆசிரியர், ஞானி, கர்மவீரர் டால்ஸ்டாய். அவருடைய கருத்துக்களே ருஷியப் புரட்சிக்கு ஒரு வகையில் வித்தாயின என்று சொல்லலாம். மகாத்மா காந்தியே தம் குருவென மதித்தார் டால்ஸ்டாயை. ருஷிய நாடோடிக் கதை ஒன்றுக்குத்தான் தம் சொந்த நடையில் டால்ஸ்டாய் இப்படி உருக் கொடுத்திருக்கிறார்.

ஆர்க்கேஞ்சல்ஸ் துறைமுகத்திலிருந்து ஸ்லோவெட்ஸ்க் நகருக்குப் போய்க்கொண்டிருந்த கப்பலில் அநேகம் பிரயாணிகள் இருந்தார்கள். அவர்கள் எல்லாரும் ஸ்லோவெட்ஸ்க் நகர மடாலயத்தில் வழிபடச் செல்லும் பக்தர்கள். அவர்களில் கிறிஸ்துவப் பாதிரியார் ஒருவரும் இருந்தார். அமைதியான கடலிலே கப்பல் விரைவாகச் சென்றுகொண்டிருந்தது. அதற்கு உதவி செய்வதுபோல் காற்று வீசிக்கொண்டிருந்தது. காலநிலையும் சௌகரியமாய் இருந்தது.

கப்பலின் மேல் தளத்தில் பல பிரயாணிகள் உணவருந்திக்கொண்டும், அங்குமிங்கும் நடந்துகொண்டும், சிறு சிறு கூட்டமாகக் கூடி அளவளாவிக்கொண்டும் இருந்தார்கள். பாதிரியார் மட்டும் தனியாக உலாவிக்கொண்டிருந்தார். அப்போது, ஒரு செம்படவன் சுட்டிக் காட்டிப் பேசிக்கொண்டிருப்பதையும் அவனைச் சுற்றிச் சிலர் கூடி நிற்பதையும் அவர் கண்டார். செம்படவன் காட்டிய திக்கைக் கவனித்தார். அவர் கண்ணுக்கு ஒன்றும் புலப்படவில்லை. ஆகவே, அந்தக் கூட்டத்தின் பக்கம் சென்றார். அவரைக் கண்டதும் செம்படவன் தொப்பியை உயர்த்தி வணக்கம் செய்தான். மற்றவர்களும் அப்படியே செய்தார்கள். அவர்கள் எல்லாருமே மரியாதையாகத் தங்கள் பேச்சை நிறுத்திக்கொண்டார்கள்.

அதைக் கண்ட பாதிரியார், "ஏன் பேச்சை நிறுத்திவிட்டீர்கள்? உங்கள் பேச்சைக் கேட்கத்தான் நான் இங்கே வந்தேன்" என்றார்.

"ஒரு தீவில் வாழும் துறவிகளைப் பற்றி இவன் எங்களிடம் சொல்லிக்கொண்டிருந்தான்" என்று செம்படவனைச் சுட்டிக் காட்டினார் ஒரு வணிகர். அவர்தான் அந்தக் கூட்டத்திலேயே சங்கோசம் இல்லாத பிராணி.

"நானும் அவர்களைப்பற்றித் தெரிந்துகொள்ளுகிறேனே" என்று சொல்லி, அருகிலிருந்த ஒரு பெட்டியின்மேல் பாதிரியார் உட்கார்ந்தார்.

"அதோ பாருங்கள், அந்தத் தீவிலே" என்று ஆரம்பித்தார் வணிகர்.

பாதிரியார், கூர்மையாக அந்தத் திசையைக் கவனித்துவிட்டு, "எனக்கு ஒன்றும் தெரியவில்லையே" என்றார்.

"அதோ, அந்தக் கார்மேகத்தின் கீழே சற்று இடது புறமாகப் பாருங்கள்" என்று வணிகர் தம் கையை நீட்டிக் காண்பித்தார். பாதிரியார் கண்ணுக்கு எங்கும் பரந்து கிடக்கும் கடலைத் தவிர வேறொன்றும் தெரியவில்லை.

''எனக்குத் தீவு ஏதும் தெரியவில்லையே-அங்கே வாழும் துறவிகள் யாரோ?'' என்று அவர் கேட்டார்.

''அவர்கள் அருள்செல்வர்கள். அவர்களைப்பற்றி வெகு காலமாக நான் கேள்விப்பட்டது உண்டு. ஆனால் அவர்களைக் காணும் பாக்கியம், எனக்குச் சென்ற ஆண்டுக்கு முந்திய ஆண்டுதான் கிடைத்தது. ஓரிரவு மீன் பிடித்துவிட்டு வரும்போது நான் வழி தவறி அந்தத் தீவில் அகப்பட்டுக்கொண்டேன். திக்குத் தெரியாத அந்தத் தீவிலே, அங்கும் இங்குமாக அலைந்து திரிந்தேன். கடைசியாக ஒரு மண் குடிசையை அடைந்தேன். அங்கே மூன்று துறவிகளைக் கண்டேன். அவர்கள் எனக்கு உணவளித்து, என் துணிமணிகளை உலர்த்தி, என் படகையும் பழுது பார்த்துத் தந்தார்கள்'' என்றான் செம்படவன்.

''அவர்கள் எப்படி இருப்பார்கள்?'' என்று பாதிரியார் கேட்டார்.

''ஒருவர் சிறியவர். அவர் முதுகு வளைந்து கூனிக் குறுகியிருக்கும். காஷாயம் தரித்திருந்தார். குடுகுடுத்த கிழவர். அவருக்கு வயசு குறைந்தது நூறாவது இருக்கும். அவருடைய நரைத்த தாடி கூட வெண்மை மாறிப் பாசி பிடித்தாற் போல் பசுமையாகிக்கொண்டிருந்தது. எப்போதும் சிரித்த முகமா யிருக்கிறார். அவருடைய மாசற்ற முகம், வெண்மதி போல் காந்தியுடையதா யிருந்தது. இரண்டாவது துறவியும் வயோதிகர்தான். அவர் குடியானவனைப் போல் பழமையான ஆடை அணிந்திருந்தார். அவருடைய அகன்ற தாடி மஞ்சளும் சாம்பலும் கலந்த நிறம் உடையது. அவர் மிகுந்த பலசாலி. பிறர் உதவியில்லாமலே என் படகை, வாளியைப்போல் கவிழ்த்து, அதிலிருந்த நீரை வடித்தார். அவர் அன்பும் சந்தோஷமும் உள்ளவராக இருந்தார். மூன்றாவது துறவி சற்று உயரமானவர். அவருடைய பால் நிறமான தாடி முழங்கால் வரை வளர்ந்திருந்தது. முகம் கடின சித்தத்தைக் காட்டியது. புருவங்கள் வளைந்து தொங்கிக்கொண் டிருந்தன. அவர் ஒரு பாயை இடுப்பிலே வரிந்து கட்டி இருந்தார்'' என்றான் செம்படவன்.

''அவர்கள் உன்னிடம் ஏதாவது பேசினார்களா?'' என்று பாதிரியார் கேட்டார்.

''அவர்கள் தங்களுக்குள்ளே சரளமாகப் பேசி நான் பார்க்கவில்லை. தங்களுடைய வேலையிலேயே கண்ணுங் கருத்துமா யிருந்தார்கள். ஒருவரை யொருவர் பார்க்கும் பார்வையி லிருந்தே, என்ன செய்யவேண்டு மென்று தெரிந்துகொண்டு அதற் கேற்றாற் போல் நடந்துகொள்ளுகிறார்கள். 'நீங்கள் மூன்று பேரும் வெகு காலமாக இங்கேதான் வாழ்ந்து வருகிறீர்களோ?' என்று நான் கேட்டேன். துறவிகளில் ஒருவர் ஏதோ முணுமுணுத்துக்கொண்டே, என்னை முறைத்துப் பார்த்தார். வயசு முதிர்ந்த துறவி, உடனே அவருடைய கைகளைப் பற்றிக் கொண்டு சிரிக்கவே, அவர் கோபம் தணிந்துவிட்டார். 'எங்கள்மீது கருணை காட்டுங்கள்; வீண் கேள்வியெல்லாம் கேட்காதீர்கள்' என்று முதிய துறவி சிரித்துக்கொண்டே சொன்னார்'' என்று செம்படவன் கூறினான்.

இப்படி அவன் கூறிக் கொண்டே யிருக்கும்போது, கப்பல் அந்தத் தீவை அடுத்துச் சென்றுகொண் டிருந்தது.

''அதோ தீவு தெரிகிறது, பாருங்கள்'' என்று பாதிரியாரிடம், வணிகர் தீவைக் காண்பித்தார். உடனே பாதிரியார், ஒரு மாலுமியிடம் சென்று. ''அது என்ன தீவு?'' என்று கேட்டார்.

''அதற்குப் பெயர் ஒன்றுமில்லை. அதைப் போல், இங்கே பல தீவுகள் உண்டு'' என்றான் மாலுமி.

''அங்கே யாரோ துறவிகள் வாழ்கிறார்களாமே?'' என்றார் பாதிரியார்.

''அப்படித்தான் கேள்வி. ஒருவேளை அது செம்படவர்கள் விடும் சரடாகவும் இருக்கலாம்'' என்றான் மாலுமி

''தீவுக்குச் சென்று அவர்களைக் காண விரும்புகிறேன். அதற்கு

வழி செய்ய வேண்டுமே'' என்று மாலுமியைப் பாதிரியார் கேட்டுக் கொண்டார். ''கப்பல் அங்கே போகாது. படகில் வேண்டுமானால் செல்லலாம். நீங்கள் போக விரும்பினால், கப்பல் தலைவனைக் கேட்டுப் பாருங்கள்'' என்றான் மாலுமி.

பாதிரியார் கப்பல் தலைவனிடம் போய் அப்படியே வேண்டிக் கொண்டார்.

''அந்தக் கிழட்டு மூடங்களைச் சந்திப்பதனால் பிரயாணம் தாமதப் படுமே தவிர, ஒரு லாபமும் ஏற்படப் போவதில்லை. நம் பேச்சு அவர்களுக்கு விளங்காது; அவர்கள் பேச்சு நமக்குப் புரியாது. எனவே, அந்த எண்ணத்தை நீங்கள் விட்டு விடுவதுதான் நல்லது என்று எனக்குத் தோன்றுகிறது'' என்றான் கப்பல் தலைவன்.

''எனக்கென்னவோ அவர்களைக் காணவேண்டும் என்ற அவா இருக்கிறது. எனக்கு ஒரு படகு கொடுத்து உதவுங்கள். அதனால் ஏற்படும் அசௌகரியங்களுக்குத் தகுந்த ஊதியம் தருகிறேன்'' என்றார் பாதிரியார்.

கப்பல் தலைவனும் வேறு வழியில்லாது ஒப்புக்கொண்டான். அவனுடைய உத்தரவின் பேரில் தீவை நோக்கிக் கப்பல் சென்றது. வழி நெடுகிலும் பாதிரியாரும் மற்றவர்களும் தீவையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். கப்பல் தீவை நெருங்கியதும், அவர்கள் அங்கே உள்ள பாறைகளையும் மண் குடிசையையும் கண்டார்கள். சிலர் கண்ணுக்குத் துறவிகளும் தென்பட்டார்கள். கப்பல் தலைவன் தூரதிருஷ்டிக் கண்ணாடி மூலம் துறவிகளைப் பார்த்துவிட்டு, அந்தக் கண்ணாடியைப் பாதிரியாரிடம் கொடுத்தான். மூன்று துறவிகளும் கை கோத்துக்கொண்டு நிற்பது அவருக்குத் தெரிந்தது.

''இதற்குமேல் கப்பல் போகாது. நீங்கள் படகில் சென்று வாருங்கள். கப்பலை இங்கேயே நிறுத்தி வைக்கிறேன்'' என்றான் கப்பல் தலைவன்.

கப்பலின் பாய்மரச் சீலையைச் சுருட்டி வரிந்து நங்கூரமும் பாய்ச்சினார்கள். கப்பல், கடலிலே தள்ளாடிக் கொண்டு நின்றது. அதிலிருந்து ஒரு படகைக் கீழே தாழ்த்தினார்கள். அதற்குள் படகோட்டிகள் குதித்தார்கள். பாதிரியாரும் இறங்கி அதில் அமர்ந்துகொண்டார். தீவை நோக்கிப் படகு விரைந்தது. தீவை அடைந்ததும், கரையிலே முளை அடித்துப் படகைக் கட்டினார்கள். பாதிரியார் இறங்கிக் கரையேறியதும், அங்கே மூன்று துறவிகளும் கைகோத்துக் கொண்டு நிற்பதைக் கண்டார். செம்படவன் வர்ணித்தபடியே அவர்கள் இருக்கக் கண்டார். பாதிரியாரை மூன்று துறவிகளும் தலை குனிந்து வணங்கினார்கள். அவர் துறவிகளை ஆசீர்வதித்தார்.

''இந்த ஏகாந்தமான இடத்தில் இருந்துகொண்டே, நீங்கள் ஏசுநாதரை உங்கள் பொருட்டும் உலகத்தின் பொருட்டும் வழிபட்டு வருவதாக அறிந்தேன். நான் கர்த்தரின் பணியாள். தேவனின் மந்தைக்கு விவிலிய வேதத்தைப் போதித்து, அவர்களை உய்விப்பது என் கடமை. ஏசுநாதரின் வழியை மக்களுக்கு எடுத்துரைத்து, அவர்களைப் பாதுகாப்பதே என் பணி. நான் அறிந்ததை, உங்களுக்கும் சொல்ல வேண்டும் என்ற ஆசையால்தான், உங்களிடம் வந்தேன்'' என்றார் பாதிரியார்.

துறவிகள் ஒன்றும் பேசாமல் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக்கொண்டார்கள்.

''தேவன் உங்களை ரட்சிக்க வேண்டாமா? அதற்குத் தேவனை வழிபடவேண்டுமே! எப்படி வழி படுகிறீர்கள்?'' என்று பாதிரியார் கேட்டார்.

துறவிகள் ஒருவரையொருவர் கூச்சத்தோடு பார்த்துக்கொண்டார்கள்.

'' 'இறைவனே! எங்கள் தேவைகளைக் கவனித்துக்கொள்ளுகிறோமே யல்லாது, மற்றொன்றும் நாம் அறியோம்' என்று ஜபிப்போம்'' என்றார் தொண்டு கிழவரான துறவி.

''தேவனை எப்படி அழைப்பீர்கள்?'' என்று கேட்டார் பாதியார்.

'' 'மும்மூர்த்திகளே, எங்கள் மூவரிடமும் கருணை காட்டுங்கள்'

என்று கூறி வணங்குவோம்'' என்றூர் அதே துறவி.

பாதிரியார், மகிழ்ச்சி அடைந்தார். ''நான் உங்களைக் கண்டு இரங்குகிறேன். உங்களிடம் பக்தி இருக்கிறது. ஆனுல் உங்களுக்கு இறைவனை நோக்கிப் பிரார்த்தனை செய்யத் தெரியவில்லை. நான் சொல்லுவதைக் கேளுங்கள்'' என்றூர் பாதிரியார். மானிடர்களுக்குத் தேவன் தோற்றமளித்த வரலாற்றையும், தேவ பிதா, தேவ குமாரர், பரிசுத்த ஆவி என்கிற மூன்று தத்துவங்களையும் விவிலிய வேதத்திலிருந்து அவர்களுக்கு எடுத்துரைத்தார்.

''மானிடர்களை ரட்சிக்க ஏசுநாதர், உலகில் அவதரித்தார். அவரை வணங்குவோம். நான் சொல்லுவதைக் கவனித்து, அதே போல் சொல்லுங்கள்'' என்று கூறி, ''பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே'' என்றூர். துறவிகளும் அப்படியே சொன்னுர்கள்.

பாதிரியார், பிரார்த்தனை முழுவதையும் கூறி முடித்தார். உயரமான துறவியால் பிரார்த்தனையைப் பிழை இல்லாமல் சொல்ல முடிந்தது. இரண்டாவது துறவியால் சரியாகச் சொல்ல முடியவில்லை. அவருடைய உச்சரிப்பை நீண்டு, வளர்ந்திருந்த அவருடைய மீசை தடை செய்தது. தொண்டு கிழவரான மூன்றுவது துறவிக்குப் பல்லில்லாத குறையால் பிரார்த்தனையை முணுமுணுக்கத்தான் முடிந்தது.

பாதிரியார் ஒரு பாறையில் அமர்ந்துகொண்டு, துறவிகளிடம் பிரார்த்தனையைப் பல தடவை சொன்னுர். அவர்களும் பாதிரியாரின் வாயைப் பார்த்துக் கொண்டே, அவர் சொன்னதைத் திருப்பிச் சொன்னுர்கள். பாதிரியார் நாள் முழுவதும் தங்கி, பிரார்த்தனையில் வரும் ஒவ்வொரு சொல்லையும் பல தடவை சொல்லித் துறவிகளுக்கு மனப்பாடமாக்கினுர்.

பொழுது அடைந்து நிலவு வந்ததும், துறவிகளிடம் பாதிரியார் விடை பெற்றுர். துறவிகள் அவரை அடிபணிந்து வணங்கினுர்கள். அவரும் அவர்களைக் கட்டித் தழுவிக் கொண்டார். தாம் சொல்லிக் கொடுத்ததுபோல் தினமும் இறைவனை வணங்கும்படி கூறிவிட்டுப் படகேறிப் பாதிரியார் கப்பலுக்குத் திரும்பினுர்.

அவர் கப்பலை அடையுமட்டும் துறவிகள் ஜபிப்பது கேட்டுக் கொண்டே இருந்தது. அவர்களுடைய உருவம் தொலைவில் நிலவொளியில் மறைந்துகொண்டே வந்தது. பாதிரியார் கப்பலில் ஏறியதும், சிப்பந்திகள் நங்கூரத்தை உயர்த்தினுர்கள்; பாய்மரச் சீலைகளை விரித்தார்கள். காற்றிலே பாய்மரச் சீலைகள் உப்ப, கப்பல் நகர்ந்தது. மறையும் தீவையே வைத்த கண் வாங்காமல் பாதிரியார் பார்த்துக்கொண் டிருந்தார். சிறிது நேரத்தில் தீவோடு துறவிகள் மறைந்தார்கள்.

பரந்த கடலில் நிலவு பால்போல் காய்ந்துகொண் டிருந்தது. கப்பலில் பாதிரியாரைத் தவிர மற்றப் பிரயாணிகள் எல்லாரும் தூங்கிக்கொண் டிருந்தார்கள். எங்கும் அமைதி நிலவியது. பாதிரியார் உறங்க விருப்பம் இல்லாமல், துறவிகளைப்பற்றிச் சிந்தித்தபடியிருந்தார்; கடலில் தீவு இருந்த திக்கைப் பார்த்துக்கொண் டிருந்தார். தெய்வப் பிரார்த்தனையைக் கற்றுக்கொள்வதில் துறவிகள் காட்டிய ஆர்வத்தை நினைந்து நினைந்து அவர் வியந்தார். அந்த உத்தமர்களுக்குப் போதிக்கும் பாக்கியம் தமக்குக் கிடைத்ததற்காக இறைவனை வாழ்த்தினுர்.

பாதிரியார் இப்படியெல்லாம் சிந்தனையில் ஆழ்ந்திருக்கும்போது, கடலில் நிலவொளி தீட்டிய பாதையில் ஏதோ வெண்மையாகவும் பிரகாசமாகவும் தெரிந்தது. அதைப் பார்த்த பாதிரியார், 'அது பறவையா, படகா?' என்று சந்தேகம் கொண்டார். கப்பலைத் தொடர்ந்து வந்துகொண் டிருந்த அது, நொடிப் போதில் கப்பலை நெருங்கிவிட்டது. 'படகென்றுல் பாய்மரம் இருக்குமே! ஒரு வேளை அது பறவையோ அல்லது மீனே?' என்று எண்ணினுர் பாதிரி

யார். அவருக்கு அது மனிதன் அல்ல என்ற நிச்சயம் மட்டும் ஏற்பட்டது; ஏனென்ருல், அது மனிதனை விட உயரமா யிருந்தது. மேலும், அது கடலின் மேல் நடந்து வந்துகொண் டிருந்தது.

அவர் கப்பலோட்டியிடம் சென்று, ''அது என்ன?'' என்று கேட்டார். அதே சமயத்தில் அவருக்கு அது என்ன என்று நன்ருகத் தெரிந்தது. மூன்று துறவிகளும் கடலின் மேல் விரைந்து வருவதை அவர் கண்டார். அவர்களுடைய பால் போன்ற மேனியும், பனி போன்ற தாடியும் நிலவில் பிரகாசித்தன. அவர்கள் கப்பலை நெருங்கி வரும் வேகத்தைப் பார்த்தால், 'கப்பல் நிலைத்து நிற்கிறதோ!'' என்று எண்ண வேண்டியதாயிற்று.

''அட தெய்வமே! துறவிகள் கடலில் நம்மைத் தொடர்ந்து வருவது, நிலத்தில் ஓடிப் பிடிப்பதைப் போல் அல்லவா இருக்கிறது?'' என்று ஆச்சரியத்துடனும் அச்சத்துடனும், கூச்சலிட்டபடியே கப்பலோட்டி, அதன் துடுப்பை விட்டு விட்டான்.

அவனுடைய கூச்சலைக் கேட்டு விழித்தெழுந்த பிரயாணிகள் அனைவரும் கப்பலின் மேல்தளத்தில் கூடினுர்கள். மூன்று துறவிகளும் கை கோத்தவண்ணம் கால்கள் ஆடாமல் அசையாமல், நீரின் மேல் வழுக்கி வந்துகொண்டிருப்பதைக் கண்டார்கள். கப்பலை நிறுத்தும்படி அவர்கள் சமிக்ஞை செய்தார்கள். ஆனுல், அவர்கள் கப்பல் நிற்குமுன்பே அதை வந்தடைந்தார்கள்.

அவர்கள் பாதிரியாரைப் பணிந்து, ''தாங்கள் கற்பித்த பிரார்த்தனையை நாங்கள் பாராயணம் செய்யுமட்டும் மறவாதிருந்தோம். சற்று ஓய்வெடுத்து விட்டு, மீண்டும் சொல்லும்போது எங்களால் சரியாகச் சொல்ல முடியவில்லை. இப்போது, முற்றும் மறந்து விட்டோம். எனவே, தயைகூர்ந்து தெய்வப் பிரார்த்தனையை, எங்களுக்கு மீண்டும் சொல்லி அருளுங்கள்'' என்று வேண்டிக் கொண்டார்கள். பாதிரியார் அப்படியே மண்டி இட்டு, அவர்களைப் பார்த்து, ''திருவருள் பெரியோர்களே, உங்கள் வழிபாடும் இறைவனைச் சேரும். உங்களுக்குப் போதனை செய்வதற்கு அருகதையுடையவன் நான் அல்ல. நாங்கள் பாவிகள். எங்களுக்காக வேண்டி நீங்கள்தான் இறைவனைப் பிரார்த்தனை செய்யவேண்டும்'' என்று வேண்டித் துறவிகளைத் தலை பணிந்து வணங்கினுர்.

மூன்று துறவிகளும் வாய் பேசாமல் தீவு நோக்கித் திரும்பினுர்கள். அவர்கள் மறைந்த இடத்தில் பொழுது புலருமட்டும் சுடர் ஒளி ஒன்று வீசிக்கொண்டிருந்தது.

[ மொழிபெயர்த்தவர்: எஸ். ஆறுமுகம் ]

## பிழையைத் திருத்திஞர்!

ஷெரிடன் என்பவர் பிரபல ஆங்கில நாடகாசிரியர். ஹாஸ்யமாய்ப் பேசுவார். பார்லிமெண்டில் அவர் ஓர் அங்கத்தினராக இருந்தார். ஒரு சமயம், ''இந்தப் பார்லிமெண்டில் உள்ளவர்களில் பாதிப் பேர் கழுதைகள்'' என்ருர்.

''வாபஸ் வாங்குங்கள்; வாபஸ் வாங்குங்கள். இது பார்லிமெண்ட் ஒழுங்கு முறைக்கு விரோதம்'' என்று சிலர் கத்திஞர்கள்.

உடனே ஷெரிடன் மிக்க அமைதியாக, ''மன்னிக்கவேண்டும். இந்தப் பார்லிமெண்டில் உள்ளவர்களில் பாதிப் பேர் கழுதைகள் அல்ல'' என்ருர்.

—சுதாகர் ராஜே, 'ஸ்வதந்த்ரா'.




# மூத்த பிள்ளை

ஹிந்தி: 'பிக்கு'

தமிழ்: சௌரி

பல சிறுகதைகளும் நாவல்களும் எழுதிப் புகழ் பெற்றவர் ஆசிரியர். புதுப் புது இலக்கியப் பாணிகளை ஹிந்தியில் கொண்டு வந்த கதாசிரியர்களில் 'பிக்கு'வும் ஒருவர். இவருடைய இயற்பெயர் கிருஷ்ணசந்திர சர்மா. இப்போது, 'ஆல் இண்டியா ரேடியோ' தில்லி நிலையத்தில் உதவி ஸ்டேஷன் டைரெக்டராக இவர் பணியாற்றி வருகிறார். ஆசிரியரின் அநுமதி பெற்று இந்த நாவலைத் தமிழில் சுருக்கித் தந்திருக்கிறார் அன்பர் சௌரி.

காப்பிரைட்: 'யுகாச்ரய்' பதிப்பகம், விச்வேச்வர கஞ்ஜ், பனரஸ்.

# மூத்த பிள்ளை

★

மறக்க முடியாத மனிதர்கள், மறைந்துவிடாத நினைவுகள் என்றெல்லாம் நாம் தீர்மானித்து வைத்திருக்கும் முடிவுகளைக் கால வெள்ளம் பொய்யாக்கி விடுகிறது. அந்தப் பிரவாகத்திலும் எங்காவது எப்போதாவது நின்று நிதானிக்கும் போது, மறக்க முடியாத - ஆனால் மறந்துவிட்ட - பழைய பாத்திரங்களோ, சம்பவங்களோ மனத்தில் பசுமையாகத் தோன்றிவிடுகின்றன. என் பிரிய நண்பன் ராகவனின் நினைவும் அதே போலத்தான் எனக்கு இப்போது ஏற்பட்டிருக்கிறது. இன்று அவன் எங்கு இருக்கிறானோ? என்ன ஆனானோ?

'பிரிய நண்பன்' என்பது வெறும் உபசார வழக்காகக்கூட ஆகிவிட்டது. ராகவனுக்கு இந்த அடைமொழி போதாதென்றுதான் நினைக்கிறேன். நான் அவனை உயிராகப் பாவித்தேன்; அவன் என்னை நிழல் போலத் தொடர்ந்துகொண்டே இருப்பான். அவன் விசித்திரமான பிறவி! பேச்சில் பதற்றம்; உள்ளத்தில் மென்மை; பார்ப்பதற்குக் குரூபி; பண்பில் உயர்ந்தவன்; வெளிக்கு அப்பாவி. உலகநிலைக்கு அவன் ஏழைதான்; ஆனால் ஓர் அரசனுக்கு இருக்க வேண்டிய தாராள குணத்தை இயல்பாகப் பெற்றவன். தில்லுமுல்லுகள் அறியாத 'மக்கு'த்தான். இருந்தாலும் அவன் படிப்பில் யாரும் தன்னை மிஞ்சவிடவில்லை. இப்படிப்பட்ட ஓர் அதிசயப் பிறவியை - ஆருயிர் நண்பனைப் பிரிந்து வெகு நாட்கள் ஆகிவிட்டன. இதற்காகவா அவனை இந்தப் பாழும் மனம் மறந்துவிடவேண்டும்!

ராகவன் குடும்பத்துடன் கிராமத்தைவிட்டுப் போகும்போது என் மனம் பட்ட பாடு! பிரிவின் தாபத்தை எங்கள் கண்ணீர் மேலும் அதிகப்படுத்தியது. பள்ளி மாணவனாக இருக்கும்போதே, ராகவனின் தலையில் குடும்பப் பொறுப்பு விழுந்துவிட்டது. பிரியும்போது தன் நினைவுச் சின்னமாக அவன் கொடுத்துச் சென்ற 'டயரி', இன்று அவன் நினைவை மேலும் பசுமை ஆக்கியது.

எந்த விதமான வழக்கத்துக்கோ கட்டுப்பாட்டுக்கோ அடங்காத ராகவன், தினசரிக் குறிப்பைத் தொடர்ந்து எழுதியிருப்பானா, என்ன? அதைக்கூட என்னால் முதலில் நம்ப முடியவில்லை. என்னிடம் எதையும் மறைத்து வைக்காத அவன் இதைமட்டும் புதிராகத்தான் வைத்திருந்திருக்கிறான். ஒரு நதியைப் போல் என்னிடம் ஒப்படைத்த அந்த 'டயரி'யைப் பாவி நான் பத்திரப்படுத்த முடியவில்லையே! ஆராய்ச்சிப் படிப்புக்காக மேல்நாடு செல்லும்போது, புத்தக அலமாரிக்குள் ராகவனின் டயரியையும் வைத்துவிட்டுப் போனேன். மூன்று வருஷங்களுக்குள் திரும்பிவிடுவதாகத் தீர்மானித்துக்கொண்டு சென்றவன், ஏழு வருஷங்கள் கழித்துத் திரும்பி வந்தான். வீட்டுக்கு வந்ததும் தான் ராகவனின் நினைவும், அவன் கொடுத்துவிட்டுச் சென்ற டயரியின் ஞாபகமும் என்னை ஆதுரப்படுத்தின. அலமாரியைத் திறந்து பரபரப்புடன் தேடினேன். கறையான்கள் பத்தை பத்தையாகப் புத்தக வரிசைகளை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தன. உருக் குலைந்தவை, உருவே அழிந்தவை, அழிய ஆரம்பித்தவை - இப்படியாகப் புத்தகங்கள் கறையானுக்கு இரையாகிக் காட்சி தந்தன. ராகவனின் டயரி நல்ல வேளையாகக் கிடைத்தது-அழிய ஆரம்பித்து உரு மாறிய நிலையில்தான்.

அதைப் பார்த்ததும் எனக்கு அழுகை வந்துவிட்டது. என்னிடம் டயரியைக் கொடுத்துவிட்டு, விடை பெற்றுச் செல்லும்போது,

ராகவனின் உருவமும் இதைப் போலத்தான் உருக்குலைந்து, வாழ்வின் இறக்கத்தைக் காட்டிக் கொண்டு இருந்தது. ராகவன் இதை என்னிடம் கொடுத்தபோது சொன்னான்:

''மாதவா, ராகவன் எந்த ரகசியத்தையும் என்னிடம் சொல்லாமல் இருக்கமாட்டான் என்று நீ கர்வப் பட்டதுண்டு. அதைப் பொய்யாக்கத்தானோ என்னவோ, நான் இதை இவ்வளவு நாட்களாக உனக்குத் தெரியாமலேயே வைத்திருந்தேன். இருந்தாலும் நீ கர்வப்படலாம். என் அன்பின் சின்னமாக இதை உனக்கே அர்ப்பணம் செய்கிறேன்.''

நான் 'டயரி'யைப் படிக்க உட்கார்ந்தேன். கறையான்களுக்கு இரையான பகுதிகளை அறிந்து கொள்ள முடியாமல் போய்விட்டாலும், மீதிப் பகுதிகள் மூலம் ராகவனின் வாழ்க்கை வரலாற்றைத் தெரிந்துகொண்டேன். பின்பு பயன்படும் என்று, காணமற்போன இடங்களில் குறிப்புகள் எழுதிக் கையொப்பமிட்டு வைத்தேன்.

ராகவனை எண்ணும்போதெல்லாம், அவன் 'டயரி'யை நினைக்காமல் இருக்க முடிவதில்லை; 'பல முறை படித்துவிட்டோமே!' என்ற சலிப்பும் ஏற்படுவதில்லை. இன்றும் படிக்கத் தொடங்கிவிட்டேன். ஏதோ ஒரு புது இலக்கியத்தைப் பயிலும் உற்சாகந்தான் எனக்கு.

* * *

[குறிப்பு: இந்தப் பகுதியிலிருந்துதான் டயரியின் பக்கம் முழுசாக இருக்கிறது. தன் பதினெட்டாவது வயசிலேயே ராகவன் இதை எழுதத் தொடங்கி இருக்கவேண்டும்.—மாதவன்.]

23, ஜூலை: . . . . பல கஷ்டங்கள்! என் மனம் எதிலும் ஈடுபட மறுக்கிறது. இதோ என் தம்பி நந்து விசும்பிக்கொண்டே தூங்குகிறான். எதற்கோ, தெரியவில்லை. வெகு நேரம் அழுதுவிட்டுச் சோர்ந்து போய்த் தூங்கிவிட்டான். என் தங்கையின் தோற்றத்தைக் காணும்போது, எனக்கு இன்னும் வேதனையாக இருக்கிறது. அழுக்குப் பாவாடையும் சட்டையும் அருணாவின் அழுகையைக் குறைத்துவிட முடியாது. வயசுப் பெண்ணுக்கு ஏன் இந்தக் கவலை நிறைந்த தோற்றமும் பார்வையும் அமைய வேண்டும்? விசித்துக்கொண்டே என்னிடம் வந்து சொன்னாள்: ''நந்து ரொட்டி கேட்டான். ஒரு கரண்டி மாவுகூடக் கிடையாது. என்ன சொல்லியும் கேட்கவில்லை. அழுது கொண்டே, பட்டினியாகத் தூங்கிப் போய்விட்டான்.''

இதைச் சொன்னதும் அருணாவுக்கு அழுகை பீறிக்கொண்டு வந்தது. உள்ளே ஓடிவிட்டாள். என் முதுகில் பிழிந்துபோட்ட துணி மாதிரி ஒட்டிக்கொண்டு நந்து தூங்கினான். யார் சங்கடத்தை யார் புரிந்துகொள்ள முடியும்? நந்துவுக்கு அப்பா இறந்த விவரம் தெரியாது. 'எங்கோ போயிருக்கிறார்; திரும்பி வந்துவிடுவார்' என்றுதான் எண்ணிக்கொண்டிருக்கிறான். அருணாவுக்குத் தெரியும்: என்னையும் தாயையும் நம்பித் துயரத்தை மறக்க அவளால் முடிகிறது. நல்லது தான். ஆனால் என் அன்னையோ? பதியையே புகலாகக் கொண்டு வாழும் ஹிந்து ஸ்திரீக்கு இந்த நஷ்டம் சாமானியமானதா? 'துயரம் கறையானைப் போல் திடகாத்திரத்தைக்கூட எப்படிக் குலைத்து விடுகிறது' என்பதை, அம்மாவின் ஒட்டி உலர்ந்து வரும் உடலைக் கொண்டுதான் அறிந்தேன்.

என் தந்தையின் பிரிவால் வீட்டில் எல்லாருக்கும் வேதனைதான். விரஜநந்தன் (விரஜு), நந்து, அருணா, அம்மா - எல்லாருக்கும் நான் இருக்கிறேன் ஆறுதலுக்கு. ஆனால் எனக்கு யார்? வீட்டுக்குப் பெரியவன்—மூத்த பிள்ளை: இந்தத் தகுதிதான் எனக்குத் துர்ப்பாக்கியமாகவோ, பாக்கியமாகவோ வாய்த்துவிட்டது . . .

24, ஜூலை:

சுகம், துக்கம் இரண்டையுமே இழுத்துக்கொண்டு நாட்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன. இன்ப நாட்கள் மயிலைக் காளைகள் பூட்டிய வில் வண்டி மாதிரி வெகு ஜோராக விரைகின்றன; ஆனால் துன்ப நாட்

களோ, சாகக்கிடக்கும் தொத்தல் மோழை மாடுகள்மாதிரி ஊர்வதற்கும் தெம்பு இல்லாமல் நகர மறுக்கின்றன. நாட்கள் எல்லாமே ஏன் ஒரே மாதிரி இருக்கக்கூடாது? டயரியில் ஓர் ஏடு புரண்டுவிட்டது. பெரியவர்கள் வேதாந்தம் பேசுகிற மாதிரி, 'ஒடுக்கத்தை நாடிப் போகும் வாழ்நாளில் ஒரு தினம் தொலைந்தது' என்றுதான் நினைத்துக் கொள்ளுகிறேன்...

தம்பி நந்துவின் நினைவு மறுபடியும் கிளைத்தது. காலையில் எழுந்ததும், சகஜமாகத் தன் காரியங்களை முடித்துக்கொண்டு, புத்தகப் பை, பேனா, மசிக்கூடு எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு நந்து பள்ளிக்கூடத்துக்குக் கிளம்பிவிட்டான். அந்தக் குழந்தையைப் பார்த்த போது, வருங்காலத்தை இழுத்துக் கொண்டு வந்து பார்க்க ஆசைப் பட்டது என் உள்ளம்.

இந்தப் பசும் முளை வளர்ந்து கிளைத்து வலுவாகி அரும்பு வைத்துப் பூத்துப் பிஞ்சாகிக் காயாகிப் பிறருக்குப் பயன் அளிப்பதன் மூலம் தானும் பெருமை கொள்ளும் காலம் ஒன்று வரத்தான்போகிறது. வருமா அப்படி? எதிர்காலம் என்ன திட்டம் போட்டு வைத்திருக்கிறதோ?

வீண் வெகுளி மயக்கங்களை விலக்கி, நந்துவைப் பார்த்துக் குதூகலத்துடன் கேட்டேன். "நம்ம ஹஜரத் ஸாஹேப் எங்கே கிளம்பிவிட்டார்?"

"நான் ஒண்ணும் ஹஜரத் ஸாஹேப் இல்லை. 'பண்டித்ஜி'யாகத்தான் ஆகப் போறேன். ஒழுங்காய்ப் படிக்கணும். தினமும் தவறாமல் படிக்கணும். 'சமத்துப் பையன் அழக்கூடாது; பிடிவாதம் பண்ணக் கூடாது' - அப்படீன்னு அம்மா எனக்குச் சொல்லியிருக்கா." நந்துவின் மழலைக்குத்தான் எவ்வளவு இனிமை! நம்பிக்கையும் உறுதியுமாக அவன் சொன்னதும், நான் பரவசமாகிவிட்டேன். நந்து மேலும் சொன்னான்:

"அண்ணா, நான் அப்பா மாதிரி வித்துவான் ஆகணுமில்லியா? அம்மா அடிக்கடி அழுதுண்டிருக்காளே; ஏன் அண்ணா? நான் கேட்டா, 'நீ சீக்கிரம் பெரியவனாகணும்; நிறையச் சம்பாதிச்சுக் கொண்டுவரணும்'னு சொல்றாள். நம்ம அப்பா இனிமே திரும்பியே வரமாட்டார், இல்லியா? ஏன் அண்ணா?"

என் உற்சாகம் குன்றியது; புன் சிரிப்பு மறைந்தது. நான் - வீட்டுக்குப் பெரியவன், மூத்த பிள்ளை என்று பிறந்திருக்கும் நான் - இன்னும் இறந்துவிடவில்லை. இதற்குள்ளேயே இந்தக் குழந்தையைப் பெரியவனாக்கிச் சம்பாதிக்க வைத்துவிட வேண்டும் என்ற எண்ணம் எதற்கு ஏற்படவேண்டும்? நான் காலை வாரி விட்டுவிடுவேன் என்கிற சந்தேகமா? நான் மூத்தாள் பிள்ளையாகப் பிறந்துவிட்டதற்காகச் சித்தி இப்படி எண்ணுகிறாள் போல் இருக்கிறது. நான் என்றுமே சித்தியை 'மாற்றாந் தாய்' என்று எண்ணியதில்லை. பெற்றவளைப் போலவே, என்னை வளர்த்திருக்கிறாள். நான் மட்டும் நன்றி கெட்டவன் ஆகிவிடுவேனா?

அம்மாவைக் குறை கூறி என்ன? உலக நடவடிக்கைகள் அவளை இப்படிச் சந்தேகிக்கத் தூண்டியிருக்கும். இப்போது நேர்மை, பண்பு எல்லாம் காற்றிலிட்ட கர்ப்பூரம் மாதிரி மறைந்து போய்விடுகின்றன. பிணத்தை மணக்கச் செய்ய, சந்தனக் கட்டைகளைச் சிதையில் வைத்துவிடுகிறார்கள். பிறகு சந்தனத்தைச் சந்தனமாகவா கருதுவார்கள்? அம்மா என்னை நம்பாமல் இருப்பதற்கும் இந்த நிலைதான் காரணம்...

நந்து என் அவசநிலையைக் கண்டு, சுணக்கத்துடன் மௌனமாகத் திரும்பிச் சென்றான். சட்டைப் பையைத் தடவிப் பார்த்தேன். அரையணா இருந்தது. நந்துவைக் கூப்பிட்டு, "சமர்த்து ராஜா நீ. இதைப் பத்திரமாய் வைத்துக் கொள். உச்சிநேரம் கிளாஸ் விட்டதும் ஏதாவது வாங்கிச் சாப்பிடு; என்ன?" என்று சொல்லிக் காசைக் கொடுத்தேன்.

நந்து காசை வாங்கிக்கொண்டான். எதிர்பாராத சம்பவம்போல் தோன்றியதோ, என்னவோ; "அண்ணா, அம்மா சொல்றா,

இனிமே எனக்கு யாரும் காசு கொடுக்க மாட்டாளாம். அப்பா இல்லியோல்லியோ? அதனுலே, நன்னுப் படிச்சு, சீக்கிரமாப் பெரியவனுயிடணும்னு சொன்னு'' என்று சொல்லிவிட்டு, பதிலை எதிர்பார்ப்பவன்போல் ஒரு கணம் நின்ருன். என் வேதனையைப் பார்த்ததும், அவன் போய்விட்டான். நான் தலை குனிந்து உட்கார் திருந்தேன். அருணு அரிசி புடைப்பதற்காகப் போய்க்கொண் டிருந்தாள்.

''அருணு, நீ ஏன் பள்ளிக்கூடம் போகிறதில்லை?'' என்று கேட்டேன்.

ஏமாற்றத்துடன் என்னைப் பார்த்துக்கொண்டு நின்ருள். ஏதோ சொல்ல முயன்ருள்; வார்த்தை வெளிவரவில்லை. அவள் கருத்து எனக்குப் புரிந்தது. 'அப்பாதான் செத்துப் போய்விட்டார்; இனிமேல் என்னைப் படிக்க வைக்க யாருக்கு அக்கறை?'-இதைச் சொல்லாமலே சொல்லிவிட்டது அவளுடைய பார்வை.

''நான் உனக்கு அண்ணன்தான், அருணு! நீ கூடவா என்னை நம்பமாட்டாய்? நீ படிக்கப் போகணும். நான் படிக்க வைக்கிறேன்; நீ போ!'' - நான் உணர்ச்சி வசப்பட்டுப் பேசினதாக அருணுவுக்கும் பட்டிருக்கும். என் சுபாவம் இப்படி. உண்மையை உணர்ந்துகொள்ளும் பிராயந்தான் அருணுவுக்கு. உணரவேண்டுமே!

பகல்போது நிம்மதி இல்லாமலே கடந்தது. சாயந்தரம் நந்து பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பி வந்தான். மசியை முழங்கைவரைக்கும் கொட்டிக் கொண்டு, அடி விழுமே என்ற பயத்துடன் பதுங்கிப் பதுங்கி வந்து சேர்ந்தான். அந்த நிலையில் தம்பியைப் பார்த்தபோது, என் கவலைகளெல்லாம் மறைந்தன.

''இன்னைக்கு நந்து ராஜா நிறையக் கணக்குப் போட்டு முதலார்க்கு வாங்கிண்டு வந்திருக்கார் போலே இருக்கே!'' என்றேன்.

குழந்தை பயத்தை மறந்து, ''அண்ணு, என்னை இனிமே நந்த நந்தன் சர்மான்னுதான் கூப்பிடணும். எங்க சார் அப்படித்தான் என் பேரை எழுதிக்கொடுத் திருக்கார்'' என்ருன்.

நந்துவை அணைத்து முத்தமிட்டேன். உற்சாகம் பொங்க, பள்ளிக்கூடத் தகவல்களையெல்லாம் அபிநயத்தோடு அவன் சொன்னுன். நான் கொடுத்த காசுக்கு வாங்கிச் சாப்பிட்ட பட்டாணிக் கடலை, அதை விற்பவள், தன்னிடம் யாசகம் செய்த சகாக்கள், அவர்களுக்குள் தனக்குப் பிடித்தவனைப் பற்றிய குறிப்பு - இப்படி ரசமான பல விஷயங்களை எனக்கு அறிவித்து விட்டு, அம்மாவிடம் ஓடினுன்.

எனக்கு என் பெருந்தன்மையில் கர்வம் ஏற்பட்டது. மனம் மகிழ்ச்சிப் பெருக்கில் திளைத்தது. எங்கோ பறந்து உல்லாச யாத்திரை செய்வதாகத் தோன்றியது. இதேமாதிரி தினமும் நான் சந்தோஷத்துடன் இருந்துவிட்டால் போதும். இதற்குத்தானே நானும்..

[இதற்கு மேலே பல வரிகளைக் கறையான் அரித்துவிட்டது. பாவம்! ராகவனின் மகிழ்ச்சி அதிகமாகிவிடக்கூடாது என்று சாபமோ என்னவோ? - மாதவன்.]

30, ஜுலை:

தந்தையின் அறைக்குள் போய் உட்கார்ந்தேன். மனநிம்மதி இல்லாதபோதெல்லாம் எனக்கு இந்த இடந்தான் அடைக்கலம். அது ஒரு தவசியின் சாதனைக்கூடம் மாதிரி இருந்தது. நானும் அந்த நிலைக்கு உயரவேண்டுமென்று ஆசைப் பட்டதுண்டு.

தந்தை காலமான பிறகு, அவருடைய சாமான்களை யாரும் தொடுவது கிடையாது. எல்லாம் வைத்தபடியே இருந்தன. அவைகளை எடுத்துப் பார்க்க வேண்டுமென்று ஆவல்தான். ஆனுல், என் கை பட்டதால் அவைகளின் புனிதத் தன்மை போய்விடுமோ என்ற அச்சமும் கூடவே எழுந்தது.

சுவரில் பொருத்திய அலமாரியில் கட்டுக் கட்டாகப் புத்தகங்கள் காட்சி அளிக்கின்றன. ராமாயணத்தில் பல புத்தகங்கள், மகாபாரதம், ஹரிவம்சம், வேதம், புராணம், உபநிஷத் - இப்படிப் பல உயர்ந்த நூல்கள். பிற தட்டுக்களிலும் வேதாந்தம், இலக்கணம், இலக்கியம், விஞ்ஞானம், சாஸ்

திரம் என்று பல பிரிவைச் சேர்ந்த பெரிய பெரிய புத்தகங்கள் நிறைந்திருந்தன. இத்தனையையும் ஒரு நபர் படித்திருக்கிருர்! இவை எல்லாம் எவ்வளவு உயர்ந்த நூல்கள்! இத்தனையையும் ஆழ்ந்து படித்த என் பிதா பெரிய மகான்தான். அவருடைய அறிவுத்திறன் சாமானியமாகவா இருந்திருக்கும்? அவருக்குப் பிள்ளை என்று நானும் வந்து பிறந்திருக்கிறேனே!

பயபக்தியுடன் கட்டுக்களை அவிழ்த்துப் புத்தகங்களை எடுத்துத் தரிசித்தேன். என் பிதா படித்து அறிந்துகொண்ட வரிகள்! ஒவ்வோர் அட்சரமும் உயிர் பெற்று அவரோடு உரையாடியிருக்கும். ஆனுல் எனக்கோ?..ஞானக்கடலின் கரையில் நிற்கிறேன்.ஒரு கையளவு கூட அதில் அள்ளி எடுத்துப் பருகத் தகுதியற்றவன் - திறமையற்றவன் நான்.

இரவு பதினெரு மணிவரைக்கும் பித்துப் பிடித்தவன் போல் உட்கார்ந்திருந்தேன். அப்பா, அம்மா, அருணு, விரஜு, நந்து எல்லாரும் மாறி மாறி வந்து என் சிந்தனையைத் தீவிரமாக்கினுர்கள். ஒவ்வொருவரோடும் பேசிக்கொண்டிருப்பதுபோல் பிரமை.சில சமயம் வாய் விட்டுக்கூடப் பதில் சொல்லி விட்டேன். தூக்க உளறல் என்று நினைத்துக்கொள்வாள் அம்மா.

அன்று நடுப்பகலில் நடந்த விஷயம் நினைவுக்கு வந்தது. உச்சி வெயில் தகித்துக்கொண்டிருந்தது. விரஜு, நந்து இருவரும் சண்டை போட்டுக்கொண்டே வெயிலில் விளையாடினுர்கள். கூச்சல் சகிக்க முடியவில்லை. அப்பா அறையிலிருந்த நான் எதிரே பிரம்பைப் பார்த்தேன். அவர் இருந்தபோது, மதயானையை அடக்கும் மாவெட்டி போல, எங்கள் கொட்டத்தை நிறுத்த அந்தப் பிரம்புதான் பயன்பட்டு வந்தது. அதைக் கண்டதுமே என் தம்பிகள் 'நல்ல பிள்ளை'கள் ஆகிவிடுவார்கள்.

பிரம்பை எடுத்துக்கொண்டு வாசலுக்கு வந்தேன். விரஜுவின் விஷமம் கொஞ்ச நாட்களாக அதிகரித்திருந்தது. பிரம்பும் கையுமாக என்னைப் பார்த்ததும் அவன் கை கொட்டிச் சிரித்தான். பயந்து அடக்கமாக இருப்பான் என்று நான் எதிர்பார்த்ததற்கு விரோதமாக அவன் என்னை அவமதிக்கவே, ஆத்திரம் பொங்கியது. பிரம்பாலேயே விரஜுவை நாலு இழுப்பு இழுத்துவிட்டேன். அவன் உடம்பெல்லாம் அடித்தழும்புகள் வரி வரியாகத் தடித்தன. கண்ணீர் துளும்பியதோடு சரி; வாய்விட்டு ஒரு சொல்கூட வெளி வரவில்லை. பதினுன்கு வயசுப் பையனுக்கு இப்படி அழுத்தமாக இருக்க முடிந்ததே என்பதை நினைக்கும்போதெல்லாம், எனக்குத் தலையிறக்கமாக இருக்கிறது. 'அடிக்க மட்டுந்தானே உனக்கு உரிமை? மூத்த பிள்ளை, வீட்டுக்குப் பெரியவன் என்றுல், நீயும் அப்பா மாதிரி ஆகிவிடுவாயா? இளையாளுக்குப் பிறந்தவன் நான்; வயசிலும் வலுவிலும் சின்னவன். அடி வாங்காமல் இருக்க முடியுமா?...' விரஜுவின் கலங்கிய கண்கள் இதைத்தான் சொல்லிக்காட்டின.

பகல்பொழுது எப்படியோ கழிந்தது. அம்மா தனியாக இருக்கும் போது, நந்து அவளிடம் சென்று விரஜு அடிவாங்கிய தகவலைச் சொன்னுன். அம்மா பெருமூச்சு விட்டாள். "அப்பாகூட அடிச்சது கிடையாதம்மா; அண்ணன்தான் இன்னிக்குப் பிரம்பாலே அடிச்சுது." - குழந்தை நந்துவுக்கு இவ்வளவு உள்ளத்தாபம் இருக்குமென்று நான் நினைக்கவில்லை.

அம்மா விரஜுவைக் கூப்பிட்டு விசாரித்தாள். "என்னை அண்ணன் அடிக்கவே இல்லியே. இதுவரையிலும் என்னைக்காவது அடிச்சு நீ பார்த்திருக்கிருயா?" என்று திருப்பிக் கேட்டான் விரஜு.

அம்மா மட்டுமல்ல, பக்கத்து அறையில் இருந்த நானும் பிரமித்துவிட்டேன். பொய் சொன்னுலுங்கூட, என் தம்பி என்னைவிடப் பெரியவன் என்பதைக் காட்டி விட்டான். அண்ணன் என்கிற பாத்தியதை அந்த இளம் உள்ளத்தில் வேர் விட்டிருக்குமோ? நான் உரிமையை வழி பிசகிப் பயன்படுத்திவிட்டேன். என் வேதனை மேலும் அதிகரித்தது.

இரவு நான் சாப்பிடவில்லை. அம்மா அருணவை அனுப்பினாள். அறையில் இருட்டு. தங்கை பயந்து கொண்டு திரும்பிவிட்டாள். பிறகு அம்மாவே வந்தாள். ''ரகு, உனக்கில்லாத உரிமை இங்கே யாருக்கு? வீட்டுக்கு மூத்தவன். அடிக்கவும் அணைக்கவும் உனக்குப் பாத்தியதை உண்டு. உன்னை நம்பித்தானே நாங்கள் இருக்கிறோம். வீணுக்கு மனசை ஒடித்துக்கொண்டு கிடக்காதே! சாப்பிட வா'' என்றாள்.

நான் செய்த பிசகுக்கு அம்மா என்னைத் திட்டியிருந்தால் எவ்வளவோ சந்தோஷப்பட்டிருப்பேன். தாய் இனத்துக்கே பொறுமை ஒரு பூஷணமாக அமைந்திருக்கிறதே! என் அம்மா மட்டும் ஏன் விதிவிலக்காக இருப்பாள்? இந்த மன்னிப்பே எனக்கு நல்ல தண்டனைதான். அழுகை நெஞ்சை அடைக்கிறது. தொலையட்டும்; இன்று இரவு முழுவதும் குமுறி அழுதே தொலைத்து விடுகிறேன்..

11, ஆகஸ்ட்:

[பல பக்கங்களைக் கறையான் விழுங்கிவிட்டது. இதைப் பார்க்கும்போது என் கண்கள் கலங்குகின்றன. ராகவனின் நிதியைப் பாழாக்கிவிட்ட இழிந்தவன் நான். ரகு, என்னை மன்னித்துவிடு.—மாதவன்.]

...எதைக் கண்டாலும் வெறுப்பு ஏற்படுகிறதே, ஏன்? காதல் விவகாரமே இப்படித்தான். அவளும் நானும் பேசாமலே பேசிக்கொண்டோம். எத்தனையோ எண்ணப் பரிவர்த்தனைகள். பார்வையாலேயே பேசும் திறமை பெண்களுக்கு அமைந்திருப்பது மாதிரி வேறு எந்த இனத்துக்கும் அமையவில்லை. பதில் அளிக்கிற பாவனையில் நானுந்தான் அவளைப் பல முறை நோக்கினேன். என் உள் நோக்கங்களை அவள் ஊகித்துக் கொண்டிருப்பாள்.

ஒரு வாரமாக அவளைப்பற்றிய நினைவு அதிகமாக ஏற்படுகிறது. அவள் என்னை மறந்துவிட்டாள். அவளும் இதே மாதிரி என் பேரில் குற்றம் சுமத்தலாம். நான் மறக்க முடியும் என்பதை என்னால் நம்ப முடியாது. என் அன்பு - ஏன் இந்த அல்பத்தனம்? - எங்கள் காதல் அவ்வளவு பலவீனமென்று யாரும் கூற முடியாது. யார் தெரிந்து கொள்ளப் போகிறார்கள்? தெரிந்து தான் லாபம்?....

[ரகுவின் காதலையும், காதலியையும் வேறு யாரும் தெரிந்துகொள்ளக் கூடாது என்று சாபமோ என்னவோ, உருத்தெரியாமல் வரி வடிவங்கள் அழிந்துவிட்டன.

—மாதவன்.]

....அழுதுகொண்டிருந்தான். ''விரஜா, ஏன் அழறே?'' என்று கேட்டேன்.

''அண்ணு, நம்ம பசுமாடு....'' மேலே பேச முடியவில்லை. விக்கி விக்கி அழுதான். விளையாடிவிட்டு வந்ததும் அவனுக்குச் செய்தி கிடைத்திருக்கிறது. வீட்டுக்கு உறுதுணையாக இருந்த பசுமாடு இறந்துவிட்டது. 'கோமதி!' என்று அழைத்ததும், விடுவிடு என்று உள்ளே வந்துவிடும். காமதேநு மாதிரி குடும்பத்தைக் காப்பாற்றி வந்த கோமாதா போய்விட்டாள். அம்மா இழவுக் குரல் பாய்ச்சி அழுதாள்; குழந்தைகள் கேவிக் கேவி அழுதன. என் கண்ணீர் வற்றவில்லை. கோமதியை யாரும் மிருகந்தானே என்று எண்ணியதில்லை. எங்களைக் கண்டுவிட்டால் அதற்கு ஏற்படும் பரிவு இவ்வளவு அவ்வளவு இல்லை! ''பசுவுக்கு இருக்கிற பிரியம் - பண்பு கூட - மனிதர்களுக்குக் கிடையாது'' என்று அப்பா அடிக்கடி சொல்லுவார்.

அப்பாவுக்குக் கோமதியிடம் உயிர். அவர் போன தினத்திலிருந்து ஒரு வாரம் வரையில் கோமதி தீனி தின்னவில்லை. அப்பா நினைவு இழப்பதற்கு முன்பு சொன்ன வார்த்தைகளை மறக்க முடியுமா? ''எனக்குக் கோதானம் செய்ய வேண்டுமென்று, யாராவது கோமதியைத் தானம் செய்தீர்களோ, என் நெஞ்சு வேகாது. எனக்குக் கோதானமே வேண்டாம். என் குழந்தைகளைப் பேணி வளர்க்கக் கோமதி நம் வீட்டோடுதான் இருக்கவேண்டும்.''

அப்பாவின் ஆசைகளில் மண்ணை வாரிப் போட்டுவிட்டுப் போய் விட்டாள் கோமதி! தம்பி அழுது கொண்டு நிற்கிறான். என்ன ஆறுதல் சொல்லுவது?

''விரஜூ, அழாதேடா கண்ணு! கோமதி போய்விட்டால், பால், தயிர், நெய் எல்லாமே போய் விட்டதாக நினைக்க வேண்டாம். புதுக் கோமாதா வாங்கி வரலாம்: நீயும் கூட வாயேன்!''

குழந்தையைத் தேற்றுவது போல், விரஜூவுக்கு ஆறுதல் சொன்னேன். எப்போதுமே முன் யோசனை இல்லாதவன் நான். விரஜூ அந்த நிலையைக் கடந்தவன். பார்வையாலேயே அதை எனக்கு உணர்த்திவிட்டான்.

பிறகு ஒவ்வொருவருக்கும் ஆறுதல் சொல்ல வேண்டி யிருந்தது. கடைசியில் நானும் அம்மாவுந் தான் துயரத்தை மறக்க முடியாமல் புழுங்கிக்கொண் டிருந்தோம். துக்கம் விசாரிப்பது, ஆறுதல் சொல்லுவது எல்லாம் சம்பிரதாயமாகிவிட்டன; மேலும், அது வெகு சுலபம். துயரத்தின் வேகத்தை அடக்குவதோ ஒதுக்குவதோ எளிதென்று எனக்குத் தோன்றவில்லை.

என்ன செய்வது? எல்லாம் என் போதாத காலம். முன் வினைப் பயன்கள் இப்படி என்னைப் பழி வாங்கிக் கொண் டிருக்கின்றன. நான்தான் அபராதி. என்னை எல்லாரும் குறை கூறலாம். ஆனல் நானே?..

17, ஆகஸ்ட்:

குத்திட்டு வைத்த செங்கல்களின் வரிசையில், முதல் கல் சாய்ந்துவிட்டால், பிறகு சடசடவென்று பக்கத்துக் கற்களும் சாய்ந்துவிடுமே, அந்தக் காட்சி தான் எனக்கு நினைவு வருகிறது. அப்பா போனர்; குடும்பமே கலகலத்துவிட்டது. அம்மா சொல்லுவது மாதிரி, ஓடித் திரியும் பிராயத்தில் வீட்டுப் பொறுப்புப் பெரும் பளுவாக என் தலைமீது வந்து சேர்ந்தது. இருபதாவது வயசில் எனக்கு இப்படி ஒரு சோதனை! படிப்புப் போயிற்று; நிம்மதி குலைந்தது; சிறு காரியம் நிகழ்ந்தாலும் முன்னும் பின்னும் வருத்தும் குழப்பநிலை ஒட்டிக்கொண்டது. எதிலும் வெறுப்பு; எதற்கெடுத்தாலும் சந்தேகம்! பெருந்துணையாக இருந்த கோமதி, எங்கள் குடும்பத்தைத் தவிக்கவிட்டுச் சென்றது.

இப்போது ஸ்ரீ நந்தனின் வளர்ப்பு நாய் செத்துவிட்டது. நந்துவை 'ஸ்ரீநந்தன்' என்றுதான் அழைக்க வேண்டுமாம்! அவன் எல்லாருக்கும் உத்தரவு போட்டிருக்கிறான். பழைய பெயரைச் சொல்லி அழைத்தால் அவன் பதில் அளிப்பதில்லை; கோபம் வேறு வந்து விடுகிறது. நியாயந்தானே; பதினேழு வயசாகிவிட்டது. சின்னப் பெயர் சொல்லி அழைக்கக்கூடாது தான்.

நாய்க்குக் 'காட்டான்' என்று ஸ்ரீநந்தன் பெயர் வைத்திருந்தான். அன்புக்கும் நன்றிக்கும் எடுத்துக்காட்டான பிராணி அது. தரம் அறிந்து, சமயம் அறிந்து பழகிக்கொண் டிருந்தது. அப்பாவிடம் அது குழையும் தினுசே அலாதி தான். அவர் கடைக் கணக்கை முடித்துவிட்டு, ராத்திரி எந்த நேரத்தில் வந்தாலும் சரி 'காட்டான்' காத்து நிற்கும். அவரும் அதற்கு ஏதாவது தின்னக் கொடுக்காமல், உள்ளே நுழைய மாட்டார். நந்துவைச் சீண்டுவதற்கு நாய்தான் கருவியாக இருக்கும்.

அன்புக்காக எதையும் பொறுத்துக்கொள்ளும் அந்த ஜீவனை மறக்க முடியவில்லையே! ஒரு சமயம் நந்து அதை நையப் புடைத்து விட்டான். துரத்தி அடித்து வெளியேற்றினன். 'காட்டான்' வெகு நேரம் வரைக்கும் திரும்பவில்லை. அப்பா வந்ததும் அதைத் தேடினர். விஷயத்தை அறிந்ததும் அவருக்கு வேதனையாக இருந்தது. அன்று அவர் சாப்பிடாமலே படுத்துக்கொண்டார். நந்துவும் சாப்பிடவில்லை. அவனுடைய கால்மாட்டில்தான் தினமும் அந்த நாய் படுத்துக் கிடக்கும். நடு ராத்திரி வரைக்கும் நந்துவுக்குத் தூக்கம் வரவில்லை. படுக்கையைச் சுருட்டி எடுத்துக்கொண்டு அப்பாவிடம் போனன். அவர் பக்கத்தில் 'காட்டான்' படுத்துக்கொண் டிருந்தது.

எப்படி வந்தது, எப்போது வந்தது என்று யாருக்குமே தெரியாது. அதைத் தடவிக் கொடுத்தான் நந்து. ரோஷத்தையெல்லாம் விட்டு அந்த ஜீவனும் வாலைக் குழைத்துக் கொண்டு நந்துவை உராய்ந்தது.

இன்று, இப்படிப் பல நினைவுகளைக் கிளப்பிவிடும் பழம்பொருளாகிவிட்டது அந்தப் பிராணி. பதினேழு வயசுப் பையனாகியும், நந்து - இல்லை, ஸ்ரீ நந்தன் - பிரிவாற்றாமையால் பலமாக அழுகிறான். பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது.

இப்படி நிம்மதி குலைந்து எத்தனை இரவுகளோடு நான் போராட வேண்டுமோ, தெரியவில்லை.

....இன்று அப்பாவுக்கு மாசத் திதி. ஏன்தான் இந்தத் திதி, சிராத்தம் எல்லாம் கொண்டாடுகிறார்களோ? மறக்க வேண்டிய துக்கத்தை மேலும் அதிகப்படுத்திக் கொள்ளவா? போனவர்களின் ஆத்மா திருப்தி அடைவதற்கு என்கிறார்கள். அப்படி எண்ணிக் கொண்டு நாம் திருப்தி அடைகிறோமே, அதுதான் கண்ட பலன்!

அப்பா காலமாகி மூன்று மாதங்கள் ஓடிவிட்டன. இன்னும் துக்கம் விசாரிக்க வரும் அபிநய அநுதாபிகளின் உபத்திரவம் ஓயவில்லை. அம்மாவை நன்றாக அழவைத்து விடுகிறார்கள். இவர்களுடைய குரலை மாற்றிக்கொண்டு, விசித்து அழுவது மாதிரி பாசாங்கு செய்ய வேண்டியதுதான். அது உண்மையான அநுதாபம் என்று நம்பி அம்மா புலம்பத் தொடங்கி விடுகிறாள்.

'மாஸ்யம்' என்ற பெயரில் முதல் வருஷம் முழுவதும் இறந்த தினத்தை நினைவாகக் கொண்டாட வேண்டுமாம். எதற்காக நினைக்க வேண்டுமோ? பிறகு வருஷத்துக்கு வருஷம் மட்டும் ஒரு நாள் 'சிராத்தம்' செய்தால் போதுமாம்! அழுகைக்கும் அநுதாபப்படுவதற்குமா கட்டுப்பாடு, சட்டம் எல்லாம்!....

..அப்பா ராத்திரி திரும்பிவரும் நேரம் இது. எனக்குத் தூக்கம் வரவில்லை. 'டயரி' முழுவதும் எழுதியபாடில்லை. எதிலும் மனம் செல்ல மறுக்கிறது. பாவம்! அம்மா மருகிக்கொண்டிருக்கிறாள். உடல் வெளிறி, மெலிந்து வருகிறது. அடிக்கடி கமறிக் கமறி வறட்டு இருமலாக இருமுகிறாள். சொன்னால் கேட்பதில்லை. இதோடு விடியற்காலையிலேயே கங்கா ஸ்நானத்துக்குக் கிளம்பிவிடுகிறாள். முன்பு அம்மா எவ்வளவு தெம்பாக இருந்தாள்! அந்தப் பொலிவு இப்போது முகத்தில் காணவில்லையே!

..பழைய நினைவுகள் என்னைச் சூழ்ந்துகொண்டு வதைக்கின்றன. ஒரே இரைச்சல், கூச்சல், ஆரவாரம்! சகிக்க முடியாத அவல ஓலங்கள்; என் உள்ளத்தில்தான் இத்தனையும்..

அப்பா, என்னை ஏன் இப்படித் தவிக்கவிட்டுச் சோதனை செய்கிறீர்கள்?

29, ஆகஸ்ட்:

..வரவரக் கஷ்டங்கள் அதிகமாகிக்கொண்டுதான் இருக்கின்றன. எதற்கென்று வருத்தப்படுவது? அப்பா போனதிலிருந்து குடும்பம் நடத்துவதே பெரும்பாடாகிவிட்டது. நானும் வேலைக்காக எங்கெங்கெல்லாமோ அலைந்து பார்த்தேன். பட்டதாரிகளே தவிக்கும்போது, அரைகுறைப் படிப்பாளியைச் சீந்துவார் யார்?

விரஜுவின் குணம் மோசமாகிக் கொண்டிருக்கிறது. பிடிவாதம், அழும்பு, ஆத்திரம் எல்லாம் அவனுக்குக் குழந்தைப் பிராயத்திலேயே அதிகம். இப்போது அவை உக்கிரமாகி வருகின்றன.

ஒரு நாள் அம்மாவிடம் வழக்கமான அதட்டலோடு காசு கேட்டான்.

''என்னிடத்திலே காசு இல்லை.'' அம்மா உண்மையைத்தான் சொன்னாள்.

விரஜு நம்பவில்லை. மேலும் பிடிவாதம் செய்தான். அம்மாவுக்கு எரிச்சல் வந்தது.

''அப்பா சம்பாதித்துக்கொண்டு வருகிறாரா? இல்லை, சம்பாதித்துக் கொட்டி வைத்துவிட்டுப் போயிருக்கிறாரா?'' என்றாள்.

விரஜு காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை; தன் ரோதனத்தை விடவில்லை. 'இவ்வளவு

அழுத்தமா இவனுக்கு?' என்று ஆத்திரம் ஏற்படக்கூடியதுதான். அம்மா பொறுமை இழந்தாள்.

யாராவது கோபித்துக்கொண்டால் தன் பிடிவாதத்தை அதிகமாக்கிக்கொள்வான்; விரஜுவின் குணம் இது. நான் இரைந்து அவனைக் கூப்பிட்டேன். பதில் இல்லை. சிறிது நேரத்துக்குப் பிறகு, என் அறையைத் தாண்டிப் போனான்.

''விரஜு!''

வெகு அலட்சியமாக, மறு பக்கம் பார்த்துக்கொண்டு நின்றான். எனக்கும் ஆத்திரந்தான் வந்தது. இந்த வயசிலேயே இப்படிப் பெரியவர்களை உதாசீனம் செய்து பழகிவிட்டால், போகப் போக எப்படி ஆவானோ?

''விரஜு, உன்னைக் கூப்பிட்டது நான்தான்; தெரியு மில்லையா?'' - சற்று அதட்டலாகவே சொன்னேன்.

''என்ன அண்ணு? ஏதாவது வேலை இருக்கிறதா?'' குரலில் சலிப்பு, பார்வையில் அலுப்பு; பேசித் தொலைக்க வேண்டுமே என்கிற கட்டாயந்தான் அவனைப் பேச வைத்தது.

''ஏன் இப்படி வரவர மோசமாகிக்கொண் டிருக்கிருய்?'' என்று கேட்டேன்.

அவன் பேசவில்லை. நானும் மௌனமாக இருக்கவே, அவன் போய்விட்டான்.

மறு நாளும் விரஜு அம்மாவிடம் காசு வேண்டுமென்று பிடிவாதம் பிடித்தான். அம்மா நயமாகவும் பயமாகவும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள்; அவன் கேட்கவில்லை.

''உன் அப்பாகிட்டப் போய் அழு!'' - அம்மா ஆத்திரத்தில் சொல்லிவிட்டாள். உடனே முகத்தை மூடிக்கொண்டு அழுதுவிட்டாள். விரஜுவை வழிக்குக் கொண்டுவர, அம்மாவின் கண்ணீருக்குத்தான் சக்தி உண்டு. அவன் பிறகு அங்கே நிற்கவில்லை.

இப்படி எத்தனையோ நிகழ்ச்சிகள். தினமும் ஏதாவது ஒன்று புயல் மாதிரி வீசி, என் அமைதியற்ற மனத்தை மேலும் குலைத்துவிட்டுப் போகும். என் நல்ல காலந்தான், விரஜுகூட நல்ல பிள்ளையாக மாறி வருகிறுன் என்று பெருமைப் பட்டுக்கொண் டிருந்தேன். அதையும் பொய்யாக்கி, என்னைத் தலை குனிய வைத்துவிட்டது விதி.

அன்று ஒரு நண்பர் வீட்டி லிருந்து கொஞ்சம் பட்சணம் வந்திருந்தது. வீட்டில் விரஜு இல்லை. மற்றவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்துவிட்டாள் அம்மா. 'மூடி வைத்தால் கெட்டுப் போகும். மேலும், ஒப்புக்குச் செய்த கல்யாணப் பட்சணம்; சாப்பிடாததால் குறை ஒன்றும் இல்லை' என்ற எண்ணந்தான் அம்மாவுக்கு.

சாயந்தரம் விரஜு வீட்டுக்கு வந்ததும், நந்துவின் வாயிலாக இந்தச் செய்தி வெளியாயிற்று. பேய் பிடித்தவன் மாதிரி கிளம்பி விட்டான் விரஜு. அம்மாவின் எதிரில் போய்க் கூச்சலிட்டான். அவளுக்கு இந்தச் சின்ன விஷயம் நினைவுகூட இல்லை.

''ஏது பட்சணம்? யார் பண்ணினது இங்கே?'' என்றுள்.

''நீங்கள் எல்லாரும் வயிறு புடைக்கத் தின்னவில்லையா, காலையில்? எனக்குமட்டும் ஏன் கொடுக்கவில்லை? எனக்கு இப்போது பட்சணம் வேண்டும்; கொண்டு வா!''

மகனின் குரலைக் கண்டு அம்மா பயந்துவிட்டாள். இந்த அல்ப விஷயத்துக்கு ஒரு பையன் இவ்வளவு ஆத்திரப்படுவான் என்று அவளுக்குத் தெரியாது.

விரஜு மேலும் மேலும் கத்திக் கொண் டிருந்தான். அவன் தானே ஓய்ந்துவிடுவான் என்று அம்மா எதிர்பார்த்தாள். ''நீங்களெல்லாரும் தின்னவில்லையா? என்னை மட்டும் ஏன் வஞ்சனை பண்ணவேண்டும்? என்னைக் கண்டால் இந்த வீட்டிலே யாருக்குமே பிடிக்கவில்லை. எனக்கு இப்போது பட்சணம் வேண்டும்!'' இதையே பல உருவங்களில் சரமாரியாகப் பொழிந்துகொண் டிருந்தான்.

அம்மா ஓங்கி ஓர் அறை வைத்துவிட்டாள். அடியை வாங்கிக் கொண்ட பின்பும், விரஜு தான் சொன்னதையே சொல்லிக் கொண் டிருந்தான். அம்மாவுக்குப் பொறுக்கவில்லை. மேலும் அடிக்

கத் தொடங்கிவிட்டான். அந்தச் சப்தத்தைக் கேட்டு, நான் ஓடி வந்தேன். விரஜுவை அணைத்து என் அறைக்கு இழுத்தேன். அவன் நகரவில்லை. அம்மா அழுதுவிட்டாள். விரஜு அடங்கவில்லை.

'என்னை யாரும் கொஞ்ச வேண்டாம். எல்லாரும் சேர்ந்து என்னைக் கொன்றுபோடுங்கள். அப்பா போனதும், நானும் போயிருக்க வேண்டும். இனிமேல் எனக்கு இந்த வீட்டிலே வாழ என்ன உரிமை? எல்லாரும் என்னை முடிந்தவரை அடியுங்கள். அடி வாங்கியே நான் செத்துப் போகிறேன்.''

அவன் குரலில் மேலோங்கியிருந்த கொடுமை எங்களைச் சித்திரவதை செய்தது. நான் அவனை விட்டுவிட்டேன். திரும்பிப் பார்க்காமல் விரஜு போய்விட்டான். அன்று முழுவதும் என் மனம் பட்ட பாடு!

மறு நாள் ஒரு நண்பனிடம் பணம் வாங்கிக்கொண்டு கடைத் தெருவுக்குப் போனேன். பட்சணக் கடைக்குச் சென்று உயர்ந்த ரகமான பட்சணங்களாகப் பொறுக்கி வாங்கிக்கொண்டு வந்தேன். 'குல்தானு', 'பர்பி' இரண்டும் விரஜுவுக்கு மிகவும் பிடித்தவை; அவனுக்கென்றே அவைகளில் கொஞ்சம் அதிகமாக வாங்கினேன். பட்சணப் பொட்டலத்துடன் நான் வந்திருக்கும் செய்தி, வீட்டில் பரவியது. எல்லாரும் என்னைச் சூழ்ந்துகொண்டார்கள். விரஜுவை மட்டும் காணவில்லை.

''தம்பி எங்கே? நான் வரும் போது உள்ளே இருந்தானே! விரஜு! விரஜு!!'' நானும், தொடர்ந்து மற்றவர்களும் குரல் கொடுத்தோம். பதில் இல்லை. பல அறைகளிலும் போய்ப் பார்த்தார்கள். விரஜு அகப்படவில்லை. ''அவன் வந்த பிறகுதான் எல்லாருக்கும் பட்சணம் கிடைக்கும்'' என்று சொல்லி, பொட்டலத்தைக் கட்டி வைத்துவிட்டேன்.

இரண்டு மணி நேரம் கழித்து, தூங்கி எழுந்தவன் மாதிரி விரஜு கூடத்துக்கு வந்தான். ''எங்கே இருந்தாய், இவ்வளவு நேரமாக?'' என்றேன்.

''நடு அறைக்குள்தான்.''

''நான் உரக்கக் கூப்பிட்டேனே; ஏன் பதில் சொல்லவில்லை?''

''காதில் விழுந்தது. இஷ்டமில்லை; பதில் சொல்லவில்லை.'' அவன் குரலில் தொனித்த அலட்சியம் என்னை ஒரு கணம் குன்றச் செய்தது. முன்பு ஒரு சமயம், வீண் ஜபர்தஸ்துக்காக அவனை அடக்கும் தோரணையில் பிரம்பால் அடித்தது நினைவுக்கு வந்தது. அந்த வன்மத்தை விரஜு இன்னும் மறக்கவில்லை போல் இருக்கிறது.

குழந்தைகளின் உள்ளத்தை அறிவது மிகவும் கடினந்தான். மனத்தத்துவ அறிவுடன் பழகவேண்டும்; வளர்க்க வேண்டும். நல்ல குழந்தைகளைக் கெட்டவர்கள் ஆக்குவதும் கெட்டவர்களைத் திருத்தி நல்வழிக்குக் கொண்டு வருவதும், வளர்க்கும் விதத்தில்தான் இருக்கின்றன. நாங்கள் யாரும் விரஜுவைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை; அவனுடைய மென்மையான குணத்தை நசுக்கிவிட்டோம். அது அடியோடு நசித்துவிட்டதோ? இந்தப் பயமே என்னையும் அம்மாவையும் சில நாட்களாக வதைக்கிறது. 'இனி இவனை எப்படி வழிக்குக் கொண்டு வருவது? கொண்டு வர முடியுமா?' நான் மனக்குழப்பத்தை மறைத்துக்கொண்டு, அவனிடம் வேறு விதமாகப் பேச்சுக் கொடுத்தேன்:

''உனக்காகத்தான் நான் பட்சணம் வாங்கி வந்திருக்கிறேன். அம்மாவிடத்திலே போய் வாங்கிக் கொள்ளேன்.''

''எனக்கு அது விஷம் மாதிரி. நான் வாங்கிக்கொள்ள மாட்டேன்.'' எனக்கு முதுகைக் காட்டிக் கொண்டு பதிலளித்தான் அவன்.

''விஷமோ அமிர்தமோ, எதுவானாலும் சரி; நான் உனக்காக வாங்கிக்கொண்டு வந்திருக்கிறேன். நீ சாப்பிட்டாக வேண்டும்.'' எவ்வளவு அடக்கியும், என் குரல் ஆத்திரத்தை வெளிப்படுத்தி விட்டது.

விரஜு என்னைத் திரும்பிப் பார்த்தான். அந்தப் பார்வையில் தான் எவ்வளவு குரோதம்!

"சரி!" என்று சொல்லிவிட்டு அம்மாவிடம் சென்ருன். அவன் நிலையைக் கண்டதும் அம்மாவுக்கு நா எழும்பவில்லை. ஏதேதோ சொல்லத் திட்டமிட் டிருந்தாள். முதல் நாள் சம்பவம் அவளை வதைத்துக்கொண் டிருந்தது. பெற்ற பிள்ளையிடம் எப்படி மன்னிப்புக் கேட்பது? அணைத்து, அன்பாகப் பேசித் தன் இதயதாபத்தைக் குறைத்துக்கொள்ளலாம் என்று தீர்மானித்திருந்தாள். சிடுசிடுப்புடன் வெறுப்பே உருவாக நின்ற மகனைக் கண்டதும் அவளுக்கு வாயடைத்துவிட்டது. பயம் வேறு காரணம். அவன் பங்கு பட்சணத்தைத் தட்டில் வைத்துக் கையில் கொடுத்தாள்.

தட்டை ஏறெடுத்துப் பார்க்காமலே, தாழ்வாரத்துப் புரையில் வைத்துவிட்டு அவன் வெளியே புறப்பட்டான். எனக்குப் பொறுமை எல்லை கடந்துவிடுமோ என்ற பயம். நிதானத்துடன் கேட்டேன்: "இப்போது உனக்கு என்ன வந்துவிட்டது? அங்கே ஏன் வைத்துவிட்டுப் போகிருய்?" என்றேன்.

"எனக்கு இப்போது பசி இல்லை. அப்புறம் சாப்பிட்டுக் கொள்ளுகிறேன்." - பொய் என்பதை அவன் சொன்ன தோரணையே எடுத்துக் காட்டியது.

நான் மேலே எதுவும் பேசவில்லை. எதற்கும் உரிமை இல்லாதவன் நான். என்னை எல்லாரும் வெறுக்கலாம்; நான் மற்றவர்களிடம் அன்பு காட்டினுலும் அது வெறுப்பாகத்தான் படும்.

விரஜு அந்தப் பட்சணத்தைப் பிறகு தொட்டுக்கூடப் பார்க்கவில்லை. எலி இழுத்துக்கொண்டு போனது போக, மீதியை அருணு குப்பையில் கொண்டு போய் எறிந்தாள். விரஜுவுக்கு இவ்வளவு கொடுமை பாராட்ட எப்படித் துணிவு வந்ததோ தெரியவில்லை! அவனுல் எங்கள் கவலை அதிகரித்தது. அம்மா எதற்கென்று அழுவாள்? நான்தான் யாருக்குப் பரிவது? கெஞ்சினுல் மிஞ்சுகிருன்; மிஞ்சினுல் மேலும் மோசமாகி விடுகிருன்! வயசு வந்த பையனை அடக்கி ஆள்வது எவ்வளவு கஷ்டம் என்பதை நன்ருக எங்களுக்கு விரஜு உணர்த்திவிட்டான்.

வேதனையை மறக்க 'டயரி' எழுதும் வழக்கத்தைத் தொடங்கினேன். ஆனுல், அதுவே வேதனையை வளர்க்கும் ஊற்ருகிவிட்டது.

ஒரு நாள் விரஜு வீடு திரும்பிய போது, அவனுடைய புத்தகங்களைச் சின்னத்தம்பி நந்து புரட்டிப் பார்த்துக்கொண் டிருந்தான். இதைக் கண்டதும் விரஜுவுக்கு ஆத்திரம் பீறிக்கொண்டு வந்துவிட்டது. புத்தகங்களை வாரி எடுத்துச் சுக்குச்சுக்காகக் கிழித்து நந்துவின் தலையில் எறிந்தான். நந்து அழத் தொடங்கிவிட்டான். ஆத்திரம் வெறியாகி, விரஜு அவன்மேல் பாய்ந்தான். நல்லவேளையாக, அம்மாவும் நானும் ஓடி வந்து தடுத்தோம். அம்மாவுக்குப் பொறுக்கவில்லை. விரஜுவை அடிக்க வந்தாள். நான் குறுக்கே நின்று, அவனை என் அறைக்கு இழுத்துச் சென்றேன். அவன் திமிறினுன். 'தன்னை எல்லாரும் அடிக்கவேண்டும்; பிறகு, அடித்துவிட்டோமே என்று மனம் புழுங்கித் தவிக்கவேண்டும். வீட்டில் யாரும் நிம்மதியாக இருக்கக்கூடாது' என்று விரஜு எண்ணினுனே என்னவோ? அம்மாவைவிட, என்னைத்தான் அவன் அதிகம் வெறுத்தான். வயசில் பெரியவன் என்பதற்காகவோ? உடல் வலு அதிகமுள்ளவன் என்பதற்காகவோ? எதற்கென்று தெரியாது. அவன் தன் ஆத்திரத்தையும் வெறுப்பையும் சிரமப்பட்டு அடக்கிக்கொண்டு வந்தான். எனக்கு இதைவிட நரக தண்டனை வேறு என்ன வேண்டும்? பொறுப்புள்ள நல்ல பிள்ளை என்று பெயரெடுப்பதற்கு இவ்வளவு கொடுஞ் சோதனைகளா? . . .!

[இந்த இடத்தில் பல பக்கங்கள் உருத் தெரியாமல் அழிந்துவிட்டன. அரை குறையாகத் தென்படும் வரிகளைக் காணும்போது எல்லாம் துன்பச் சித்திரங்கள் என்றுதான் தோன்றுகின்றன. நடுநடுவில் சில மகிழ்ச்சிச் செய்திகளும் இருக்கலாம். அவைகளைக் காணக் கொடுத்து வைக்காதவன் நான்.

ராகவன் நேரிடையாக அனுபவித்துத் துன்பப்பட்டான். நான் அதைப் படித்துவிட்டு, அந்த நிலையை அடைகிறேன். —மாதவன்.]

. . .ஸ்ரீநந்தன் (நந்து) கூடவா என்னை இப்படி வதைக்க வேண்டும்? காலி, கழிசடை என்று பெயர் வாங்கத் தலைப்பட்டுவிட்டான். தெருப்பிள்ளைகளுடன் வம்பு; வீட்டுக்குச் சரியாக வருவதில்லை; படிப்பென்றால் விஷம்! முன்பாவது, பாசாங்கு செய்வான். இப்போது அந்தக் குளிரும் விட்டு விட்டது.

இப்போதெல்லாம் நான் தம்பிகளுடன் பழகும் விதமே பார்ப்பவர்களுக்கு விசித்திரமாகத் தோன்றும். முதலாளியிடம் ஏவலாள் பணிந்து பழகுவது போலத்தான் நான் பழகினேன். விரஜூவை ஒரு விதமாக, 'என்னை ஆளப் பிறந்த அரசர்; ஆட்டி வைக்கும் தேவதை' என்ற தீர்மானத்துக்கே உரியவனுக்கிவிட்டேன். சின்னவன் நந்துவிடம் கொஞ்சம் நம்பிக்கை இருந்தது. முகம் கொடுத்துப் பேசும் அளவுக்குப் பெருந்தன்மை காட்டி வந்தான். இவ்வளவு பாக்கியமாவது நமக்குக் கிடைத்ததே என்ற பெருமிதந்தான் எனக்கு.

நந்துவைக் கூப்பிட்டு மெள்ள உபதேசம் புரியத் தொடங்கினேன். 'உனக்கும் எனக்கும் இல்லாவிட்டாலும், ஊருக்காகவாவது நல்ல பெயர் எடுக்க முயல வேண்டும்' என்றெல்லாம் நயமாகப் பேசிப் பார்த்தேன்.

ஊராரின் 'கயவாளித்தன'த்தையும், 'கபோதித்தன'த்தையும் ஏசினுன் நந்து. என் 'பயங்கொள்ளித்தன'த்தையும் மறைமுகமாக இடித்துக் காட்டினுன். அவனுக்கு நல்லறிவு புகட்டப் புகுந்த நான், அவன் பொழிந்த சொற்பொழிவையும், அறிவுரைகளையும் மௌனமாக ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று.

அம்மா சொல்லுகிருள்: ''ரகு, ஏன் வீணுக்குக் கவலைப்பட்டு உடம்பைக் கெடுத்துக்கொள்ளுகிருய்? யார் தலையெழுத்து எப்படி எழுதியிருக்கிறதோ, அப்படித்தான் நடக்கும். 'எந்தச் சனியன் எக்கேடு கெட்டால், என்ன?' என்று உதறித் தள்ளிவிட்டு இரு.''

உதறித் தள்ளிவிட்டு இருக்கும் பாக்கியம் இருந்தால், என்னை ஏன் அநாதையாக மூத்தபிள்ளையாகப் பிறப்பிக்கிருன் கடவுள்? குடும்ப வண்டிக்கு இரண்டு இளங்காளைகளாக இருக்கிருர்கள் விரஜூவும் நந்துவும். வெறித்துக் கொண்டு ஓடுகிருர்கள்; சோடு மாறி இழுத்துச் செல்லுகிருர்கள். அடக்கி ஓட்டும் இடத்தில் நான் இருந்து என்ன லாபம்? அப்பா இருந்த இடம் என்பதனுலேயே, அந்தத் தகுதி எனக்கு வந்து விடுமா? எப்போது, எந்தப் பள்ளத்தில் வண்டி குடை சாயுமோ என்கிற பீதி, வரவர வளர்ந்து கொண்டுதான் இருக்கிறது. . .

31, ஆகஸ்ட்:

நேற்று இரவு வெகு நேரம் வரைக்கும் தூக்கம் வரவில்லை. நல்ல தூக்கம் தூங்கி வெகு நாட்கள் ஆகிவிட்டன. குடும்பப் பொறுப்பு என்ன என்பதை உணரத் தொடங்கியதிலிருந்தே இந்த நிலைமைதான். இன்று காலையில் வழக்கத்தைவிடச் சற்றுத் தாமதமாகத்தான் எழுந்தேன்.

குளிக்கச் செல்லும்போது, நந்து அடம் பிடித்துக்கொண்டு வாக்குவாதம் செய்வது காதில் விழுந்தது. நின்று கவனித்தேன். பாலுக்காகத்தான் இவ்வளவு தகராறும். அவனுக்குப் பூஞ்சை உடல். குழந்தையாக இருந்தபோது, அவனுக்காகவே அப்பா ஒரு பசு வாங்கினுர். அப்போதெல்லாம் அவனைப் பால் சாப்பிட வைப்பதற்குள், 'போதும், போதும்' என்றுகிவிடும். இப்போது பாலுக்கு ஆசைப்படுகிருன் - வசதி குறைந்து வறுமையில் உழன்றுகொண்டிருக்கும் இந்த அநாதரவான நிலைமையில்!

''அம்மா, நந்துவுக்கு மட்டுமாவது கொஞ்சம் பால் வாங்குவதற்கென்ன?'' என்றேன்.

''வாங்கிக்கொண்டுதானே வருகிறேன். இந்தப் பால் வேண்டாமாம் துரைக்கு!'' - அம்மா அலுப்புடன் பதில் அளித்தாள்.

''ஏன், நந்து? என்ன கேடு உனக்கு?''

ஸ்ரீநந்தன் பதில் சொல்லவில்லை. மகா அழுத்தக்காரன். எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அவனுடைய தோள்பட்டையைப் பற்றிக் குலுக்கி, மறுபடியும் அதே கேள்வியைக் கேட்டேன். அவன் குனிந்த தலை நிமிரவில்லை. இவ்வளவு அலட்சியமா!

''உதை வாங்கிக்கொண்டுதான் சாப்பிடுவாயா? இப்படிப் பிடிவாதம் பிடிக்க உனக்கு வெட்கமில்லை?''

உண்மையிலேயே நான் பொறுமை இழந்ததை உணர்ந்துதானோ என்னவோ, நந்து பதில் அளித்தான்: ''எனக்குக் கடையில் வாங்கும் பால் பிடிக்கவில்லை. வீட்டிலே மாடு வைத்துக் கறக்கிற பால்தான் வேண்டும்.''

இதுவரைக்கும் மௌனமாக இருந்த அம்மா, ''பால் கொட்டிக் கொள்ளும் அதிருஷ்டம் இருந்தால், அப்பாவை ஏன் விழுங்கிவிட்டு உட்கார்ந்திருக்கிறாய் நீ?'' என்று குத்திக் காட்டினாள்.

அம்மாவின் ஏசல் என்னைத்தான் அதிகமாகத் தாக்கியது. கையாலாகாதவனின் பொறுப்பில் இருந்தால் எதையும் சகித்துக்கொள்ளத்தான் வேண்டும் என்பதுதானே இதற்குப் பொருள்? அப்பா இருந்தபோது நல்லவர்களாக - சாதுக்களாக - இருந்தவர்கள் இப்போது ஏன் இப்படி மாறவேண்டும்? 'அப்பா போய்விட்டதால், எல்லா வசதிகளும் கூடவே போய்விட்டன; வகையாக வாழக்கூட வழி இல்லை; உரிமையும் இல்லை' என்று தொனிக்கும்படியாகவே அம்மா அடிக்கடி பேசுகிறாள். குருவியின் தலையில் பனங்காயை வைத்த கதையாகத்தான் இருக்கிறது, என் தலையில் குடும்பப் பொறுப்பைச் சுமத்தி இருப்பது!

பேசாமல் குளித்துவிட்டு வந்தேன். அப்பாவின் பூஜை அறைக்குள் சென்று கதவைத் தாழிட்டுக் கொண்டேன். வாய் மூடி இருந்தாலும், என் மனசு அழுதது. பாராயணத்தில் புத்தி செல்லவில்லை. ஒவ்வொரு சுலோகத்துக்கும் இடையில் குடும்பக் கவலைகள்தான் குறுக்கிட்டன.

என்றாவது ஒரு நாள் என் தம்பிகள் திருந்தாமலா போவார்கள்?..

9, செப்டம்பர்:

ஏழெட்டு நாட்களாக என் உடல்நிலை சரியாக இல்லை. மனோவியாதிதான் தீராத நோயாகிவிட்டது. உடல் உபாதையும் சேர்ந்து கொண்டதால், 'டயரி' எழுதப் புத்தி செல்லவில்லை. ஒரே சுருதியை யந்திரம் போல் மீட்டிக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. திரும்பத் திரும்பச் சோகக் கதைதானே. யாரோ வாசகர்களைத் திருப்திப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு இல்லை. இருந்தாலும் எனக்கே சலிப்பாகத்தான் இருக்கிறது. சுகத்தையும் நிம்மதியையும் கற்பனையாவது செய்து பார்த்துத் திருப்திப்பட்டால், தேவலை போல் இருக்கிறது.

தினமும் வீட்டில் ஏதாவது ரகளை நடந்துகொண்டே இருக்கிறது. விமலாவும் நந்துவுந்தான் மூலகர்த்தாக்கள். நான் பல்லைக் கடித்துக்கொண்டு அறைக்குள்ளேயே கிடந்தேன்.

கொஞ்ச நாட்களாக அம்மா பூஜையில் அதிக நேரம் செலவழிக்கத் தொடங்கி இருக்கிறாள். விதவை ஸ்திரீகளுக்கு மனக் கவலைகளை மறக்க இதுதான் பரம்பரையாக வந்த சீதனம். தம்பிகளுக்கு இது பிடிக்கவில்லை. அவர்கள் 'பகுத்தறிவுவாதி'கள் ஆகிவருகிறார்கள்! அவர்களுடைய பேச்சிலும், செயலிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. விபரீதப் போக்குத்தான்!

தினமும் அம்மாவையும் பூஜையையும் தெய்வத்தையும் நையாண்டி செய்யாவிட்டால், அவர்களுக்குப் பொழுது போவதில்லை. அம்மா எதிர்த்துப் பார்த்தாள்; நான் அறிவுறுத்தினேன்; பிறகு கெஞ்சிக் கேட்டுக்கொண்டோம். எதற்கும் அந்தப் 'பகுத்தறிவுவாதிகள்' பணியவில்லை. கிண்டலானாலும், உள்ளத்தைப் புண்படுத்தும் பேச்சுக்களை எப்படித்தான் கற்றுக்கொண்டார்

களோ? பெற்றவளாச்சே, சொந்த வீடாச்சே என்ற உணர்வு கூடவா அழிந்து போகும்?

''நந்து, அம்மா பூஜை செய்கிற சாளக்கிராமம் என்ன தெரியுமா?'' விரஜு ஆரம்பித்தான்.

''நாவல் பழந்தான் அது. அதற்கு இவ்வளவு வெளிவேஷம் வேண்டி யிருக்கிறது!'' நந்து தீயைக் கிளறினன்.

''நாவல் பழமாயிருந்தால், காக்கைக்காவது பயன்படுமே. இந்த ஓடு அதற்கும் லாயக்கில்லை.''

''அப்போ, குரங்குகூடத் தொடாது.''

''வெறுங் கல்லுதான் அது - போலிச் சாளக் கிராமம்.''

''பாண்டி விளையாடச் சில்லுக் கூடக் கிடைக்காதா அதை உடைத்தால்?''

விரஜு தம்பியின் நாவன்மையை மெச்சுவதற்காக, வாய்விட்டுச் சிரித்தான். நந்துவுக்கு உற்சாகம் அதிக மாயிற்று.

''ஒரு நாள் அதை எடுத்துக் கொண்டு வந்து பார்த்துவிடலாமே. உடைத்தோ, தேய்த்தோ நான் அதைச் சில்லாக்கிக் கொடுத்துடறேன்; சரிதானே?''

இப்படியே தினமும் புதுப்புது ஜோடிப்புகளுடன் இருவரும் இரைந்து கிண்டல் செய்வார்கள். அம்மாவின் கவனம் பல முறை பூஜையிலிருந்து தடைப்படும். வீண் வம்பு வேண்டாமென்று பொறுமையாக இருந்துவிடுவாள்.

இன்று பொறுக்க முடியாத அளவுக்கு அவர்களுடைய உபத்திரவம் கொடுமையாக இருந்தது. வயசில் சின்னவனக இருந்தாலும் நந்துவின் வாக்கில் விஷம் தோய்ந்திருந்தது. மனத்தைத் தொளைத்துவிடும்படி பேச எப்படித்தான் கற்றுக் கொண்டானே!

''விரஜு, உள்ளே கவனி. அம்மா ஸ்தோத்திரம் சொல்லுகிற அழகைப் பார். அப்பா மாதிரி மணையில் உட்கார்ந்துகொண்டு, சிக்குப் பலகையில் புத்தகத்தை விரித்து வைத்துக்கொண்டு படிக்கிற தோரணையைப் பாரேன்!''

விரஜு சிரித்துக்கொண்டே, ''ஆமாம், ஆமாம்'' என்ருன்.

''அப்பா நல்ல வித்துவான்; அர்த்தம் தெரிந்து ஸ்தோத்திரங்களைப் படித்தார். வெறும் எழுத்தறிவுமட்டும் உள்ள மூடங்களும் எதற்காக அப்பா மாதிரி வேஷம் போட வேண்டும்?''

''என்ன செய்வது? இவர்களுக்குத்தான் இது காலம்.'' விரஜு உண்மை பேசுவது போல் அநுதாபம் தொனிக்கச் சொன்னன்.

''இருந்தாலும் அப்பா இவ்வளவு மோசமில்லை. தினமும் கங்கைக்கா ஸ்நானம் செய்யப் போவார்? சிவபூஜை என்று குடம் குடமாகத் தண்ணீரைக் கொட்ட மாட்டார். அவர் போலிப் பக்தர் அல்ல.''

''நந்து, படிக்கிற அழகைக் கவனியேன். ஒரு வரியாவது உச்சாரண சுத்தமாய்ச் சொல்லத் தெரிகிறதா, பாரேன். இந்த அழகிலே, பிறர் கேட்டுப் புகழ வேண்டும் என்கிற எண்ணமோ என்னவோ, வாய்விட்டு வேறு படித்தாகிறது. கல்லுக்கும் காது கேட்கும் என்று நினைவு போல் இருக்கிறது!''

என்னல் பொறுக்க முடியவில்லை. எழுந்து வெளியே வந்தேன்.

''ஏன் நாய்கள் மாதிரி குரைக்கிறீர்கள்? வெட்கமில்லை. தாயைப் போய் எந்தக் கிராதகனுவது இப்படிக் கிண்டல் செய்வானு? ஒரே நாளிலே திமிரையெல்லாம் போக்கிவிடுவேன், ஜாக்கிரதை! போங்கடா வெளியே; மானங் கெட்ட கழுதைகளா!'' என்று இரைந்தேன்.

''எங்களுடைய போதாத காலந்தான் அப்பா செத்துப் போனுரென்று எதற்காக எல்லாரும் சொல்லவேண்டும்?'' - விரஜு பதிலுக்குச் சொன்னன்.

என் கோபம் நீர் கொட்டிய நெருப்பாகி விட்டது. திரும்பி அறைக்கு வந்துவிட்டேன். அப்பா எதிரே வந்து நின்று, 'நீ மூத்த பிள்ளை, பெரியவன். பொறுத்துப் போ! விட்டுத்தான் பிடிக்க வேண்டும் சிறியவர்களை. போகப் போகச் சரியாகிவிடும்' என்று கூறுவது போல் தோன்றியது.

அருணு அந்தப் பக்கம் வந்தாள். இருவருடைய கவனமும் அவள் மேல் திரும்பியது.

''கோள் சொல்லுகிற மூதேவி வருகிறுள். வழி விடுங்கள், வழி விடுங்கள்!'' கட்டியம் கூறுவதைப் போல் நந்து கத்தினுன்.

''பெண் ஜன்மமே அப்படித் தான்! வாங்கித் தின்னும் வரையில் அண்ணன் தம்பி உறவு கொண் டாடும்; கொடுக்காமல் போனுல், ஏசிக்கொண்டு திரியும். அல்ப நாய்கள்!'' விரஜு அருணுவைக் காட்டிக்கொண்டே சொன்னுன்.

அருணு விசித்து அழத் தொடங்கினுள். அம்மா வெளியே வந்தாள். நான் அப்பாவின் பிரம்பை எடுத்துக்கொண்டு வந்தேன்.

''பேய்களா நீங்கள்? வீட்டில் யாரையும் நிம்மதியாக வாழவிட மாட்டீர்களா? ஏன் இப்படிச் சத் துருக்களாக வந்து தொலைந்திருக் கிறீர்கள்? அம்மா நாளுக்கு நாள் இளைத்து ஒடுங்கிக்கொண்டு வரு கிருளே, தெரியவில்லையா உங்க ளுக்கு? என்னைக் கொன்றுவிடுங் கள்! ஒருவருக்கும் சுகம் இல்லாமல் எதற்காக வாழ வேண்டும்?...'' என்று கத்தினேன்.

அம்மா என்னைத் தடுக்க வந் தாள். அவள் உடம்பு நடுங்கியது. மயங்கிக் கீழே விழுந்துவிட்டாள்.

''ஐயோ! அம்மா! அம்மா!'' பல குரல்கள் அலறின. தலையி லிருந்து ரத்தம் வழிய அம்மா தரையில் கிடந்தாள். நினைவு தப்பி விட்டது. அருணு புலம்பினுள். நான் அம்மாவைத் தூக்கி மடியில் வைத்துக்கொண்டேன். விரஜு விசிறினுன். கண்ணீர்த் துளிகள் வழிந்தன. விரஜு அழுதுகொண் டிருந்தான். நந்து அம்மாவின் கால் களில் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மினுன்.

விரஜு வெறி பிடித்தவன் போல் எழுந்து பூஜை அறைக்குள் ஓடி ஞன். சுவாமிக்கு எதிரே விழுந் தான். எதிர்ச் சுவரில் தலையை மோதிக்கொண்டான். பல தடவை 'மொட்டு, மொட்டு' என்று சப்தம் கேட்டது. தலையிலிருந்து ரத்தம் வழிகிற வரைக்கும் மோதிக் கொண் டிருந்தான். பூஜை விக்கிர கங்களுக்கு எதிரே அவன் மயங்கி விழுந்ததை நான் பார்த்தேன். பித்துப் பிடித்தவன் போல் - மண் பொம்மை போல் - உட்கார்ந்திருந் தேன். அம்மாவுக்குப் பிரக்ஞை வந்த பிறகுதான், எனக்கும் சுய உணர்வு வருமோ என்னவோ?

மூத்தாள் பிள்ளை என்று அம்மா என்னைக் கைவிட்டு விடுவாளோ? ... மாட்டாள். எனக்கு அம்மா - பெற்ற தாய் - தெய்வம் எல்லாம் இவள்தான். இவளுக்கும் நான் தான் மூத்தபிள்ளை. என்னைக் கைவிட மாட்டாள். குடும்பத்துக் காக இல்லாவிட்டாலும், எனக்காக வாவது அம்மா வாழ வேண்டும். அம்மா, கண் திறந்து பாருங்க ளேன்! இனி இது புதுக் குடும்பந் தான். உங்களுக்கு யாரும் துன்பம் செய்ய முடியாது, அம்மா!...

[ராகவனின் 'டயரி' இத்துடன் முடிந்துவிட்டது. அவன் முடிப்ப தற்கு முன்பாகவே கறையான்கள் முடிவை இங்கே கொண்டுவந்து வைத்துவிட்டன. போன ஜன்மத் துச் சத்துருக்களோ என்னவோ இந்தப் பிராணிகள்! ராகவனேடு மகிழ்ச்சியாக வாழ்ந்த தினங்களை நினைத்துப் பார்க்கக்கூடக் கூச்ச மாக இருக்கிறது. ரத்தம் பெருகத் தாய் ரகுவின் மடியில் கிடக்கிருள். விரஜு தனக்குத் தானே தண்டனை அளித்துக்கொண்டு விழுந்து கிடக் கிருன். நந்துவும் அருணுவும் கேவிக் கேவி அழுகிருர்கள். நான் மட்டும் சிலையா? நான் செய்த தவற்றுக்கு இந்தத் தண்டனை போதாது. டயரியின் முடிவை அறிய முடியாத வாசகர்கள் சபிப் பார்கள். அந்தச் சாபம் எனக்கு வேண்டியதுதான்; என் குற்றத் துக்கு அந்தத் தண்டனை வேண்டி யதுதான்.

துர்ப்பாக்கியசாலி,
மாதவன்.]

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

# கணக்கும் கவிதையும்

காலேஜில் இரண்டு மாணவர்களுக்குள் ஒரு விவாதம் வந்தது. மகாகவியும் நாடகாசிரியருமான ஷேக்ஸ்பியர் பெரியவரா, விஞ்ஞானியும் கணித மேதையுமான ந்யூட்டன் பெரியவரா என்பது கேள்வி.

''ந்யூட்டன் கண்டுபிடித்த விஞ்ஞான உண்மைகள் மனிதனுக்குப் பேருதவியா யிருக்கின்றன. அவரே பெரியவர்'' என்ருர் ஒருவர்.

''கவிஞனின் கீர்த்தி சிரஞ்சீவியா யிருக்கும்; விஞ்ஞானியின் கீர்த்தி காலஞ் செல்லச் செல்ல மங்கிவிடும். ஷேக்ஸ்பியர் முயன்றிருந்தால், கணித சாஸ்திரி ஆகியிருக்க முடியும்; ந்யூட்டன் முயன்றிருந்தால், கவிஞர் ஆகியிருக்க முடியாது. ஷேக்ஸ்பியர்தான் பெரியவர்'' என்ருர் மற்றவர்.

சண்டை மிக முற்றிவிட்டது.

கவிஞரைப் போற்றிய இந்த மாணவர் அந்த நாளில் கணக்கில் மிகவும் மந்தம் என்பதை இங்கே குறிப்பிட வேண்டும்.

சிறிது காலம் சென்றது. ஒரு நாள் கணித வகுப்பு நடந்தபோது, ஒரு கணக்கைச் செய்யமுடியாமல் அத்தனை மாணவரும் தவறிவிட்டார்கள். கவிஞரை ஆதரித்த மாணவர் அதைச் செய்துவிட்டார். இது மட்டும் அல்ல; அடுத்து வந்த பரீட்சையில் கணக்குப் பாடத்திலேயும் அவர்தான் மற்ற எல்லாரையும்விட அதிக மார்க் வாங்கிஞர்.

ஆனுல், இதற்கப்புறம் கணிதம் கற்பதைப் பழைய படி அவர் விட்டுவிட்டார்.

இவ்வளவு மன உறுதி படைத்த மாணவர் வேறு யாரும் அல்ல. வங்காளிக் கவிதையிலேயே நவீன பாணி ஒன்றைத் தோற்றுவித்த பெருங் கவிஞர் மைக்கேல் மதுசூதன தத் என்பவர்தான்.

—வனமாலி தே, 'ஏ. பி. பத்திரிகை'

**Manjari - July '57** **Regd. No. M. 4975**
(Regd. as a Newspaper in Ceylon)

# மஞ்சரி

## பொருளடக்கம்

ஹேவிளம்பி - ஆடி ஜூலை 1957

ஊரும் உலகமும் .. 1
நேபாளத்தில் கல்யாணம் .. ஆந்திர பத்திரிகா 5
தாழம் பூ .. .. கர்மவீர் 7
பில்லர்கள் .. சுதேசமித்திரன் 9
சாப்பாடு சரியா? .. .. யுவர் ஹெல்த் 14
ஆயிரம் மைல் திரியும் குருவி .. மாத்ருபூமி 19
அர்த்தநாரி அவரை .. மேழிச் செல்வம் 22
விநோபா பேட்டி .. சர்வோதயம் 25
அடிகள் நடந்த வழி (படம்) .. .. 29
கலைமானின் வயசு .. அமிர்தபஜார் பத்திரிகை 30
அரசியலும் மனிதனும் .. .. மாக்கியவெல்லி 35
ஓமர் கய்யாம் .. .. .. புக்-லவர் 41
இந்தியாவில் கிரிக்கெட் .. பர்மா-ஷெல் நியூஸ் 44
பிரகாசத்தின் அருங்குணம் .. .. ஸ்வராஜ்ய 51
கோடைக்கானல் .. ஸவுத்ரெயில் நியூஸ் 54
என்னைக் கேளுங்கள் காப்டன் என். சேஷாத்திரிநாதன் 57
புரட்சிக் கவிஞன் (சீனக் கதை) பெங் சூயே பெங் 61
கடோத்கசன் பிறப்பு .. .. 62
மூன்று துறவிகள் (ருஷியக் கதை) டால்ஸ்டாய்-எஸ். ஆறுமுகம் 68
மூத்த பிள்ளை (ஹிந்தி புத்தகச் சுருக்கம்) 'பிக்கு'-சௌரி 73
கணக்கும் கவிதையும் .. 3-ஆம் அட்டை